SriLankan Airlines oneworld

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் | ஆண்டறிக்கை 2024/25

உச்சத்திற்கு தயாராயிருத்தல்

உள்ளடக்கம்

கண்ணோட்டம்

தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு **03**
அறிக்கைக்கான அறிமுகம் **05**
நிதியியல் சிறப்பம்சங்கள் **06**

தலைமைத்துவம்

தலைவரின் மீளாய்வு **08**
பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு **10**
பணிப்பாளர்கள் சபை **13**
சிரேஷ்ட முகாமைத்துவ அணி **16**

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

செயற்பாட்டுச் சூழல் மீளாய்வு **21**
மனித மூலதனம் **25**
தயாரிக்கப்பட்ட மூலதனம் **29**
அறிவுசார் மூலதனம் **32**
சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் **38**
இயற்கை மூலதனம் **43**
நிதியியல் மூலதனம் **46**

கூட்டாண்மை பாரபத்தியம்

பெருநிறுவன ஆளுகை அறிக்கை **50**
நிறுவன இடர் முகாமைத்துவம் **52**

நிதிக் கூற்றுக்கள்

பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை **55**
சபை கணக்காய்வுக் குழு அறிக்கை **59**
பணிப்பாளர்களின் பொறுப்புக்களின் கூற்று **61**
சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை **62**
நிதி நிலைமைக் கூற்று **66**
இலாபம் அல்லது நட்டக் கூற்று **67**
விரிவான வருமானக் கூற்று **68**
உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று **69**
காசுப் பாய்ச்சல் கூற்று **70**
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் **71**

துணைத் தகவல்கள்

அருஞ்சொல் திரட்டு **115**
பத்து வருட பகுப்பாய்வு **116**
பயண வழி வரைபடம் **118**
மைல்கற்கள் **120**
கம்பனித் தகவல்கள் **122**
கூட்டத்திற்கான அறிவித்தல் **123**
குறிப்புகள் **124**
பதிலாள் படிவம் **127**

உச்சத்திற்கு தயாராயிருத்தல்

வானம் பரந்து காணப்படுகின்றது, அதேபோன்றே நவீன வான்பயணத்தின் நிலத்தோற்றத்தை உருவாக்கும் சவால்களும் பரந்து காணப்படுகின்றன. இந்த சிக்கல்களுக்கு மத்தியில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் செல்வழியினை மீள்அளவிடுவதில், அதன் செயற்பாடுகளை சீராக்குவதில் மற்றும் பிராந்தியத்தில் மற்றும் அதற்கப்பால் அதன் பங்கினை மீள்வரையறை செய்வதில் உறுதியாக உள்ளது.

மீளாய்வாண்டானது எமது மூலோபாயத்தின் ஒரு உறுதிப்பாடாக குறிக்கப்பட்டது. செயற்பாட்டு நெறிமுறையிலிருந்து புதுப்பிக்கப்பட்ட பங்காளிகள் ஈடுபாடுவரை, ஒவ்வொரு நடவடிக்கையும் நீண்டகாலத்தைக் கருத்திற்கொண்டு எடுக்கப்பட்டது. அரசாங்கத்திடமிருந்தான உறுதுணையுடன் ஒரு முன்னிறுத்தமான மூலோபாய நெறிப்படுத்தலினால் வழிநடத்தப்பட்டு நாம் பொருளாதார முன்னேற்றத்திற்கு தொடர்ச்சியாக தடையாயுள்ள சிரமங்களை வெற்றிகரமாக சமாளித்தவேளை நிலைபேறுடைய எதிர்கால வலிமைக்கான அடித்தளத்தினை அமைத்தோம்.

தற்போது, பெறுமதியிலான ஒரு புதுப்பிக்கப்பட்ட முன்னிறுத்தத்துடன் எமக்கு முன்னால் காணப்படும் வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்கு நாம் நன்கு தயாராயுள்ளோம். எமது முன்னோக்கிய பாதையானது தெளிவாக உள்ளதுடன் நாம் உச்சத்திற்கு தயாராயுள்ளோம்.

SriLankan Airlines oneworld

member of
oneworld
SriLankan Airlines
www.srilankan.com
A320-200

எமது தொலைநோக்கு

அக்கறை, அரவணைப்பு மற்றும் உபசாரத்துடன் வழங்கப்படும் தனித்துவமானதும், உண்மையானதும் மற்றும் இலங்கைக்கே உரித்தானதுமான அனுபவமொன்றைத் தேடும் பயணிகளின் விருப்பத்திற்குரிய விமான சேவையாகத் திகழ நாம் விரும்புகின்றோம்.

எமது பணிநோக்கு

இலங்கையின் நாமத்தை உலகெங்கும் பறைசாற்றுகின்ற, சுற்றுலாத்துறை, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர் மற்றும் தேசிய பொருளாதாரம் ஆகியவற்றை ஆதரிக்கும் நிலைபேறான, இலாபகரமான விமான சேவையாக வளர்ச்சியடையும் அதேவேளை, எமது தனித்துவமான இந்து சமுத்திர அமைவிட அனுகூலங்களின் துணையோடு, விமானப்பயண மையம் ஒன்றை விருத்தி செய்தல்.

விமான சேவை மற்றும் துறைசார் நலனுக்காக, திறமை வாய்ந்தவர்களை உருவாக்கி, விசேடத்துவமான விமானத்துறை நிலையம் ஒன்றாகத் திகழ்தல்.

எமது தேசம் மற்றும் நாம் சேவையாற்றும் சமூகங்களுக்காக நீண்டகால, நிலைபேறான நலன்களை வரமாக்கும் நெறிமுறையான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் உறுதி பூண்டுள்ளோம்.

அறிக்கைக்கான அறிமுகம்

இது ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் ஆண்டறிக்கை என்பதுடன், இது 01 ஏப்ரல் 2024 முதல் 31 மார்ச் 2025 வரையான நிதியாண்டினை உள்ளடக்குகின்றது. 1979 இலிருந்து இலங்கையின் தேசிய விமான நிறுவனமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஒரு வலுவான பயணிகள் மற்றும் சரக்கு சேவை வலையமைப்பினை தொடர்ந்தும் செயலாற்றுகின்றது. பிரதான விமான நிறுவன செயற்பாடுகளுக்கு அப்பால், குழுமமானது தரை கையாளுதல், விமானத்தினுள்ளான உணவு வழங்குதல், விமானப் பராமரிப்பு மற்றும் பல்வேறு துணைச் சேவைகள் உள்ளடங்கலான விரிவான வாடிக்கையாளர் சேவைகளை வழங்குகின்றது.

தரம், சௌகரியம், பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மைக்கு பெயர்போன ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் மையமான கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திலிருந்து பிரதானமாக செயலாற்றுவதுடன், அறிக்கையிடும் காலப்பகுதியில் 59 நாடுகளில் 117 பயண இலக்குகள் வரை பரந்த ஒரு உலகளாவிய வலையமைப்பிற்கு பயணிகள் மற்றும் சரக்குச் சேவைகளை இணைக்கின்றது.

நோக்கம் மற்றும் எல்லை

இந்த அறிக்கையானது மீளாய்வாண்டிற்கான குழுமத்தின் நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத செயற்திறனில் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட கருத்தினை வழங்கும்வேளை, பல்வேறு வடிவிலான மூலதனங்களது மூலோபாயப் பயன்பாட்டினூடாக அதன் பெறுமதி உருவாக்கல் மாதிரியினை விளக்குகின்றது. அது செயற்பாட்டு சிறப்பம்சங்கள், நிதியியல் விளைவுகள், இடர் முகாமைத்துவ அணுகுமுறைகள், நிலைபேறுடைய முன்னெடுப்புகள் மற்றும் ஆளுகை நடைமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன், பங்காளிகளுக்கு குழுமத்தின் ஒட்டுமொத்த மற்றும் மூலோபாய திசையில் ஒரு முழுமையான கண்ணோட்டத்தினை வழங்குகின்றது.

நியமங்களும் தயாரிப்பின் கொள்கைகளும்

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்கியொழுகும் விதமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆளுகை வெளிப்படுத்தல்கள், பொது நிறுவனங்களுக்கான சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இல் குறிப்பிடப்பட்டுள்ள அரச உடைமை நிறுவனங்களுக்கான கூட்டாண்மை ஆளுகை மற்றும் செயலாற்றல் கையேட்டிலான வழிகாட்டிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.



முன்னோக்கிப் பார்க்கும் கூற்றுக்கள்

இந்த அறிக்கையானது குழுமத்தின் எதிர்கால செயற்திறன் மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பான “முன்னோக்கிப் பார்க்கும் கூற்றுக்களை” உள்ளடக்குகின்றன. இந்த கூற்றுக்கள் இயல்பான இடர்கள் மற்றும் உறுதியின்மைகளுக்கு உட்பட்டவை என்பதுடன், மெய்யான விளைவுகள் எதிர்பார்த்தவற்றிலிருந்து வித்தியாசப்படலாம். அத்தகைய எதிர்வுகூறல்களில் அளவுக்கதிகமான நம்பிக்கையினை தவிர்க்குமாறும் எச்சரிக்கையினை பயன்படுத்துமாறும் பங்காளிகள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

குறிப்பு:
இந்த தமிழ் ஆண்டறிக்கை, ஆங்கில ஆண்டறிக்கையின் மொழிபெயர்ப்பாகும். மொழிபெயர்ப்பில் குழப்பங்கள் காணப்படுமிடத்து, ஆங்கில அறிக்கையை பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிதியியல் சிறப்பம்சங்கள்

31 மார்ச் 2025 இல் உள்ளவாறானது		குழுமம் 2025 ரூ. மில்.	குழுமம் 2024 ரூ. மில்.	கம்பனி 2025 ரூ. மில்.	கம்பனி 2024 ரூ. மில்.
நிதியியல்					
வருவாய்	ரூ. மில்.	303,093.89	339,591.65	296,506.00	333,614.09
செயற்பாட்டுச் செலவினம்	ரூ. மில்.	276,332.31	312,929.37	275,694.95	312,739.14
பரிமாற்றல் இலாபம்/(நட்டங்களுக்கு) முன்னர் செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)	ரூ. மில்.	28,422.90	28,147.92	22,472.37	22,360.59
ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)	ரூ. மில்.	(2,735.28)	7,925.01	(7,594.56)	3,870.86
மொத்த சொத்துக்கள்	ரூ. மில்.	189,256.80	201,648.71	181,971.09	194,258.01
பங்குதாரர்களது நிதிகள்	ரூ. மில்.	(379,519.61)	(381,723.67)	(403,172.55)	(400,534.71)
போக்குவரத்து					
பயணிகள் கொள்திறன்	ASK மில்.			14,714.85	15,425.45
ஏற்றிச்சென்ற பயணிகள்	RPK மில்.			11,571.61	12,198.65
பயணிகள் சுமைக் காரணி	%			78.64	79.08
ஒட்டுமொத்த கொள்திறன்	ATK மில்.			1,908.92	2,072.57
ஏற்றிச்சென்ற ஒட்டுமொத்த சுமை	RTK மில்.			1,338.08	1,394.50
ஒட்டுமொத்த சுமைக் காரணி	%			70.10	67.28
சமநிலை சுமைக் காரணி	%			76.17	72.95
பணியாளர் ஆக்கத்திறன்					
சராசரி பலம்	எண்.	6,786	6,648	6,071	5,935
பணியாளர் ஒருவருக்கான வருவாய்	ரூ. மில்.	44.66	51.08	48.84	56.21
விமானத் தொகுதி					
ஒடுங்கிய உருவமைப்பு	எண்.			13	12
அகன்ற உருவமைப்பு	எண்.			9	9
வருட இறுதியியல் சேவையிலுள்ள விமானம்	எண்.			22	21





வளர்ச்சிக்கு தயாராயிருத்தல்

தலைவரின் மீளாய்வு

> “கம்பனி அதன் செயற்பாடுகளை தொடர்ந்தும் பலப்படுத்தியதுடன், நீண்டகால நிலைபேறுடைமையினை தொடர்ந்தது. புதிய சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக வர்த்தக இலட்சியத்தினை சூழல் பாரபத்தியம், பங்காளிகளது உள்ளடக்கம் மற்றும் செயற்பாட்டு தனிச்சிறப்புடன் சமநிலைப்படுத்துவதற்கு முயற்சிக்கும் ஒரு முன்னிறுத்தமான மறுசீரமைப்பு பயணம் காணப்பட்டது.”

உலகளாவிய வான் பயணவியல் மீட்பு மற்றும் உள்ளூர் பொருளாதார நிலைப்படுத்தலின் பின்னணிக்கு எதிராக, 2024/25 நிதியாண்டானது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வெளிப்படுத்திய மீளெழுச்சி, இணக்கத்திறன் மற்றும் மூலோபாய முன்நோக்கு என்பவற்றால் குறிக்கப்பட்டது. நான் உள்ளடங்கலான புதிய பணிப்பாளர்கள் சபையானது ஒக்டோபர் 2024 இல் நியமிக்கப்பட்டதுடன், குறுகிய காலத்தினுள் நாம் குறுங்கால ஸ்திரத்தன்மை, திரவத்தன்மை மற்றும் பங்காளிகள் பெறுமதியினை இயக்கும் மத்திய நீண்டகால நிலைபேறுடைமை மற்றும் ஒழுக்கமான மூலதன பாரபத்தியம் ஆகியவற்றில் முன்னிறுத்தம் செய்தோம். ஒரு தேசிய வானூர்தியாக சேவையாற்றும் பணியில் நாம் தொடர்ந்தும் முன்னேறிச் செல்வதுடன் இலங்கையினை உலகுடன் இணைப்பது மாத்திரமன்றி எமது வணிகத்தின் அனைத்து அம்சங்கள் முழுவதும் மற்றும் எமது பணியாட்கள் உள்ளடங்கலான எமது அனைத்து பங்காளிகளது அக்கறையில் நீடித்த பெறுமதியினை உருவாக்குகின்றோம்.

ஒரு இயக்காற்றலான செயற்பாட்டு நிலத்தோற்றம்

மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டானது ஒரு சிக்கலான உலகளாவிய மற்றும் உள்ளூர் செயற்பாட்டு நிலத்தோற்றத்தில் காணப்பட்டதுடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்சுக்கு சவால்கள் மற்றும் வாய்ப்புக்களையும் முன்வைத்தது. வான்பயணவியல் துறையிலான கேள்வி குறிப்பிட்ட மீட்பினை அனுபவித்தவேளை, அது உறுதியான தளம்பல், புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் பொருளாதார சவால்களினால் உருவமைக்கப்பட்டது.

உலகளாவிய ரீதியில், விமான நிறுவனமானது கணிசமான செயற்பாட்டு சவால்களுக்கு முகங்கொடுத்ததுடன், இது புவிசார் அரசியல் அமைதியின்மை மற்றும் வழங்கல் சங்கிலி இடையூறுகளையும் உள்ளடக்கியது. இந்தக் காரணிகள் நீடித்த விமான நேரங்கள், அதிகரித்த எரிபொருள் பாவனை, மற்றும் ஏற்பாட்டியல் அழுத்தங்கள் என்பவற்றுக்கு இட்டுச்சென்றவேளை, விரைவான செயற்பாட்டு திட்டமிடலுக்கான அவசியத்தையும் ஏற்படுத்தியது. உள்ளூர் ரீதியில், சர்வதேச வானூர்திகளிடமிருந்தான கடுமையான போட்டி, விமான கட்டுப்பாடுகள் என்பன காசுப்பாய்ச்சல் மற்றும் இலாபத்தில் மேலதிக அழுத்தங்களை உருவாக்கின. நீடித்த பராமரிப்பினால் விமானங்களின் கிடைப்புத்திறன் மட்டுப்படுத்தப்பட்டது. இது விமானங்களது உறுதிப்பாகங்களின் உலகளாவிய பற்றாக்குறை மற்றும் என்ஜின் பராமரிப்பு சவால்களினால் இயக்கப்பட்டதுடன், எயார்பஸ் A320/321 Neo விமானங்களை பாதித்தது. குத்தகைக்காக பயன்படுத்தப்பட்ட பொருத்தமான விமானங்களின் பற்றாக்குறையானது அடுத்த வருடத்திற்கும் தொடரும் என எதிர்பார்ப்பதுடன், இது கம்பனியின் திட்டமிட்ட வளர்ச்சியினை பாதிக்கும்.

இந்த அழுத்தங்கள் காணப்பட்டபோதிலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், அதிகரித்த சர்வதேச பயணிகளின் வருகையுடன், இலங்கையின் சுற்றுலாத்துறையில் காணப்பட்ட கணிசமான மீட்பிலிருந்து நலனடைந்தது. மேலும், விமான நிறுவனமானது இதற்குப் பதிலளிக்கும் விதமாக, பயணங்களது அதிகரித்த நிகழ்வெண்கள், அட்டவணைகளின் உகப்பாக்கம் என்பவற்றை ஏற்படுத்தியதுடன், அதன் சேவை அடிச்சுவட்டினை மேம்படுத்துவதற்கு மூலோபாய சந்தை வாய்ப்புக்களையும் பயன்படுத்தியது.

மூலோபாய மறுசீரமைப்பு மற்றும் நிலைபேறுடைய தொலைநோக்கு

கம்பனி அதன் செயற்பாடுகளை தொடர்ந்தும் பலப்படுத்தியதுடன், நீண்டகால நிலைபேறுடைமையினை தொடர்ந்தது. புதிய சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக வர்த்தக இலட்சியத்தினை சூழல் பாரபத்தியம், பங்காளிகளது உள்ளடக்கம் மற்றும் செயற்பாட்டு தனிச்சிறப்புடன் சமநிலைப்படுத்துவதற்கு முயற்சிக்கும் ஒரு முன்னிறுத்தமான மறுசீரமைப்பு பயணம் காணப்பட்டது. ஒரு புதிய ஐந்து வருட மூலோபாயத் திட்டமானது தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட்டது. இது பின்வரும் முக்கிய முன்னுரிமைகளை உள்ளடக்கிய ஒரு தெளிவான வரைபடத்தினை கோடிட்டுக் காண்பிக்கின்றது: எமது விமானத் தொகுதியினை விரிவாக்கி நவீனமயமாக்குதல், வருவாய் உருவாக்கத்தினை அதிகரித்தல், வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துதல், செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துதல், சந்தைப் பங்களிப்பினை வளர்த்தல், டிஜிட்டல் உருமாற்றலுக்கு முன்னேறுதல், நிலைபேறுடைய வணிக நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் எமது மக்களின் நல்வாழ்வு மற்றும் அபிவிருத்தியில் முதலீடு செய்தல் என்பனவாகும். இந்த முன்னுரிமைகள் சமீபகால செயற்திறனை உறுதிசெய்வதற்காக மாத்திரம் வடிவமைக்கப்பட்டதல்ல, ஆனால் வளர்ந்து வரும் உலகளாவிய வான்பயணவியல் போக்குகள் மற்றும் பாரியபொருளாதார தளம்பல்களுக்கு எதிராக விமான நிறுவனத்தினை எதிர்காலத்தில் பாதுகாப்பதற்கும் ஆகும்.

இந்த சூழமைவில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஒரு பரந்த தேசிய மற்றும் பிராந்திய வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்கு மூலோபாயமாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய வானூர்தியாக, இலங்கையின் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் இயற்கை அழகிற்கு தடையற்ற அணுக்கத்தினை வழங்குவதன் மூலம், நாம் உள்வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியளிப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றோம். எமது செயற்பாடுகள் உலகளாவிய இலங்கையின் புலம்பெயர்ந்தோருக்கான ஒரு பாலமாக சேவையாற்றுவதுடன், அவர்களது தாயகத்திற்கான நீடித்த இணைப்புகளை பராமரிக்கின்றது. பூகோள ரீதியாக, கொழும்பிலுள்ள எமது மையம் ஒரு தனித்துவமான நன்மையினை வழங்குவதுடன், பிராந்தியத்திற்கு ஒரு முக்கிய இடங்கடப்பு புள்ளியாக செயலாற்றுவதற்கு எம்மை இயலுமையாக்கியுள்ளது. விமான நிறுவனமானது ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் முடுக்கிவிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியிலிருந்து நன்மையடைவதற்கும் சிறந்த நிலையிலுள்ளது. இந்த உயர் சாத்தியமுள்ள சந்தைகளுக்கு சமீபமான எமது இருப்பானது பிராந்திய வர்த்தகம் மற்றும் பிரயாண வலையமைப்புகளுள் ஆழமான ஒருங்கிணைப்பிற்கு துணைபுரிகின்றது. சமாந்தரமாக, எமது துணை நிறுவனங்களில் மற்றும் மூலோபாய வணிக அலகுகளினுள் காணப்படும் வளர்ச்சி வாய்ப்புக்களை நாம் செயலூக்கமாக இனங்கண்டு வளர்ப்பதுடன், எமது பெறுமதி முன்மொழிவு மற்றும் வருவாய் தளத்தினையும் பன்முகப்படுத்துகின்றோம்.

மேலும், குழுமத்தின் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்கான கடன் மீள்கட்டமைத்தல் நடைபெற்றுக்கொண்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தினால் துணையளிக்கப்பட்டு, கடந்தகால நிதியியல் கடப்பாடுகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரச உடைமை வங்கிக் கடன்கள் ஐந்து வருடங்களினுள் முழுவதும் மீளச்செலுத்துவதற்காக மீள்கட்டமைக்கப்படுகின்றது. லசார்ட் இன்கோபரேஷன் USD 175 மில்லியன் இறையாண்மை உத்தரவாதமளிக்கப்பட்ட சர்வதேச முறிகளது மீள்கட்டமைப்பில் ஆலோசனை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளதுடன், முறி உடைமையாளர்களுடனான பேரம்பேசல் தற்போது நடந்த வண்ணமுள்ளது. இந்த நடவடிக்கைகளுடன் ஏனைய மூலோபாயங்களும் சேர்ந்து நிலவுகின்ற காசுப்பாய்ச்சல் அழுத்தங்களிலிருந்து விடுவிக்கும் நோக்கினைக் கொண்டதாகும்.

குழுமத்தின் செயற்திறன் மற்றும் செயற்பாட்டு மீளெழுச்சியினை கட்டியெழுப்புதல்

இவ்வாண்டின்போது, குழுமமானது ஒரு செயற்பாட்டு இலாபமாக (பரிமாற்றல் இலாபங்கள் மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத பழுதுபார்த்தல் செலவினங்களை கணக்கீடு செய்வதற்கு முன்னர்) ரூபா 30.7 பில்லியனை பதிவுசெய்தது (2023/24: ரூபா 39.7 பில்லியன்). எவ்வாறாயினும், குழுமமானது ஒரு தேறிய நட்டமாக ரூபா 2.7 பில்லியனை பதிவுசெய்தது, இதற்கு பிரதான காரணியாக தேறிய நிதியளித்தல் செலவினமான ரூபா 31.6 பில்லியன் காணப்பட்டது. இவ்வாண்டின்போது பயணிகள் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் ரூபா 234.5 பில்லியனாகும், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது (2023/24: ரூபா 276.2 பில்லியன்) 15% வீழ்ச்சியாகும். இந்த வீழ்ச்சியானது பிரதானமாக குறைந்த விளைவுகள் மற்றும் விமானத்தொகுதி கட்டுப்பாடுகளினால்

ஏற்பட்டது. சரக்கு வருவாயானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் (2023/24: ரூபா 31.4 பில்லியன்) 2% ஆல் அதிகரித்தது.

பல எண்ணிக்கையிலான வெளிநாட்டு வானூர்திகள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு (BIA) திரும்பியதுடன், குழுமமானது விமான நிலையம் மற்றும் தொடர்புடைய சேவைகளிலிருந்து ஒரு மொத்த வருவாயாக ரூபா 24.9 பில்லியனை அடையக்கூடியதாயிருந்தது, இது முன்னைய ஆண்டுடன் (2023/24: ரூபா 21.2 பில்லியன்) ஒப்பிடும்போது 17% அதிகரிப்பாகும். விமானத்தினுள்ளான உணவளித்தல் வருவாயானது ரூபா 7.3 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டது, இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13% அதிகரிப்பாகும். குழுமத்தின் செயற்பாட்டு செலவினங்கள் 9% ஆல் குறைவடைந்தது. இதற்கு விமான நிறுவனத்தின் பல்வேறு செலவுச் சிக்கன மற்றும் வினைத்திறன் முன்னெடுப்புகளும் விமான எரிபொருள் விலைகளிலான வீழ்ச்சியும் ஒரு நிரப்பியாகக் காணப்பட்டது.

குறிப்பிடத்தக்க மைல்கற்கள் மற்றும் துறைசார் அங்கீகாரம்

மீளாய்வாண்டின்போது, சேவைத் தனிச்சிறப்பு, வணிகநாம பலம் மற்றும் செயற்பாட்டு மற்றும் வர்த்தக பாரபத்தியத்திற்கான எமது கடப்பாட்டிற்காக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பல விருதுகளுடன் அங்கீகரிக்கப்பட்டது. இவற்றுள் மத்திய/தெற்காசியாவில் சிறந்த பொழுதுபோக்கு விருதுக்கான APEX விருதுகள் 2024 பெறப்பட்டதுடன் APEX உத்தியோகபூர்வ விமானநிறுவன தரப்படுத்தல்களில் 'நான்கு நட்சத்திர பாரிய விமானநிறுவனம்' நிலையினையும் தக்கவைத்துக்கொண்டது. எமது சந்தைப்படுத்தல் தனிச்சிறப்பானது PATA விருதுகள் 2024 இல் ஒரு தங்க விருதுடன் கொண்டாடப்பட்டது. சரக்குத் துறையில், ஸ்ரீலங்கன் சரக்கு தேசிய ஏற்பாட்டியல் விருதுகள் 2024 இல் வெள்ளி விருதினை வென்றதுடன் டுபாயில் அரேபியன் சரக்கு விருதுகளில் 'வளர்ந்து வரும் சரக்கு விமான நிறுவனமாக' பெயரிடப்பட்டது. இது மத்திய கிழ்க்கில் எமது வளர்ச்சியடையும் அடிச்சுவட்டினை எடுத்துக்காட்டுகின்றது. விமான நிறுவனம் 7 ஆண்டுகளுக்கும் மேலாக ஜுன் 2025 இல் விமானப் படையில் ஒரு பரந்த உடல் விமானத்தையும் சேர்த்தது.

இந்த மைல்கற்கள் கூட்டாக விதிவிலக்கான பெறுமதியினை விநியோகிப்பதற்கும் அதன் பிராந்திய மற்றும் உலகளாவிய இருப்பினை மேம்படுத்துவதற்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை வெளிக்காட்டுகின்றது.

பங்காளிகள் ஈடுபாடு மற்றும் ஆளுகை

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முக்கிய பங்காளிகளுடன் திடமான ஈடுபாட்டினை பராமரிப்பதுடன், இது அரசாங்க அதிகாரிகள், உலகளாவிய வான்பயணவியல் அங்கங்கள், வழங்குனர்கள் மற்றும் குத்தகைக்கு விடுபவர்கள் போன்றோரை உள்ளடக்கியது. எமது செயற்பாடுகளின் மையமாக இணக்கப்பாடு காணப்படுகின்றது. சர்வதேச வான் போக்குவரத்து சங்கத்தினால் (IATA) மேற்கொள்ளப்படும் IATA செயற்பாட்டு பாதுகாப்பு கணக்காய்வுகள் (IOSA) மற்றும் தரைச் செயற்பாடுகளில் IATA பாதுகாப்பு கணக்காய்வுகளுடன் (ISAGO) தொடர்ச்சியாக இணக்கப்பாடு பராமரிக்கப்படுகின்றது. சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பு (ICAO) நியமங்கள், பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் வெளிப்படைத்தன்மையான அறிக்கையிடல் என்பன முறைமைப்படுத்தல் நேர்மையினை உறுதிசெய்கின்றன. என்ஜினியரிங் செயற்பாடுகள் EASA அங்கிகாரங்கள் உள்ளடங்கலான கடுமையான சர்வதேச பராமரிப்பு நெறிமுறைகளை பின்பற்றும் வேளை ஸ்ரீலங்கன் வான்பயணவியல் கல்லூரியானது உலகளாவிய பயிற்றுவித்தல் நியமங்களுடன் சீரமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கன் கேட்டரிங் வழமையான கணக்காய்வுகளூடாக உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஒழுங்குவிதிகளை நிலைநிறுத்துகின்றது. இந்த கூட்டு முயற்சிகள் செயற்பாட்டு தனிச்சிறப்பு மற்றும் பங்காளிகள் நம்பிக்கைக்கான எமது கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது. பங்காளிகளுடனான எமது கலந்துரையாடல்கள், குறிப்பாக விமான குத்தகைதாரர்கள் மற்றும் என்ஜின் உற்பத்தியாளர்களுடனானவை திரவத்தன்மை சாவல்களை தீர்ப்பதற்கும் எமது விமானத்தொகுதியின் செயற்பாட்டு தயார்நிலையினை உறுதிசெய்வதற்கும் காரணியாய் இருந்தன. அவர்களது உறுதுணையானது கொடுப்பனவு திட்டங்களை ஒத்திவைப்பதனையும் சேவையற்ற என்ஜின் பழுதுபார்த்தலையும் இயலுமையாக்கியதுடன், இது கட்டுப்பாடான நேரங்களில் உறவுமுறை மூலதனத்தின் புலப்படும் பெறுமதியினை வெளிப்படுத்துகின்றது.

சூழல் பாரபத்தியம் மற்றும் நிலைபேறுடைய புத்தாக்கம்

எமது நிலைபேறுடைமை இலட்சியங்கள் துணிவானதாகவும் எமது கூட்டாண்மை மூலோபாயத்தில் ஆழமாக ஒருங்கிணைக்கப்பட்டும் உள்ளன. உலகளாவிய வான்பயணவியல் இலக்குகளுக்கு சீரமைவாக, எமது செயற்பாடுகள் முழுவதும் காபன் உமிழ்வுகளை கண்காணித்து அறிக்கையிடுவதற்காக நாம் ICAO இன் CORSIA வழிகாட்டிகளை கடைப்பிடித்துள்ளோம். எயார்பஸ் பசுமை செயற்பாட்டு செயன்முறைகளது கடைப்பிடிப்பு, IATA இன் CO_2 கெனெக்ட் முன்னெடுப்பில் எமது பங்கேற்றல் மற்றும் வலுச் சிக்கனமான முன்னெடுப்புகளிலான எமது தொடர்ச்சியான முதலீடுகள் உள்ளூர் மற்றும் சர்வதேச சூழல் நியமங்களுக்கான எமது கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

எதிர்காலத்தினை கட்டியெழுப்புதல்: மீளெழுச்சி, இடர் மற்றும் சீர்திருத்தம்

புவிசார் அரசியல் தளம்பல்களிலிருந்து திறன் பற்றாக்குறை மற்றும் போட்டி அழுத்தம் வரை விமான நிறுவனமானது விழிப்புடனும் பதிலளிக்கக்கூடியதாயும் இருத்தல் வேண்டும். எமது நிறுவன இடர் முகாமைத்துவக் கட்டமைப்பானது இந்த உறுதியின்மைகளை விளித்துரைப்பதற்கு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், வணிகத் தொடர்ச்சி, சொத்துப் பாதுகாப்பு மற்றும் நிலவரம் அடிப்படையான திட்டமிடலையும் உறுதிசெய்கின்றது. துறையானது பசுமை வான்பயணவியல் மற்றும் டிஜிட்டல் உருமாற்றத்தினை கடைப்பிடிக்கும்போது நாம் எம்மை வளர்ச்சி, விரைவூக்கம் மற்றும் மீளெழுச்சி என்பவற்றுக்கு நிலைப்படுத்துகின்றோம். விமானத்தொகுதி விரிவாக்கல் திட்டங்கள், டிஜிட்டல் முதலீடுகள் மற்றும் திறன் அபிவிருத்தி ஆகிய அனைத்தும் இந்த நீண்டகால தொலைநோக்குடன் சீரமைக்கப்பட்டுள்ளன. அது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வெறுமனே ஒரு தேசிய வானூர்தியாக இன்றி ஒரு பொறுப்புமிக்க, போட்டித்தன்மையான மற்றும் நிலைபேறுடைய உலகளவிய வான்பயணவியல் வணிகநாமமாக வருகின்ற தொலைநோக்கினைக் கொண்டதாகும்.

ஒப்புகை

எமது பயணத்திற்கு, ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் மதிப்புமிக்க உள்ளூர் மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களது தொடர்ச்சியான நம்பிக்கைக்கு அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உங்களது அசைக்கவியலாத விசுவாசம் தனிச்சிறப்பிற்கு கடுமையாக முயற்சிப்பதற்கும், நாம் வழங்கும் பிரயாண அனுபவத்தை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கும் எமக்கு ஊக்கமளித்துள்ளது. பணிப்பாளர்கள் சபைக்கு, அவர்களது உறுதியான வழிகாட்டல் மற்றும் மூலோபாய நுண்ணறிவிற்கும் நன்றியினை தெரிவிப்பதுடன், சிக்கல் மற்றும் மாற்றத்தினால் குறிப்பிடப்பட்ட காலத்தின்போது ஒப்பந்தத்தின் இறுதியில் எம்மை விட்டு விலகிய பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அவரது கூர்மதியுடைய தலைமைத்துவத்திற்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது முகாமைத்துவ அணிக்கும் பணியாட்களுக்கும், கணிசமான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தொடர்ச்சியான செயற்பாடுகளை உறுதிசெய்த அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் மீளெழுச்சிக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எமது கூட்டு முன்னேற்றத்திற்குப் பின்னால் அவர்களது கடப்பாடானது ஒரு இயங்கு சக்தியாக காணப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்திற்கும், மான்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும் மற்றும் மதிப்பிற்குரிய நிதி அமைச்சருக்கும் மதிப்பிற்குரிய பிரதி நிதி அமைச்சருக்கும், திறைசேரியின் செயலாளருக்கும் பொருத்தமான அனைத்து நிறுவனங்களின் அனைத்து அதிகாரிகளுக்கும் அவர்களது தொடர்சியான உறுதுணை மற்றும் ஒத்துழைப்பிற்கும் இச்சந்தர்ப்பத்தில் நான் எனது ஆழ்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன். சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் மற்றும் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் எமது பரந்த பணிக்கு சீரமைவாக உறுதியின்மைகளை சமாளிப்பதற்கு விமான நிறுவனத்திற்கு அளித்த உதவியானது மிகவும் முக்கியம் என்பதுடன், இதற்கு எமது பங்குதாரர்களின் உறுதுணையும் ஆழமாக பாராட்டப்படுகின்றது.

சரத் கனேகொட
தலைவர்

பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

"ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செயற்பாட்டு செயற்திறனிலான மேம்பாட்டில் திடமான வலியுறுத்தலை இட்டதுடன், இது காலந்தவறாத புறப்பாடு மற்றும் வருகைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை விளைவித்தது."

2024/25 ஆண்டிற்கான ஆண்டறிக்கையினையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் முன்னிலைப்படுத்தி இதுவரைக்குமான பயணத்தை மீளாய்வு செய்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இக்காலப்பகுதியில் வான்பயணவியல் துறையானது தொற்றின் பின்னரான அதன் மீட்பினை தொடர்ந்ததுடன், இலங்கையின் பொருளாதாரமும் தொடர்ச்சியாக உத்வேகத்தினை அடைந்தது. இந்த அறிக்கையானது வெறுமனே எமது நிதியியல் நிலையினை மாத்திரம் பிரதிபலிக்கவில்லை, மாறாக எமது மூலோபாயம், செயற்பாடுகள், சூழல் பாரபத்தியம், மக்கள் அபிவிருத்தி மற்றும் அனைத்து பங்காளிகளுக்கும் நாம் உருவாக்கும் பெறுமதி என்பவற்றின் ஒரு முழுமையான வெளிப்பாடாகும்.

செயற்பாட்டுச் சூழல் மற்றும் துறையின் நிலத்தோற்றம்

மீளாய்வாண்டின்போது உலகளாவிய மற்றும் பிராந்திய வான்பயணவியல் துறையானது சிக்கலான சவால்களைச் சந்தித்தபோதிலும் பல வாய்ப்புக்களினால் நிறைந்திருந்தது. வளர்ந்து வரும் சந்தை இயக்காற்றலுக்கு மத்தியில், இலங்கையின் சுற்றுலாத் துறையானது குறிப்பிடத்தக்க மீளெழுச்சி மற்றும் மீட்பினை வெளிக்காட்டியதுடன், தேசிய விமான நிறுவனத்திற்கு அதன் வளர்ச்சிப் பாதையில் ஒரு முக்கியமான மிகையூட்டலை வழங்கியது. 2024 இல் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை 2.1 மில்லியனை விஞ்சியதுடன் இது வருடத்திலிருந்து வருடம் 38% அதிகரிப்பினை பிரதிபலித்ததுடன், இது 2019 இலிருந்து பதிவுசெய்த உயர்ந்த பருமனளவாகும். இந்தியா தொடர்ச்சியாக முன்னணி மூலச் சந்தையாக காணப்பட்டு 416,000 இற்கும் அதிகமான வருகையாளர்களுக்கு பங்களிப்பு செய்ததுடன், அதனைத் தொடர்ந்து ரஸ்யா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் சீனா என்பன காணப்பட்டன. எவ்வாறாயினும், வழங்கல் சங்கிலி சிக்கல்களுக்கு மத்தியில் விமானத்தொகுதி கட்டுப்பாடுகள் போன்ற தொடர்ச்சியான சவால்களின் காரணமாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இந்த வளர்ச்சியடையும் கேள்வியிலிருந்து முற்றாக நலன்களை பயன்படுத்திக்கொள்வதற்கு இயலாதிருந்தது.

மீளாய்வாண்டு முழுவதும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உயர் தளம்பலுடைய உலகளாவிய மற்றும் உள்ளூர் செயற்பாட்டு சூழலைச் சமாளித்தவேளை இது அதன் செயற்பாட்டு செயற்திறன் மற்றும் நிதியியல் விளைவுகளில் கணிசமானளவு செல்வாக்கு செலுத்தின. வான்பயணவியல் துறையானது குறிப்பிடத்தக்க உலகளாவிய சவால்களுடன் தொடர்ந்தும் போராடவேண்டியிருந்தது. சர்வதேச வான் போக்குவரத்த சங்கத்தின் (IATA) பிரகாரம், துறைரீதியான விளைவானது வருடத்திலிருந்து வருடம் 5% ஆல் வீழ்ச்சியடைந்த வேளை ஆசிய பசிபிக் பிராந்தியமானது அதிகளவு வீழ்ச்சியினை அனுபவித்தது. பூகோள அரசியல் பதற்றங்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் ஐரோப்பிய விமானப் பாதைகளை மாற்றுவதற்கு கட்டாயப்படுத்தியதுடன், இதன் விளைவாக நீடித்த பயண நேரங்கள், உயர்ந்த எரிபொருள் நுகர்வு மற்றும் குறைவான தாங்குசுமை கொள்திறன்கள் என்பன காணப்பட்டன. இலண்டன் ஈத்ரோ போன்ற சுறுசுறுப்பான விமான நிலையங்களில் எமது அவசியமான தரையிறக்க இடங்களைப் பராமரிப்பதற்காக விமான நிறுவனமானது அதன் புறப்பாடுகளை மீள்அட்டவணைப்படுத்த வேண்டியதாயிற்று. இது ஒரு செயற்பாட்டு அவசியமாக காணப்பட்டதுடன், தவறவிட்ட இணைப்புகள் மற்றும் அவ்வப்போதான பயணிகளை இறக்குதல் போன்ற பயணிகள் அசௌகரியத்திற்கு துரதிர்ஷ்டவசமாக இட்டுச்சென்றது. சரக்குத் துறையில், குறிப்பாக பங்களாதேஷில் நிலவிய அரசியல் உறுதியின்மைகள் மேலதிக ஏற்பாட்டியல் சவால்களை தோற்றுவித்ததுடன், விமான நிறுவனத்தின் சரக்கு செயற்பாடுகளை பாதித்து பிராந்திய வழங்கல் வலையமைப்புகளின் மீளெழுச்சியினை பலவீனப்படுத்தியது.

உள்ளூர் ரீதியாக, அதிகரிக்கும் செயற்பாட்டு செலவினங்கள் மற்றும் விமானத் தொகுதி வரையறைகள் உள்ளடங்கலான குறிப்பிடத்தக்க சவால்களுக்கு மத்தியில் இலங்கைக்கு பல சர்வதேச வானூர்திகளின் திருப்பம் மற்றும் விரிவாக்கிய சேவைகளுடன், வான்பயணவியல் நிலத்தோற்றமானது அதிகரித்த போட்டியினை அனுபவித்தது. எயார்பஸ் A320/321 Neo விமானத்திலான என்ஜின்களில் காணப்பட்ட பரவலான சிக்கல்கள் உலகம் பூராவும் விமானங்களின் செயலிழப்பிற்கு இட்டுச்சென்றன. உதிரிப்பாகங்களின் உலகளாவிய பற்றாக்குறையின் காரணமாக கட்டாயமான பராமரிப்புகளிலான தாமதங்களினால் இச்சிக்கல்கள் மேலும் மோசமாகி விமான நிறுவனத்தின் விமானத்தொகுதி கிடைப்புத்திறனை குறைத்தது. இந்த கட்டுப்பாடுகள் விமான இடையூறுகள், அதிகரித்த என்ஜின் தொடர்பான செலவினங்களுக்கு இட்டுச் சென்றதுடன், விமான நிறுவனத்தின் காசு நிலைமையில் அழுத்தங்களை ஏற்படுத்தின. இந்த வெளிவாரி அழுத்தங்கள் காணப்பட்டபோதிலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செயற்பாட்டு இணக்கத்திறன், வாடிக்கையாளர் சேவைத் தனிச்சிறப்பு மற்றும் நிதியியல் விவேகத்திற்கு கடப்பாட்டுடன் இருந்ததுடன், நிலைபேறுடைய மீட்பு மற்றும் நீண்டகால வளர்ச்சிக்கான அடித்தளத்தினை இட்டது.

நிலைபேறுடைய செயற்திறன்

சவால்களுக்கு இடையில் நிதியாண்டு 2024/25 இல் விமான நிறுவனமானது நிதியாண்டிற்கான வருவாயாக ரூபா 296.5 பில்லியனையும் செயற்பாட்டு இலாபமாக (பரிமாற்றல் இலாபங்கள் மற்றும் அட்டவணைப்படுத்தாத பழுதுபார்த்தல் செலவுகளை கணக்கீடு செய்வதற்கு முன்னர்) ரூபா 24.7 பில்லியனையும் எய்தப்பெற்றது. அட்டவணைப்படுத்தாத என்ஜின் பழுதுபார்த்தல் செலவுகளான ரூபா 2.2 பில்லியன் மற்றும் தேறிய நிதிச் செலவினங்களான ரூபா 31.6 பில்லியனை கணக்கீடு செய்ததன் பின்னர் விமான நிறுவனமானது தேறிய நட்டமாக ரூபா 7.6 பில்லியனை பதிவு செய்தது.

பயணிகள் வருவாயானது நிதியாண்டு 2023/24 உடன் ஒப்பிடும்போது 15% ஆல் வீழ்ச்சியடைந்தது. இதன் பிரதான காரணிகளாக, கொள்திறன் வரையறைகள், விளைவுகளில் உலகளாவிய வீழ்ச்சி, மற்றும் நிதியாண்டு 2024/25 இல் இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடைந்ததனால் பரிமாற்றல் வீதத்திலான தாக்கம் என்பன காணப்பட்டன. இதற்கு எதிர்மாறாக சரக்குப் பிரிவின் வருவாயானது நிதியாண்டு 2023/24 உடன் ஒப்பிடும்போது 2% ஆல் அதிகரித்தது. இந்த வளர்ச்சிக்கு பிரதான காரணியாக, தளம்பலான கேள்வி, பருவகால மாதிரிகள், கொள்திறன் வரையறைகள் என்பவற்றை சந்திக்கும் ஒரு இயக்காற்றலான விலையிடல் மூலோபாயத்தின் அமுலாக்கல், மற்றும் இலக்குவைத்த வாடிக்கையாளர் பிரிவுகள் என்பன காணப்பட்டன. இந்த அணுகுமுறையானது கொண்டுசெல்லப்பட்ட சரக்கு கிலோ ஒன்றிற்கான வருவாயினை விமான நிறுவனம் உகப்பாக்குவதற்கும் பரவலான ஏற்பாட்டியல் இடையூறுகளுக்கு மத்தியில் மூலோபாய சரக்கு வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்கும் இயலுமையாயிருந்தது. ஏனைய வருவாய்கள் 16% ஆல் வளர்ச்சியடைந்து ரூபா 27.1 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது இலங்கையில் செயலாற்றும் ஏனைய வானூர்திகளுக்கு வழங்கப்பட்ட

துணைச் சேவைகள் மற்றும் தரைக் கையாளுதல் சேவைகளினால் பிரதானமாக இயக்கப்பட்டதுடன், சந்தையின் வலுவான மீட்பினை பிரதிபலித்தது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செயற்பாட்டு செயற்திறனிலான மேம்பாட்டில் திடமான வலியுறுத்தலை இட்டதுடன், இது காலந்தவறாத புறப்பாடு மற்றும் வருகைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை விளைவித்தது. இந்த முன்னேற்றத்தின் ஒரு முக்கிய இயலுமையாக்கியாக செயலற்றுக் கிடந்த இரண்டு Neo விமானங்களது சேவைக்கான வெற்றிகரமான திரும்பல் காணப்பட்டதுடன், இது அவசியமான கொள்திறனை மீட்டமைத்ததுடன் முன்னுரிமையான பாதைகளில் விமான நிறுவனத்தின் சந்தை இருப்பினை வலுவூட்டியது.

விமான நிறுவனம் அதன் அனைத்து செயற்பாட்டு கருமங்களிலும் தரவினால் இயக்கப்படும் அணுகுமுறையினை கடைப்பிடித்தது. இவை விமானச் செயற்பாடுகள் மற்றும் விமானத்தொகுதி பயன்பாடு என்பவற்றிலிருந்து பொதிகள் கையாளுதல் மற்றும் தரைச் சேவைகள் வரை காணப்பட்டன. செயன்முறைகளை தரப்படுத்தி மெய்நேர செயற்பாட்டு மேற்பார்வையினை மேம்படுத்துவதன் மூலம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் திருப்புமுனை நேரத்தினை உகப்பாக்கி சேவை இடையூறுகளை தணிப்பதற்கும் இயலுமையாயிருந்ததுடன், செயற்பாட்டு நம்பகத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் சேவைத் தனிச்சிறப்பிற்கான அதன் நற்பெயரினையும் வலியுறுத்தியது.

முன்னோக்கிச் செல்லும்போது, நிலைபேறுடைய வளர்ச்சி, நிதியியல் மீளெழுச்சியினை மேம்படுத்துதல் என்பவற்றுக்கு முன்னுரிமையளித்து எப்போதும் மாற்றமடையும் வான்பயணவியல் நிலத்தோற்றத்தினை சமாளிக்கும்வேளை எமது பயணிகள் மற்றும் பங்காளிகளுக்கு தொடர்ந்தும் பெறுமதியினை விநியோகிப்போம்.

வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துதல்

எமது உருமாற்றலின் இதயத்துடிப்பாக சேவைத் தனிச்சிறப்பு, டிஜிட்டல் புத்தாக்கம் மற்றும் தரவினால் இயக்கப்படும் நுண்ணறிவுகளூடாக பயணிகள் அனுபவத்தினை உயர்த்துவதற்கான ஒரு நிலையான கடப்பாடு காணப்படுகின்றது. இவ்வாண்டு முழுவதும், விமான நிறுவனமானது, சௌகரியம், இணைப்பு மற்றும் வாடிக்கையாளர் பயணத்தில் ஒவ்வொரு தொடுபுள்ளியிலுமான ஈடுபாடு என்பவற்றை மேம்படுத்தும் இலக்கினைக் கொண்ட பல முக்கிய முன்னெடுப்புகளை அமுலாக்கியது.

FlySmiLes விசுவாசத் திட்டமானது ஒரு குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பிற்கு உள்ளாகியதுடன், புதுப்பிக்கப்பட்ட இணையத்தளமானது மேம்பட்ட செயற்பாடு மற்றும் பயனாளர் அனுபவத்தினை வழங்கியது. ஒரு தனிப்பயனாக்கப்பட்ட வர்த்தகர் நுழைவாயில், மீட்டல் வாய்ப்புக்களை விரிவாக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இது திட்டத்தின் ஒட்டுமொத்த பெறுமதி உருவாக்கத்தினை மேலும் வளப்படுத்தியது. இதனை பூர்த்தி செய்யும் விதமாக YAANA எனப்படும் விமான நிறுவனத்தின் கூட்டாண்மை இணையத்தளத்தில் முதலாவது AI இயக்க செட்பொட் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது முழு நேரமுமான உறுதுணை மற்றும் தடையற்ற டிஜிட்டல் ஊடாட்டங்களையும் இயலுமையாக்குகின்றது.

வளர்ந்து வரும் பயண முன்னுரிமைகளுக்கு சீரமைவாக, மொபைல் இயலுமையான டிஜிட்டல் பதிவுசெய்தல் மற்றும் தொடுதிறனற்ற விமானமேறுதல் செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இது காத்திருப்பு நேரங்களை கணிசமாக குறைத்து பயணிகள் பாதுகாப்பினை மேம்படுத்தியது. விமான நிறுவனமானது அதன் விமானத்தினுள்ளான வழங்கல்களை தொடர்ச்சியாக சீர்திருத்தி, கம்பியில்லா பொழுதுபோக்குத் தெரிவுகளை அறிமுகப்படுத்தி செரன்டிப் ஓய்விடத்தில் உயர்ந்த சமையல்சார் அனுபங்களை ஒழுங்குசெய்தது.

வாடிக்கையாளர் பின்னூட்டமானது இந்த முன்னேற்றங்களின் மையமாக காணப்படுவதுடன், தேறிய ஊக்குவிப்பவர் புள்ளியுடன், பதிவுசெய்தல், மாற்றல்கள், பொதி கையாளுதல் மற்றும் ஓய்விட அணுக்கம் உள்ளடங்கலான முக்கிய சேவைப் பிரிவுகள் தற்போது செயலூக்கமாக தடமறியப்படுகின்றன. இந்த நுண்ணறிவுகள் மெய்நேர முன்னேற்றங்களை அறிவித்து எமது வாடிக்கையாளர் முதலாவதாக தத்துவத்தினை வலியுறுத்துகின்றன.

இந்த அபிவிருத்திகளுள் பல விமான நிறுவனத்தின் செயற்பாடுகள் முழுவதும் பரந்த டிஜிட்டல் மேம்படுத்தல்களினால் துணையளிக்கப்பட்டதுடன், இவற்றின் விபரங்கள் பொருத்தமான மூலதனப் பிரிவுகளின் விளக்கப்பட்டுள்ளன. இவை ஒரு மெய்நேர AI இயக்கப்படும் வருவாய் முகாமைத்துவ முறைமையின் கடைப்பிடிப்பு, iCargo மேடையினூடாக சரக்கு செயன்முறைகளின் தன்னியக்கமாக்கல் மற்றும் சுய சேவை தொழில்நுட்பங்களின் தொடர்ச்சியான வெளியீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

மூலோபாய வணிக அலகுகளது செயற்பாடுகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட முன்னேற்றம்

எமது மூலோபாய வணிக அலகுகள் ஒவ்வொன்றும், பொறியியல், தரைக் கையாளுகை என்பவற்றிலிருந்து ஸ்ரீலங்கன் வான்பயணவியல் கல்லூரி வரைக்கும் எமது கூட்டான செயற்திறனை உயர்த்துவதில் முக்கிய பங்காற்றின. இந்த அணிகள் வினைத்திறனை அதிகரிப்பதற்கும், செலவுகளை குறைப்பதற்கும் மற்றும் செயலாற்றல் தொடர்வினை பராமரிப்பதற்கும் ஒத்துழைப்பான ஒருங்கியத்தினை கடைப்பிடித்தன.

பொறியியல் பிரிவானது விமானப் பராமரிப்பு உட்கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு நம்பகத்தன்மை என்பவற்றை பலப்படுத்துவதற்காக இலக்குவைத்த முதலீடுகளை பொறுப்பேற்றது. இவற்றுள் முக்கியமானவையாக பின்வருவன காணப்படுகின்றன: சுவிஸ் AS இனால் AMOS மற்றும் எயார்பஸ் ஸ்கைவைஸ் போன்ற துறையின் முன்னணி பராமரிப்பு தீர்வுகளின் கடைப்பிடிப்பு என்பவையாகும். இவை மேம்பட்ட திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் தரவினால் இயக்கப்படும் தீர்மானம் மேற்கொள்ளல் என்பவற்றினூடாக விமான நிறுவனத்தின் பராமரிப்புச் செயற்பாடுகளை உருமாற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முறைமைகள் விமானத் தொகுதி முழுவதும் மேம்பட்ட இணக்கப்பாடு மற்றும் பராமரிப்பு வினைத்திறனுக்கு துணையளிக்கின்றன.

எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேர்விசஸ் லிமிட்டட்டுடனான ஒத்துழைப்புடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்பு தரமுயர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை, பொதிகளது சுழல்பொருள் மேடைகளது விரிவாக்கம் மற்றும் பயணிகள் விமானமேறும் வாசல்களின் மேம்பட்ட ஒதுக்கீட்டினையும் உள்ளடக்கியதுடன், இவையிரண்டும் விரைவான விமான திருப்புமுனை நேரங்கள் மற்றும் அதிக தடையற்ற பயணிகளின் பாய்ச்சலுக்கு பங்களிப்பு செய்தன. இடைமாற்ற மற்றும் உயர் மதிப்பான பயணிகளுக்கான சேவைத் தரத்தினை உயர்த்துவதற்காக, ஓய்வறை மற்றும் இடைமாற்றப் பிரிவுகளில் புதுப்பித்தல்கள் பொறுப்பேற்கப்பட்டதுடன், இவை ஒட்டுமொத்த விமான நிலைய அனுபவத்தையும் வாடிக்கையாளர் திருப்தியினையும் மேம்படுத்துகின்றன.

இதற்கு இணையாக, ஸ்ரீலங்கன் ஏவியேஷன் கொலேஜ் இலங்கை வான் படையுடன் கூட்டிணைந்து EASA பகுதி 66 பாடத்தொகுப்பின் நடைமுறை கூறுகளை பலப்படுத்துவதற்காக அதன் பயிற்றுவித்தல் வழங்கல்களை

பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி தொடர்ச்சி.

மேம்படுத்தியது. அத்துடன், அதன் சர்வதேச பயிற்றுவித்தல் தேக்கத்தினை விரிவாக்குவதற்காக ஏவியேஷன் அவுஸ்திரேலியாவுடன் இணைந்து விமானப் பராமரிப்பு பொறியியலில் அவுஸ்திரேலிய டிப்ளோமாவினை அறிமுகப்படுத்தியது.

குறிப்பிடத்தக்க மைல்கற்கள்

மீளாய்வாண்டின்போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பல குறிப்பிடத்தக்க பாராட்டுக்களையும் துறைசார் அங்கீகாரங்களையும் பெற்றது. இது சேவைத் தனிச்சிறப்பு, வணிகநாம பலம் மற்றும் செயற்பாட்டு தலைமைத்துவத்திற்கான விமான நிறுனத்தின் தொடர்ச்சியான கடப்பாட்டினைப் பிரதிபலிக்கின்றது. இவ்வாண்டிற்கான சில சிறப்பம்சங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- APEX விருதுகள் 2024 - மத்திய /தெற்காசியாவில் சிறந்த பொழுதுபோக்கிற்கான விருது
- தெற்காசிய பிரயாண விருதுகள் (SATA) - தெற்காசியாவில் முன்னணி சர்வதேச விமானநிறுவனம்
- PATA தங்க விருதுகள் 2024 ‘சந்தைப்படுத்தல் - வானூர்தி’ பிரிவில் தங்க விருதினை வென்றது.
- தேசிய ஏற்பாட்டியல் விருதுகள் 2024 - விமான நிறுவனப் பிரிவில் வெள்ளி விருதினை வென்றது.

சூழல் பாரபத்தியம் மற்றும் இணக்கப்பாடு

ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் சூழல் செயற்திறன் ஒரு முக்கிய முன்னுரிமையாகக் காணப்படுகின்றது. ஐக்கிய இராச்சிய மற்றும் ஐரோப்பிய உமிழ்வுகள் வர்த்தகத் திட்டங்களான ICAO இன் CORSIA திட்டத்திற்கு மற்றும் தேசிய சூழல் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க நாம் உமிழ்வுகள், கழிவுகள் மற்றும் வளங்களது பயன்பாடுகளுக்கு கடுமையான கண்காணிப்பு மற்றும் சரிபார்த்தல் நெறிமுறைகளை அமுல்படுத்தியுள்ளோம்.

எமது சூழல் மூலோபாயத்தின் ஒரு முக்கிய தூணாக பல்லுயிர் பாதுகாப்பு காணப்படுவதுடன், காலப்போக்கில் எமது தாக்கத்தினை விரிவாக்குவதற்கு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் உள்ளடங்கலான ஏனைய பங்காளிகளுடன் எமது ஈடுபாட்டினை பலப்படுத்துவதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளோம். எமது நிலைபேறுடைமை நிகழ்ச்சிநிரலினை புத்தாக்கம் தொடர்ச்சியாக இயக்குகின்றது. விருது வென்ற மதக்க பயன்பாட்டு முன்னெடுப்பின் தொடர்ச்சியான வெற்றியானது, இலங்கை வடிவமைப்புகள் கொண்டாட்டம் 2025 இல் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன், இது ஆக்கபூர்வமான வடிவமைப்பு மற்றும் சூழல் பொறுப்பிற்கு இடையேயான சக்திமிக்க ஒருங்கியக்கத்தினை எடுத்துக்காட்டி சூழல்சார் மற்றும் வணிக நாமப் பெறுமதி ஆகிய இரண்டினையும் வழங்குகின்றது.

எமது வணிக வகுப்பு வானறையில், சௌகரியமானது தற்போது நிலைபேறுடைமைக்கான ஒரு கடப்பாட்டுடன் வருகின்றது. அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சூழல் தோழமையான தலையணை மற்றும் தலை ஓய்வு உறைகள் (அழுக்காவதைத் தடுத்தல்) என்பன மீள்சுழற்சி செய்யப்பட்ட PET பிளாஸ்டிக்கினை (R-PET) பயன்படுத்தி தயாரிக்கப்பட்டவையாகும். மேலாக, மீளுருவாக்கப்பட்ட நைலோனிலிருந்து செய்யப்பட்ட பாரம் குறைவான விமான தரைவிரிப்புகளது கட்டம் கட்டமான அமுலாக்கல் நடந்தவண்ணமுள்ளன. இந்த தரைவிரிப்புகள் ஒட்டுமொத்த விமானத்தின் சுமையினை குறைப்பதற்கு உதவுவதுடன், குறைவான எரிபொருள் பயன்பாட்டிற்கு பங்களிக்கும்வேளை பயன்படுத்தப்படாத மூலப் பொருட்களில் தங்கியிருப்பதனை குறைத்து சூழலிலிருந்து கழிவினை அகற்றுவதன் மூலம் மீளுருவாக்கம் மற்றும் மீள்பயன்பாட்டிற்கு துணையளிக்கின்றது.

முன்னோக்கிய பார்வை: 2025/26 இற்கான முன்னுரிமைகள்

எதிர்வரும் ஆண்டிற்கான பாதையில் நாம் செல்லும்போது, எமது முக்கிய முன்னுரிமைகள் பின்வருவனவற்றில் முன்னிறுத்தம் செய்கின்றன: செயற்பாட்டு ஸ்திரத்தன்மையினை மீட்டமைத்தல், விமானத்தொகுதியின் நம்பகத்தன்மையினை மேம்படுத்துதல், உயர் கேள்வியுடைய பாதைகளில் கொள்திறனை விரிவாக்குதல் மற்றும் ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துதல் என்பனவாகும். எமது செயற்பாடுகளில் மிகவும் ஆழமாக ஆறு மூலதன கட்டமைப்பினை உட்பதிப்பதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளோம். இது நிதியியல் செயற்திறனானது நீண்டகால சூழல் மற்றும் சமூக நிலைபேறுடைமை இலக்குகளுடன் சீரமைக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது.

சிறந்த வினைத்திறனை இயக்குவதற்கு, நாம் தொடர்ந்தும் உட்கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு தரமுயர்த்தல்களில் முதலீடு செய்கின்றோம். மூலதன வெளிப்பாய்ச்சல்களை சமநிலைப்படுத்துவதற்கான அவசியத்தினை இனங்கண்டு, நாம் செயற்பாட்டு மாதிரியான ஒப்பந்தங்களினூடாக புத்தாக்கமான நிதியளித்தல் ஏற்பாடுகளை கட்டமைத்துள்ளோம். இவை செலவினமானது ஒவ்வொரு திட்டத்தின் வாழ்நாள் மீது பரவுவதற்கும் பயன்பாட்டுடன் நலன்களை சீரமைப்பதனையும் அனுமதிக்கின்றன.

விமான குத்தகைதாரர்கள் மற்றும் என்ஜின் உற்பத்தியாளர்களுடனான எமது திடமான பங்குடைமைகள் இந்த முயற்சிகளுக்கு காரணியாயிருந்தன. வெளிப்படையான கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பான திட்டமிடலூடாக நாம் செயலாற்றவியலாத என்ஜின்களது பழுதுபார்த்தலுக்கான குத்தகையாளர் நிதியளிப்பினை வெற்றிகரமாக பெற்றுக்கொண்டோம். இந்த முக்கிய பங்காளிகள், ஒத்திவைக்கப்பட்ட தீர்ப்பனவு உடன்படிக்கைகளுக்கு வசதியளிப்பதன் மூலம் திரவத்தன்மை கட்டுப்பாடுகளை தளர்த்துவதில் ஒரு முக்கிய பங்கினை ஆற்றினார்கள். இவை எமது காசுப் பாய்ச்சல் நிலையினை பலப்படுத்தி சிறந்த நிதியியல் மீளெழுச்சியுடன் செயற்பாட்டு சவால்களை சமாளிப்பதற்கு எம்மை இயலுமையாக்கியுள்ளன.

ஒப்புகைகள்

கடந்து சென்ற ஆண்டினை நாம் சிந்திக்கும்போது, தலைவர், பணிப்பாளர்கள் சபை, இலங்கை அரசாங்கம் மற்றும் எமது வணிகப் பங்காளிகளுக்கு மற்றுமோர் சவால்மிக்க காலத்தில் அவர்களது தொடர்ச்சியான நம்பிக்கை மற்றும் உறுதுணைக்கு நான் எனது நன்றியினைத் தெரிவிக்கின்றேன். ஜனவரி 2022 முதல் மார்ச் 2025 வரை விமான நிறுவனத்திற்கு அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியாக தலைமைத்துவத்தினை வழங்கிய திரு. ரிச்சர்ட் நட்டால் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எமது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு - ஸ்ரீலங்கன் எயார்லைன்சினை தொடர்ச்சியாக தெரிவுசெய்வதற்கும் உங்களது எதிர்பார்ப்புக்களை சந்திப்பதற்கான எமது ஆற்றலில் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கும் நன்றியினை தெரிவிக்கின்றேன். எமது முன்னோக்கிய பயணத்திற்கு உங்களது அசைக்கவியலாத ஆதரவானது அடித்தளமாக காணப்படுகின்றது.

எமது முகாமைத்துவ அணி மற்றும் ஸ்ரீலங்கன் குடும்பத்தின் அனைத்து பணியாட்களுக்கும் அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் மீளெழுச்சியினை நான் பாராட்டுகின்றேன். சிக்கலான சூழ்நிலைகளின் கீழ் செயற்பாடுகளை நீடித்து எமது பயணிகளுக்கு பெறுமதியினை வழங்கியதில் அவர்களது அசைக்கவியலா கடப்பாடு முக்கியமானதாக காணப்பட்டது.

முன்னோக்கிப் பார்க்கும்போது, இலங்கை உலகுடன் இணைந்திருப்பதனை உறுதிசெய்வதில் மற்றும் அதன் எட்டுதலை விரிவாக்குவதில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்ச்சியாக ஒரு முக்கிய பங்கினை வகிக்கும் என்பதில் நாம் நம்பிக்கையுடன் உள்ளோம். இது தேசிய பொருளாதார மீட்டலுக்கு துணையளித்து வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான சிறந்த வாய்ப்பினை பராமரிக்கும்.

யசந்த திசாநாயக்க
மாற்றாள் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் குழும பிரதம நிதியியல் அதிகாரி

பணிப்பாளர்கள் சபை

1. சரத் கனேகொட

திரு. சரத் கனேகொட அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டின் சபைக்கு 09 ஒக்டோபர் 2024 இல் நியமிக்கப்பட்டதுடன், அதன்பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் சபைக்கும் நியமிக்கப்பட்டார்.

இவர் ஹேலீஸ் பிஎல்சி இன் குழும நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆவார். இவர் ஜூலை 2007 இல் குழும முகாமைத்துவக் குழுவுக்கு நியமிக்கப்பட்டதுடன் அதன் மூலம் செப்டம்பர் 2009 இல் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவரது பொறுப்பானது மூலோபாய வணிக அபிவிருத்தி அலகிற்கும் குழும தகவல் தொழில்நுட்பத்துக்கும் காணப்படுகின்றது. இவர் ஒக்டோபர் 2020 இல் அழுமெக்ஸ் பிஎல்சி இன் பிரதி தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் யுனிசிஸ்ட் இன்ஜினியரிங் பிஎல்சி, டிப்ட் பிரடக்ட்ஸ் பிஎல்சி, ஹேகார்ப் பிஎல்சி, ஹேலீஸ் வெப்ரிக் பிஎல்சி, ஹேலீஸ் வைபர் பிஎல்சி, கெளணி வெலி பிளான்டேஷன்ஸ் பிஎல்சி, சிங்கர் (ஸ்ரீலங்கா) பிஎல்சி, த கிங்ஸ்பரி பிஎல்சி, ஹொரான பிளான்டேஷன்ஸ் பிஎல்சி என்பவற்றின் சபைகளில் சேவையாற்றுகின்றார். அதன்பின்னர் இவர் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் பாரிய தனியார் துறை நிறுவனங்களில் பல சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளை வகித்துள்ளார்.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சமூக அங்கத்தவர், அவுஸ்திரேலியாவின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் அங்கத்தவரும் ஆவார். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிறுவனத்திலிருந்து ஒரு முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார்.

2. ஏ.கே.டி.டி.டி. அரந்தார

திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தர 2023 மார்ச் 16 ஆம் திகதி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டதுடன், பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். பணிப்பாளர் மற்றும் திறைசேரி பிரதிநிதியாக அவர் சபையின் பணிப்பாளராகவும் திறைசேரி பிரதிநிதியாகவும் பணியாற்றுகின்றார். அவர் தொடர்புடைய கட்சி மறுஆய்வுக் குழுவின் தலைவர், மற்றும் வாரியக் குழு இடர் குழுவின் தலைவர், மற்றும் நிறுவனம் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் மனிதவளங்கள் மற்றும் ஊதியக் குழு, தணிக்கைக் குழு மற்றும் வாரிய நெறிமுறைக் குழுவின் உறுப்பினர்.

திரு. அரந்தார அவர்கள் தொழில்ரீதியில் ஒரு வழக்கறிஞர் மற்றும் இவர் நிதி அமைச்சின், சட்ட அலுவல்கள் திணைக்களத்தில் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றுகின்றார்.

இவர் ஸ்ரீலங்கா ரெலிகொம் (சேவைகள்) லிமிட்டட்டின் தலைவரும் ஆவார்.

3. ரொஹான் குணதிலக்க

திரு. ரொஹான் குணதிலக்க அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டின் சபைக்கு 9 ஒக்டோபர் 2024 இல் நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் கம்பனியின் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் தலைவர் மற்றும் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவரும் ஆவார்.

திரு. ரொஹான் குணதிலக்க அவர்கள் ஹேலீஸ் குழுமத்தின் ஜவுளிகள் துறையின் முகாமைப் பணிப்பாளர்/பி.நி.அ. என்பதுடன் இவர் மார்ச் 2013 இல் இணைந்த ஹேலீஸ் வெப்ரிக் பிஎல்சி இற்கும் 2021 இல் ஹேலீஸ் வெப்ரிக் பிஎல்சி பொறுப்பேற்ற சவுத் ஏசியா டெக்ஸ்டைல்ஸ் லிமிட்டட் ஆகிய நிறுவனங்களுக்கு தலைமை தாங்குகின்றார். ஹேலீஸ் வெப்ரிக் பிஎல்சி இல் இணைவதற்கு முன்னர் திரு. குணதிலக்க அவர்கள் பிரன்டிக்ஸ் எக்ஸ்பிரெசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டில் பணிப்பாளராக சேவையாற்றி பிரன்டிக்ஸ் லங்கா லிமிட்டட்டின் முழுவதும் உரித்துடைமையான சிஎஸ்டி எப்பரல் (இந்தியா) (பிரைவேட்) லிட்டட்டின் சபைக்கு ஜனவரி 2011 இல் நியமிக்கப்பட்டார். இவர் டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா (பிரைவேட்) லிமிட்டட், மாஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடட்டின் துணை நிறுவனமான லீனிய குளோத்திங் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் முகாமைப் பணிப்பாளர்/பி.நி.அ. ஆக சேவையாற்றினார். இவர் எல்பிட்டிய பிளான்டேஷன்ஸ் லிமிட்டட்டின் பி.நி.அ. ஆகவும் ஹேலீஸ் வெப்ரிக் சொலூசன்ஸ் லிமிட்டட்டின் சபையிலும் சேவையாற்றினார். இவர் அவரது உயர் கல்வியினை ஐக்கிய இராச்சியத்திலிருந்து பெற்றார். இவர் பொறியியலில் இளமானி விஞ்ஞானப் பட்டதாரியாவார்.

4. Flt. /Lt. (Retd.) சுகத் ராஜபக்ஷ

Flt./Lt. (Retd.) திரு. சுகத் ராஜபக்ஷ அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டின் சபைக்கு 9 ஒக்டோபர் 2024 இல் நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர் மற்றும் மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் தலைவரும் ஆவார்.

இவர் விருந்தோம்பல் மற்றும் தொழில்துறை உணவளித்தல் துறைகளில் 45 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்ட ஒரு தொழில்சார் அனுபசாலியாவார். இவர் இலங்கை விமானப் படையில் ஒரு சிறப்பான இராணுவத் தொழிலையும் செய்துள்ளார். ஒரு ஓய்வுபெற்ற விமான லெப்டினன்ட் ஆன இவர் உள்ளூர் ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் இராணுவங்களிடையே, நட்சத்திர ஹோட்டல் சூழலில் உணவு வழங்கல் செயற்பாட்டினை வடிவமைப்பதில் ஒரு முக்கிய பங்கினை ஆற்றியுள்ளார்.

இவர் தற்போது லங்கா ரெஸ்ட் ஹவுசஸ் லிமிட்டட்டின் தலைவராக சேவையாற்றுவதுடன், சுற்றுலாத்துறைகளுக்கு அவரது தலைமைத்துவம் மற்றும் நிபுணத்துவத்துடன் பங்களிப்பு செய்கின்றார்.

இவர் சிலோன் ஹொட்டல் ஸ்கூலில் (தற்போது SLITHM) ஹோட்டல் மற்றும் உணவுவழங்கல் முகாமைத்துவத்தில் நான்கு வருட முகாமைத்துவ டிப்ளோமாவினை வைத்துள்ளதுடன், ஐக்கிய இராச்சியம், ஹவாய், அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் ஏனைய பல நாடுகளில் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் சர்வதேச பயிற்சியினைப் பெற்றுள்ளார். இவரது விரிவான அனுபவம் பின்வரும் சிரேஷ்ட பதவிகளை உள்ளடக்குகின்றது. அரலிய கிரீன் இல்ஸ் ஹோட்டல் மற்றும் ரந்தோலி லக்சறி ரிசோட்டில் பொது முகாமையாளர், ஷாமா ரிட்ரீட் இல் வதிவிட முகாமையாளர் மற்றும் டீமோ 800 இல் வளாக முகாமையாளர் என்பனவாகும். இவர் இலங்கை மற்றும்

பணிப்பாளர்கள் சபை தொடர்ச்சி.

வெளிநாடுகளில் பல்வேறு ஹோட்டல் திறப்பதற்கு முன்னரான திட்டங்களில் ஈடுபாடு கொண்டுள்ளார்.
இலங்கை விமானப் படையில் இவரது காலத்தின்போது, இவர் பணியாளர் அதிகாரி - உணவளித்தல், உணவக முகாமையாளர், VVIP/VIP வானறைக் குழுவின் தலைவர் மற்றும் சமையல் மற்றும் உணவகச் சேவையில் ஒரு விரிவுரையாளர் போன்ற பதவிகளை உள்ளடக்குகின்றது. இவர் விமானப் படை உணவளித்தல் முறைமைகளை நவீனப்படுத்துவதற்கும் விமானப் படை சமையல்சார் அணியினை உருவாக்குவதற்கும் காரணியாயிருந்தார்.

இவரது பங்களிப்புகள் பன்முகமான விருதுகளூடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவை "டிரிப் எட்வைசர் எக்சலன்ஸ் விருது", கிரீன் ஹோட்டல்" விருது (தொடர்ச்சியாக) மற்றும் ரந்தோலி லக்சறி ரிசோட்டுக்காக "கிரவுன் வொர் வுட் ஜஜீன்" என்பனவாகும்.

இவர் சிலோன் ஹோட்டல் கல்லூரி பட்டதாரிகள் சங்கத்தின் மற்றும் விருந்தோம்பல் நிறுவனம் (ஐக்கிய இராச்சியம்) என்பவற்றின் சமூக அங்கத்தவர் மற்றும் பல்வேறு உலகளாவிய சமையல்சார் மற்றும் விருந்தோம்பல் கருத்தரங்குகளில் இலங்கையினை பிரதிநிதித்துவம் செய்துள்ளார். இவர் பல குடிமைத் தலைமை பதவிகளை வகித்துள்ளார். அவை, இலங்கை விமானப் படை முன்னாள் படைவீரர்கள் சங்கத்தின் தலைவர், விருந்தோம்பல் நிறுவனத்தின் (இலங்கையின் சர்வதேசக் கிளை) செயலாளர், தொழில்சார் சங்கங்களின் ஒழுங்கமைப்பின் (OPA) பிரதிச் செயலாளர் மற்றும் களணிய ரோட்டரி கழகம் மற்றும் டீமோ டோஸ்ட்மாஸ்டர்ஸ் கழகம் ஆகிய இரண்டினதும் முன்னாள் தலைவரும் ஆவார்.

5. விபுல குணதிலக்க

திரு. விபுல குணதிலக்க அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டின் சபைக்கு 14 ஒக்டோபர் 2024 இல் நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் கம்பனி கணக்காய்வுக் குழுவின் தலைவர், சபை குழு, இடர் குழு என்பவற்றின் அங்கத்தவரும் மற்றும் கம்பனி, அதன் துணை நிறுவனத்தின் தொடர்புடைய தரப்பினர் மீளாய்வுக் குழு என்பவற்றின் அங்கத்தவரும் ஆவார்.

திரு. குணதிலக்க அவர்கள் அமைதியற்ற நேரங்களின்போது முன்னணி வணிகங்களில் பரந்த அனுபவத்தையும் முன்னணி விமான நிறுவனங்களிடையே சபை அங்கத்தவர், பி.நி.அ. மற்றும் பி.வி.அ. ஆக விமானநிறுவன முகாமைத்துவத்தில் ஆழமான அறிவினையும் கொண்டுவருகின்றார்.

இவர் தற்போது சர்வதேச விமான நிறுவனங்களுக்கு மூலோபாயம், விமான நிறுவன தொடக்க பணி, விமானத்தொகுதி கையகப்படுத்துதல், நிதி முகாமைத்துவம், வருவாய் மற்றும் செலவு உகப்பாக்கல் மூலோபாயம் என்பவற்றில் ஆலோசனை வழங்குகின்றார்.

இந்தியாவின் இரண்டாவது பாரிய வானூர்தியான ஜெட் எயார்வேஸ்(இந்தியா) இன் மீள் ஆரம்பத்தில் மார்ச் 2022 முதல் ஆகஸ்ட் 2023 வரை பிரதம நிதியியல் அதிகாரியாக செயலாற்றினார். இவர் வானூர்தி கையகப்படுத்தல்கள், வானூர்தி நிதியளிப்புகளை கட்டமைத்தல், த.தொ. முறைமைகளின் மதிப்பீடு /அமுலாக்கம் ஆகியவற்றில் முக்கிய பங்கினை வகித்ததுடன், புதிய வான் செயற்பாட்டாளர் சான்றளிப்புடன் இணைந்த பணிகளிலும் ஈடுபட்டிருந்தார்.

இவர் ஆகஸ்ட் 2018 முதல் ஜனவரி 2022 வரை ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பி.சி.அ. பதவியினை வைத்திருந்ததுடன், செலவு சீரமைப்பு, செயற்பாட்டு KPI களை மேம்படுத்துதல், வர்த்தக மற்றும் வாடிக்கையாளர் சேவைச் செயற்பாடுகளின் தன்னியக்கமாக்கலை மேம்படுத்துதல் என்பவற்றிலான முன்னெடுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்றியவேளை, உலகளாவிய தொற்றின்போது தேசிய வானூர்தியினை வெற்றிகரமாக வழிநடத்தினார்.
இவரது காலத்தின்போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பல புகழ்மிக்க விருதுகள் மற்றும் பாராட்டுக்களைப் பெற்றது. அவையாவன, 2019 இல் உலகத்தின் மிகவும் நேரந்தவறாத விமான நிறுவனமாக இருதடவைகள், இந்து சமுத்திரம் மற்றும் நான்கு நட்சத்திர பாரிய விமான நிறுவனத்திற்கான (2018-2021) உலகின் முன்னணி விமானநிறுவனம் ஆகும். உலகின் முன்னணி விமானநிறுவனங்களிடையே ஸ்ரீலங்ன் கொன்டிநாஸ்ட் ட்ரெவலர், ரீடர்ஸ் சொய்ஸ் விருதுகள் 2020 இல் 6ஆவது இடத்தை வென்றது.

இவர் பல முக்கிய நெடுந்தூர சந்தைகளை மீள் ஆரம்பிப்பதற்கும் 2021 இன் இறுதிக் காலாண்டின்போது உலகத் தொற்றிலிருந்து விரைவாக மீண்டு இலாபகரத்தன்மைக்கு திரும்புவதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்சினை இயலுமையாக்கிய வலையமைப்பு விரிவாக்கத்திற்கும் காரணியாயிருந்தார்.

ஸ்ரீலங்கனில் இணைவதற்கு முன்னர், இவர் எமிரேட்ஸ் விமான நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் கீழ் TAAG அங்கோலா விமான நிறுவனத்தின் பி.நி.அ./நிறைவேற்றுப் பணிப்பாளராக நவம்பர் 2015 முதல் ஜூலை 2018 வரை சேவையாற்றினார். நட்டத்தில் இயங்கிய விமான நிறுவனத்தை மீள்கட்டமைப்பதில் இவர் ஒரு முக்கிய பங்கினை வகித்ததுடன், இது மேற்கு ஆபிரிக்காவில் ஒரு வான்பயணவியல் மையமாக அங்கோலாவினை நிலைப்படுத்தும் மூலோபாயங்களை நிறைவேற்றியதன் காரணத்தினாலாகும். இவை ஒரு புதிய வருவாய் பாய்ச்சல்களை உருவாக்குவதற்கும், செயற்பாட்டு வினைத்திறன்களை மேம்படுத்துவதற்கும் செலவினங்களை குறைப்பதற்கான செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கும் மேற்கொள்ளப்பட்டன.

இவர் எமிரேட்ஸ் விமான நிறுவனத்தினது முகாமைத்துவத்தின் கீழ் ஜனவரி 2005 இலிருந்து செப்டம்பர் 2005 வரை ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பிரதம நிதியியல் அதிகாரி பதவியினை வகித்ததுடன், எமிரேட்சிலிருந்து இலங்கை அரசாங்கத்திற்கான முகாமைத்துவ மாற்றலின்போது தடையற்ற மாற்றலை உறுதிசெய்வதற்காக பதிலாள் பி.நி.அ. ஆக ஒரு முக்கிய பங்கினை வகித்தார்.

6. துமித் பர்னாந்து

திரு. துமித் பர்னாந்து அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டின் சபைக்கு 24 ஒக்டோபர் 2024 இல் நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் சபைக்கும் நியமிக்கப்பட்டார். அவர் நிறுவனம் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் தணிக்கைக் குழு, வாரியக் குழு இடர் குழு, தொடர்புடைய கட்சி மதிப்பாய்வுக் குழு மற்றும் வாரிய நெறிமுறைக் குழு ஆகியவற்றில் உறுப்பினராக உள்ளார்.

திரு. துமித் பர்னாந்து அவர்கள் சர்வதேச நிதிச் சந்தைகளில் 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளார். கடந்த 10 வருடங்களாக இவர் சர்வதேச மற்றும் உள்ளூர் வாடிக்கையாளர்களுக்கு நிறுவன நிதியளித்தல் ஆலோசனை, ஆராய்ச்சி, பங்குத் தரகு மற்றும் செல்வ முகாமைத்துவ சேவைகளை வழங்கும் இலங்கையிலுள்ள ஒரு முன்னணி சுயாதீன முதலீட்டு வங்கியான ஏசியா செக்கியூரிட்டீஸ் இன் தலைவரும் ஆவார். இவர் 2020-2022 காலப்பகுதியல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தலைவரும் ஆவார்.

2013 வரை இவர் ஹொங்கொங் இனை தளமாகக் கொண்ட கிரடிட் சுயிஸ் ஏசியா பசிபிக் இல் குழும பிரதான செயற்பாட்டு அதிகாரி மற்றும் முகாமைப் பணிப்பாளராக இருந்தார். கிரடிட் சுயிசில் இணைவதற்கு முன்னர், இவர் நியூ யோர்க் மற்றும் ஹொங்கொங் இல் அமெரிக்க வங்கியியல் நிறுவனமான ஜேபி மோர்கன் சேஸ் இன் நிறைவேற்று பணிப்பாளராக இருந்தார் இங்கு இவரது பங்கானது நிறுவன மூலோபாயம், முதலீட்டு வங்கியியல், உரித்துவங்கள் மற்றும் தனிப்பட்ட உரித்துவம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

இவர் யூனியன் எசூரன்ஸ் பிஎல்சி இன் ஒரு சுயாதீன பணிப்பாளர் ஆவார்.

இவர் இவரது இரண்டாம்நிலை கல்வியினை இலங்கையில் நிறைவு செய்தார். இவர் அமெரிக்காவில் மிடல்பரி காலேஜில் இருந்து பௌதீகம் மற்றும் பொருளியலில் இளமானி கௌரவப் பட்டத்தையும் ஹாவாட் பிசினஸ் கல்லூரியிலிருந்து வணிக நிர்வாகத்தில் ஒரு முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

7. கலாநிதி. ஹர்சா கப்ரால், ஜ.ச.

கலாநதி. ஹர்சா கப்ரால் ஜ.ச. அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டின் சபைக்கு 24 ஒக்டோபர் 2024 இல் நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் சபைக்கும் நியமிக்கப்பட்டார். அவர் வாரிய நெறிமுறைக் குழுவின் தலைவர், நிறுவனம் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் மனிதவளம் மற்றும் ஊதியக் குழுவின் உறுப்பினர்.

கலாநிதி. ஹர்சா கப்ரால், ஜ.ச. அவர்கள் கம்பனிச் சட்டம், அறிவுசார் சொத்து, வர்த்தகச் சட்டம், மத்தியஸ்தம், பிணையங்கள் சட்டம் மற்றும் சர்வதேச வர்த்தகச் சட்டம் என்பவற்றில் 38 வருடங்களுக்கும் அதிகமான சட்ட அனுபவத்தைக்கொண்ட ஒரு ஜனாதிபதி சட்டத்தரணியாவார். இவர் வர்த்தக மேல் நீதிமன்றங்கள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் முன்னிலைப்பட்டுள்ளதுடன், சட்ட எண் 11/1995 இன் மத்தியஸ்தச் சட்டம், 2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், மற்றும் அறிவுசார் சொத்துச் சட்டம் உள்ளடங்கலான முக்கிய சட்டவாக்கங்களை வரைவதற்கு காரணியாய் இருந்தார்.

இவர் பாரிசில் ICC சர்வதேச மத்தியஸ்த நீதிமன்றத்தில் ஆறு வருடங்கள் சேவையாற்றியுள்ளதுடன் தற்போது இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிறுவனம் மற்றும் இலங்கையின் சட்ட ஆணைக்குழு உள்ளடங்கலான பல ஆலோசனை மற்றும் அரசாங்க பதவிகளை தற்போது வகிக்கின்றார்.

இவர் டோக்கியோ சிமெண்ட் குழுமம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் தலைவராக சேவையாற்றுவதுடன், ஹேலீஸ் பிஎல்சி, டீமோ பிஎல்சி, அழுமெக்ஸ் பிஎல்சி, சிலிங்கோ லைவ் மற்றும் செவ்ரொன் லுபிரிக்கன்ட்ஸ் லங்கா பிஎல்சி உள்ளடங்கலான பல முன்னணி கம்பனிகளில் நிறைவேற்றதிகாரம் அற்ற பணிப்பாளராக சேவையாற்றுகின்றார். அத்துடன் இவர் உள்ளகக் கணக்காய்வு, ஆளுகை, வேதனம், மற்றும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் குழுக்கள் போன்ற பல சபை உபகுழுக்களில் தலைமையாக சேவையாற்றுகின்றார்.

கலாநிதி. கப்ரால் அவர்கள் பன்முகமான பல்கலைக்கழகங்களில் வந்துபோகும் சிரேஷ்ட விரிவுரையாளராக உள்ளதுடன், நிறுவன மற்றும் அறிவுசார் சொத்துச் சட்டங்களில் பல பிரசுரங்களை எழுதியுள்ளார். இவர் அவுஸ்திரேலியாவின் கன்பெரா பல்கலைக்கழகத்திலிருந்து நிறுவனச் சட்டத்தில் கலாநிதி பட்டத்தையும் பட்டய ஆளுகை நிறுவனத்தின் (ஐக்கிய இராச்சியம்) ஒரு சமூக அங்கத்தவரும் ஆவார்.

8. செனாரத் டி. லியனகே

திரு. செனாரத் டி. லியனகே அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டின் சபைக்கு 12 டிசம்பர் 2024 இல் நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் கம்பனியின் கணக்காய்வுக் குழு மற்றும் சபை குழும இடர் குழுவின் அங்கத்தவர் ஆவார்.

இவர் வான்பயணவியல் சட்டம், சர்வதேச வான் போக்குவரத்து கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் அலுவல்களில் மூன்று தசாப்தங்களுக்கு மேலான அனுபவத்தைக்கொண்ட உயர் நிறைவேற்றுதலுடைய சட்ட வல்லுநராவார். இவர் கனடாவின் மெக்கில் பல்கலைக் கழகத்திலிருந்து வான் மற்றும் இடச் சட்டத்தில் LLM பட்டத்தை வைத்துள்ளதுடன், இங்கிலாந்து மற்றும் வேல்சில் ஒரு தகைமை பெற்ற சட்ட அறிவுரைஞர் மற்றும் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞரும் ஆவார்.

இவர் தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் சர்வதேச வான்பயணவியல் சட்டம், விமானநிலைய செயற்பாடுகள், மற்றும் U.S. ITAR மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் உள்ளடங்கலான இராணுவ வான்பயணவியல் இணக்கப்பாட்டு விடயங்கள் என்பவற்றில் ஆலோசனை வழங்கும் வான்பயணவயில் சட்ட ஆலோசகராகச் சேவையாற்றுகின்றார். திரு. லியனகே அவர்கள் எயார்லங்காவின் வானறை குழு அங்கத்தவராக 1980 இல் அவரது வான்பயணவியல் தொழிலை ஆரம்பித்தார்.

இதற்கு முன் திரு. லியனகே அவர்கள் 15 வருடங்களுக்கும் மேலாக எதியாட் எயார்வேஸ் இல் சட்ட அலுவல்கள் மற்றும் பொது அறிவுரைஞராக சேவையாற்றினார். இங்கு இவர் அதன் ஆரம்பத்திலிருந்து சேவையாற்றுவதுடன், இவர் விமான நிறுவனத்தின் சட்ட கட்டமைப்பினை நிறுவுவதற்கும், அதன் ஆரம்ப வருடங்களில் அனைத்து சட்ட, முறைமைப்படுத்தல் மற்றும் ஆளுகை விடயங்களை மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாய் இருந்தார். அதற்கு முன்னர் இவர், UAE வெடரல் மினிஸ்ட்ரி ஒவ் கொமியூனிகேசன்ஸ் இற்கு வான் போக்குவரத்து ஆலோசகராக சேவையாற்றியதுடன், இவர் UAE தேசிய வானூர்தியின் சார்பில் இருதரப்பு பேரம்பேசலில் ஈடுபட்டுள்ளதுடன், ICAO மற்றும் IATA போன்ற சர்வதேச மன்றங்களில் UAE இனை பிரதிநிதித்துவம் செய்துள்ளார்.

விரிவான சர்வதேச அனுபவத்துடன் இவர் பாரிய உலகளாவிய வான்பயணவியல் கருத்தரங்குகளில் இலங்கை மற்றும் UAE ஆகிய இரு நாடுகளையும் பிரதிநிதித்துவம் செய்துள்ளதுடன், இவர் 1999 இன் மொன்றியல் மாநாடு மற்றும் 2001 இன் கேப் டவுன் மாநாடு என்பவற்றில் ஒரு கையொப்பதாரியும் ஆவார்.

இலங்கையில், திரு. லியனகே அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒரு சிரேஷ்ட அரச வழக்கறிஞராக சேவையாற்றுவதுடன், குற்றவியல் மற்றும் குடியியல் வழக்குகளுக்கு பங்களிப்பு செய்கின்றார். அத்துடன் இவர் முக்கிய வான்பயணவியல் சட்டவாக்கத்தினை வரைதல் உள்ளடங்கலாக முறைமைப்படுத்தல் சீர்திருத்தங்களில் சிவில் வான் போக்குவரத்து திணைக்களம் மற்றும் சிவில் வான் போக்குவரத்து அமைச்சிற்கு ஆலோசனை வழங்குவதற்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட முகாமைத்துவ அணி

1. திரு. யசந்த திசாநாயக்க
மாற்றாள் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் குழும பிரதம நிதியியல் அதிகாரி

திரு. யசந்த திசாநாயக்க அவர்கள் 2004 இலிருந்து விமான நிறுவனத்துடன் பணிபுரிவதுடன் தற்போது இவர் குழுமத்தின் பிரதம நிதியியல் அதிகாரியாக சேவையாற்றி நிறுவனம் முழுவதும் மூலோபாய தலைமைத்துவம் மற்றும் நிதியியல் பாரபத்தியத்தினை வழங்குகின்றார். இவரது குழும பிரதம நிதியியல் அதிகாரி பொறுப்புகளுக்கும் மேலாக, விமான நிறுவனத்தின் நிதி, வர்த்தகக் கொள்முதல், இயக்காற்றல் மற்றும் ஆதனங்கள் செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்கின்றார். திரு. திசாநாயக்க அவர்கள் மார்ச் 2025 இல் மாற்றாள் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இவர் விமான நிறுவனத்திற்கு பல முன்னோடியான நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கு தலைமை தாங்கினார். இவை முதலாவது சர்வதேச முறி வழங்கல் மற்றும் இஸ்லாமிய நிதியளித்தல் வசதி என்பவையாகும் என்பதுடன், இவற்றுக்கு இரண்டு ஆசிய பிராந்திய விருதுகளில் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

மேலாக, புதிய A330-300 விமானத் தொகுதிக்கான முன்விநியோக நிதியளிப்பினை (PDP) உருவாக்குவதில் காரணகர்த்தாவாக இருந்ததுடன், இக்கொடுக்கல் வாங்கலானது எயார் பைனான்ஸ் சஞ்சிகையிடமிருந்து 2014 இல் "வருடத்திற்கான PDP நிதியில் ஒப்பந்தமாக" அங்கீகாரத்தினைப் பெற்றது.

விமான நிறுவனத்தில் இணைவதற்கு முன்னர், இவர் முதலீட்டு வங்கியியல் மற்றும் தொலைதொடர்பு துறைகளில் சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார். இவர் தொழில்ரீதியாக ஒரு கணக்காளர் (ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சமூக அங்கத்தவர்) மற்றும் கார்டிவ், வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் ஒரு முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

2. திருமதி. டெல்ரின் திருக்குமார்
கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுத் தலைமை /கம்பனி செயலாளர்

திருமதி. டெல்ரின் திருக்குமார் அவர்கள் 2013 இல் கம்பனியில் சேர்ந்தார். இவர் கம்பனியின் செயலாளர் மற்றும் கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுமத் தலைமையும் ஆவார். இப்பிரிவானது வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் எயார்லங்கா (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றிற்கு கூட்டாண்மை செயலகச் சேவைகளை வழங்குகின்றது. இவர் சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்களான, விமான நிறுவனத்தின் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் கணக்காய்வுக் குழு, மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு மற்றும் குழும சபை இடர் குழு மற்றும் விமான நிறுவனம் மற்றும் அதன் துணைக்கம்பனியின் தொடர்புடைய தரப்பினர் மீளாய்வுக் குழு ஆகியவற்றிற்கு செயலாளராக கடமையாற்றுகின்றார். இவர் ஸ்ரீலங்கன் கெயார்ஸ் நம்பிக்கை நிதியத்தின் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளராவார்.

இவர் 27 வருடங்களுக்கும் மேலான தகைமையின் பின்னரான அனுபவத்தினைக் கம்பனி செயலக நடைமுறைத் துறையில் கொண்டுள்ளதுடன் இலங்கையில் பொது பட்டியலிடப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட பன்கூட்டுக் கம்பனிகளில் மிகவும் சிரேஷ்ட பதவிகளை வைத்துள்ளார். இவர் ஐக்கிய இராச்சியம் மற்றும் அயர்லாந்தின் பட்டய ஆளுகை நிருவகத்தின் இணை அங்கத்தவராவார். இவர் அவுஸ்திரேலியாவிலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை பணிப்பாளர்கள் நிருவகத்தின் (இ.ப.நி.) அங்கத்தவரும் மற்றும் இ.ப.நி. இனை பிரதிநிதித்துவம் செய்யும் சபை செயலாளர்கள் மன்றத்தின் செயற்பாட்டுக் குழுவின் ஒரு செயலிலுள்ள அங்கத்தவரும் ஆவார்.

3. கெப்டன் பெட்ரிக் பர்னாந்து
பிரதம தொழில்நுட்ப அதிகாரி மற்றும் வானூர்தி செயற்பாடுகளின் தலைமை

கெப்டன் பெட்ரிக் பர்னாந்து அவர்கள் 1992 இல், முன்னர் எயார் லங்கா என அறிந்துகொள்ளப்பட்ட ஸ்ரீலங்கன் நிறுவனத்தில், L-1011 விமானத்தின் ஒரு பயிற்சி விமானியாக இணைந்தார். பல வருடங்களாக இவர் L-1011, A320, A330 மற்றும் A340 விமானங்களை இயக்கி ஒரு கெப்டனாக சேவையாற்றியுள்ளதுடன், இரு தசாப்தங்களுக்கும் மேலான கட்டளை அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவரது பறத்தல் கடமைகளுக்கும் மேலாக, இவர் 15 வருடங்களாக ஒரு பயிற்றுவிப்பாளராக இருந்துள்ளதுடன், இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான வகை தரப்படுத்தல் பரீட்சாளர் பதவியினை வகித்துள்ளார்.

2011 இல், கெப்டன் பர்னாந்து அவர்கள் ஒரு தலைமைத்துவப் பதவிக்கு மாற்றலாகி, முதலாவதாக பயிற்றுவித்தல் மற்றும் நியமங்களுக்கான பிரதி பிரதம விமானி, அதன் பின்னர் பயிற்றுவித்தல் மற்றும் நியமங்களுக்கான பிரதம விமானியாக சேவையாற்றினார். இவர் தற்போது A320/A330 விமானத் தொகுதியின் கட்டளைத் தளபதி ஆவார்.

தற்போது கெப்டன் பர்னாந்து அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பதிலாள் பொறுப்புக்கூறல் முகாமையாளராக செயலாற்றும் வேளை பிரதம தொழில்நுட்ப அதிகாரி மற்றும் விமானச் செயற்பாடுகளின் தலைமைப் பதவியினையும் வகிக்கின்றார்.

4. திரு. சாமர பெரேரா
தகவல் தொழில்நுட்பத்தின் குழுத் தலைமை

திரு. சாமர பெரேரா அவர்கள் வான்பயணவியல் தொழில்நுட்பம் மற்றும் வணிகச் செயன்முறை தன்னியக்கமாக்கலில் இரண்டு தசாப்தங்களுக்கும் அதிகமான அனுபவத்தினை கொண்டுவருகின்ற விமானத் துறையில் ஒரு அனுபவமிக்க தொழில்வல்லுநராவார். தேசிய வானூர்தியில் 1999 இல் இணைந்த திரு. பெரேரா அவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் பல்வேறு களங்களில் பரவலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். பல வருடங்களாக இவர் பல்வேறு வகையான முக்கிய முகாமைத்துவ பதவிகளில் விமான நிறுவனத்தில் சேவையாற்றியுள்ளதுடன் 2012 இல் தகவல் தொழில்நுட்பத்தின் தலைமையாக நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் ஸ்ரீலங்கன் குழுமத்தின் தகவல் தொழில்நுட்ப மூலோபாய மற்றும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் தகவல் தொழில்நுட்பத்தின் குழும தலைமையாக நியமிக்கப்பட்டார்.

இவரது சேவைக்காலம் பூராவும் திரு. பெரேரா அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குழுமத்தினுள் டிஜிட்டல் உருமாற்றல் மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கத்தினை வழிநடத்துவதற்கு காரணியாய் இருந்தார். இவரது தலைமைத்துவத்தின் கீழ், விமானப் பயணவியல் த.தொ.தொ.மற்றும் டிஜிட்டல் சூழலமைப்புகள் கணிசமானளவு வளர்ச்சியடைந்துள்ளதுடன், இவை தரைச் செயற்பாடுகளிலிருந்து விமானத்தினுள்ளான இணைப்புகள் வரையான சகலதையும் உள்ளடக்குவதுடன் செயற்பாட்டு தொடர்வுக்கு தேவையான முக்கிய பணி அமைப்புமுறைகளுக்கு துணையளிக்கின்றன.

திரு. பெரேரா அவர்கள் பயணிகளை மையப்படுத்திய சேவைகளை மேம்படுத்துவதை முன்னிறுத்தும் பல ஆரம்ப முன்னெடுப்புகளுக்கு தலைமை தாங்கியுள்ளார். இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:- IATA இன் வணிகத் திட்டத்தின் (StB) எளிமைப்படுத்தல், உலகளாவிய வான்போக்குவரத்து போக்குகளுக்கு இணையாக விரைவான பயணத் தீர்வுகளை அறிமுகப்படுத்தல் என்பனவாகும். வலுவான த.தொ. ஆளுகைக்கான இவரது கடப்பாடானது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுடன் விமான நிறுவனத்தின் இணக்கப்பாட்டினை உறுதிசெய்ததுடன், பின்வரும் சான்றளிப்புகளைப் பெறுவதனையும் இயலுமையாக்கியது. ISO/IEC 27001:2013 – தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம், ISO 9001:2015 – மென்பொருள் தர முகாமைத்துவம், ISO/IEC 20000:2018 – த.தொ. சேவை முகாமைத்துவம் மற்றும் ISO/IEC 27701:2019 – இரகசியத் தகவல் முகாமைத்துவம் என்பனவாகும்.

திரு. பெரேரா அவர்கள் விலையுயர்ந்த மரபுரீதியான விமான நிறுவன அமைப்புமுறைகளை மலிவான கிரயமுடைய புத்தாக்கமான செயலிகளின் தொகுப்பினை வெற்றிகரமாக உருமாற்றி மாற்றீடு செய்து தேசிய வானூர்தியின் ஒட்டுமொத்த தொழில்நுட்ப செலவினத்தை சீர்ப்படுத்துவதனை மேற்பார்வை செய்தார். உள்ளக ரீதியாக விருத்திசெய்யப்பட்ட செயலிகள் மற்றும் தீர்வுகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் புத்தாக்கம் மற்றும் தனிச்சிறப்பிற்கு பாராட்டுக்களைப் பெற்றுள்ளன. இவர் திடமான, எதிர்காலத் தேவைளை நிலைபேறாக்கும் ஆற்றலுடைய மேலாக்கத்தக்க தொழில்நுட்ப மேடை மற்றும் விமான நிறுவனத்தின் வளர்ச்சி அபிலாஷைகளுக்கு துணையளிப்பதற்கு தலைமைதாங்கினார். திரு. பெரேரா அவர்கள் இ-வணிகம் மற்றும் டிஜிட்டல் விற்பனை வழிகள் என்பவற்றை உள்ளடக்கிய நவீன டிஜிட்டல் மேடைகளை நிறுவுவதற்கும் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திரப் பயிலல் (ML) போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களை நிறுவுவதற்கு காரணியாயிருந்தார். இவை தரவு இயக்கத்திலான தீர்மானம் மேற்கொள்ளல், வாடிக்கையாளர் ஈடுபாட்டினை மேம்படுத்துதல், செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் வருவாய் உருவாக்கத்தினை அதிகரித்தல் போன்ற நோக்கினைக் கொண்டவையாகும்.

திரு. பெரேரா அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் லெஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து IT முகாமைப்படுத்தலில் விசேடத்துவத்துடன் வணிக நிர்வாகத்தில் ஒரு முதுமானி பட்டத்தைக் கொண்டுள்ளார். இவர் ஒரு தகைமை பெற்ற ஒரு பொறியியலாளர் ஆவார். இவர் இலங்கையின் மொறட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து இலத்திரனியல் மற்றும் தொலைதொடர்பு பொறியியலில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தைப் பெற்றுள்ளார். மேலும் இவர் முன்னணி சர்வதேச அங்கங்களிலிருந்து பல்வேறு த.தொ. தனித்திறன் உருவாக்கங்களில் தொழில்சார் தகைமைகளையும் சான்றளிப்புகளையும் பெற்றுள்ளார்.

5. திரு. திமுத்து தென்னக்கோன்
வர்த்தகத்தின் தலைமை

திரு. திமுத்து தென்னக்கோன் அவர்கள் விமான நிறுவன பயணிகள் விற்பனைகள், நிதியியல் முகாமைத்துவம், வருவாய் முகாமைத்துவம் மற்றும் வர்த்தகத் திட்டமிடல் ஆகியவற்றிலான விசேடத்துவத்துடன் விமான நிறுவனத் துறையில் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் 2017 இலிருந்து விமான நிறுவனத்தில் உலகளாவிய விற்பனைகள் மற்றும் விநியோகத்தின் தலைமையாக சேவையாற்றியதுடன் 2025 இல் வர்த்தகத்தின் தலைமையாக பதவியுயர்த்தப்பட்டார். தற்போது, திரு. தென்னக்கோன் அவர்கள் விமான நிறுவனத்தின் உலகளாவிய பயணிகள் விற்பனை மற்றும் விநியோகம், வருவாய் முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளுக்கு தலைமை தாங்குகின்றார்.

விமான நிறுவனத்தில் 1992 இல் இணைந்ததிலிருந்து இவர் நிதியியல், வருவாய் திட்டமிடல், வலையமைப்பு திட்டமிடல், செல்வழி முகாமைத்துவம் மற்றும் விலையிடல் பிரிவுகளில் சேவையாற்றியுள்ளார். இவர் டுபாய், மற்றும் கனடாவில் விற்பனை முகாமையாளர், மஹாராஸ்திரா மற்றும் குஜராத்தில் முகாமையாளர், ஆசிய பசிபிக் மற்றும் அவுஸ்திரேலியா மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களுக்கு பிராந்திய முகாமையாளர் போன்ற பதவிகளை வகித்துள்ளார். இவரது வெளிநாட்டு பணியினைத் தொடர்ந்து, இவர் வர்த்தகச் செயற்பாடுகளுக்கான பொது முகாமையாளராக, பிராந்திய விற்பனைகள், விற்பனை அபிவிருத்தி, கருவிகளது அபிவிருத்தி, வாடிக்கையாளர் அலுவல்கள், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ், துறைசார் அலுவல்கள், விமான நிறுவனத்தின் விசுவாசத் திட்டம் உள்ளடங்கலான வாடிக்கையாளர் உறவுகள், இ-வர்த்தகம், உலக தகவல் அழைப்பு மையம், செல்வழி முகாமைத்துவம் ஆகியவற்றில் சேவையாற்றி விமான நிறுவனத்தின் வர்த்தகச் செயற்பாடுகளில் அவரது திடமான அனுபவத்தினை எடுத்துக்காட்டினார். இவர் குறுகிய காலத்தில் ஓமான் எயார் நிறுவனத்தின் வட இந்தியாவிற்கான தேச முகாமையாளராக சேவையாற்றி ஓமான் எயார் நிறுவனத்தின் மும்பாய், டெல்லி, லக்னோவ் மற்றும் ஜய்ப்பூர் ஆகியவற்றின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தார்.

இவர் கடுமையான துறைசார் போட்டி உள்ளடங்கலான சமகால சவால்களை வெற்றிகொள்வதற்கான அவரது புரட்சிகரமான விற்பனை வளர்ச்சி மூலோபாயங்களுக்காக விமானப் போக்குவரத்துத் துறையில் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் ஆவார். புத்தாக்கமான மற்றும் வினைத்திறனான வர்த்தக நடைமுறைகளது நியாயவாதியான இவர் விமான நிறுவனத்தின் வர்த்தக குறிக்கோள்களை அடைவதற்கு அவரது மூலோபாய திட்டமிடல் மற்றும் செயன்முறை மேம்பாட்டு கண்ணோட்டத்திற்கு நன்கு தெரிந்துகொள்ளப்பட்டவர் ஆவார். இவர் அவரது குழுவினை ஊக்கமளித்தல் மற்றும் வலுவளித்தலூடாக நிறுவன வளர்ச்சியினை கற்பனை செய்யும் ஒரு அர்ப்பணிப்பான தலைவராவார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் இளமானி பட்டம் மற்றும் பக்கிம்ஹம்சயர் புதிய பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் சர்வதேச முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலாக இவர் விமான நிறுவனங்களது பிரதிநிதிகளின் இலங்கை சபையின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார்.

6. திரு. சமிந்த பெரேரா
சந்தைப்படுத்தலின் தலைமை

திரு. சமிந்த பெரேரா அவர்கள் ஜுன் 2015 இலிருந்து ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் மூலோபாயத் தொடர்பாடல் சாலை வரைபடத்தினை வழிநடத்துகின்றார். இவர் மூலோபாய சந்தைப்படுத்தல் மற்றும் உலகளாவிய விற்பனையில் விசேடத்துவத்துடன் விமானப் போக்குவரத்துத் துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் விமான நிறுவனத்தின் கூட்டாண்மை சமூக பொறுப்பு அங்கமான, ஸ்ரீலங்கன் கெயார்ஸ், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ், மற்றும் நிலைபேறுடமை முன்னெடுப்புகளை மேற்பார்வை செய்கின்றார்.

இவர் எமிரேட்ஸ் யுகத்தின்போது விமான நிறுவனத்தில் முகாமைத்துவ பயிற்சியாளராக இணைந்து விமான நிறுவனத்தின் பின்வரும் முக்கிய பதவிகளை வகித்தார். கூட்டாண்மை தொடர்பாடல்களின் பதிலாள் தலைமை, வர்த்தக முகாமையாளர் - பிரான்ஸ், இலங்கை மற்றும் மாலைதீவிற்கான பிராந்திய முகாமையாளர் மற்றும் உலகளாவிய விற்பனைகளது பொது முகாமையாளர்.

இவரது நிபுணத்துவமானது புதிதாக நிறுவப்பட்ட சந்தைகள்/பயண இலக்குகளில் வணிக நாமத்தினை நிறுவுதல், புத்தாக்கமான மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய முற்றான தொடர்பாடல்களை சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கும் பரந்துள்ளது. சர்வதேச மன்றங்களில் அங்கீகரிக்கப்பட்ட உலகளவில் பாராட்டைப்பெற்ற பல சந்தைப்படுத்தல் தொடர்பாடல் முயற்சிகளில் விமான நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் குழுவினை வழிநடத்தியுள்ளார்.

இவர் மும்பாய் பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் கணக்கீடு மற்றும் கணக்காய்வில் இளமானி வர்த்தகப் பட்டத்தினையும் சர்வதேச விமானப் போக்குவரத்து சம்மேளனத்திலிருந்து (IATA) விமானநிறுவன கற்கைகளில் (விமான நிறுவன சந்தைப்படுத்தல், விமான நிறுவன நிதி, கணக்கீடு, நிலைய முகாமைத்துவம்) ஒரு டிப்ளோமா பட்டத்தையும் வைத்துள்ளார்.

7. திரு. ஷமிந்த பெரேரா
தலைமை - சரக்கு

திரு. ஷமிந்த பெரேரா அவர்கள் ஜனவரி 2022 இல் விமான நிறுவனத்தில் இணைந்தார். இவர் வான்வழிப் போக்குவரத்துத் துறையில் வர்த்தக வானூர்திச் சரக்கு மற்றும் தரை கையாளுதல் செயற்பாடுகளில் திடமான முன்னிறுத்தத்துடன் 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. பெரேரா அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் தரை கையாளுதல் துறையில் அவரது தொழிலை

சிரேஷ்ட முகாமைத்துவ அணி தொடர்ச்சி.

ஆரம்பித்தார். வானூர்திச் சரக்கின் வர்த்தக கண்ணோட்டத்தினைக் கையாளுவதில் அவரது தொழில் நாட்டமானது லுவ்தான்சாவுக்கு அவர் நகர்வதற்கு வழிசமைத்தது. அங்கு அவரது நிபுணத்துவத்தினை அவர் மேலும் மெருகேற்றினார். அடுத்ததாக அவர் வானூர்திச் சரக்கு விற்பனைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் முகாமையாளராக வர்த்தக மற்றும் தரை கையாளுதல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஒரு குழுவினை முகாமைப்படுத்துவதற்காக சைனா எயார்லைன்சிற்கு முன்னேறினார். இதன் பின்னர் அடுத்த நகர்வு எமிரேட்சுக்கு காணப்பட்டதுடன் புதிய சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக இங்கு இவர் 16 வருடங்கள் சேவையாற்றி பதவி விலகும்போது இலங்கைக்கான வானூர்தி சரக்கிற்கான முகாமையாளராக சேவையாற்றினார்.

திரு. பெரேரா அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் இலண்டன் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்திலிருந்து வான்வழிப் போக்குவரத்து முகாமைத்துவத்தில் முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும், மலேஷியாவின் ஏசியா, பல்கலைக்கழகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் போக்குவரத்திற்கான பட்டய நிருவகத்திலிருந்து போக்குவரத்தில் ஒரு டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் ஏற்பாட்டியல் மற்றும் போக்குவரத்து பட்டய நிருவகத்தின் பட்டய அங்கத்தவரும் ஆவார்.

8. திரு. விபுல் மிஸ்ரா
பொறியியலின் தலைமை

திரு. விபுல் மிஸ்ரா அவர்கள் 2024 இல் விமான நிறுவனத்தில் இணைந்து பொறியியலின் தலைமையாக கடமையினைப் பொறுப்பேற்றார். விமானப் பொறியியலில் இரண்டு தசாப்தங்களுக்கும் அதிகமான அனுபவத்துடன், திரு. மிஸ்ரா அவர்கள் எயார் இந்தியா, ஸ்பைஸ்ஜெட், இந்திகோ,எயார் டெக்கான் மற்றும் கிங்விசர் எயார்லைன்ஸ் என்பவற்றை உள்ளடக்கிய பல வர்த்தக விமான நிறுவனங்களுடன் பழக்கப்பட்டவராவார்.

இவரது பங்கானது ஒரு உரிமமளிக்கப்பட்ட பொறியியலாளராக விமானத்திற்கு சான்றளிப்பதிலிருந்து பிரதி பொது முகாமையாளர் மற்றும் ஏனைய சிரேஷ்ட பதவிகளையும் உள்ளடக்குகின்றது. இவர் பல்வேறு மட்டங்களில் பல்வேறு விமான நிறுவனங்களில் தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் ஈடுபாடு, குறைவான விலை வானூர்திகள், முழுச் சேவை வானூர்திகள், துவக்கம் மற்றும் பாரம்பரிய வானூர்திகள் என்பவற்றில் அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. மிஸ்ரா அவர்கள் ஏரொஸ்பேஸ் லோ அன்ட் போஸ்ட் கிரெடுயேசனிலிருந்து வணிக நிர்வாகத்தில் ஒரு முதுமானி பட்டத்துடன் விமானப் பராமரிப்பு பொறியியலாளரது உரிமத்தையும் கொண்டுள்ளார்.

9. திரு. ஷானக்க சபரமாது
வருவாய் முகாமைத்துவம், வலையமைப்பு மற்றும் கூட்டணி ஆகியவற்றின் தலைமை

திரு. ஷானக்க சபரமாது அவர்கள் 2000 இல் விமான நிறுவனத்தில் ஒரு முகாமைத்துவ பயிலுநராக இணைந்து வர்த்தகப் பிரிவில் அவரது சேவைக்காலம் முழுவதும் பல்வேறு தலைமைத்துவப் பங்கினை வகித்துள்ளார். இவர் 15 வருடங்கள் முகாமைத்துவ தரம் உள்ளடங்கலாக 2 தசாப்தங்களுக்கும் அதிகமான வர்த்தக விமானப் பிரயாணத்தில் அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன் வருவாய் திட்டமில், வலையமைப்பு உகப்பாக்கம் மற்றும் வருவாய் முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளில் விசேடத்துவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. சபரமாது அவர்கள் 2001 இல் வருவாய் திட்டமிடல் திணைக்களத்தில் இணைந்து வருவாய் திட்டமிடல் முகாமையாளராக ஒரு குழுவினை வழிநடத்தினார். இதன்பின்னர் இவர் 2010 இல் வருவாய் திட்டமிடல் மற்றும் வலையமைப்பு திட்டமிடல் குழுக்கள் இரண்டையும் மேற்பார்வை செய்யும் முகாமையாளர் திட்டமிடல் பங்கினை பொறுப்பேற்றார். இவர் வருவாய் முகாமைத்துவ பிரிவின் வர்த்தக முகாமையாளராக நியமிக்கப்பட்டு பின்னர் ஐரோப்பிய பிராந்தியத்துக்கான வருவாய் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்கின்றார். அதன் பின்னர் ஐரோப்பா மற்றும் தூர கிழக்கு பிராந்தியங்களுக்கான கையிருப்பு மற்றும் விலையிடல் ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் வருவாய் முகாமைத்துவத்திற்கான சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டார். திரு. சபரமாது அவர்கள் தற்போது வருவாய் முகாமைத்துவம், வலையமைப்பு திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவுகளையும் விமான நிறுவனத்தின் சர்வதேச உறவுகள் பிரிவினையும் வழிநடத்துவதுடன், வருவாய் முகாமைத்துவம் மற்றும் வலையமைப்பு கூட்டணி ஆகியவற்றுக்கு தலைமையாக நியமிக்கப்பட்டார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகத்தில் விசேடத்துவம் கொண்ட இளமானி பட்டத்தையும் (மொன்ரியலின்) விமான நிறுவனக் கற்கையில் IATA டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர்களது பட்டய நிருவகத்தின் இறுதிப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவருமாவார்.

10. Lt. Col. பந்துல வேரகம
பொது முகாமையாளர் குழுமப் பாதுகாப்பு

Lt. Col. பந்துல வேரகம அவர்கள் இலங்கை தரைப்படையின் கறைபடாத 24 வருடங்கள் சேவையுடன் 2012 இல் விமான நிறுவனத்தில் இணைந்தார். முப்படைச் சேவைகள் சூழலிலான கட்டளை மற்றும் பயிற்சிகளின் விரிவான அனுபவத்திற்கு அப்பால் இவர் ஐக்கிய நாடுகள் திணைக்களத்தினது அமைதி காத்தல் செயற்பாடுகளிலிலும் சேவையாற்றியுள்ளார். மனித வளங்கள், விமானத்தினுள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகள் என்பவற்றில் தொழில்புரிந்ததன் பின்னர் பெப்ரவரி 2016 இல் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள் பிரிவினை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்டார். இவர் ஏப்ரல் 2020 இல் பொறுப்பேற்ற குழுமப் பாதுகாப்பு பிரிவிற்கு தற்போது தலைமை தாங்குகின்றார். இவர் களணிய பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கற்கையில் ஒரு முதுமானி பட்டத்தினையும் பாக்கிஸ்தானின் க்குவேட்டா பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞான முதுமானி பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

11. திருமதி. சூசன் ஜேக்கப்
மனித வளங்களின் குழுமத் தலைமை

2025 இல் மனித வளங்களின் குழுமத் தலைமையாகவும் தலைமைத்துவ அணியின் ஒரு அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்ட திருமதி. சூசன் ஜேக்கப் மனித வளத் துறையில் இருபது ஆண்டுகளுக்கும் மேலான கணிசமான சாதனைப் பதிவினைக் கொண்டு வருகின்றார்.

இவரது முன்னைய பங்குகள், பிரீமா சிலோன் லிமிட்டட்டில் HR இன் தலைமை, டயலொக் அக்ஷியாட்டா பிஎல்சி இல் முகாமையாளர் HR மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் இல் உதவி முகாமையாளர் HR ஆகியவற்றை உள்ளடக்கியதுடன் இவரது பங்களிப்புகள் விருது பெற்ற HR முன்னெடுப்புகளுக்கு துணையளித்துள்ளன. திருமதி. ஜேக்கப் அவர்களது பன்முகமான துறைசார் அனுபவமானது விமான நிறுவனத்திற்கு முன்னணி மனித வள நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான அவரது கடப்பாட்டினை அடித்தளமிடுகின்றது. இவரது நிபுணத்துவப் பிரிவுகள் நிறுவன உருமாற்றல், வாடிக்கையாளர் அனுபவங்களை படமிடுதல் (தொகையான ஆட்சேர்ப்பு), மனித வள அமைப்புமுறைகள், செயற்திறன் முகாமைத்துவம், ஆற்றல் கையகப்படுத்தல் மற்றும் தலைமைத்தவ அபிவிருத்தி என்பவையாகும்.

திருமதி. ஜேக்கப்பின் கல்விசார் தகைமைகள் ஐக்கிய இராச்சியத்திலிருந்து எங்கிலியா ரஸ்கின் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டம், ஐக்கிய இராச்சியத்தின் விஜன் அன்ட் லீ கல்லூரியிலிருந்து வணிக நிர்வாகத்தில் ஒரு

பட்டதாரி டிப்ளோமா மற்றும் இலங்கையின் மெட்ரோபொலிட்டன் கல்லூரியிலிருந்து பொதுவான உளவியலில் டிப்ளோமா ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

12. திரு. தீபால் பல்லேகங்கொட
சிரேஷ்ட முகாமையாளர் விமானநிலையம் மற்றும் தரைச் சேவைகள்

திரு. தீபால் பல்லேகங்கொட அவர்கள் 1991 இல் விமான நிறுவனத்தில் இணைந்தார். 1994 ஆம் ஆண்டில், இவர் விமான நிறுவனத்திலிருந்து விலகி டோஹா விமான நிலையத்துடன் இணைந்து கட்டார் எயார்வேஸ் கையாளுகையினை நிறுவுவதில் முக்கிய பங்கு வகித்தார். இவர் விமான நிறுவனத்தில் 1995 இல் மீண்டும் இணைந்தார். இவர் விமான நிலையச் செயற்பாட்டின் அனைத்து பிரிவுகளிலும், கடமை முகாமையாளர், விமானம் அனுப்புபவர், விமான நிலைய சேவைகளுக்கான பயிற்றுவிப்பாளர் (உள்ளூர்/வெளிநாடுகள்) மற்றும் நிலைய முகாமையாளர் ஆகிய பொறுப்புகளில் சேவையாற்றியுள்ளார். இவர் 2010 இல் வர்த்தகக் குழுவில் இணைந்து விற்பனை நிறைவேற்றுநர், உதவி விற்பனை முகாமையாளர், தேச முகாமையாளர், அரசாங்க பிரயாணம் மற்றும் பொது அலுவல்களுக்கான முகாமையாளர் ஆக கடமையாற்றினார். பின்னர் மே 2023 இல் இவர் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகளுக்கான சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவச் சேவையில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் கார்டிவ் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார். மேலும் சிட்டி அன்ட் கிள்ட்ஸ் இலிருந்து சான்றளிக்கப்பட்ட ஒரு பயிற்றுவிப்பாளர் ஆவார்.

13. திருமதி. துஷாரி பெரேரா
சிரேஷ்ட முகாமையாளர் குழும சட்ட அலுவல்கள்

திருமதி. துஷாரி பெரேரா அவர்கள் ஸ்ரீலங்கன் குழுமத்தில் குழும சட்ட அலுவல்களுக்கான சிரேஷ்ட முகாமையாளர் பதவியினை வகிக்கின்றார். இவர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் மனித வளங்கள் பிரிவில் இவரது தொழிலினை ஆரம்பித்து மனித வள முகாமைத்துவத்தின் பல்வேறு கூறுகளில் ஈடுபட்டிருந்தார். மனித வளப் பிரிவில் சேவையாற்றும்போது இவர் கைத்தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் மற்றும் பணியாட்கள் தொடர்பான விடயங்களில் வழக்காடல்கள் ஆகியவற்றில் அனுபவத்தினைப் பெற்றுள்ளார். 2013 இல் குழுமத்தின் சட்ட அலுவல்கள் பிரிவில் இணைந்ததிலிருந்து இவர் அனைத்து மட்டங்களிலுமான குழுமத்திற்கான வர்த்தக மற்றும் வான்வழிப் போக்குவரத்து ஒப்பந்தங்கள், கூட்டாண்மை மற்றும் முறைமைப்படுத்தல் விடயங்கள், பிணக்கு தீர்த்தல், பன்முக நியாயாதிக்க வெளிநாட்டு மற்றும் உள்ளூர் வழக்காடல்கள், அறிவுசார் சொத்து, கைத்தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் மற்றும் குழுமத்தின் நொத்தாரிசு பணிகள் ஆகியவற்றை கையாண்டுள்ளார்.

திருமதி. பெரேரா அவர்கள் தொழில்ரீதியாக ஒரு வழக்கறிஞர் ஆவார். இவர் ஆங்கில மற்றும் சிங்கள மொழிகளில் நொத்தாரிசு உரிமைத்தினைப் பெற்றுள்ளார். இவர் சர்வதேச விமானப் போக்குவரத்து சம்மேளனத்தினால் (IATA) நடாத்தப்பட்ட விமானக் கையகப்படுத்தல் மற்றும் நிதியளித்தல் பாடக்கோப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்தார். இவரது சட்டக் கல்விக்கும் மேலாக ஆளணி முகாமைத்துவ நிருவகத்தில் மனித வளங்கள் முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமாவினையும் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்தினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவுசெய்தார்.

14. திரு. ரவி சமரசிங்க
சிரேஷ்ட முகாமையாளர் வானறைச் சேவைகள்

திரு. ரவி அமரசிங்க அவர்கள் 1988 இல் விமான நிறுவனத்தில் ஒரு வானறை பணியாள் அங்கத்தவராக இணைந்து விமானத்தினுள்ளான சேவை பயிற்றுவிப்பாளராக தரமுயர்ந்தார். இவர் இதன் பின்னர் வானறை பணியாட்கள் செயற்திறன் முகாமையாளர் மற்றும் விமானத்தினுள்ளான சேவை முகாமையாளராக நியமிக்கப்பட்டார். 2024 இல், இவர் விமானத்தினுள்ளான சேவைகள் பிரிவுகளுக்கு தலைமை தாங்கும் சிரேஷ்ட முகாமையாளர் வானறைச் சேவைகளாக நியமிக்கப்பட்டார். தேசிய வானூர்தியில் இணைவதற்கு முன்னர், இவர் முன்னர் வங்கியியல் துறையிலும் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

இவர் தற்போது விமானத்தினுள்ளான சேவைகளுக்கு பொறுப்பாயுள்ளார். இச்சேவைக்கு விமான நிறுவனம் நன்கு பிரபல்யமானதுடன் அதன் அனைத்து செயற்பாடுகளையும் முகாமைப்படுத்துகின்றார். கண்ணியமான வானறை பணியாட்களை முகாமைப்படுத்துதல் ஏனையவற்றுக்கிடையில் மிகவும் முக்கியமான பணியாகும். மேலாக, விமானத்தினுள்ளான தீர்வை அற்றவை மற்றும் விமானத்தினுள் பரிமாறப்படும் உணவு மற்றும் பானங்களுக்கான பொறுப்பும் இவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. சமரசிங்க அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் சவோல்க் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் ஒரு முதுமானி பட்டத்தினை வைத்துள்ளார்.

15. திரு. கமல் அத்தாவுட
சிரேஷ்ட முகாமையாளர் குழுமப் பாதுகாப்பு

திரு. கமல் அத்தாவுட அவர்கள் விமான நிறுவனத் துறையில் 30 வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் 1995 இல் முன்னர் எயார்லங்கா என அழைக்கப்பட்ட விமான நிறுவனத்தில் இணைந்து ஒரு சுமை கட்டுப்பாட்டாளராக தரை கையாளுதல் பிரிவில் இவரது தொழில்வாழ்க்கையினை ஆரம்பித்தார். 1999 இல் இவர் சர்வதேச மற்றும் சட்டரீதியான ஒழுங்குவிதிகளினால் ஆளுகைச் செய்யப்படும் சவால்மிக்க பதவியினை நாடி விமானச் செயற்பாடுகள் பரிவிற்கு நகர்ந்தார். 2000 ஆண்டளவில், ICAO 201 விமானச் செயற்பாடுகள் அதிகாரி பாடநெறியினை நிறைவு செய்ததன் பின்னர் இவர் ICAO-உரிமமளிக்கப்பட்ட விமான அனுப்புபவராக வந்தார். செயற்திறனான மற்றும் பாதுகாப்பான விமானச் செயற்பாடுகளை உறுதிசெய்வதற்காக விமானச் செயற்பாடுகள் தொழிலில் இவர் தொடர்ச்சியான முன்னேற்றமடைந்து விமானம் அனுப்புதல், விமான செயற்திறன் பொறியியல், எரிபொருள் கண்காணிப்பு மற்றும் செயற்திறன், தொழில்நுட்ப பிரசுரங்கள் போன்ற முக்கிய முகாமைத்துவப் பதவிகளில் அவரது கடப்பாடு மற்றும் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தியுள்ளார்.

விமானச் செயற்பாடுகளில் 25 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்ட திரு. அத்தாவுட அவர்கள் நவம்பர் 2024 இல் சிரேஷ்ட முகாமையாளர் குழும பாதுகாப்பு பதவியினைப் பொறுப்பேற்றார். இப்பதவியில், இவர் விமான நிறுவனத்தின் வலுவான செயற்பாட்டு பாதுகாப்பு சாதனையினை நிலைநிறுத்தியுள்ளார், இது பல தசாப்பதங்களாக கட்டியெழுப்பப்பட்டதாகும். இவர் ICAO ஒழுங்குவிதிகளின் பிரகாரம் விமான மற்றும் தரைச் செயற்பாடுகள் இரண்டிலும் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்காக பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புமுறையில் அமுல்படுத்துதல் மற்றும் பராமரிப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகித்துள்ளார். மேலும், அவரது பொறுப்புக்களின் ஒரு பகுதியாக விமான நிறுவன ஊழியர்களின் தொழில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்காக தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

திரு. அத்தாவுட அவர்கள் வணிக நிர்வாகத்தில் ஒரு முதுமானி பட்டத்தையும் விமானச் செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்பில் தொழில்சார் தகைமைகளையும் வைத்துள்ளார்.

புத்தாக்கத்திற்கு தயாராயிருத்தல்

செயற்பாட்டுச் சூழல் மீளாய்வு

"நிதியாண்டு 2024/25 ஆனது பொருளாதார மீட்டல், பூகோள அரசியல் சவால்கள், செயற்பாட்டு செலவின அழுத்தங்கள் மற்றும் நம்பிக்கை தரும் சந்தை வாய்ப்புக்கள் என்பவற்றின் கலவையிலிருந்து உருவாகின்ற சிக்கலான மற்றும் வளர்ந்து வரும் செயற்பாட்டு சூழலில் முன்னிலைப்படுத்தப்படுகின்றது. இந்தக் காரணிகள் கூட்டாக விமான நிறுவனத்தின் மூலோபாய முன்னிறுத்தம், செயற்பாட்டு தீர்மானங்கள் மற்றும் நிதியியல் விளைவுகளை வடிவமைத்தன."

வருவாய்கள் மற்றும் இலாபகரத்தன்மையில் பாரியபொருளாதார மற்றும் சந்தைச் சூழல் தாக்கம்

பரிசீலனைக்குட்பட்ட நிதியாண்டின்போது, உலகளாவிய வான்பயணவியல் துறையானது ஒரு மீட்டெழுச்சியினை அனுபவித்தது. இதற்கு விடுமுறை மற்றும் வணிகப் பிரயாணங்கள் ஆகிய இரண்டிலும் குறிப்பாக சர்வதேச பயணிகளது பருமனளவுகள் எதிரெழுச்சி பெற்றன. அதேபோன்று, இலங்கையின் சுற்றுலாத்துறையானது 2024 இல் ஒரு வலுவான மறுமலர்ச்சியினை அனுபவித்ததுடன், சர்வதேச பயணிகளின் வருகையானது 2.1 மில்லியனை விஞ்சி வருடத்திலிருந்து வருடம் 38% அதிகரிப்பினை பிரதிபலித்ததுடன், இது 2019 இலிருந்து பதிவுசெய்த உயர்ந்த பருமனளவாகும். இந்தியா தொடர்ச்சியாக முன்னணி மூலச் சந்தையாக காணப்பட்டு 416,000 இற்கும் அதிகமான வருகையாளர்களுக்கு பங்களிப்பு செய்ததுடன், அதனைத் தொடர்ந்து ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் சீனா என்பன காணப்பட்டன. இந்த மீட்டெழுச்சியானது அதிகரித்த பயணிகள் கேள்வி, மூலோபாய உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மற்றும் துணையளிக்கும் கொள்கை சீர்திருத்தங்களினால் இயக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் கணிசமானளவு உள்வருகை சுற்றுலாத்துறையினை அதிகரித்ததுடன், சர்வதேச வான் பிரயாணத்திற்கான கேள்வியினையும் அதிகரித்து ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பயணிகள் வளர்ச்சி மூலோபாயத்தினை வலுப்படுத்தியது. இருந்தபோதிலும், உலகளாவிய மற்றும் உள்ளூர் சூழல் சவால்கள் குறிப்பிட்ட ஆண்டின்போது விமான நிறுவனத்தின் செயற்திறனை இடையூறுசெய்தது.

உலகளாவிய வான் பயணவியல் துறையில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் செயற்பாடுகள் மற்றும் இலாபகரத்தன்மையில் செல்வாக்கு செலுத்திய பல சவால்களுக்கு முகங்கொடுத்தது. IATA இன் பிரகாரம், உலகளாவிய விமான நிறுவனத் துறையின் விளைவானது வருடத்திலிருந்து வருடம் 5% ஆல் வீழ்ச்சியடைந்த வேளை ஆசிய பசிபிக் பிராந்தியமானது அதிகளவு பாதிக்கப்பட்டது. பூகோள அரசியல் பதற்றங்கள், குறிப்பாக இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான மோதல் ஆனது பல மத்திய கிழக்கு வான்வெளிப் பாதைகள் மூடப்படுவதற்கு இட்டுச்சென்றது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் ஐரோப்பிய விமானப் பாதைகளை திருத்தியமைத்தது. இதன் விளைவாக நீடித்த விமான காலங்கள், அதிகரித்த எரிபொருள் பயன்பாடு மற்றும் குறைவான தாங்குசுமை கொள்திறன்கள் ஏற்பட்டன. இலண்டன் ஈத்ரோ போன்ற நெரிசலான விமான நிலையங்களில் அட்டவணைப்படுத்தப்பட்ட நேர ஒதுக்கீடுகளைப் பராமரிப்பதற்காக புறப்பாட்டு நேரங்களை ஒரு மணித்தியாலம் முன்னரே அட்டவணைப்படுத்த வேண்டியதாயிற்று. இது துரதிர்ஷ்டவசமாக தவறவிடப்பட்ட இணைப்புக்கள் மற்றும் அவ்வப்போதான பயணிகளை இறக்குதல் உள்ளடங்கலான பயணிகள் இடையூறுகளை விளைவித்தது. மேலாக, செங்கடல் நெருக்கடிகள் உலகளாவிய கப்பல் பயணத்தை கணிசமானளவு பாதித்ததுடன், அதிகரித்த கடல் சரக்குச் செலவுகள் மற்றும் தாமதங்களுக்கு இட்டுச்சென்றது. இந்த இடையூறுகள் வழங்கல் சங்கிலி நம்பகத்தன்மையினை பராமரிப்பதற்காக வான் சரக்கு தீர்வுகள் நோக்கிய ஒரு மூலோபாய நகர்வினை தூண்டியது.

கடந்த ஆண்டு மீதான உயர்வடைந்த உலகளாவிய இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகளுக்கு பதிலளிக்கும் விதமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சர்வதேச சூழல் நியமங்களை கடுமையாக கடைப்பிடிக்கவேண்டியதாயிற்று. விமான நிறுவனமானது சூழல் பாரபத்தியத்திற்கு திடமான கடப்பாட்டினைக் கொண்டுள்ளதுடன், அதன் செயற்பாடுகளை உலகளாவிய மற்றும் தேசிய நிலைபேறுடைமை கட்டமைப்புகளுடன் சீரமைத்துள்ளது. அது ICAO இன் சர்வதேச வான்பயணத்திற்கான கார்பன் ஈடுசெய்தல் மற்றும் குறைப்புத் திட்டத்துடன் (CORSIA) கடுமையான இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதுடன், இதற்கு விமான உமிழ்வுகளுக்கான ஒரு வலுவான கண்காணித்தல்-அறிக்கையிடல்-சரிபார்த்தல் (MRV) முறை துணையளித்தது. மேலாக, விமான நிறுவனமானது ஐக்கிய இராச்சியம்

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

செயற்பாட்டுச் சூழல் மீளாய்வு தொடர்ச்சி.

மற்றும் ஐரோப்பிய உமிழ்வுகள் வர்த்தகத் திட்டத்துடன் இணங்கி, நிலைபேறுடைய வான்பயணவியல் எரிபொருள் (SAF) பொறுப்பாணைகளை சந்தித்து சூழல் ஆளுகைக்கு அதன் முன்முயற்சியான மற்றும் பொறுப்பான அணுகுமுறையினை பிரதிபலித்தது.

துறையானது இடைவிடாத சவால்களுக்கு முகங்கொடுத்தது. இவை, உயர்ந்த செயற்பாட்டுச் செலவினங்கள், விமானத்தொகுதி மற்றும் உதிரிப்பாகங்களின் வரையறை மற்றும் வளர்ச்சியடையும் சூழல் அழுத்தங்கள் என்பவற்றை உள்ளடக்கின. சரக்குப் பிரிவில், பிராந்திய அரசியல் உறுதியின்மை, குறிப்பாக பங்களாதேஷில், செயற்பாட்டு மற்றும் ஏற்பாட்டியல் சவால்களை ஏற்படுத்தியதுடன், வழங்கல் சங்கிலிகளுக்கு மேலும் இடையூறு விளைவித்தது.

செயற்பாடுகளது கண்ணோட்டம்

பயணிகள் செயற்பாடுகள்

மீளாய்வாண்டின்போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பயணிகள் கேள்வியில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை அனுபவித்ததுடன், இது உலகளாவிய பிரயாணத்தில் விரிவான மீட்டெழுச்சியினை பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும், கேள்வியில் காணப்பட்ட இந்த உயர்வானது, செயற்பாட்டு கட்டுப்பாடுகள் மற்றும் கொள்திறன் மற்றும் விளைவினை பாதிக்கும் வெளிவாரி சந்தை அழுத்தங்களின் காரணமாக வருவாய் வளர்ச்சியினை முழுமையாக ஏற்படுத்தவில்லை.

விமான நிறுவனத்தின் கிடைப்புத்திறன் இருக்கை கிலோமீற்றர்கள் (ASK) வருடத்திலிருந்து வருடம் 5% ஆல் வீழ்ச்சியடைந்ததுடன் இதற்கு முக்கிய காரணியாக குறைந்த விமானத்தொகுதியின் கிடைப்புத்திறன் காணப்பட்டது. தெற்காசிய பயண இலக்குகளுக்கான போக்குவரத்தில் அண்ணளவாக 50% பங்களிப்பு செய்யும் ஒரு முக்கிய இடங்கடப்பு மையமான மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க 15% ASK வீழ்ச்சியானது வலையமைப்பினை விகிதாசாரமற்ற விதத்தில் பாதித்தது. இந்த பாதைகளின் மூலோபாய முக்கியத்துவத்தின் விளைவாக, ஒட்டுமொத்த ASK சுருக்கமானது மெய்யான வருவாய் தாக்கத்தினை குறைத்துக் கூறுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது (நிதியாண்டு 23/24 3.6 மில்லியன்) விமான நிறுவனத்துடன் பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கை 4% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. இருக்கைக் காரணியானது 78.6% ஆக உள்ளதுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது (நிதியாண்டு 23/24 79.1%) 0.4% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. விமானத்தொகுதி வரையறைகள் பிரதானமாக பராமரிப்பிலிருந்து விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதங்களின் காரணத்தினாலாகும் என்பதுடன் என்ஜினியரிங் தொடர்பான சிக்கல்களின் காரணமாக 487 விமானப்பயண ரத்துசெய்தல்கள் ஏற்பட்டன. செயற்பாட்டு நம்பகத்தன்மையானது தாமதமான செயற்பாடுகளினால் மேலும் சவாலாக்கப்பட்டது. இந்த இடையூறுகள் பயணிகளது நம்பிக்கையினை கணிசமானளவு பாதித்ததுடன் பல பாதைகளில் பதிவுசெய்தல் பருமனளவுகளில் வீழ்ச்சிக்கு பங்களிப்பு செய்தது.

உள்வாரி மற்றும் வெளிவாரி அழுத்தங்களின் கலவையினால் இயக்கப்பட்டு பயணிகள் விளைவானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 7% ஆல் வீழ்ச்சியடைந்தது. முக்கிய சர்வதேச சந்தைகளில் காணப்பட்ட அதிகரித்த போட்டியாளர் கொள்திறனானது சராசரி பயணக்கட்டணத்தில் கீழ்நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தியவேளை மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற தாமதங்கள் மற்றும் இரத்துசெய்தல்கள் பயணிகள் பதிவுசெய்தல் போக்குகளில் மற்றும் விமான நிறுவனத்தின் நம்பகத்தன்மையிலான நம்பிக்கையில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தின. மேலாக, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் (BIA) இருக்கைக் கொள்திறன் பங்கானது 2024/25 இல் 40% ஆக வீழ்ச்சியடைந்தது. இது விமானக் கட்டணப் போட்டியினை தீவிரமாக்கியதுடன், வருவாய் சாத்தியத்தினை மேலும் கட்டுப்படுத்தியது.

குறைவான கொள்திறன், வீழ்ச்சியடையும் விளைவுகள் மற்றும் செயற்பாட்டு இடையூறுகள் உள்ளடங்கலான கணிசமான சவால்களுக்கு முகங்கொடுத்தபோதிலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செயற்திறனை ஸ்திரப்படுத்தி வாடிக்கையாளர் திருப்தியினை மேம்படுத்தும் ஒரு முன்முயற்சியான மற்றும் பன்முகமான மூலோபாயத்துடன் பதிலளித்தது. விமான நிறுவனமானது அதன் பாதைகள் மற்றும் விலையிடல்களை மேம்படுத்தி, பூகோள அரசியல் சவால்களை தவிர்ப்பதற்காக அதன் விமானப் பாதைகளை செம்மையாக்கி சந்தையில் புலப்படும்படியாக இருப்பதற்கு திடமான பங்குடைமைகளை கட்டியெழுப்பியது. விமான அட்டவணை உகப்பாக்கம், மூலோபாய வானூர்தியின் மறுசீரமைப்பு மற்றும் சேவை விநியோகத்தினை முன்னேற்றும் இலக்கினைக் கொண்ட தொழில்நுட்ப தரமுயர்த்தல்கள் என்பவற்றினூடாக செயற்பாட்டு மீளெழுச்சியானது மேலும் பலப்படுத்தப்பட்டது. ஆட்சேர்ப்பு மறுசீரமைப்புகள் மற்றும் மாற்றீட்டு பணிக்கமர்த்தல் மூலோபாயங்கள் முக்கியமான ஆளணி பற்றாக்குறைகளை விளித்துரைத்தவேளை, மேம்பட்ட பராமரிப்புத் திட்டமிடல் மற்றும் திருப்புமுனை முகாமைத்துவம் என்பன இடையூறுகளை குறைப்பதற்கு உதவின. இந்த முயற்சிகள் ஏற்கனவே சாத்தியமான விளைவுகளை காண்பித்ததுடன், விமான புறப்பாடு மற்றும் வருகை காலந்தவறாமையானது கிட்டத்தட்ட 70% ஆல் முன்னேற்றமடைந்தது. கூட்டாக இந்த முன்னெடுப்புகள் விமானநிறுவனம் வருவாய் உத்வேகத்தினை பராமரிப்பதற்கு உதவியுள்ளதுடன், இவ்வாண்டின்போது மிகவும் நம்பகமான மற்றும் வினைத்திறனான செயற்பாடுகளுக்கான ஒரு திடமான அடித்தளத்தினை இட்டுள்ளது.

சரக்குச் செயற்பாடுகள்

சரக்குப் பிரிவானது இவ்வாண்டின்போது திடமான செயற்பாட்டு விரைவியக்கத்தினை வெளிப்படுத்தியது. இது கேள்வித் தளம்பல்கள், பருவகால போக்குகள், கொள்திறன் வரையறைகள் மற்றும் வாடிக்கையாளர் பிரிவாக்கல் ஆகியவற்றுக்கு வினைத்திறனாக பதிலளித்த ஒரு இயக்காற்றலான விலையிடல் மூலோபாயத்தின் அமுலாக்கலினால் இயக்கப்பட்டது. இந்த மாற்றியமைக்கத்தக்க அணுகுமுறையானது கொண்டுசெல்லப்பட்ட ஒரு கிலோகிராம் சரக்கிற்கான வருவாயினை உகப்பாக்குவதற்கு விமான நிறுவனத்தினை இயலுமையாக்கிய வேளை, ஸ்திரத்தன்மையினை வழங்கிய நீண்டகால ஒப்பந்த உடன்படிக்கைகளுக்கும் உயர்வடைந்த கேள்வியின்போது அதிகரித்த இலாபகரத்தன்மையினை வழங்கும் ஸ்பொட் சந்தை வாய்ப்புக்களுக்கு இடையேயான ஒரு உகந்த சமநிலை பராமரிக்கப்பட்டது.

சரக்குச் செயற்பாடுகள் ஒரு பன்முகமான கலவையினை உள்ளடக்கியுள்ளன. இவை பொது சரக்கு, எளிதில் கெடக்கூடிய, மற்றும் விரைவான சரக்கேற்றல் என்பதுடன் ஒரு மீளெழுச்சியான மற்றும் தொடர்ச்சியான வருவாய் பாய்ச்சலினை உறுதிசெய்தன. குறுங்காலத்தில், மூலோபாய முன்னெடுப்புகள் கொள்திறன் பயன்பாட்டினை மேம்படுத்துதல் மற்றும் ஒட்டுமொத்த சரக்கு செயற்திறனை முன்னேற்றுதல் ஆகியவற்றை மையப்படுத்தியிருந்தன. நடைமுறை கேள்வி, கிடைக்கக்கூடிய இடம், பருவகால மாற்றங்கள் மற்றும் வாடிக்கையாளர் தோற்றுருவங்களின் அடிப்படையில் சரக்கு கட்டணங்களுக்கான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், உயர் விளைவினை கையகப்படுத்துவதற்கு இயலுமையாக்கும்வேளை உச்சத்தில் அல்லாத காலங்களின்போது பயன்படுத்தப்படாத கொள்திறனை சிறுமமாக்கியது. சரக்கிற்கான இடமானது உற்பத்திப் பிரிவுகள் மற்றும் ஸ்பொட் பதிவுகள் எதிர் ஒப்பந்த வாடிக்கையாளர் வகைகள் போன்ற வாடிக்கையாளர் வகைகள் பூராவும் மூலோபாயமாக ஒதுக்கப்பட்டது. இது சுமைக் காரணிகளை அதிகரித்து பயன்படுத்தப்படாத கொள்திறனிலிருந்து எழுகின்ற வருவாய் நீர்த்தலை குறைத்தது. மேலும், நீண்டகால நிலையான ஒப்பந்தங்கள் மற்றும் நெகிழ்வான ஸ்பொட் பதிவுகள் கலவையினை செயலூக்கமாக முகாமைப்படுத்துவதன் மூலம் இப்பிரிவானது, கேள்வி

குறைவடையும் சந்தைகளில் ஸ்திரமான வருவாய்களை பெற்றுக்கொள்வதற்கு இயலுமையாயிருந்தவேளை கேள்வி அதிகரிப்புகளின்போது உயர்மதிப்பு விலையிடல் வாய்ப்புக்களை பயன்படுத்தக்கூடிய நெகிழ்வுத்தன்மையினை தக்கவைத்தது. இதன் விளைவாக, நிதியாண்டு 24/25 இல் சரக்குப் பாதையின் விளைவானது ஒரு கிலோகிராமுக்கு USD 1.29 ஆக பதிவுசெய்யப்பட்டதுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது (நிதியாண்டு 23/24 ஒரு கிலோகிராமுக்கு USD 1.17) 10% அதிகரிப்பாகும்.

விலையிடல், ஒதுக்கீடு மற்றும் கொள்திறன் முகாமைத்துவம் ஆகியவற்றிற்கான இந்த ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையானது சரக்குப் பிரிவின் வர்த்தக மற்றும் செயற்பாட்டு செயற்திறனை கணிசமானளவு மேம்படுத்தியுள்ளதுடன், விமான நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருவாய் உருவாக்கத்திற்கு ஒரு முக்கிய பங்களிப்பாளர் பங்கினை வலியுறுத்தியது.

மூலோபாய பங்குடைமைகளும் போட்டித்தன்மையான நிலத்தோற்றமும்

ஆக்கிரமிப்பான குறைந்த செலவு வானூர்திகள் மற்றும் பாரிய முழுச்சேவை விமான நிறுவனங்கள் காணப்படுகின்ற ஒரு போட்டித்தன்மையான பிராந்திய சூழலில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சந்தைப் பங்களிப்பினை பராமாரிப்பதற்காக கட்டண கட்டமைப்புகளை சீர்திருத்தி சேவைத் தரத்தினை மேம்படுத்தியது. வ்லய் துபாய் மற்றும் எயார் சீசெல்ஸ் உடனான மூலோபாயப் பங்குடைமைகள் மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் இந்து சமுத்திர பிராந்தியங்களுக்கிடையே வலையமைப்பு இணைப்பினை விரிவாக்கியவேளை, குறியீடு பகிர்வு ஏற்பாடுகள் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் புதிய சந்தைகளை திறந்தது. 2021 இலிருந்து ஒருலக கூட்டணியின் ஒரு பெருமைமிக்க அங்கத்தவராக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பகிரப்பட்ட உலகளாவிய உட்கட்டமைப்பு, ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மூலம் தொடர்ச்சியாக நன்மையடைவதுடன், முன்னணி சர்வதேச வானூர்திகளிடையே பரஸ்பரமான நலன்களை அடைவதோடு உலகளாவிய செயற்பாட்டு ஒருங்கியக்கம் மற்றும் வர்த்தக மீளெழுச்சியினையும் மேம்படுத்துகின்றது.

கண்ணோட்டம்

அடுத்த ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை முன்னோக்கிப் பார்க்கும்போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், பாரியபொருளாதார அபிவிருத்திகள், முறைமைப்படுத்தல் நகர்வுகள், தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் மாற்றமடையும் நுகர்வோர் எதிர்பார்ப்புக்கள் என்பவற்றால் வடிவமைக்கப்பட்ட ஒரு உயர்ந்த இயக்காற்றலான மற்றும் வளர்ந்து வரும் நிலத்தோற்றத்தில் செயலாற்றுவதற்கு தயாராகின்றது. விமான நிறுவனத்தின் முன்னோக்கிப் பார்க்கும் மூலோபாயமானது, நிலைபேறுடைய வளர்ச்சி, செயற்பாட்டுத் தனிச்சிறப்பு, வாடிக்கையாளர் மையமான புத்தாக்கம் மற்றும் பங்காளிகள் பெறுமதி உருவாக்கம் ஆகிய கொள்கைகளில் திடமாக வேரூன்றியுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் எதிர்கால மூலோபாயத்தின் ஒரு மூலக்கல்லானது, செலவுச் சிக்கனத்தை மேம்படுத்துவதற்கு, வலையமைப்பு நம்பகத்தன்மையினை அதிகரிப்பதற்கு மற்றும் செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மையினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற திட்டமிடப்பட்ட விமானத்தொகுதி விரிவாக்கம் மற்றும் அகன்ற அமைப்புடைய விமானத்தொகுதி சீரானதன்மை திட்டமாகும். விமானத்தை தரப்படுத்துவதன் மூலம் மற்றும் மிகவும் எரிபொருள் வினைத்திறனான வானூர்திகளை பயன்படுத்துவதன் மூலம் விமான நிறுவனமானது பராமரிப்பு மற்றும் பயிற்றுவித்தல் செலவினங்களை குறைப்பது மாத்திரமன்றி அதன் கார்பன் நீக்கமான இலக்குகள் நோக்கியும் முன்னேற்றமடையும்.

இதற்கு சீரமைவாக, விமான நிறுவனமானது ஒரு தெளிவான போட்டித்திறனை வைத்துள்ள அல்லது விருத்திசெய்யக்கூடிய, மூலோபாயமாக இனங்காணப்பட்ட சந்தைகளிடையே வலையமைப்பு விரிவாக்கத்தினை செயலூக்கமாக தொடர்கின்றது. குறைவாக சேவையாற்றப்பட்ட அல்லது சேவையாற்றப்படாத பயண இலக்குகளுக்கு விசேட கவனம் செலுத்தப்படுகின்றது, இவை பாரிய உலகளாவிய வானூர்திகளினால் புறக்கணிக்கப்பட்டவையாகும். இந்த சந்தைகளுக்கான இலக்குவைத்த பாதை அபிவிருத்தியினூடாக மற்றும் மேம்பட்ட இணைப்பினூடாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் திடமான வலையமைப்பு தலைமைத்துவம், உள்ளுறைந்த கேள்வியினை கைப்பற்றுதல் மற்றும் உயர் மதிப்பு விலையிடல் திறன் போன்றவற்றை நிறுவுவதற்கான நோக்கத்தைக் கொண்டுள்ளது.

விமான நிறுவனத்தின் வளர்ச்சி மூலவரைபடமும் சுற்றுலாத்துறை மற்றும் புலம்பெயர்ந்தோர் பிரயாணத்திற்கான முக்கிய மூலச் சந்தைகளுக்கு நேரடி விமானப் பயணத்தின் அதிர்வெண்ணை அதிகரிக்கும் முன்னுரிமையினையும் கொண்டுள்ளது. இவ்விரு பிரிவுகளும் வரலாற்று ரீதியாக உயர் விளைவினையும் மீளெழுச்சியினையும் வழங்கியுள்ளன. இதற்கு இணையாக இரண்டாந்தர நகரங்கள் மற்றும் வளர்ந்துவருகின்ற பிராந்திய மையத்துடனான மேம்பட்ட இணைப்பானது நேரடிச் சேவைகள் மற்றும் உலகளாவிய மற்றும் பிராந்திய வானூர்திகளுடனான பங்குடைமைகளூடாக தொடரப்படும். இது விமான நிறுவனத்தின் பெறுமதி முன்மொழிவினை பலப்படுத்தி விகிதாசார செலவின அதிகரிப்புகள் இன்றி அதன் சர்வதேச அடிச்சுவட்டினை விரிவாக்கும்.

விமானத்தொகுதி விரிவாக்கலுக்கு சீரமைவாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பயணிகள் வானூர்தியின் கீழ்த்தளத்தில் கிடைக்கக்கூடிய சரக்கு கொள்திறனின் பயன்பாட்டினை, குறிப்பாக புதிய மற்றும் தற்போதுள்ள அகன்ற அமைப்புடைய வானூர்திகளை தொடர்ந்தும் உகப்பாக்கம் செய்யும். சரக்குப் பிரிவானது வருவாய் மற்றும் இலாபகரத்தன்மைக்கு ஒரு முக்கிய பங்களிப்பாளராக காணப்படுவதுடன், எதிர்காலத் திட்டங்கள் வளர்ந்து வருகின்ற சரக்கு சந்தைகளிலான இருப்பினை ஆழமாக்குவதனை உள்ளடக்குவதுடன், இதற்கு மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் தடமறிதல், இயக்காற்றலான விலையிடல் மாதிரிகள் மற்றும் முனையத்திலிருந்து முனையம் வரையான வாடிக்கையாளர் ஏற்பாட்டியல் தீர்வுகளினால் துணையளிக்கப்படுகின்றது. இந்த முயற்சிகள் வருவாய் மூலங்களை மேலும் பன்முகப்படுத்தி பயணிகள் போக்குவரத்திலான தளம்பல்களுக்கு எதிரான விமான நிறுவனத்தின் மீளெழுச்சியினை அதிகரிக்கும்.

போட்டித்தன்மையாகவும் வாடிக்கையாளர் முன்னிறுத்தமாகவும் இருப்பதற்கு விமான நிறுவனமானது முக்கிய செயற்பாட்டு மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளிடையே டிஜிட்டல் உருமாற்றலில் தொடர்ச்சியாக முதலீடு செய்யும். பின்வரும் பிரிவுகளில் முன்னுரிமை செலுத்தப்படும்: மெய்நேர தீர்மானம் மேற்கொள்வதற்கு, முன்கணிப்பு பராமரிப்பு மற்றும் இயக்காற்றலான விலையிடல், முனையத்திலிருந்து முனையம் வரையான வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துதல், மற்றும் பணியாட்கள் செயற்திறனை மேம்படுத்துவதற்கு மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களை குறைப்பதற்கு தன்னியக்கமாக்கப்பட்ட உள்வாரி பணிப்பாய்வு என்பவற்றிற்கு துணையளிப்பதற்கு தரவுப் பகுப்பாய்வு மற்றும் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படும். இந்த முயற்சிகள் ஒரு நுண்ணறிவான, பதிலளிக்கும் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட விமானநிறுவன சூழலமைப்பு என்பவற்றை கட்டியெழுப்புவதற்கான ஒரு பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும். இது விரைவு, எளிமை மற்றும் தனிப்பயனாக்கம் என்பவற்றூடாக பெறுமதியினை வழங்கும்.

சுருக்கமாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மிகவும் விரைவூக்கமான, வினைத்திறனான மற்றும் எதிர்காலத்திற்கு தயாரான வணிகத்திற்கான ஒரு அடித்தளத்தினை இடுகின்றது. முன்னிறுத்தமான விமானத்தொகுதி மற்றும் வலையமைப்பு விரிவாக்கம், செயற்பாட்டு புத்தாக்கம், நிலைபேறுடைமை தலைமைத்துவம் மற்றும் டிஜிட்டல் மீள்கண்டுபிடிப்பு என்பவற்றினூடாக, விமான நிறுவனமானது புதிய வளர்ச்சியினை கையகப்படுத்தவும், பங்காளிகள் பெறுமதியினை இயக்கவும், உலகளாவிய வான்பயணவியலில் இலங்கையின் நிலையினை வடிவமைப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகிப்பதற்கும் நிலைகொண்டுள்ளது.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

மனித மூலதனம்

தயாரிக்கப்பட்ட மூலதனம்

அறிவுசார் மூலதனம்

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்



இயற்கை மூலதனம்

நிதியியல் மூலதனம்

பின்வரும் பிரிவுகள் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்புகளான, மனிதன், தயாரிக்கப்பட்ட, அறிவாற்றல், சமூகம் மற்றும் உறவுமுறை, இயற்கை மற்றும் நிதியியல் மூலதனம் என்பவற்றின் கீழ் ஆறு மூலதனங்களில் ஒவ்வொன்றிற்கிடையும் விமான நிறுவனத்தின் செயற்திறனில் விரிவான விளக்கத்தினை வழங்குகின்றன. இந்த விரிவான மதிப்பீடானது அறிக்கையிடப்படும் காலப்பகுதியிலிருந்தான முக்கிய சாதனைகள் மற்றும் சவால்களை மாத்திரம் எடுத்துக்காட்டாது, எதிர்கால மேம்பாடுகள், நிலைபேறுடைய வளர்ச்சி மற்றும் பங்காளிகள் பெறுமதி உருவாக்கம் என்பவற்றுக்கான எமது கடப்பாட்டினை வலியுறுத்தி பெறுமதிமிக்க நுண்ணறிவுகள் மற்றும் மூலோபாய திசையினை வழங்குகின்றது.

மனித மூலதனம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் எமது மக்கள் எமது மிகவும் மதிப்புமிக்க சொத்தாகும். உலகம் பூராவும் எமது செயற்பாடுகளுக்கு வலுவளிக்கும் இயக்காற்றலான மற்றும் உயர் திறனுடைய பணிச்சேனையானது எமது வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான, நம்பகமான மற்றும் விதிவிலக்கான சேவைகளை வழங்குவதற்கான ஒரு அடித்தளமாகும். மனித மூலதன மீளாய்வானது நாம் எவ்வாறு கவர்கின்றோம், விருத்திசெய்கின்றோம் மற்றும் திறன்களை தக்கவைக்கின்றோம், பணியாட்களது ஈடுபாட்டினை பராமரித்தல் மற்றும் ஒரு உள்ளடக்கமான, பாதுகாப்பான மற்றும் துணையளிக்கும் பணிச் சூழலை வளர்த்தல் என்பவற்றில் ஒரு ஆழமான பார்வையினை வழங்குகின்றது.

விரைவாக வளர்ந்துவருகின்ற வான்பயணவியல் துறை மற்றும் ஒரு சவால்மிக்க பொருளாதார நிலத்தோற்றத்தில், நாம் எமது மூலோபாய குறிக்கோள்களுடன் சீரமைவான ஒரு மீளெழுச்சியான மற்றும் விரைவூக்கமான பணிச்சேனையினை கட்டியெழுப்புவதற்கு கடப்பாட்டுடன் உள்ளோம். இந்த மீளாய்வானது இலக்குவைத்த ஆட்சேர்ப்பு, தொடர்ச்சியான பயிலல், போட்டித்தன்மையான வெகுமதிகள் மற்றும் வலுவான சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு முன்னெடுப்புகளூடாக எமது மனித மூலதனத்தினை பலப்படுத்தும் எமது முயற்சிகளை எடுத்துக்காட்டுகின்றது.

எமது மக்களில் முதலீடு செய்வதன் மூலம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தற்போதைய செயற்பாட்டு கேள்விகளை மாத்திரம் சந்திக்காது ஆனால் எதிர்காலத்தில் புத்தாக்கம் மற்றும் வளர்ச்சி நிலைபேறுடைமைக்கு சிறந்த நிலையில் காணப்படுவதனை நாம் உறுதிசெய்கின்றோம்.

பணிச்சேனை சுயவிவரம் மற்றும் கட்டமைப்பு

2024/25 நிதியாண்டில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஒரு மொத்த பணிச்சேனையாக 6071 பணியாட்களைக் கொண்டுள்ளதுடன், இவற்றுள் 67% ஆனோர் ஆண்கள் மற்றும் 33% ஆனோர் பெண்கள் ஆவார்கள். பன்முகமான மற்றும் உயர் திறனுடைய பணிச்சேனையானது பல்வேறு முக்கிய செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ பங்குகளில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பல்வேறு மூலாபாய வணிக அலகுகளிடையே பரந்துள்ளார்கள்.

வகை	பெண்கள்		ஆண்கள்		மொத்தம்	
	பணியாட்களின் எண்ணிக்கை	%	பணியாட்களின் எண்ணிக்கை	%	பணியாட்களின் எண்ணிக்கை	%
முகாமையாளர்கள்	111	2	180	3	291	5
விமானக் குழுவினர்	20	0.3	252	4	272	4
வானறைக் குழுவினர்	645	11	295	5	940	15
வானூர்தி பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள்	23	0.3	592	10	615	10
பயிற்சிபெறுவோர்கள், தரப்படுத்தப்பட்ட மற்றும் நிறைவேற்றுப் பணியாட்கள்	1,230	20	2,723	45	3,953	65
மொத்தம்	2,029	33	4,042	67	6,071	100

திறன் முகாமைத்துவம் மற்றும் பணியாட்கள் தக்கவைப்பு

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் விமான நிறுவனச் செயற்பாடுகளை குறிப்பாக பாதுகாப்பாக, நம்பகத்தன்மையுடன் மற்றும் வினைத்திறனாக பராமரிப்பதற்கு அவசியமான முக்கியமான தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டு பதவிகளில் திறமையான தொழில்வல்லுனர்களை கவர்ந்து, விருத்திசெய்து தக்கவைப்பதில் திடமான வலியுறுத்தலை இட்டுள்ளது. விமான நிறுவனத்தின் மனித வள மூலோபாயமானது தொழில்நுட்ப ரீதியாக தகுதிவாய்ந்தவர்களை மாத்திரமன்றி நிறுவனத்தின் நீண்டகால விழுமியங்கள் மற்றும் தொலைநோக்குடன் சீரமைவான ஒரு மீளெழுச்சியான பணிச்சேனையினை கட்டியெழுப்புவதனை மையப்படுத்தியதாகும்.

சிறந்த திறனுடையவர்களை கவர்வதற்கு, கம்பனியானது ஒரு நியாயமான மற்றும் வெளிப்படையான ஆட்சேர்ப்பு செயன்முறையினை பின்பற்றுவதுடன் உள்வாரி பதவியுயர்வுகள் மற்றும் உள்ளகத்தேயான திறன் அபிவிருத்திக்கு முன்னுரிமையளிக்கின்றது. இந்த அணுகுமுறையானது உள்வாரி தொழில் முன்னேற்றம் மற்றும் நிறுவனரீதியான அறிவினை வலியுறுத்தும்வேளை, வெளிவாரி ஆட்சேர்ப்பானது விசேட பதவிகளை நிரப்புவதற்கு மற்றும் புதிய திறன்கள் தேவையான நுழைவு மட்ட பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பணிக்கமர்த்தப்படுகின்றார்கள். இந்த இரட்டிப்பு மூலோபாயமானது நிறுவன தொடர்ச்சி மற்றும் புதிய திறன்களின் உட்புகுத்தல் ஆகிய இரண்டிற்கும் துணையளிக்கின்றது.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

மனித மூலதனம் தொடர்ச்சி.

எவ்வாறாயினும் கடந்த ஆண்டின் மீது, விமானநிறுவனத் துறையானது உயர்வான பணியாட்கள் புரள்வினை கண்டதுடன், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இந்த அச்சுறுத்தலுக்கு விதிவிலக்கல்ல. கம்பனியின் சராசரி புரள்வானது அண்ணளவாக 7% ஆக காணப்பட்டதுடன், பாரியளவு பணியாளர் விலகுதல்கள் திறன்படைத்த தொழில்வல்லுனர்களிடையே காணப்பட்டது. இது பிரதானமாக நாட்டினுள் நிலவிய பொருளாதார நிலைமை, சவால்மிக்க வரிச் சூழல் மற்றும் மத்திய கிழக்கு வானூர்திகளினால் தீவிரமாக்கப்பட்ட திறன் ஊடுருவல் என்பவற்றின் காரணத்தினாலாகும். இந்த மத்திய கிழக்கு வானூர்திகள் உயர் போட்டித்தன்மையான வேதனப் பொதிகளையும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களையும் வழங்குகின்றன. இது பொறியியல், விமானச் செயற்பாடுகள் மற்றும் தரைச் சேவைகள் உள்ளடங்கலான முக்கியச் செயற்பாட்டுப் பிரிவுகளை தொடர்வதற்கு சாத்தியமான இடர்களை விளைவித்தது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிதியாண்டு முழுவதும் பரவலான பணியாட்கள் தக்கவைப்பு மூலோபாயங்களை அமுலாக்கியது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- போட்டித்தன்மை மற்றும் சமத்துவத்தினை மேம்படுத்துவதற்காக சாத்தியமானபோது வேதனக் கட்டமைப்புகளை மீளாய்வு செய்து செம்மையாக்குதல்.
- உள்வாரியான இயங்குதிறன் மற்றும் திறன் மேம்பாட்டினை பலப்படுத்துவதற்கு தொழில் அபிவிருத்தி முன்னெடுப்புகள் மற்றும் பயிற்றுவித்தல் திட்டங்களை விரிவாக்குதல்.
- உயர் செயற்திறனாளர்களை மிகவும் வினைத்திறனாக இனங்காண்பதற்கு மற்றும் வெகுமதியளிப்பதற்கு பதவியுயர்வு மற்றும் செயற்திறன் முகாமைத்துவ செயன்முறைகளை சீரமைத்தல்.
- பணியாட்கள் விலகிச்செல்லும் சந்தர்ப்பங்களில் செயற்பாட்டு இடையூறுகளை தணிப்பதற்கு பணிச்சேனை திட்டமிடல் மற்றும் தொடர்வு முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல்.
- ஒரு சொந்தம் என்ற திடமான உணர்வு மற்றும் நோக்கத்தினை வளர்ப்பதற்கு உள்வாரியான தொடர்பாடல் மற்றும் ஈடுபாட்டு முயற்சிகளை மேம்படுத்துதல்.

பணிச்சேனை இடைவெளிகளை விளித்துரைப்பதற்கும் தடையற்ற செயற்பாட்டு வினைத்திறனை உறுதிசெய்வதற்கும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முக்கிய பராமரித்தல் பதவிகளில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தொடர்ச்சியான ஆட்சேர்ப்பு பிரச்சாரத்தினை ஆரம்பித்தது. இது பாதுகாப்பு மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டிற்கான விமான நிறுவனத்தின் கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது. அதேநேரம், தரை கையாளுதல் மற்றும் பயணிகள் சேவைகளில் தொடர்ச்சியான தனிச்சிறப்பினை உறுதிசெய்வதற்காக மற்றும் பணியாட்கள் விலகுதல்களை முகாமைப்படுத்துவதற்காக விமான நிறுவனச் சேவை முகவர்களுக்கான ஒரு பாரியளவு ஆட்சேர்ப்பு இயக்கம் பொறுப்பேற்கப்பட்டது. இந்த முயற்சிகள் சேவைத் தரத்தினை நிலைநிறுத்துதல், செயற்பாட்டு மீளெழுச்சியினை பராமரித்தல் மற்றும் விமான நிறுவனத்தின் வளர்ச்சி இலட்சியங்களுக்கு துணையளித்தல் என்பவற்றை இலக்குவைத்த ஒரு பரந்த பணிச்சேனை திட்டமிடல் மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும்.

பயிலுதல் மற்றும் அபிவிருத்தி

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் மனித மூலதன மூலோபாயத்தின் ஒரு அடிப்படைத் தூணாக தொடர்ச்சியான பயிலல் காணப்படுவதுடன், இது செயற்பாட்டு தனிச்சிறப்பு, முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் பாதுகாப்பு தலைமைத்துவம் என்பவற்றுக்கான நிறுவனத்தின் கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது. 2024/25 நிதியாண்டின்போது, விமான நிறுவனமானது அனைத்து மட்டங்களிலும் மற்றும் செயற்பாடுகளிலும் உள்ள பணியாளர்களது திறனை மேம்படுத்தும் நோக்கத்தில் விரிவான பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களை வழங்கியது.

பயிற்சி முன்னெடுப்புகள் உள்வாரியான தலைப்புவிடய வல்லுனர்கள், சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி தொகுதிகள் மற்றும் நிறைவேற்றுனர் கல்விக்கான அரச பல்கலைக்கழகங்களுடனான ஒத்துழைப்புக்கள் உள்ளடங்கலான வெளிவாரி நிறுவனங்களுடனான மூலோபாய பங்குடைமைகள் கலவையூடாக வழங்கப்பட்டன. இந்த முயற்சிகள் பயிலல் தலையீடுகள் தொழில்நுட்பரீதியாக வலுவானதாகவும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் சீரமைவாகவும் உள்ளதனை உறுதிசெய்தது. முக்கிய முன்னிறுத்தப் பிரிவுகள், தலைமைத்துவ அபிவிருத்தி, மூலோபாய சிந்தனை, தொடர்பாடல் மற்றும் பேரம்பேசல் திறன்கள், வாடிக்கையாளர் சேவைத் தனிச்சிறப்பு, வணிகச் செயன்முறை மறுசீராக்கம், துறை குறிப்பிட்ட தொழில்நுட்ப பயிற்சி மற்றும் மாற்றல் முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலாக, வளர்ந்து வருகின்ற துறைசார் நியமங்களுக்கு சீரமைவாக புதிய பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் இடர் முகாமைத்துவ கட்டமைப்புகளில் கணிசமான அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது.

பயிற்சியானது பன்முகமான பணியாட்கள் குழுக்களின் குறிப்பிட்ட தேவைகளை விளித்துரைப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. இது முன்னணி பணியாட்கள், பொறியியலாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள், அதிகாரிகள், நிறைவேற்றுனர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினை உள்ளடக்கியிருந்தது. இதன் மூலம் தனிப்பட்ட பதவிகள் மற்றும் தொழில் கட்டங்களுக்கு பொருத்தமானதாக அபிவிருத்தி வாய்ப்புக்கள் உறுதிசெய்யப்பட்டன. விமானநிறுவனமானது தொடர்ச்சியான திறன் மேம்படுத்தலில் அதன் வலியுறுத்தலை தொடர்ந்ததுடன், இது நாளாந்த செயற்பாட்டு வினைத்திறனை மாத்திரம் மேம்படுத்தாது விரைவூக்கமான மற்றும் எதிர்காலத்திற்கு தயாரான ஒரு உயர் செயற்திறன் கலாச்சாரத்தினையும் பராமரிக்கின்றது. பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் வினைத்திறனானது, முறையான பயிற்சியின் பின்னரான மதிப்பீடுகள், தொழில் செயற்திறன் மதிப்பீடுகள் மற்றும் தொடர்ச்சியான பின்னூட்ட சுழல்கள் உள்ளடங்கலான பன்முகமான மதிப்பிடல் வழிமுறைகள் ஊடாக மதிப்பிடப்படுகின்றது. இந்த பொறிமுறைகள் பணியாட்கள் செயற்திறனிலான மேம்பாடுகளை தடமறிவதற்கும், அறிவு மாற்றலை சரிபார்ப்பதற்கும், முறைமைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நியமங்களுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்கும் விமான நிறுவனத்தினை அனுமதிக்கின்றது.

செயற்திறன் முகாமைத்துவம் மற்றும் தொழில் அபிவிருத்தி

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செயற்திறன் முகாமைத்துவம் மற்றும் தொழில் அபிவிருத்திக்கு ஒரு முழுமையான மற்றும் ஒருங்கிணைத்த அணுகுமுறையினை கடைப்பிடிக்கின்றது. இந்த கடப்பாட்டின் ஒரு பகுதியாக விமான நிறுவனமானது நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிடையே திறனை இனங்காண்பதற்கு, வளர்ப்பதற்கு மற்றும் உயர்த்துவதற்கு வடிவமைக்கப்பட்ட பல முறைமைகள் மற்றும் கட்டமைப்புகளை அமுல்படுத்தியுள்ளது.

விமான நிறுவனத்தின் தொழில் அபிவிருத்தி தத்துவத்தின் மையமாக பதவிகள் மற்றும் திணைக்களங்களிடையே தேவையான செயற்பாட்டு, தொழில்நுட்ப மற்றும் நடத்தை திறன்களை வரையறைசெய்யும் ஒரு விரிவான தகுதிக் கட்டமைப்பு காணப்படுகின்றது. இந்த கட்டமைப்பானது அனைத்து பயிலல் முன்னெடுப்புகளின் வடிவமைப்பு மற்றும் விநியோகத்தினை வழிநடத்துவதுடன் பணியாட்களது ஆற்றல்கள் மற்றும் வணிகத் தேவைப்பாடுகளிடையே சீரமைவினை உறுதிசெய்கின்றது. மேலும், தகுதிக் கட்டமைப்பானது பணியாட்களை எதிர்கால தலைமைத்துவப் பொறுப்புக்களுக்கு தயாராக்குவதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. உயர் சாத்தியமான தனிநபர்கள் தகுதி அடிப்படையிலான மதிப்பீடுகளூடாக இனங்காணப்பட்டு அடுத்த சந்ததி தலைவர்களை சீர்ப்படுத்தும் நோக்கில் விசேட அபிவிருத்தி பாதைகளில் இணைத்துக்கொள்ளப்படுகின்றார்கள். இந்த குழாய்வரிசை அணுகுமுறையானது நீண்டகால திறன் தேவைகளை மாத்திரம் விளித்துரைக்காது முன்னேற்றத்திற்கான தெளிவான பாதைகளை வழங்குவதன்

மூலம் ஈடுபாடு மற்றும் தக்கவைப்பினை மேம்படுத்துகின்றது.

வருடாந்த செயற்திறன் மீளாய்வு செயன்முறையானது இலக்கு நிறுவுதல், நடத்தை மதிப்பீடுகள் மற்றும் தகுதி மதிப்பீடுகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன், செயற்திறன், அபிவிருத்தி மற்றும் தொழில் இலக்குகள் பற்றி பணியாட்கள் மற்றும் முகாமையாளர்களிடையே அர்த்தமுள்ள கலந்துரையாடல்களுக்கும் வசதியளிக்கின்றது. செயற்திறன் மீளாய்விலிருந்து பெறப்படும் உள்ளுணர்வுகள் தனிநபர் அபிவிருத்தி திட்டங்களை வடிவமைத்து அமுலாக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இவை பயிற்றுவித்தல் முயற்சிகளை தற்போதைய தொழில் செயற்திறன் மற்றும் எதிர்கால தொழில் முன்னேற்றத்துடன் இணைக்கும் தனிப்பயனாக்கப்பட்ட பயிலல் வரைபடமாக சேவையாற்றுகின்றது. இந்த தனிநபர் அபிவிருத்தித் திட்டங்கள் வழக்கமாக பணியாட்கள் மற்றும் வரிசை முகாமையாளர்களது ஒத்துழைப்புடன் மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றது. இது மாற்றமடையும் பதவிகள், வெளித்தோன்றும் திறன்கள் மற்றும் வணிக முன்னுரிமைகளை பிரதிபலிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

எமது மனித வளச் செயற்பாடானது வான்பயணவியல் துறையின் மற்றும் நிறுவனத்தின் வளர்ச்சியின் வளர்ந்து வரும் தேவைகளை சந்திப்பதற்கு பணியாட்களை இனங்காண்பதற்கு, விருத்திசெய்வதற்கு மற்றும் தயாராக்குவதற்கு செயலூக்கமாக முதலீடு செய்கின்றது. முக்கிய முன்னெடுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. வான்பயணவியல் கல்லூரி மற்றும் தொடர்வுத் திட்டம் போன்றவற்றினூடாக முகாமைத்துவப் பயிற்சித் திட்டங்கள், பட்டதாரி பொறியியலாளர்கள் திட்டம், மாணவர் விமானி திறன் கையகப்படுத்தல்கள், தொழில்நுட்பவியலாளர் திறன் அபிவிருத்தி என்பனவாகும்.

இந்த கட்டமைக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் தொடர்ச்சியான தகுதி அபிவிருத்தியினூடாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் பணிச்சேனையினை சரியான திறன்களுடன் தயாராக்குவதுடன், எதிர்கால சவால்கள் மற்றும் வாய்ப்புக்களை பொறுப்பேற்பதற்கு தொடர்ச்சியான பயிலல் மற்றும் தயார்நிலை கலாச்சாரத்தினையும் பராமரிக்கின்றது.

பணியாட்கள் ஈடுபாடு மற்றும் கலாச்சாரம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், வருடாந்த கொண்டாட்டங்கள், பல மதத்தவர் நிகழ்வுகள், விளையாட்டு போட்டிகள் (உதாரணமாக கிரிக்கட் பேஷ் 2024), நலன்புரித் திட்டங்கள் மற்றும் சமூக சேவை முன்னெடுப்புகள் உள்ளடங்கலான பல்வேறு கம்பனி மற்றும் கருப்பொருள் சார்ந்த நடவடிக்கைகளினூடாக பணியாட்கள் ஈடுபாட்டினை பராமரிக்கின்றது. துறை மற்றும் வெளிவாரி நிறுவனங்களுடனான ஒத்துழைப்பான பங்குடைமைகள் ஊடாக வெளிப்பாடு மற்றும் பல்வேறு கலாச்சார பயிலல் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் பணியாட்கள் அனுபவத்தினை மேலும் வளப்படுத்துகின்றது.

மேலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பணியாட்கள் அங்கீகாரத் திட்டமான “வர்ண” வழமையான கடமைகளுக்கு அப்பால் சென்று நிறுவனத்திற்கு பெறுமதி சேர்க்கும் விதிவிலக்கான பணியாட்களை பாராட்டி கௌரவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இத்திட்டமானது குழு மனப்பான்மை மற்றும் பணியாள் நல்வாழ்வினை ஊக்குவிக்கும் கம்பனியின் விளையாட்டுச் சபையினால் துணையளிக்கப்பட்டு சிறந்த சாதனைகளை எடுத்துக்காட்டுகின்றது, குறிப்பாக விளையாட்டு மற்றும் ஏனைய பணிக்கு அப்பாட்பட்ட நடவடிக்கைகளில் ஆகும்.

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் 2024 டிராவல் டிரேட் ஸ்போர்ட்ஸ் கிளப் நீச்சல் போட்டியில் 46 தங்கப் பதக்கங்கள், 32 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 12 செம்புப் பதக்கங்களை வென்று மொத்த சாம்பியன்ஷிப் பெற்றது.

பணியாள் ஈடுபாடானது நாடித்துடிப்பு மதிப்பாய்வுகள், வெளியேறல் நேர்காணல்கள், தக்கவைப்பு வீதங்கள் மற்றும் சமூகமளியாதோர் தடமறிதல் என்பவற்றினூடாக தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றது. இந்த உள்ளுணர்வுகள் ஒரு சாத்தியமான, உள்ளடக்கமான மற்றும் ஒத்துழைப்பான பணியிடக் கலாச்சாரத்தினை கட்டியெழுப்பும் நோக்கையுடைய முன்னெடுப்புகளை அறிவிக்கின்றது.

ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் பணிச்சேனையின் தொழில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பில் உயர்ந்த முன்னுரிமையினை இடுவதுடன், குறிப்பாக கடினமான மற்றும் உயர் இடருடைய சூழலில் செயலாற்றுகின்ற விமானக்குழு அங்கத்தவர்கள், பொறியியலாளர்கள் மற்றும் தரைச்சேவை பணியாளர்களில் ஆகும். விமான நிறுவனமானது வானறைப் பணியாட்கள் மற்றும் தரைக் கையாளுதல் ஆளணியினருக்கு வழக்கமான முதலுதவி பயிற்சியினூடாக விரிவான பாதுகாப்பு நியமங்களை உறுதிசெய்வதுடன், பணியிட இடர்களை தணிப்பதற்கு மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வுள்ள ஒரு கலாச்சாரத்தினை பராமரிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட தொடர்ச்சியான பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் தவிர்த்தல் திட்டங்களினால் பூர்த்திசெய்யப்படுகின்றது.

பணியாட்களது நல்வாழ்வானது பௌதீக பாதுகாப்பிற்கு அப்பால் நீடிக்கப்படுகின்றது என்பதை அறிந்துகொண்டு விமான நிறுவனமானது அதன் பணியாட்களது ஒட்டுமொத்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்விற்கு துணைபுரியும் ஒரு முழுமையான அணுகுமுறையினை கடைப்பிடிக்கின்றது. நீச்சல் தடாகங்களுக்கான அணுக்கம், உள்வாரியான நலன்புரி கடைகள் மற்றும் பணியாட்கள் உணவகங்களூடாக கிடைக்கப்பெறும் மானியம் அளிக்கப்பட்ட ஆரோக்கியமான உணவுத் தெரிவுகள் உள்ளடங்கலான பௌதீக, மனநல மற்றும் சமூக நல்வாழ்வினை ஊக்குவிப்பதற்கான வசதிகளும் சேவைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. மனநல ஆரோக்கியத்திற்கு விசேட முன்னிறுத்தம் வழங்கப்படுகின்றது. இது ஆலோசனை வழங்கும் ஆலோசகர்களுக்கான இரகசியமான அணுக்கம், மற்றும் அழுத்தத்தை முகாமைப்படுத்தவும் உளரீதியான மீளெழுச்சியினை பராமரிப்பதற்கும் தேவைப்படும் முக்கியமான வளங்களை பணியாட்களுக்கு வழங்கல் என்பவற்றினூடாக வழங்கப்படுகின்றது.

ஒரு சுறுசுறுப்பான வாழ்க்கை முறையினை ஊக்கப்படுத்தவும் குழு உணர்வினை பலப்படுத்தவும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் தனிப்பயனாக்கப்பட்ட விளையாட்டுச் சபையினூடாக விளையாட்டுகளில் பங்கெடுப்பதனை செயலூக்கமாக ஊக்குவிக்கின்றது. விளையாட்டுச் சபையானது வருடம் பூராவும் விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் போட்டிகளை ஒழுங்குசெய்து துணையளிக்கின்றது. இந்த முன்னெடுப்புகள் உடல்நலத் தகுதியினை மேம்படுத்துவது மாத்திரமன்றி பணியாட்களிடையே தோழமை மற்றும் சமூக ஈடுபாட்டினையும் பராமரிக்கின்றது.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

மனித மூலதனம் தொடர்ச்சி.

மேலாக, விமான நிறுவனமானது கடுமையான உடல்நலச் சிக்கல்களை இலக்குவைத்து வருடாந்த மற்றும் இரு ஆண்டுக்கொருமுறை சுகாதாரப் பிரச்சாரங்களை அமுலாக்கியது. இது அதன் விரிவான புற்றுநோய் விழிப்புணர்வுத் திட்டம் போன்றவற்றால் பணியாட்களை நேரகாலத்துடனான கண்டுபிடிப்பு மற்றும் தடுப்பது நோக்கி முன்முயற்சியான நடவடிக்கைகள் எடுப்பதனை கற்பிக்கும் மற்றும் வலுவளிக்கும். அத்துடன் சேவை வழங்குனர்களுடன் கூட்டிணைந்து பணியாட்களுக்கு இலவசமான கண் பரிசோதனைகள் மற்றும் செவிபுலன் பரிசோதனை அமர்வுகளும் நடாத்தப்பட்டன. மேலும், தொழில்-வாழ்க்கை சமநிலையிலான விழிப்புணர்வு அமர்வுகள் வழக்கமாக நடாத்தப்படுகின்றன. இவை பணியாட்கள் தங்களது தனிப்பட்ட நல்வாழ்வுடன் இணைந்து தொழில்சார் கேள்விகளை முகாமைப்படுத்துவதற்கு உதவுகின்றன. இதன்மூலம் சோர்வடைந்து போகும் இடரானது குறைக்கப்படுகின்றது. பணியாட்கள் சுதந்திரமாக உடல்நல அக்கறைகளை கலந்துரையாடுவதற்கும் அவசியமானபோது உதவியினை நாடுவதையும் உறுதிப்படுத்தும் திறந்த மற்றும் வெளிப்படையான தொடர்பாடல் வழிகளுக்கு விமான நிறுவனமானது முன்னுரிமை அளிக்கின்றது. “திகாசிறி” மற்றும் “சுவசம்பத்த” போன்ற விசேட மருத்துவத் திட்டங்கள் பணியாட்கள் நலன்புரி சங்கங்களூடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவை பணியாட்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட மேலதிக சுகாதாரப் பாதுகாப்பு நலன்களை வழங்குவதற்காகும்.

தொழிலாளர் உறவுகள் மற்றும் இணக்கப்பாடு

விமான நிறுவனமானது தொழிற்சங்கங்கள் மற்றும் பணியாட்கள் சங்கங்களுடன் பன்முகமான முகாமைத்துவ மட்டங்களில் வழக்கமான கலந்துரையாடல்களூடாக திடமான மற்றும் ஆக்கபூர்வமான உறவினைப் பராமரிக்கின்றது. வெளிப்படையான தொடர்பாடல் வழிகள், நியாயமான பேரம்பேசல் செயன்முறைகள் மற்றும் பணியாட்கள் அக்கறைகளில் உரியகாலத்திற்கேற்ற தீர்மானம் என்பன தொழிலாளர் இசைவினை வலியுறுத்துகின்றது.

மனிதவளக் கொள்கைகள் தேசிய தொழிலாளர் சட்டங்கள் மற்றும் வான்பயணவியல் ஒழுங்குவிதிகளுடன் சீரமைக்கப்பட்டுள்ளதுடன், அரசாங்க அங்கங்கள், முறைமைப்படுத்தல் அதிகாரசபைகள், முதலாளிமார் சம்மேளனங்கள் மற்றும் சட்ட நிபுணர்களுடனான தொடர்ச்சியான ஒத்துழைப்பினால் துணையளிக்கப்படுகின்றது. இது இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதுடன், ஒரு நியாயமான, மரியாதையான மற்றும் சமத்துவமான பணியிடத்தினை பராமரிக்கின்றது.

பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் (DEI)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் நிறுவன விழுமியங்கள் மற்றும் வணிக வெற்றிக்கு ஒருங்கிணைந்த பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தினை தழுவுகின்ற ஒரு பணியிடக் கலாச்சாரத்தினை பராமரிப்பதற்கு உறுதியான கடப்பாட்டுடன் உள்ளது. கம்பனியானது ஒரு பன்முகமான மற்றும் உள்ளடக்கமான பணிச்சேனையானது ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கத்தை மாத்திரம் மேம்படுத்தாது அது சேவையாற்றும் உலகளாவிய சமூகத்தையும் பிரதிபலிக்கின்றது. இது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளிகளுடனான சிறந்த ஈடுபாட்டினை இயலுமையாக்குகின்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் தற்போதைய பணிச்சேனையானது ஒரு பன்முகமான மற்றும் சமநிலையான வயது பங்களிப்பினை வெளிக்காட்டுகின்றது. பணியாட்களில் பெரும்பான்மையினர் 21 முதல் 50 வயது வீச்செல்லையினுள் வருவதுடன் இது மொத்த பணியாட்களில் 81% இற்கு கணக்கீடு செய்கின்றது. இது 21-30 (26%) மற்றும் 31-40 (37%) ஆகிய இரண்டு வயது குழுக்களிலிருந்து கணிசமான பிரதநிதித்துவத்தினை உள்ளடக்குவதுடன், 41-50 (18%) வயதுடையோரால் பூர்த்திசெய்யப்படுகின்றது. இந்த கலவையான வயதுப் புள்ளிவிபரமானது இளம் திறனாளிகளையும் பழக்கப்பட்ட தொழில்வல்லுனர்களையும் கூட்டாக கொண்டுவந்து ஒரு உள்ளடக்கமான பணிச் சூழலினை பராமரிக்கின்றது. இளம் பணியாட்கள் இணக்கத்திறன், தொழில்நுட்ப தேர்ச்சி மற்றும் புதிய கண்ணோட்டத்திற்கு பங்களிப்பு செய்யும்வேளை, சிரேஷ்ட பணியாட்கள் நிறுவன அறிவு, வழிகாட்டல் மற்றும் மூலோபாய முன்னுணர்ச்சியுடன் பங்களிப்பு செய்கின்றார்கள். சந்ததியினர்களது கலவையானது புத்தாக்கமாக, மீளெழுச்சியாக இருப்பதற்கு மற்றும் வளர்ந்து வரும் துறைசார் கேள்விகள் மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களை வினைத்திறனாக சந்திப்பதற்குமான நிறுவனத்தின் ஆற்றலினை பலப்படுத்துகின்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்திற்கான கடப்பாட்டின் இருதயமாக ஒவ்வொரு தனிநபரும், பாலினம், வயது, இனம், மாற்றுத்திறன், மதம், பாலியல் நோக்குநிலை அல்லது கலாச்சாரப் பின்னணி என்பவற்றை பொருட்படுத்தாது செழிப்படைவதற்கு சமத்துவமான வாய்ப்பிற்கு தகுதியானவர்கள் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. விமான நிறுவனமானது ஒரு உள்ளடக்கமான சூழலை செயலூக்கமாக ஊக்குவிப்பதுடன் இங்கு பன்முகத்தன்மையானது மதிப்பளிக்கப்படுவது மாத்திரமன்றி நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் மீளெழுச்சியினை இயக்கும் ஒரு மூலோபாய நலனாக பெறுமதியிடப்படுகின்றது.

இந்தக் கொள்கைகளை நிலைநாட்டுவதற்கு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பன்முகமான திறன்கள் மற்றும் பின்னணிகளை பிரதிபலிக்கும் ஒரு பணிச்சேனையினை கவர்ந்து, விருத்திசெய்து மற்றும் தக்கவைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு நடுநிலை மற்றும் சமத்துவமான பணிச் சூழலினைப் பராமரிக்கின்றது. இது எந்த வடிவத்திலும் பாகுபாடு, துன்புறுத்தல் மற்றும் பாரபட்சம் என்பவற்றை தடுப்பதற்கான கடுமையான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்குகின்றது. பணியாட்கள் அவர்களது மெய்யான சுயநிலையினை தெரிவிப்பதற்கு ஊக்கப்படுத்தப்படுவதுடன், கம்பனியானது பரஸ்பர மரியாதை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒத்துழைப்பான ஒரு கலாச்சாரத்தினை பேணுகின்றது. ஒருதடவை உள்ளே வந்ததும், பணியாட்கள் தொழில்சார் அபிவிருத்தித் திட்டங்கள், தலைமைத்துவப் பயிற்சி மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கான சாத்தியம் மற்றும் உறுதுணையினை வளர்ப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வழிகாட்டல் வாய்ப்புக்கள் என்பவற்றுக்கு சமத்துவமான அணுக்கத்திலிருந்து நன்மையடைகின்றார்கள். பதவியுயர்வு மற்றும் மேம்பாட்டுத் தீர்மானங்கள் செயற்திறன், திறன்கள் மற்றும் வெளிப்படுத்தப்பட்ட ஆற்றல்கள் என்பவற்றில் கடுமையாக அடித்தளமிடப்பட்டுள்ளதுடன், இது அனைத்து தனிநபர்களும் வளர்வதற்கான ஒரு நியாயமான சந்தர்ப்பத்தையும் நிறுவனத்தின் வெற்றிக்கு அர்த்தமுள்ள விதத்தில் பங்களிப்பு செய்வதனையும் உறுதிசெய்கின்றது. மேலாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்க முன்னெடுப்புகளின் பயனுறுதித்தன்மையினை தொடர்ச்சியாக மதிப்பிடுவதற்கு பணிச்சேனை தரவு மற்றும் பின்னூட்டத்தினை செயலூக்கமாக கண்காணிக்கின்றது. பணியாட்கள் மதிப்பாய்வுகள் மற்றும் திறந்த தொடர்பாடல் வழிகளூடாக கம்பனியானது முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களை இனங்கண்டு மிகவும் உள்ளடக்கமான பணியிடத்தினை பராமரிப்பதற்கான அதன் மூலோபாயங்களை தோற்றுவிக்கின்றது.

2024/25 இல் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் மனிதவள மூலோபாயமானது செயற்பாட்டு தனிச்சிறப்பினை வழங்கும் மற்றும் சிக்கலான சந்தை சவால்களை சமாளிக்கும் ஆற்றலுடைய திறன்மிக்க, ஈடுபாடுடைய மற்றும் பன்முகமான பணிச்சேனையினை கட்டியெழுப்புவதற்கான ஒரு திடமான கடப்பாட்டினால் குறிக்கப்படுகின்றது. இலக்குவைத்த திறன் கையகப்படுத்தல், விரிவான அபிவிருத்தி திட்டங்கள், உள்ளடக்கமான பணியிட நடைமுறைகள் மற்றும் முன்முயற்சியான இடர் முகாமைத்துவம் என்பவற்றினூடாக விமான நிறுவனமானது வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்தினை நீடிக்கும்வேளை பணியாட்கள் நல்வாழ்வு மற்றும் நிறுவன மீளெழுச்சியினை மேம்படுத்துவதற்கு அதனை நிலைப்படுத்தியுள்ளது.

தயாரிக்கப்பட்ட மூலதனம்

தயாரிக்கப்பட்ட மூலதனம் என்பது ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் சேவைத் தனிச்சிறப்பினை வலியுறுத்தும் அவசியமான பௌதீக மற்றும் தொழில்நுட்பச் சொத்துக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. இது குத்தகைக்கு எடுக்கப்பட்ட எமது வானூர்தி தொகுதிகள், பராமரிப்பு மற்றும் என்ஜினியரிங் வசதிகள், தரை உறுதுணை உபகரணங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, விமானத்தினுள்ளான உணவளித்தல் வசதிகள், விசேட பயிற்றுவித்தல் நிறுவனங்கள் மற்றும் வலுவான சரக்கு கையாளுதல் மேடைகளை உள்ளடக்குகின்றது. இந்த பௌதீகச் சொத்துக்கள் எமது மையமான விமான நிறுவனச் செயற்பாடுகளது தொடர்ச்சியினை உறுதிசெய்வது மாத்திரமன்றி, வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளிகளுக்கு உயர்தரத்திலான சேவைகள் வழங்குவதனையும் இயலுமையாக்குகின்றது. ஒரு மூலதனச் செறிவான துறையாக, வான்பயணவியல் தயாரிக்கப்பட்ட மூலதனத்தின் உச்சநிலை செயற்பாடு, தொடர்ச்சியான தரமுயர்த்தல் மற்றும் இடர் தணிப்பு போன்றவற்றில் பெருமளவு தங்கியுள்ளதுடன் இவை மறுபுறத்தில் நிதியியல் செயற்திறன், வணிக நாம உரித்துடைமை, பாதுகாப்பு இணக்கப்பாடு மற்றும் பங்காளிகள் நம்பிக்கை என்பவற்றுக்கு துணையளிக்கும்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சில், தயாரிக்கப்பட்ட மூலதனமானது நிலைபேறுடைய பெறுமதிக்கான ஒரு நடைமுறை செயல்படுத்துபவர் மற்றும் ஒரு நீண்டகால இயக்கியாக செயலாற்றுகின்றது. இந்த மூலதனத்தினை முகாமைப்படுத்துவதற்கான எமது அணுகுமுறையானது வினைத்திறன், மீளெழுச்சி மற்றும் புத்தாக்கத்தில் முன்னிறுத்தம் செய்வதுடன், செயற்பாட்டு உட்கட்டமைப்பில் இலக்குவைத்த முதலீடுகளினால் வலியுறுத்தப்படுகின்றது. பாரியபொருளாதார சவால்கள், உலகளாவிய வழங்கல் சங்கிலி கட்டுப்பாடுகள் மற்றும் குறிப்பிட்ட தரைக் கையாளுகை மற்றும் விமானத்தொகுதி சொத்துக்களிலான வாழ்க்கைச் சுழற்சி அழுத்தங்கள் என்பன காணப்பட்டபோதிலும், நாம் எமது சொத்துத் தளத்தின் நேர்மை மற்றும் வினைத்திறனை பாதுகாப்பதில் சுறுசுறுப்பாகவும் முன்னோக்கிய பார்வையுடனும் உள்ளோம்.

விமானத்தொகுதி முகாமைத்துவம் மற்றும் என்ஜினியரிங் உட்கட்டமைப்பு

எமது விமானத்தொகுதியானது குறுகிய, மத்திய மற்றும் நீண்ட தூரப் பாதைகளிடையே பயணிகள் மற்றும் சரக்குச் செயற்பாடுகளுக்கு தொடர்ச்சியாக துணையளிக்கின்றது. இவ்வாண்டின்போது, A320/321 Neo விமானத் தொகுதியிலான CFM என்ஜின்கள் தொடர்பான என்ஜின் செயற்திறன் சிக்கல்கள் செயற்பாட்டு ஸ்திரத்தன்மைக்கு சவாலாக காணப்பட்டது. இது வானூர்தி கூறுகள் மற்றும் உதிரிப் பாகங்களின் உலகளாவிய பற்றாக்குறையினால் மேலும் சிக்கலாக்கப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, நாம் விமானத்தொகுதி முகாமைத்துவத்திற்கு மிகவும் சுறுசுறுப்பான அணுகுமுறையினை கடைப்பிடித்தோம். இது முன்முயற்சியான அட்டவணைப்படுத்தல், வினைத்திறனான திருப்புமுனை திட்டமிடல், மற்றும் மூலோபாய பராமரிப்பு பரத்திவிடல் என்பவற்றை அமுலாக்குவதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது. ஒரேநேரத்தில் பல வானூர்திகள் செயலற்று தரையிறக்கப்படுவதனை தவிர்க்கும் விதத்தில் விமானத் தொகுதிகளிடையே பராமரிப்புப் பணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், விமானக் கேள்விகளை சந்திப்பதற்கு போதுமான வானூர்திகள் செயற்பாட்டில் இருப்பதனை உறுதிசெய்கின்றது. மேலும், வானூர்தியின் ஆரோக்கியத்திலான மெய்நேர கண்காணிப்பானது சிக்கல்களை முன்னதாகவே கண்டுபிடிப்பதற்கும், கிடைப்புத்திறனை பாதிப்பதற்கு முன்னர் பராமரிப்புச் செயற்பாடுகளை முன்கூட்டியே திட்டமிடுவதற்கும் அனுமதிக்கின்றது. அத்துடன், நீண்ட தாமதங்களின்றி விரைவான மாற்றீடுகளுக்கு துணையளிப்பதற்கு முக்கியமான விமானக் கூறுகள் களஞ்சியப்படுத்தப்பட்டு அல்லது தளங்களிடையே பகிரப்படுகின்றது. இந்த நடைமுறைகள் உயர் வானூர்தி அனுப்புதல் நம்பகத்தன்மைக்கு துணையளித்து அட்டவணைப்படுத்தப்படாத செயலற்ற தரையிறக்கத்தினை சிறுமமாக்கியதுடன் அதன் மூலம் விமானத்தொகுதியின் கிடைப்புத்திறனை உகப்பாக்கியது.

என்ஜினியரிங் பிரிவானது வானூர்தி பராமரிப்பு வசதிகள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பத்தினை மேம்படுத்துவதற்கு இலக்குவைத்த மற்றும் மூலோபாயமான முதலீடுகளை பொறுப்பேற்றது. இதன்மூலம் செயற்பாட்டு நம்பகத்தன்மை, முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் ஒட்டுமொத்த தயார்நிலை என்பன உறுதிப்படுகின்றன. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானக் கிடைப்புத்திறனை மேம்படுத்துதல், உள்வாரியான அளவீடு மற்றும் பரிசோதனை ஆற்றல்கள் மற்றும் சிதைக்காத பரிசீலனை சேவைகளை பலப்படுத்துதல் என்பவற்றை இலக்குவைத்து மூலோபாயமான என்ஜினியரிங் முதலீடுகளை மேற்கொண்டது. இந்த முன்னேற்றங்கள் செயற்பாட்டு வினைத்திறனுக்கு துணையளித்து, வெளிவாரி சேவை வழங்குனர்களில் சார்ந்திருப்பதனை குறைத்து உள்வாரி பராமரித்தல் தேவைகள் மற்றும் மூன்றாம் தரப்பு சேவைகளை சந்திப்பதற்கு விமானநிறுவனத்தின் கொள்திறனையும் அதிகரித்தன. கூட்டாக, இந்த முதலீடுகள் பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் தொழில்நுட்பத் தேர்ச்சி என்பவற்றில் உயர்ந்த நியமங்களை பராமரிப்பதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் இன்ஜினியரிங் கட்டுப்பாட்டினை வலியுறுத்துகின்றது. இதன் மூலம் விமான நிறுவனத்தின் விமானத் தொகுதிகள் நடைமுறை மற்றும் எதிர்கால செயற்பாட்டு சவால்களை சந்திப்பதற்கு நன்கு தயாராயுள்ளதை உறுதிசெய்கின்றது.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

தயாரிக்கப்பட்ட மூலதனம் தொடர்ச்சி.

தரைச் செயற்பாடுகள் மற்றும் விமானநிலைய சேவைகளில் உட்கட்டமைப்பு

மிகவும் பழமையான தரை உறுதுணை உபகரணங்களது தொகுதியானது செயலாற்றப்பட்டபோதிலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் தரை கையாளுதல் பிரிவானது கடுமையான மற்றும் முன்முயற்சியான பராமரிப்புச் சேவைகளை கடைப்பிடிப்பதன் மூலம் தொடர்ச்சியான நம்பகமான சேவைகளை வழங்கியுள்ளது. இந்த அணுகுமுறையானது 85% இற்கும் அதிகமான பயன்பாட்டுத்திறன் வீதத்தினை உறுதிசெய்துள்ளதுடன், அட்டவணைப்படுத்தப்பட்ட மற்றும் வாடகை விமானப் பயணங்களுக்கு தடையற்ற உறுதுணையினை இயலுமையாக்கியுள்ளது. மூலோபாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு மீளெழுச்சி என்பன சேவைத்தரங்களை பராமரிப்பதில், இடையூறுகளை சிறுமமாக்குவதில் மற்றும் நிலைபேறுடைய பயணிகள் நம்பகத்தன்மைக்கு முக்கியமானதாகும்.

உபகரணங்களது செயல்பாட்டினை பராமரிக்கும் அதேநேரம், விமான நிறுவனமானது அதன் பிரதான மையமான பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் (ப.ச.வி.) அதன் பௌதீக உட்கட்டமைப்பினை மேம்படுத்துவத்தில் முன்னிறுத்தம் செய்தது. எயார்போட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் லிமிட்டட்டுடன் கூட்டிணைந்து பல முக்கிய உட்கட்டமைப்பு தரமுயர்த்தல்கள் இவ்வாண்டின்போது அமுலாக்கப்பட்டன. இந்த மேம்பாடுகள் பொதி சுழல் பொருள் மேடைகளின் நீட்டிப்பினை உள்ளடக்கியதுடன், இது பொதிகள் கையாளும் கொள்திறனை கணிசமாக அதிகரித்து உள்வரும் பயணிகள் காத்திருக்கும் நேரத்தினைக் குறைத்தது. மேலும், மிகவும் வினைத்திறனான பயணிகள் விமானம் ஏறும் வாசல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை தடையற்ற பயணிகள் ஓட்டத்திற்கும் விரைவான வானூர்தி திருப்புமுனைக்கும் வசதியளித்தது. இந்த முன்னெடுப்புகள் கூட்டாக திருப்புமுனை நேரங்களை குறைத்துள்ளதுடன், செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தி பயணிகளினால் அனுபவிக்கப்பட்ட ஒட்டுமொத்த சேவைத் தரத்தினையும் மேம்படுத்தியது.

பயணிகளது சௌகரியம் மற்றும் திருப்தியின் முக்கியத்துவத்தினை அறிந்து விமானநிலைய சேவைகள் அணிகள் ஓய்விடங்கள் மற்றும் இடங்கடப்பு பகுதிகளில் புதுப்பித்தல் திட்டங்களைப் பொறுப்பேற்றது. இந்த மேம்படுத்தல்கள் குறிப்பாக உயர் மதிப்பு பயணிகள் மற்றும் சர்வதேச இணைப்பு பயணிகளில் முன்னிறுத்தம் செய்து வசதிகளின் சுற்றுப்புறத் தோற்றம் மற்றும் சௌகரியத்தினை உயர்த்தியது.

இந்த பௌதீக தரமுயர்த்தல்களை பூர்த்திசெய்வதற்காக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தரைச் செயற்பாடுகள் பயணிகள் செயன்முறையாக்கல் வினைத்திறனை மேலும் முன்னேற்றுவதற்கு தொழில்நுட்ப புத்தாக்கத்தினை தழுவியது. ஒரு முக்கிய முன்னேற்றமாக சரிவுப்பாதை கட்டுப்பாட்டு மத்தியநிலையத்தில் நேரடி டேஷ் போர்ட்களை அறிமுகப்படுத்தியதுடன், இது மெய்நேர விமான இற்றைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு தரவுகளை வழங்கும். இக்கருவியானது சரிவுப்பாதை கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் தரை பணியாட்களை மாற்றமடையும் சூழ்நிலைகளில் விரைவாக செயற்படுவதற்கு இயலுமையாக்குவதுடன், தாமதங்களை சிறுமமாக்கி தார்சாலையில் வளங்களின் பயன்பாட்டினை உகப்பாக்குகின்றது. மேலாக, விமான நிறுவனமானது பயணிகள் ஓட்டத்தை சீரமைப்பதற்கும் நெரிசல்களை குறைப்பதற்கும் சுய சேவை தொழில்நுட்பங்களின் பயன்பாட்டினை செயலூக்கமாக ஊக்குவித்தது. மீளாய்வாண்டின்போது, ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் ஒரு மொத்த சுய சேவை ஸ்மார்ட் பயணப் பாதையினை பயணிகள் விமானம் ஏற்புக்கு விமானமேற்பு பொறியகங்களுடனும் பொதி குறியிடுதலை ஒரு சுய பொதி இறக்கிவைத்தல் முறையுடனும் இயலுமையாக்கியது. ஒரு பயணிகள் மையப்படுத்திய விமான நிலையமாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ப.ச.வி. (SBD) இல் மிகவும் அதி நவீன பொறியகங்களுடன் மற்றும் சுய பொதி இறக்கல் கொள்திறன் மேம்பாடுகளுடன் சுய சேவை ஆற்றல்களை விரிவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

விமானத்தினுள்ளான வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துவதற்கு உட்கட்டமைப்பின் தரமுயர்த்தல்கள்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவுசெய்யப்பட்ட ஒடுங்கிய அமைப்பு எயார்பஸ் A320 வானூர்தியில் கம்பியற்ற விமானத்தினுள்ளான பொழுதுபோக்கினை அறிமுகப்படுத்துவதன் மூலம் விமானத்தினுள்ளான வாடிக்கையாளர் சேவையில் கணிசமான மேம்பாடுகளை மேற்கொண்டது. இந்த நவீன அமைப்புமுறையானது பயணிகள் அவர்களது சொந்த கருவிகளான, ஸ்மார்ட்போன்கள், டெப்லட்கள் மற்றும் மடிக்கணினிகளில் நேரடியாக பரந்த வரிசையான பொழுதுபோக்கு உள்ளடக்கங்களை மிகவும் இலகுவாக ஸ்ட்ரீம் செய்வதற்கு பயணிகளை அனுமதிக்கின்றது. இது விமான நிறுவனத்தின் ஸ்கைபிளஸ் என வணிகநாமமிட்ட தொலைநுண்மை வலையமைப்பினை பயன்படுத்துகின்றது. இந்த கம்பியில்லா ஸ்ட்ரீமிங் தீர்வானது பாரம்பரிய இருக்கையின் பின்புறத்திலான நிலையான திரைகளை நீக்குவதுடன் பயணிகளுக்கு சிறந்த நெகிழ்வுத்தன்மை, சௌகரியம் மற்றும் தனிப்பயனாக்கத்தினை வழங்குகின்றது. ஸ்கைபிளஸ் வலையமைப்பானது ஸ்ரீலங்கன்சின் விமானத்தினுள்ளான பொழுதுபோக்கு மேடையுடனான தடையற்ற மற்றும் உள்ளுணர்வான இணைப்பினை வழங்குகின்றது. இது திறமையாக கையாளப்பட்ட மற்றும் வழக்கமாக இற்றைப்படுத்தப்பட்ட கேட்டவுடன் திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், இசை பட்டியல்கள், பாட்காஸ்ட்கள், விளையாட்டுக்கள் மற்றும் அதிகமானவற்றையும் உள்ளடக்குகின்றது. உள்ளடக்கமானது பரந்த வீச்செல்லையான பயணிகள் வயதுகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு பொருத்தமானவையாக கவனமாக தெரிவுசெய்யப்பட்டு விமானத்தினுள்ளான அனைவருக்கும் ஒரு ஈடுபாடான அனுபவத்தினை உறுதிசெய்கின்றது. பயணிகளின் சொந்தக் கருவிகளை பயன்படுத்துவதன் மூலம் கம்பிகளற்ற IFE அமைப்புமுறையானது பயனாளர் சௌகரியத்தினை மாத்திரம் மேம்படுத்தாது வானூர்தியின் நிறை மற்றும் பாரம்பரிய இருக்கை பின்புறத்துடன் இணைந்த அலகுகளின் பராமரிப்புச் செலவினங்களையும் குறைக்கின்றது. இது ஒட்டுமொத்த எரிபொருள் வினைத்திறனுக்கு

பங்களித்து விமானநிறுவனத்தின் நிலைபேறுடைமை இலக்குகளுக்கும் துணைபுரிகின்றது.

உணவு வழங்கல் உட்கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு வினைத்திறன்

ஸ்ரீலங்கன் கேட்டரிங் அதன் உற்பத்தி வசதிகளை உகப்பாக்குவதன் மூலம் மற்றும் சிறந்த ஏற்பாட்டியல் மற்றும் கையிருப்பு நடைமுறைகளை ஒருங்கிணைப்பதன் மூலமும் செயற்பாட்டு பலத்தையும் சந்தை தலைமைத்துவத்தினையும் தொடர்ச்சியாக வெளிக்காட்டுகின்றது. கேள்வி, நிலையாக அதிகரிப்பதுடன், அலகானது உற்பத்தி திட்டமிடலை சீரமைத்ததுடன், வலுச் சிக்கனமான நடைமுறைகளை அமுலாக்கி விரயத்தினை குறைப்பதற்காக மெய்நேர சமையலறை கண்காணிப்பானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தர உறுதிப்பாடு கட்டமைப்பிற்கான மேம்பாடுகள், ISO மற்றும் HACCP உடனான தொடர்ச்சியான இணக்கப்பாட்டுடன் சேர்த்து உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான உயர்ந்த நியமங்கள் கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது. ஒரு வர்த்தகத் தோற்றத்திலிருந்து அலகானது சூழல் நிலைபேறுடைமையுடன் சீரமைக்கப்பட்ட பொதியிடல் மற்றும் வணிகநாமமிடல், உயர்பெறுமதியுடைய உணவு வகைகள் மற்றும் சமையற்காரரது விசேட உணவுப்பட்டியல்கள் என்பவற்றை ஆரம்பிப்பதன் மூலம் சிறந்த உற்பத்தி வேறுபடுத்தலை அறிமுகப்படுத்தியது. இவை வாடிக்கையாளர் உணர்வுகளை மேம்படுத்தியது மாத்திரமன்றி பங்காளி விமான நிறுவனங்கள் மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு அதிக விற்பனைக்கான வாய்ப்புக்களை உருவாக்கியது. வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியப்படுத்தலிலான முதலீடு மற்றும் மேம்படுத்தப்பட்ட வீரிய ஆயுட்கால முகாமைத்துவம், குறைக்கப்பட்ட கெட்டுப்போதல் என்பன செலவுச் சிக்கனத்திற்கு மேலும் பங்களிப்பு செய்தது.

சரக்கு உட்கட்டமைப்பு மற்றும் விரிவாக்கம்

விமான நிறுவனத்தின் சரக்குப் பிரிவானது உட்கட்டமைப்பு மீள்வடிவமைப்பு மற்றும் எதிர்கால காப்பு என்பவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை மேற்கொண்டது. களஞ்சியச்சாலை தளவமைப்புகள் குளிரான சங்கிலி ஆற்றல்களை பலப்படுத்துவதற்காக மீள்வடிவமைக்கப்பட்டன. இது மருந்துகள், அழுகக்கூடியவைகள் மற்றும் உயர் பெறுமதி பொருட்களுக்கு பிரத்தியேகமான வலயங்களுடன் அமைக்கப்பட்டது. வழங்கல் சங்கிலியின் முக்கியமான இடங்களில் மெய்நேர வெப்பநிலை கண்காணிப்பு முறைமையின் அறிமுகமானது சரக்கு நேர்மை மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டினை மேம்படுத்தியது, குறிப்பாக தடுப்பூசிகள் மற்றும் மருத்துவ பரிசோதனைப் பொருட்கள் போன்ற உணர்வுள்ள சரக்கு ஏற்றலுக்காகும்.

உபகரணங்களைப் பொறுத்தளவில், உயர் கொள்திறனுடைய கவைகோல் பளுஏற்றிகளின் கையகப்படுத்தலானது பாரம்கூடிய சரக்கு கையாளும் கொள்திறனை விரிவாக்கியதுடன், ஏனைய பல தரமுயர்த்தல்கள் களஞ்சியத்திலிருந்து வானூர்திக்கான தடையற்ற பணிப்பாய்விற்கு பங்களித்தது. முன்னோக்கிப் பார்க்கும்போது புதிய சரக்கு முனையமானது மேம்பட்ட கையாளுதல் ஆற்றலுடன் அபிவிருத்தியின் இறுதிக் கட்டத்தில் உள்ளது. தற்போதுள்ள முனையமானது பழுதடையக்கூடிய மற்றும் தூதஞ்சல் கையாளுதல் மத்திய நிலையமாக மாற்றப்படவுள்ளதுடன், இது செயல்வீதம் மற்றும் சேவை வேறுபடுத்தலை அதிகரிக்கின்றது. கூட்டாக இந்த அபிவிருத்திகள் கொழும்பை ஒரு பிராந்திய சரக்கு இடங்கடப்பு மையமாக நிலைப்படுத்துவதற்கான ஒரு முன்னோக்கிய படியாக குறிப்பிடுகின்றது.

பெறுமதி உருவாக்கத்திற்கான பங்களிப்பு

தயாரிக்கப்பட்ட மூலதனமானது வணிகங்களிடையே குறுங்கால செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கத்திற்கு நேரடியாக பங்களிப்பு செய்கின்றது. விமானத்தினுள்ளான முறைமைகள், பொதிகள் கையாளுதல் மற்றும் உணவளித்தல் வசதிகள் வாடிக்கையாளர் திருப்தி மற்றும் விசுவாசத்திற்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மறுபுறத்தில், பராமரிப்பு நம்பகத்தன்மை, டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தரைச் செயற்பாடுகள் மற்றும் விமானம் பூராவுமான கண்காணிப்பு முறைமைகள் என்பன செலவுச் சிக்கனம், செயற்திறன் ஸ்திரத்தன்மை மற்றும் மூலோபாய அளவிடக்கூடியமை என்பவற்றை இயக்குகின்றன.

பரந்தளவு மட்டத்தில், தயாரிக்கப்பட்ட மூலதனத்திலான முதலீடுகள் சொத்து செயலிழப்பு நேரத்தினை குறைத்தல், எரிபொருள் வினைத்திறனை அதிகரித்தல், பழுதுபார்த்தல் செலவினத்தை குறைத்தல் மற்றும் வணிகத் தொடர்வினை இயலுமையாக்குதல் என்பவற்றின் மூலம் நிதியியல் விளைவுகளில் செல்வாக்கு செலுத்துகின்றது. அது வலு செயற்திறனான அமைப்புமுறைகள், பசுமையான உணவளித்தல் நடைமுறைகள் மற்றும் உமிழ்வு உணர்வுள்ள வழித்திட்டமிடல் தொழில்நுட்பங்கள் என்பவற்றின் கடைப்பிடிப்பினூடாக சூழல் பாரபத்தியத்திற்கு துணையளிக்கின்றது. இந்த இடையிணைந்த தாக்கங்கள் தயாரிக்கப்பட்ட மூலதனத்தினை விமான நிறுவனத்தின் பெறுமதி உருவாக்கல் மாதிரிக்கு ஒரு முக்கிய பங்களிப்பவராக நிலைப்படுத்தியுள்ளது.

பிற மூலதனங்களுடன் பரஸ்பரத் தொடர்பு

தயாரிக்கப்பட்ட மூலதனத்தின் செயற்பாடு மற்றும் விரிவாக்கம் ஏனைய வடிவத்திலான மூலதனத்துடன் நெருங்கி பிணைக்கப்பட்டுள்ளது. மனித மூலதனமானது தொழில்நுட்ப பயிற்சி, திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பாதுகாப்பு என்பவற்றை இயலுமையாக்கும் உட்கட்டமைப்பினூடாக பலப்படுத்தப்படுகின்றது. நிதியியல் மூலதனமானது செயற்பாட்டு திறமையின்மைகளை குறைப்பதன் மூலம் மற்றும் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை நீடிப்பதன் மூலம் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றது. அறிவுசார் மூலதனமானது பராமரிப்பு பதிவுகளின் டிஜிட்டல்மயமாக்கல், மெய்நேர கண்காணிப்பு கருவிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைகளினூடாக அறிவுப் பிடிப்புகள் என்பவற்றிலிருந்து நலனடைகின்றது.

தாயரிக்கப்பட்ட மூலதனமானது எமது சமூக மற்றும் இயற்கை மூலதன நிகழ்ச்சி நிரலுக்கும் துணையளிக்கின்றது. சுத்தமான தரை வாகனங்கள், சிறந்த கழிவு வேறுபடுத்தல் முறைமைகள், மற்றும் குறைவான உமிழ்வு உணவளித்தல் உபகரணங்கள் என்பன எமது சூழல் அடிச்சுவட்டினை குறைப்பதற்கு உதவுகின்றது. அதேசமயம், பயணிகள் முகங்கொடுக்கும் உட்கட்டமைப்புக்கான மேம்பாடுகள் சமூக ஈடுபாடு மற்றும் நற்பெயரில் சாத்தியமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

முன்னோக்கிய கண்ணோட்டம் மற்றும் மூலோபாயத் திட்டங்கள்

முன்னோக்கிப் பார்க்கும்போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் எதிர்பார்த்த கேள்வி அதிகரிப்புகளுக்கு வசதியளிப்பதற்கும் மூலோபாய இணைப்பு குறிக்கோள்களை சந்திப்பதற்கும் அடுத்த ஐந்து வருடங்கள் மீதான அதன் வானூர்தி தொகுதியினை விரிவாக்குவதற்கு கடப்பாட்டுடன் உள்ளது. இணையான முதலீடுகள், பயிற்றுவித்தல் வசதிகளை தரமுயர்த்துவதில், டிஜிட்டல் பொறியியல் ஆற்றல்கள், களஞ்சியச்சாலை தன்னியக்கமாக்கல், மற்றும் முனைய உட்கட்டமைப்பு என்பவற்றில் மேற்கொள்ளப்படும். ஒரு நவீன சரக்கு முனையத்தின் திட்டமிடப்பட்ட ஆரம்பம் மற்றும் தற்போதுள்ள இடத்தை பழுதடையக்கூடிய பொருட்கள் மற்றும் இ-வர்த்தக கையாளுதலுக்கு மறுபயன்பாடளித்தல் என்பன தெற்காசியாவில் விமானநிறுவனத்தினை ஒரு ஏற்பாட்டியல் மையமாக நிலைப்படுத்தும் எமது இலட்சியத்தினை பிரதிபலிக்கின்றது.

பராமரிப்பின் டிஜிட்டல் மயமாக்கல், முன்கணிப்பு பகுப்பாய்வுகளது அறிமுகம் மற்றும் அதிக எரிபொருள் வினைத்திறனான விமானத்தொகுதி தெரிவுகளுக்கு மாறுதல் என்பன தயாரிக்கப்பட்ட மூலதனத்திலிருந்து பெறப்படும் பெறுமதியினை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கும். அடுத்த அத்தியாய வளர்ச்சிக்கு நாம் தயாராகும்போது, எமது முன்னிறுத்தமானது செயற்பாட்டு தனிச்சிறப்பு மற்றும் நீண்டகால நிலைபேறுடைமைக்கு துணையளிக்கும் ஒரு மீளெழுச்சியான, வினைத்திறனான மற்றும் எதிர்காலத்திற்கு தயாரான பௌதீக சொத்து தளத்தினை கட்டியெழுப்புவதில் காணப்படுகின்றது.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

அறிவுசார் மூலதனம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் அறிவுசார் மூலதனத்தினை பின்வருமாறு வரையறை செய்கின்றது. வினைத்திறனாக செயலாற்றக்கூடிய, தொடர்ச்சியாக புத்தாக்கமாயிருக்கக்கூடிய, துறையில் போட்டித்திறனை பராமரிக்கக்கூடிய விமான நிறுவனத்தின் ஆற்றலினை வலியுறுத்தும் கூட்டான அறிவு, முறைமைகள், செயன்முறைகள் மற்றும் உறவுமுறைகள் ஆகும். இந்த மூலனதமானது அறிவு முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு செயலறிவு, டிஜிட்டல் மேடைகள் மற்றும் மேம்பட்ட தகவல் தொழில்நுட்ப அமைப்புமுறைகள், திடமான வணிகநாம உரித்துடைமை, சான்றளிப்புகள் மற்றும் இணக்கப்பாட்டு நெறிமுறைகள் மற்றும் புத்தாக்கத்தினை உள்ளடக்குகின்றது.

அறிவு முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு ஆவணப்படுத்தல்

உயர் தரத்திலான பாதுகாப்பு, செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவைத் தனிச்சிறப்பினை பராமரிப்பதற்கு வலுவான அறிவு முகாமைத்துவம் அடிப்படையானது என ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அங்கீகரித்துள்ளது. விமான நிறுவனமானது செயற்பாட்டு செயன்முறைகள், மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளிலிருந்து தொழில்நுட்ப வழிகாட்டிகள் மற்றும் வாடிக்கையாளர் சேவை நியமங்கள் வரையான அனைத்து முக்கியமான அறிவினை உறுதிசெய்வதற்காக விரிவான முறைமைகள் மற்றும் செயன்முறைகளை அமுலாக்கியுள்ளதுடன், இவை துல்லியமாக ஆவணப்படுத்தப்பட்டு, தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட்டு அனைத்து பொருத்தமான திணைக்களங்களிடையே வினைத்திறனாக பரப்பப்படுகின்றது.

விமான நிறுவனம் குறிப்பிட்ட செயற்பாட்டு கையேடுகள் மற்றும் டிஜிட்டல் களஞ்சியங்கள்

இந்த முயற்சிகளின் மையத்தில் பல வருடங்களான செயற்பாட்டு அனுபவம் மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டின் மூலம் விருத்திசெய்யப்பட்ட மற்றும் சீர்திருத்தப்பட்ட விமானநிறுவனம் குறிப்பிட்ட கையேடுகள் காணப்படுகின்றன. இந்த கையேடுகள் விமானச் செயற்பாடுகள், அனுப்புகைகள், பொறியியல், விமானத்தினுள்ளான சேவைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக நுண்ணறிவு உள்ளடங்கலான பரந்த பிரிவுகளை உள்ளடக்குகின்றது. அவை நிலையான செயற்பாட்டு செயன்முறைகள், இடையேற்பாட்டு திட்டங்கள், பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் வாடிக்கையாளர் கையாளுதல் செயன்முறைகள் என்பவற்றில் விரிவான அறிவுறுத்தல்களை உள்ளடக்குகின்றன. அணுக்கத்திறனின் முக்கியத்துவத்தினை அறிந்துகொண்டு இந்த கையேடுகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் என்பன எளிதாக அணுகக்கூடிய டிஜிட்டல் வடிவத்தில் பராமரிக்கப்படுகின்றன. இவை தனிப்பயனாக்கப்பட்ட உள்ளக களஞ்சியங்கள் மற்றும் அறிவு முகாமைத்துவ முறைமைகளூடாக பணியாட்கள் அவர்களது கடமைகளை வினைத்திறனாக செயலாற்றுவதற்கு தேவையான நவீன தகவல்களுக்கான உடனடி அணுக்கத்தினை கொண்டிருப்பதனை உறுதிசெய்கின்றது.

முக்கிய செயற்பாட்டு தரவு மற்றும் நுண்ணறிவுகள் - வரலாற்று பாதைச் செயற்திறன் அளவீடு, விவரமான எரிபொருள் பாவனை பகுப்பாய்வு மற்றும் தாமதப் போக்கு அறிக்கைகள் போன்றவை முறையாக சேகரிக்கப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டு இந்த முறைமைகளினுள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இந்த வளமான தரவுக் களஞ்சியமானது தகவலறிந்த தீர்மானம் மேற்கொள்வதற்கு உதவுகின்றது, விமானப் பயணத் திட்டமிடலை உகப்பாக்குவதற்கு முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு அணிகளை அனுமதிக்கின்றது, எரிபொருள் வினைத்திறனை மேம்படுத்துகின்றது, நேரந்தவறாமையினை முன்னேற்றுகின்றது மற்றும் தாமதங்களைக் குறைக்கின்றது. நாளாந்த செயற்பாடுகளில் அத்தகைய தரவுகளின் ஒருங்கிணைப்பானது விமான நிறுவனத்தின் தரவினால் இயக்கப்படும் முகாமைத்துவ நடைமுறைகளுக்கான கடப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றது.

உற்பத்தியாளர் வழிகாட்டி மற்றும் பணிப்புரைகள்

உள்வாரியான ஆவணப்படுத்தலுக்கு மேலாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் அறிவுச் சூழலமைவில் எயார்பஸ் தொழில்நுட்ப குறிப்பாணைகள், "சரியாகப் புரிந்துகொள்ளுதல்" ஆவணங்கள் மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் தொடர்பாடல்கள் போன்ற உற்பத்தியாளர் வழிகாட்டலை நெருக்கமாக ஒருங்கிணைக்கின்றது. இந்த ஆவணங்கள் வழமையாக மீளாய்வு செய்யப்பட்டு செயற்பாட்டு கையேடுகள் மற்றும் பயிற்றுவித்தல் பொருள்களில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இது மிகப்பிந்திய பாதுகாப்பு நியமங்கள், தொழில்நுட்ப இற்றைப்படுத்தல்கள் மற்றும் இணக்கப்பாட்டு தேவைப்பாடுகளுடன் இணங்குவதை உறுதிசெய்கின்றது. இவ்வாறு செய்வதன் மூலம், விமான நிறுவனமானது உலகளாவிய வான்பயணவியல் நியமங்களுடன் சீரமைவினை பராமரிப்பதுடன், முன்னணியிலுள்ள பணியாட்கள் மற்றும் முகாமைத்துவம் நாளிதுவரைக்குமான தகவல்களுடன் செயலாற்றுவதனை உறுதிசெய்கின்றது.

மனித மூலதனம் செயற்பாட்டு தனிச்சிறப்பிற்கான மூலக்கல் என்ற புரிந்துணர்வுடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கட்டமைக்கப்பட்ட அறிவு மாற்றல் திட்டங்களில் திடமான அழுத்தத்தினை இடுகின்றது. இது குறிப்பாக தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டு திணைக்களங்களில் முக்கியமானதாகும். விமான நிறுவனமானது முறையான அமர்வுகள், சிறு விளக்கங்களுக்கும் அனுபவமிக்க தொழில்வல்லுனர்களுக்கும் புதிதாக சேர்க்கப்பட்ட பணியாட்களையும் இணைக்கும் வழிகாட்டல் முன்னெடுப்புகளுக்கும் வசதியளிக்கின்றது. இந்தத் திட்டங்கள் தொழில்நுட்பத் திறன்கள் மற்றும் செயற்பாட்டு செயன்முறைகளை அறிவுறுத்துவதற்கு மாத்திரம் வடிவமைக்கப்படாது, இயக்காற்றலான மற்றும் உயர் பங்கு சூழல்களுக்கு அவசியமான அனுபவ அறிவு, செயற்பாட்டு நியாயப்பாடுகள், மற்றும் பிரச்சனை தீர்க்கும் தொழில்நுட்பங்களையும் வழங்குகின்றது.

அத்தகைய அறிவு மாற்றல் பொறிமுறைகள் நிபுணத்துவம் தொடர்வதனை உறுதிசெய்து பணியாட்கள் புரள்வு அல்லது பதவி மாற்றல்களுடன் இணைந்த இடர்களை குறைக்கின்றது. இந்த அணுகுமுறையானது முன்னேறுவதற்கு அவசியமான தகுதிகளை மற்றும் செயற்பாட்டு நுண்ணறிவுகளை பெறுவதற்கான ஒரு தெளிவான பாதையினை புதிய பணியாட்களுக்கு வழங்குவதன் மூலம் தொழில் அபிவிருத்திக்கு துணையளிக்கின்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் தகவல் தொழில்நுட்பப் பிரிவானது, ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கும், மென்பொருள் அபிவிருத்தியினை சீரமைப்பதற்கும், மற்றும் பெறுமதிமிக்க நிறுவன அறிவினை பாதுகாப்பதற்கும் நவீன டிஜிட்டல் நடைமுறைகளை தழுவுகின்றது. இந்த அணுகுமுறைகள் தெளிவான ஆவணப்படுத்தல், புதிய அணி அங்கத்தவர்களுக்கு தடையற்ற உள்ளீர்ப்பு, மற்றும் விமான நிறுவனத்தின் டிஜிட்டல்

செயற்பாடுகளின் நீண்டகால மீளெழுச்சி என்பவற்றுக்கு துணையளிப்பதுடன், புத்தாக்கம் மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான ஒரு திடமான கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது.

இடையேற்பாட்டு செயன்முறைகள், பாதுகாப்பு பணிப்புரைகள் மற்றும் செயற்பாட்டு புதுப்பிப்புகள் என்பன வழமையாக மீளாய்வு செய்யப்பட்டு, திருத்தியமைக்கப்பட்டு இந்த டிஜிட்டல் மேடைகளினுள் மெய்நேரத்தில் பராமரிக்கப்படுகின்றன. இது அனைத்து மட்டத்தில் மற்றும் செயற்பாடுகளிடையே உள்ள பணியாட்கள் மிகப்பிந்திய நெறிமுறைகளுடன் செயலாற்றுவதை உறுதிசெய்கின்றது. நாளிதுவரைக்குமான ஆவணங்களை பராமரிப்பதற்கான விமான நிறுவனத்தின் கடப்பாடானது வழமையான பயிற்சி மற்றும் தொடர்பாடல் முன்னெடுப்புகளினால் பூர்த்திசெய்யப்பட்டு புரிந்துணர்வு மற்றும் ஒட்டியொழுகலை வலியுறுத்துகின்றது.

வலுவான பயிற்சிக் கட்டமைப்பு

தொழில்நுட்ப மேம்பாடுகளுடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஒரு விரிவான பயிற்சி திட்டங்களின் தேக்கத்தினூடாக மனித மூலதனத்தை விருத்திசெய்வதனை வலியுறுத்துகின்றது. இந்த முன்னெடுப்புகள் பணியாட்களை அவசியமான தொழில்நுட்ப தகுதிகளுடன் தயாராக்குவதற்கு மாத்திரம் வடிவமைக்கப்படாது பாதுகாப்பு, நிலைபேறுடைமை மற்றும் முறைமைப்பாட்டு கடைப்பிடித்தல் கலாச்சாரத்தினையும் ஊக்குவிப்பதற்கும் ஆகும்.

விமான நிறுவனத்தினுள் பல்வேறு பணியாட்கள் குழுக்களுக்காக ஆரம்ப மற்றும் மீள்நிகழும் பயிற்சித் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது துறைசார் அபிவிருத்திகள் மற்றும் முறைமைப்படுத்தல் மாற்றங்களுக்கு சீரமைவாக தொடர்ச்சியான திறன் மேம்படுத்தல் மற்றும் நாளிதுவரைக்குமான அறிவினை உறுதிசெய்கின்றது. உள்ளக நிபுணத்துவத்தினை மேலும் கட்டியெழுப்புவதற்கும் உலகளாவிய வான்பயணவியல் நியமங்களுடன் சீரமைப்பதற்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பின்வரும் பிரிவுகளில் ஒரு தொடரான இலக்குவைத்த தொழில்நுட்ப பயிற்சித் திட்டங்களை நடாத்துகின்றது. சோர்வு விழிப்புணர்வு மற்றும் தணிப்பு, வானூர்தி செயற்திறன், எரிபொருள் கண்காணிப்பு மற்றும் உமிழ்வு இணக்கப்பாடு, சர்வதேச மற்றும் உள்ளூர் உரிமமளித்தல் நியமங்கள், அவசர மற்றும் சீரற்ற செயற்பாடுகள் பயிற்சி மற்றும் மனிதக் காரணிகள் பயிற்சி போன்றவையாகும்.

கட்டமைக்கப்பட்ட முறைமைப்படுத்தல் ஈடுபாடானது வளர்ந்துவரும் வான்பயணவியல் நியமங்களுக்கு சீரமைவாக பராமரிப்பு மற்றும் பறக்கும் தகுதி முகாமைத்துவ செயற்பாடுகள் காணப்படுவதனை உறுதிசெய்கின்றது. வழமையான கணக்காய்வுகள், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மற்றும் செயற்பாட்டு கையேடுகள் மற்றும் செயன்முறைகளுக்கான முறையான புதுப்பிப்புகள் என்பன பாதுகாப்பு பணிப்புரைகள் மற்றும் முறைமைப்படுத்தல் மாற்றங்களை உரியநேரத்தில் ஒருங்கிணைப்பதனை இயலமையாக்குவதுடன், இது இணக்கப்பாட்டினை வலியுறுத்தும்வேளை தொடர்ச்சியான மேம்பாட்டு மற்றும் செயற்பாட்டு தயார்நிலை கலாச்சாரத்திற்கு துணையளிக்கின்றது. செயற்திறன் மதிப்பீடுகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட கணிப்பீடுகள் இலக்குவைக்கப்பட்ட திறன் மேம்பாட்டு முன்னெடுப்புகளுக்கும், தொடர்ச்சியான மேம்ப்பாட்டு கலாச்சாரத்தினை பராமரிப்பதற்கும் உதவுவதுடன், நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் மறைமுகமாக பங்களிப்பு செய்கின்றது. பாதுகாப்பு பணிப்புரைகள் மற்றும் செயற்பாட்டு கட்டமைப்புகளுக்கான திருத்தங்கள் உள்ளடங்கலான முறைமைப்படுத்தல் பிரசுரங்கள் செயலூக்கமாக கண்காணிக்கப்படுகின்றன. இவை கட்டமைக்கப்பட்ட தொடர்பாடல், புதுப்பிக்கப்பட்ட செயன்முறை ஆவணப்படுத்தல், மற்றும் இலக்குவைத்த பயிற்சி என்பவற்றினூடாக முறையாக புதுப்பிக்கப்படுவதுடன், இது வளர்ந்துவரும் நியமங்களுடன் நிறுவனம் முழுவதுமான சீரமைவினை உறுதிப்படுத்துவதற்காகும்.

இந்த திட்டங்கள் நிறுவனத்தின் பல குறிக்கோள்களுக்கு கூட்டாக துணையளிக்கின்றன: வானூர்தி செயற்திறன் மற்றும் எரிபொருள் திட்டமிடல் நியமங்களுடனான கடுமையான ஒட்டியொழுகல், நிலைபேறுடைமை இலக்குகளை சந்திப்பதற்கு எரிபொருள் மூலங்களின் வினைத்திறனான பயன்பாடு, கடுமையான கணக்காய்வுகள் மற்றும் முறைமைப்படுத்தல் பரிசீலனைக்குட்படுவதற்கான தயார்நிலை, என்பவற்றின் மூலம் விமானநிறுவனத்தின் இணக்கப்பாட்டு தோற்றம் பராமரிக்கப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்ப முறைமைகளும் டிஜிட்டல் சொத்துக்களும்

'ஸ்ரீலங்கன் த.தொ. முறைமைகள்' என்று குறிப்பிடப்படும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தகவல் தொழில்நுட்பப் பிரிவானது விமான நிறுவனத்தின் த.தொ. மற்றும் டிஜிட்டல் மூலோபாயத்தினை ஆளுகை செய்கின்றது. இது வான்பயணவியல் துறையில் அதி நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதன் மூலம் மேம்பட்ட பயணிகள் அனுபவத்துடன் அதிகளவு டிஜிட்டல் வணிகங்கள் மற்றும் ஸ்மார்ட் செயற்பாடுகளை இயக்குவதற்கான விமான நிறுவனத்தின் வணிகத் திட்டம் மற்றும் குறிக்கோள்களுடன் சீரமைவாய் உள்ளது.

தரவினால் இயக்கப்படும் தீர்மானம் மேற்கொள்ளலை இயக்குவதற்கும், வாடிக்கையாளர் ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கும் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை உகப்பாக்குவதற்கும் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திரப் பயிலல் (ML) போன்ற வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களின் விரைவாக்கப்பட்ட பயன்பாடானது இவ்வருடத்தில் காணப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். இந்த முன்னேற்றங்கள் விமானநிறுவனத்தின் விரிவடையும் டிஜிட்டல் விற்பனை மேடைகள் மற்றும் இ-வணிக வழிமுறைகளுள் ஒருங்கிணைக்கப்பட்டு வருவாய் வளர்ச்சிக்கும் தனிப்பட்ட பயணிகள் சேவைகளுக்கும் புதிய வாய்ப்புக்களை திறக்கின்றது.

AI/ML இனால் வலுவளிக்கப்பட்ட புதிய வருவாய் முகாமைத்துவ முறைமையின் அறிமுகம்

வரலாற்று ரீதியாக ஒரு வலையமைப்பு அடிப்படையிலான வானூர்தியாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பாரம்பரிய பிரிவு அடிப்படையிலான முறைமைகளை பயன்படுத்தி புறப்படும் இடம் மற்றும் சேருமிடம் (O & D) அடிப்படையிலான கிடைப்புத்திறனை முகாமைப்படுத்துவதில் வரையறைகளுக்கு முகங்கொடுத்தது. ஒக்டோபர் 2024 இல், விமான நிறுவனமானது PROS இனால் வலுவளிக்கப்பட்ட AI/ML. இனால் இயக்கப்பட்ட வருவாய் முகாமைத்துவ நன்மை (RMA) மற்றும் அமதியஸ் வருவாய் கிடைப்புத்திறன் மற்றும் செயலூக்கமான பெறுமதியிடல் (RAAV) போன்றவற்றால் வலுவளிக்கப்பட்ட அதிநவீன, மெய்நேர O & D மேடைக்கு மாறியது. AI கணிப்புநெறிகள் O & D கலவைக்கிடையே கட்டண வகுப்புகள் மற்றும் கிடைப்புதிறனை உகப்பாக்குவதற்கு சந்தை நிலைமைகள், போட்டியாளர் விலையிடல், மற்றும் எஞ்சிய கொள்திறன் என்பன தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. இயந்திரப் பயிலல், பயணிகள் தெரிவுசெய்யக்கூடிய பயணத்திட்டம் அல்லது விலைப் புள்ளிகளை எதிர்வுகூறும் வாடிக்கையாளர் நடத்தையினை, கட்டணங்கள் எவ்வாறு செம்மையாக்கப்படுகின்றது என்பதை உகப்பாக்குவதற்கும் மாதிரியமைப்பதற்கும் உதவுகின்றது. இந்த மேம்பட்ட தீர்வானது மெய்நேர அடிப்படையில் முழு பயணிகள் பிரயாணத்தினுள் கிடைப்புத்திறனை கணிப்பிடுவதுடன், நுண்ணறிவான, தரவினால் இயக்கப்படும் தீர்மானங்களையும் மிகவும் துல்லியமான கட்டண வழங்கல்களையும் இயலுமையாக்குகின்றது. அனைத்து விற்பனை வழிகளிடையேயான மெய்நேர ஒருங்கிணைப்பானது உகப்பாக்கப்பட்ட இருக்கை பகிர்ந்தளிப்பு மற்றும் மேம்பட்ட இணைப்புநிலை, மேம்பட்ட இலாபகரத்தன்மை மற்றும் பயணிகள் அனுபவத்தினை உறுதிசெய்கின்றது.

செயற்பாட்டு பகுதிகளை உருமாற்றுவதற்கு ரோபொட்டிக் செயன்முறை தன்னியக்கமாக்கலின் கடைப்பிடிப்பு

ஸ்ரீலங்கன் த.தொ. அதன் டிஜிட்டல் பயணத்தில் ஒரு முக்கிய செயல்படுத்துபவராக ரோபொட்டிக் செயன்முறை தன்னியக்கமாக்கலினை (RPA) தழுவுவதுடன், ஒரு புதிய சகாப்தமான செயற்பாட்டு வினைத்திறனை இயக்கியது. உயர் பருமனளவான, பாரம்பரியமாக கணிசமான நேரத்தையும் மனித முயற்சியையும் பயன்படுத்தும் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளும் பணிகளை தன்னியக்கமாக்குவதற்கு RPA பயன்படுத்தப்படுகின்றது. இந்த முன்னெடுப்பின் ஒரு பாகமாக, பட்டியலிடல், கணக்கிணக்கங்கள் மற்றும் தரவு ஏற்புடையாக்கல் போன்ற செயற்பாடுகள் RPA ஒருங்கிணைப்பிற்கு மூலோபாயமாக மதிப்பிடப்பட்டவண்ணமுள்ளது. இந்த செயன்முறைகள் தன்னியக்கமாக்கல் செயன்முறை நேரத்தைக் கணிசமானளவு குறைக்கும், துல்லியத்தினை மேம்படுத்தும், மற்றும் விரைவான, புத்திசாலித்தனமான மற்றும் மிகவும் மீளெழுச்சியான செயற்பாடுகளுக்கு வழிவகுக்கும் தடையற்ற பணிப்பாய்வினை இயலுமையாக்கும்.

தகவலால் இயக்கப்படும் தீர்மானம் மேற்கொள்ளல்

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் முகாமைத்துவ தகவல் அமைப்புமுறையான "எயார்லைன் நுண்ணறிவு" நிறுவனம் முழுவதும் மூலோபாய மற்றும் தந்திரோபாய தீர்மானம் மேற்கொள்வதற்கு வலுவளிக்கும் மையமான

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

அறிவுசார் மூலதனம் தொடர்ச்சி.

நுண்ணறிவு மேடையாக சேவையாற்றுகின்றது. முன்பதிவுசெய்தல், டிக்கட் வழங்குதல், மற்றும் பயண நடத்தை உள்ளடங்கலான விரிவான தரவுத் தொகுப்பினை செயன்முறையாக்குவதன் மூலம், எயார்லைன் நுண்ணறிவு ஊடாட்டமான டேஷ்போர்ட்கள், விரிவான அறிக்கைகள் மற்றும் தன்னியக்கமாக்கப்பட்ட KPI எச்சரிக்கைகள் ஊடாக மெய்நேர, நடவடிக்கைக்குரிய நுண்ணறிவினை வழங்குகின்றது.

சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு அணிகள் ஆகிய இருசாராருக்கும் துணையளிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட மேடையானது தரவு வெளிப்படைத்தன்மை, விரைவான பதிலளித்தல் நேரங்கள் மற்றும் மேம்பட்ட வணிக விரைவூக்கம் என்பவற்றை உறுதிசெய்கின்றது. இது செயற்பாட்டு செயற்திறனை மேம்படுத்தி, வருவாயினை உகப்பாக்கி வாடிக்கையாளர் அனுபவத்தினை உயர்த்தும் தகவலறிந்த தீர்மானங்களை இயலுமையாக்குகின்றது. விமான நிறுவனத்தின் டிஜிட்டல் உருமாற்றல் பயணத்தின் ஒரு முக்கிய தூணாக, விமான நிறுவனமானது தொடர்ச்சியாக வளர்ந்து தரவு நுண்ணறிவினை விமான நிறுவனத்தின் நீண்டகால மூலோபாய இலக்குகளுடன் சீரமைக்கின்றது.

தரவினால் இயக்கப்படும் வானூர்தி பராமரிப்பு

மேம்பட்ட வானூர்தியின் நம்பகத்தன்மை மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை தொடர்வதில் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் இன்ஜினியரிங் பிரிவானது அதன் பராமரிப்புச் செயற்பாடுகளை உருமாற்றும் அதிநவீன தொழில்நுட்ப தீர்வுகளை தழுவியுள்ளது. இந்த உருமாற்றலுக்கு மையமாக இரண்டு முன்னணி மேடைகளான, AMOS மற்றும் எயார்பஸ் ஸ்கைவைஸ் ஆகிய இரண்டும் கூட்டாக முன்கணிப்பு, தரவினால் இயக்கப்படும் வானூர்தி பராமரிப்பு என்பவற்றுக்கான ஒரு சக்திமிக்க சூழலமைப்பாக உருவாகின்றது. AMOS மற்றும் ஸ்கைவைஸ் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பானது ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பொறியியல் ஆற்றல்களின் கணிசமான முன்னேற்றத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. AMOS பராமரிப்பு அட்டவணைகளின் வினைத்திறனான நிறைவேற்றல், இணக்கப்பாட்டு ஒட்டியொழுகல், மற்றும் கையிருப்பு முகாமைத்துவம் என்பவற்றை உறுதிசெய்யும்வேளை, ஸ்கைவைஸ் முன்கணிப்பான ஆய்ந்தறிதல் மற்றும் விமானம் முழுவதுமான மெய்நேர கண்காணிப்பினை மேம்படுத்துகின்றது.

வான் சரக்குச் செயற்பாடுகளின் டிஜிட்டல் உருமாற்றம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சரக்கு செயன்முறையாக்கல் பணிப்பாய்வுகளிடையே தன்னியக்கமாக்கலது ஒருங்கிணைப்பு மற்றும் முழுவதும் டிஜிட்டல் ஆவணப்படுத்தல் நடைமுறைகளின் கடைப்பிடிப்பு என்பவற்றை இலத்திரணியல் வான் பாரப்பட்டி (e-AWB) முறைமையினூடாக வெளிப்படையாகத் தொடங்கியுள்ளது. தாள்களற்ற செயன்முறைக்கான இந்த மாற்றம் உலகளாவிய துறைசார் நியமங்களுக்கு சீரமைவாக உள்ளதுடன், விரைவான மிகவும் பாதுகாப்பான சரக்கு கையாளுகைக்கு துணையளிக்கின்றது. இந்த தொழில்நுட்ப முன்னேற்றங்களின் இருதயமாக IBS சொவ்ட்வெயாரினால் பணியில் ஈடுபடுத்தப்பட்ட ஐ-கார்கோ களஞ்சிய முகாமைத்துவ முறைமை (WMS) காணப்படுவதுடன், இது விமானச் சரக்கேற்றல்களின் முழு வாழ்க்கைச் சுழற்சியினை சீரமைத்து முகாமைப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட அதி நவீன மேடையாகும். முறைமையானது மெய்நேர கையிருப்பு முகாமைத்துவத்தினை மேற்பார்வை செய்து களஞ்சியசாலை வசதிகளினுள் சரக்கேற்றல்களை துல்லியமாக தடமறிவதற்கு இயலுமையாக்குகின்றது; எல்லைகளுக்கிடையேயான சரக்கேற்றல்களை விரைவாக்குவதற்காக தன்னியக்கமாக்கப்பட்ட சுங்க அனுமதிச் செயன்முறைகள்; மற்றும் சுமையேற்றல் வினைத்திறனை உகப்பாக்குவதற்கு மற்றும் தாமதங்களை சிறுமமாக்குவதற்கு சரக்குச் செயற்பாடுகள் மற்றும் விமானப்பயண அட்டவணைப்படுத்தல் இடையே மேம்பட்ட ஒத்திசைவு என்பனவாகும். மேலாக, முறைமையானது சரக்கு அனுப்புனர்கள் சுங்க அதிகாரிகள் மற்றும் ஏற்பாட்டியல் பங்காளிகள் உடன் இலத்திரணியல் தரவு இடைமாற்றத்திற்கு துணையளிப்பதுடன், வழங்கல் சங்கிலி முழுவதும் வெளிப்படைத்தன்மை மற்றும் பதிலளிக்கும் தன்மையினை மேம்படுத்தும் ஒரு ஒன்றுபட்ட, தாள்களற்ற பணிப்பாய்வினை உருவாக்குகின்றது.

நிறுவன தரம் மற்றும் இணக்கப்பாட்டினை டிஜிட்டல் மயமாக்கல்

நிறுவன தரம் மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாடானது இலத்திரணியல் ஆவண முகாமைப்படுத்தல் திட்டம் (EDMS) மற்றும் ஏரொடொக்ஸ் போன்ற உரிமையுடைய முறைமைகளூடாக மேலும் பலப்படுத்தப்படுகின்றது. இது செயற்பாட்டு பணியாட்களுக்கு கையேடுகள் மற்றும் செயன்முறை ஆவணங்களுக்கான எளிதான மற்றும் நாளிதுவரைக்குமான அணுக்கத்தினை வழங்குகின்றது. விமானக் குழுவினருக்கு எயார்பஸ் இலத்திரணியல் விமானப் பை (EFB) அவசியமான கையேடுகள் மற்றும் மெய்நேர இற்றைப்படுத்தல்களை வழங்கி இணக்கப்பாடு மற்றும் செயற்பாட்டு தயார்நிலைக்கு வசதியளிக்கின்றது.

வணிகநாம மற்றும் நிறுவன நற்பெயர்

உயர் போட்டித்தன்மையான வான் பயணவியல் துறையில் பங்காளிகள் நம்பிக்கையினை இயக்கும், வாடிக்கையாளர் விசுவாசத்தினை மேம்படுத்தும் மற்றும் அதன் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்தும் ஒரு அடிப்படைச் சொத்தாக அதன் வணிக நாமத்தில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கணிசமான பெறுமதியினை இடுகின்றது. வணிகநாமமானது விமான நிறுவனத்தின் செயற்பாட்டு தனிச்சிறப்பிற்கான ஒரு சின்னம் மாத்திரமன்றி இலங்கையினை ஒரு உலகத் தரம் வாய்ந்த பயண இலக்கிற்கான ஒரு முக்கியமான ஒரு தூதுவனும் ஆகும். இந்த நோக்கிற்காக, விமான நிறுவனமானது சந்தைப்படுத்தல், பங்குடைமைகள் மற்றும் இலங்கையின் தனித்துவமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் இயற்கை அழகினை ஊக்குவிக்கும் அதன் தொலைநோக்குடன் சீரமைவான அனுசரணைகள் என்பவற்றில் மூலோபாயமாக முதலீடு செய்கின்றது.

சமீப வருடங்களில் விமான நிறுவனத்தின் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய சந்தைப்படுத்தல் முன்னெடுப்பாக "யாழ்ப்பாணத்தின் வண்ணங்கள்" பிரச்சாரம் காணப்பட்டது. இது யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் துடிப்பான கலாச்சாரம், வரலாறு, உணவு மற்றும் இயற்கை நிலத்தோற்றங்களை எடுத்துக்காட்டும் கவனமாக உருவாக்கப்பட்ட பிரச்சாரமாகும். இது வரலாற்று ரீதியாக சர்வதேச பயணிகளுக்கு மிகவும் குறைவாகத் தெரிந்த பகுதியாகும். உலகளாவிய அவையோருக்கு ஒரு தனித்த பயண இலக்காக யாழ்ப்பாணத்தை ஊக்குவித்த முதலாவது தேசிய நிறுவனமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் காணப்பட்டது. உள்ளூர் சமூகங்களின் அரவணைப்பு, வரலாற்றுக் கோயில்கள், அழகிய கரையோரப் பகுதிகள் என்பவற்றை எடுத்துக்காட்டுவதன் மூலம், பிரச்சாரமானது உலகளாவிய சுற்றுலா வரைபடத்தில் வெற்றிகரமாக யாழ்ப்பாணத்தை இட்டது. பிரச்சாரத்தின் பயனுறுதியானது 2024 இல் ஒரு PATA தங்க விருதுடன் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதுடன், இது பிரயாண மற்றும் சுற்றுலாத் துறையில் மிகவும் மதிப்புமிக்க கௌரவமாகும். இந்த விருதானது இந்த தனித்துவமான பயண இலக்கிற்கான விழிப்புணர்வினை எழுப்பி எழுச்சியூட்டும் பிரயாணத்தில் பிரச்சாரத்தின் ஆக்கத்திறன், நம்பகத்தன்மை மற்றும் அளவிடக்கூடிய தாக்கம் என்பவற்றை பிரதிபலிக்கின்றது. இந்த காணொளியானது பின்பரும் QR குறியீட்டினை ஸ்கேன் செய்வதன் மூலம் பார்வையிடலாம்.

இணையாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் "இராமாயண அடிச்சுவட்டின் காவியத்தின் மறுவாழ்வு" பிரச்சாரமானது இந்திய சந்தையுடனான ஈடுபாட்டினை ஆழமாக்குவதற்காக விருத்திசெய்யப்பட்டது. இப்பிரிவானது விமான நிறுவனத்தின் பாரிய மற்றும் மிகவும் மூலோபாயமான வாடிக்கையாளர் பிரிவாகும். இந்தப் பிரச்சாரமானது விமான நிறுவனத்தின் வணிக நாமத்தினை இராமாயணத்தின் செழிப்பான கலாச்சார மற்றும் புராணக் கதையுடன் இணைப்பதுடன், இந்த காவியக் கதையுடன் இணைந்த இலங்கையிலுள்ள தளங்களை ஆராயுமாறு பயணிகள் வரவேற்கப்படுகின்றார்கள். பிரயாணத்துடன் கலாச்சார கதைசொல்லுதலை பின்னிப்பிணைப்பதன் மூலம் விமான நிறுவனமானது அதன் போட்டியாளர்களிடமிருந்து வேறுபடுகின்ற ஒரு உணர்ச்சிவயப்பட்ட இணைப்பினை உருவாக்குவதுடன், இந்த கலாச்சார முக்கியத்துவமான பயணத்திற்கு அவர்களது தெரிவான வானூர்தியாக ஸ்ரீலங்கன் எயார்லைன்சினை தெரிவுசெய்யுமாறு பயணிகள் ஊக்கமளிக்கப்படுகின்றார்கள். இந்த காணொளி பின்வரும் QR குறியீட்டினை ஸ்கேன் செய்வதன் மூலம் பார்வையிடலாம்.

இந்த பயணஇலக்கு முன்னிறுத்தமான பிரச்சாரங்களை பூர்த்திசெய்யும் விதமாக, பயணிகள் பாதுகாப்பினை சுற்றிய தனிப்பயனாக்கப்பட்ட விமான நிறுவனத்தின் தொடர்பாடலானது "சொர்க்கத்தின் நிழல்களில் பாதுகாப்பு" எனும் பிரச்சாரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பானது உயர்ந்த

பாதுகாப்பு நியமங்களுக்கான விமான நிறுவனத்தின் சமரசமற்ற கடப்பாட்டுடன் இலங்கையின் இயற்கை அழகினை வினைத்திறனாக சமநிலைப்படுத்துகின்றது. கட்டாயப்படுத்துகின்ற காட்சிகள் மற்றும் செய்தியனுப்பலூடாக பிரச்சாரமானது பயணிகளுக்கு அவர்களது நல்வாழ்வு மிக முக்கியமானது என வலியுறுத்தும் வேளை பயணஇலக்கின் கவர்ச்சியானதும் எடுத்துக்காட்டப்படுகின்றது. இரண்டு பிரச்சாரங்களதும் புத்தாக்கமான அணுகுமுறை மற்றும் சர்வதேச ஆர்வம் என்பன ITB பேர்லின் 2025 தங்க சிட்டி கேட் விருதுகளில் தங்க நட்சத்திர அங்கீகாரத்தினை பெற்றதுடன், இது வான்பயணவியல் சந்தைப்படுத்தல் மற்றும் பயணிகள் ஈடுபாட்டில் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்தப்படுகின்றது.

பிரச்சாரங்களுக்கு அப்பால், விமான நிறுவனமானது உயர் தோற்றமான மூலோபாய அனுசரணைகள் மற்றும் பங்குடைமைகளூடாக அதன் வணிகநாம இருப்பினை செயலூக்கமாக நீட்டிக்கின்றது. இவை அவுஸ்திரேலியாவில் கிரேட் ஓசியன் ரோட் ரன்னிங் வெஸ்ட்டிவல் மற்றும் NIKE மெல்போர்ன் மெரதன் வெஸ்ட்டிவல் போன்ற சர்வதேசரீதியாக பிரசித்திபெற்ற விளையாட்டு நிகழ்வுகளின் தலைப்பு அனுசரணைகளையும் உள்ளடக்குகின்றன. இந்த அனுசரணைகள் விமான நிறுவனத்தின் உலகளாவிய புலப்படும்தன்மையினை மாத்திரம் மேம்படுத்தாது அதன் வணிக நாமத்தின் ஆரோக்கியம், சகிப்புத்தன்மை மற்றும் சர்வதேச தோழமை விழுமியங்களையும் உள்ளடக்குவதுடன், இது பன்முகமான அவையோர் மற்றும் உலகம் முழுவதுமான சாத்தியமான பயணிகளுடன் எதிரொலிக்கின்றது.

செயற்பாட்டு சவால்களின்போது வாடிக்கையாளர் நம்பகத்தன்மையினை பராமரிப்பதன் முக்கியத்துவம் குறித்து நாம் அறிந்துள்ளதுடன், ஒரு இணைக்கப்பட்ட வணிக நாமமான ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் இடையூறுகள் மற்றும் நெருக்கடிகளின்போது பயணிகள் மற்றும் வழங்குனர்களுடன் தக்க நேரத்தில், வெளிப்படையான மற்றும் உணர்வுபூர்வமான தொடர்பாடலை உறுதிசெய்கின்றது. அடிக்கடியான புதுப்பிப்புகள் மற்றும் மாற்று பயண ஏற்பாடுகள் என்பவற்றினூடாக முன்முயற்சியான வாடிக்கையாளர் ஈடுபாடானது சேவைத் தனிச்சிறப்பிற்கான விமான நிறுவனத்தின் கடப்பாட்டினை பிரதிபலிப்பதுடன் வணிக நாமத்தின் நற்பெயருக்கு அவசியமான நம்பிக்கை மற்றும் நன்மதிப்பினை பாதுகாப்பதற்கு உதவுகின்றது.

விமானத்தினுள்ளான சாப்பிடல் அனுபவத்தினை மேலும் உயர்த்துவதற்கு மற்றும் அதன் உணவு வழங்கல்களை வேறுபடுத்துவதற்கும் இந்த மூலோபாயமான அணுகுமுறையானது விமான நிறுவனத்தின் உணவுப் பட்டியலில் பிரத்தியேகமான, உயர் தரத்தையுடைய சமையல்சார் படைப்புகளை உள்ளடக்குவதற்கு முனைவதுடன், 35,000 அடிகளுக்கு மேலும்கூட விதிவிலக்கான உணவு அனுபவங்களை நாடும் பகுத்தறியும் பயணிகளுடன் ஒத்திசைகின்றது.

கூட்டாக இந்த முன்னெடுப்புகள் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் வணிகநாமம் மற்றும் நிறுவன நற்பெயர் முகாமைத்துவத்திற்கான பன்முகமான அணுகுமுறையினை வெளிப்படுத்துகின்றது. விருது வெல்லும் சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களூடாக, மூலோபாய உலகளாவிய பங்குடைமைகள் மற்றும் அசைக்கவியலாத வாடிக்கையாளர் முன்னிறுத்தத்துடன் விமான நிறுவனமானது இலங்கையினை ஒரு கட்டாயமான பயண இலக்காக ஊக்குவிப்பது மாத்திரமன்றி, அதன் சொந்த அடையாளத்தை ஒரு பாதுகாப்பான, நம்பகத்தன்மையான, மற்றும் கலாச்சார ரீதியாக ஒத்திசைவான வானூர்தியாக வலியுறுத்துவதுடன், எதிர்வரும் வருடங்களில் அதனை நிலைபேறுடைய வளர்ச்சி மற்றும் சந்தை தலைமைத்துவத்திற்கு நிலைப்படுத்துகின்றது.

சான்றளிப்புகள் மற்றும் இணக்கப்பாட்டு நியமங்களை பராமரித்தல்

அறிவுசார் சொத்து முகாமைத்துவம், பல்வேறு சர்வதேச சான்றளிப்புகளுடன் இணக்கப்பாட்டினை பராமரித்தல், செயற்பாட்டு இணக்கப்பாடு, சைபர்பாதுகாப்பு, தரவுப் பாதுகாப்பு பகுதிகள் உள்ளடங்கலானவற்றுக்கான கடுமையான நியமங்களை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிலைநிறுத்துகின்றது.

தரை கையாளுகை மற்றும் விமான நிலைய சேவைகள்: பாதுகாப்பு மற்றும் இணக்கப்பாடு

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் தரை கையாளுகை மற்றும் விமான நிலைய சேவைச் செயற்பாடுகளில் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டிற்கு உயர் முன்னுரிமையினை இடுகின்றது. சர்வதேச வான் போக்குவரத்து சங்கத்தின் (IATA) ஒரு அங்கத்தவராக, விமான நிறுவனமானது IATA தரைச் செயற்பாடுகளுக்கான பாதுகாப்பு கணக்காய்வு (ISAGO) திட்டத்தில் செயலூக்கமாக பங்குபற்றுகின்றது. இந்த கடுமையான கணக்காய்வு செயன்முறையானது உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கு சீரமைவாக தரைக் கையாளுகைச் சேவைகளின் பாதுகாப்பு, தரம், நம்பகத்தன்மை என்பவற்றை மதிப்பிட்டு தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டதாகும். ISAGO சான்றளிப்புக்கு மேலாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் தரைச் செயற்பாடுகள் சர்வதேச சிவில் வான் பயணவியல் ஒழுங்கமைப்பு (ICAO) நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுடன் கடுமையாக இணங்குகின்றது. விமான நிறுவனம் இலங்கையின் சிவில் வான் பயணவியல் அதிகாரசபையினால் நிறுவப்பட்ட ஒழுங்குவிதிகளுடனும் இணங்குவதுடன் தேசிய பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு தேவைப்பாடுகளுடன் முற்றான சீரமைப்பினை உறுதிசெய்கின்றது.

ICAO மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகைகளுடான இணக்கப்பாடானது வானூர்தி கையாளுதல், பயணிகள் சேவைகள், பொதி முகாமைத்துவம் மற்றும் சரிவுப்பாதை செயற்பாடுகள் உள்ளடங்கலான அனைத்து தரைச் சேவை நெறிமுறைகளை உறுதிசெய்கின்றது. இவை பாதுகாப்பாக, வினைத்திறனாக மற்றும் இடர்களை தணிக்கும் விதமாக நடாத்தப்படுகின்றன. இந்த நியமங்கள் பயணிகள் மற்றும் அதேபோன்று பங்காளிகளுக்கும் தடையற்ற மற்றும் பாதுகாப்பான விமானநிலைய அனுபவங்களை வழங்குவதற்கான விமான நிறுவனத்தின் அடித்தளமாக காணப்படுகின்றது.

இலங்கை வான்பயணவியல் கல்லூரி (SLAC) : வான்பயணவியல் பயிற்சியில் சான்றளிக்கப்பட்ட தனிச்சிறப்பு

SLAC இன் தனிச்சிறப்பின் ஒரு தரக்குறியீடாக முறைமைப்படுத்தல் அங்கீகாரங்கள் மற்றும் சான்றளிப்புகளின் ஒரு பரந்த வீச்செல்லை காணப்படுகின்றது. கல்லூரியானது இலங்கை, பாக்கிஷ்தான், நேபாளம் மற்றும் மாலைதீவு சிவில் வான்பயணவியல் அதிகாரசபைகளிலிருந்து முறையான அங்கீகாரத்தினை கொண்டுள்ளதுடன், இது பிராந்தியத்தில் பன்முகமான நியாயாதிக்கங்களிடையே கடுமையான முறைமைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு தேவைப்பாடுகளை சந்திப்பதற்கான பயிற்சியினை வழங்கக்கூடிய அதன் ஆற்றலினை பிரதிபலிக்கின்றது. இந்த பன்னாட்டு அங்கீகாரமானது பல்வேறு நாடுகளிலிருந்து மாணவர்களையும் தொழில்வல்லுனர்களையும் SLAC கவர்வதற்கு அனுமதிப்பதுடன், பன்முகமான வான் பயணவியல் சூழமைவுகள் மற்றும் நியமங்களினால் அறிவிக்கப்பட்ட வளமான பயிலல் சூழலினைப் பராமரிக்கின்றது.

SLAC அதன் சர்வதேச நிலையினை மேலும் பலப்படுத்தும் விதமாக ஐரோப்பிய ஒன்றிய வான்பயணவியல் பாதுகாப்பு முகவரினால் (EASA) சான்றளிக்கப்பட்டுள்ளது. இந்த பிரசித்திபெற்ற சான்றளிப்பானது ஐரோப்பிய வான்பயணவியல் சமூகத்தினால் கட்டாயமாக்கப்பட்ட கடுமையான பாதுகாப்பு, தரம் மற்றும் பயிற்சி நியமங்களுடன் கல்லூரியின் ஒட்டியொழுகலை வலியுறுத்துகின்றது. EASA அங்கீகாரங்கள் ஐரோப்பிய விதிமுறைகளுடன் சீரமைவான பயிற்சி பாடத்திட்டங்களை வழங்குவதனை இயலுமையாக்குவதுடன், அதன் தகைமைகள் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்படுவதற்கு வசதியளித்து அதன் பட்டதாரிகளுக்கு உலகம் முழுவதும் இயக்கத்திறன் மற்றும் வேலைவாய்ப்புக்கள் வாய்ப்புக்களை மேம்படுத்துகின்றது.

தரம் மற்றும் பாதுகாப்பிற்கான கல்லூரியின் கடப்பாடானது அங்கீகரிக்கும் அதிகாரசபைகளினால் நடாத்தப்படும் வழமையான கணக்காய்வுகளூடாக ஏற்புடையதாக்கப்படுகின்றது. SLAC எவ்விதமான பாரிய இணக்கப்பாடின்மைகளின்றி அனைத்து வருடாந்த கணக்காய்வுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளது. இது அதன் வலுவான உள்ளகக் கட்டுப்பாடுகள், விரிவான பயிற்சி முறைகள் மற்றும் பயனுறுதியான பாதுகாப்பு முகாமைத்துவ நடைமுறைகளுக்கான ஒரு சான்றாகும். இந்த கணக்காய்வுகள் SLAC செயற்பாடுகளின் அனைத்து அம்சங்களையும் மதிப்பிடுகின்றன. இவை பாடத்திட்ட வடிவமைப்பு, பயிற்றுவிப்பாளர் தகைமைகள், பயிற்சி உட்கட்டமைப்பு, மாணவர் மதிப்பீடுகள் மற்றும் முறைமைப்படுத்தல் கட்டமைப்புகளுடனான இணக்கப்பாடு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

அறிவுசார் மூலதனம் தொடர்ச்சி.

ஸ்ரீலங்கன் கேட்டரிங்: தரம், ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சூழல் இணக்கப்பாடுகளுக்கான கடப்பாடு

ஸ்ரீலங்கன் கேட்டரிங் உணவுப் பாதுகாப்பு, சுத்தம், தரம், ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சூழல் பொறுப்புக்களின் உயர்ந்த நியமங்களுக்கு ஒரு உறுதியான கடப்பாட்டுடன் செயலாற்றுகின்றது. நிறுவனமானது HACCP (ஆபத்து பகுப்பாய்வு மற்றும் சிக்கலான கட்டுப்பாட்டுப் புள்ளிகள்) சான்றளிக்கப்பட்டுள்ளதுடன், கொள்வனவு மற்றும் தயார் செய்வதிலிருந்து களஞ்சியப்படுத்தல் மற்றும் வானூர்திக்கு விநியோகிப்பது வரைக்குமான ஒவ்வொரு கட்டமான உணவு தயாரிப்பின்போதும் கடுமையான கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு உறுதி செய்யப்படுகின்றது. மேலாக, ஸ்ரீலங்கன் கேட்டரிங் நான்கு ISO சான்றளிப்புகளை வைத்திருப்பதுடன், இது தர முகாமைத்துவம், உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவம், தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் மற்றும் சூழல் முகாமைத்துவம் வரைக்குமான உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் நியமங்களுடனான இணக்கப்பாட்டினை பிரதிபலிக்கின்றது. ISO சான்றளிப்பானது தொடர்ச்சியான மேம்பாடு, செயற்பாட்டு தனிச்சிறப்பு மற்றும் வாடிக்கையாளர் திருப்தி என்பவற்றுக்கு நிறுவனத்தின் முறையான அணுகுமுறைக்கு துணையளிக்கின்றது. உணவுப் பாதுகாப்புக்கு அப்பால், ஸ்ரீலங்கன் கேட்டரிங் இலங்கையிலுள்ள அனைத்து பொருத்தமான சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதுடன், விமான நிறுவன உணவளித்தல் துறையினுள் வளர்ந்து வரும் உலகளாவிய சூழல் நியமங்களுடனும் இணங்குகின்றது. இவை பொறுப்பான கழிவு முகாமைத்துவம், தனிப்பயன் பிளாஸ்டிக்கின் குறைப்பு, பயனுறுதியான வளங்களது பயன்பாடு, மற்றும் அதன் செயற்பாடுகள் முழுவதும் சூழல் தாக்கத்தினை சிறுமமாக்குவதற்கு முன்முயற்சியான வழிமுறைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

பொறியியலில் முறைமைப்படுத்தல் ஈடுபாடு மற்றும் இணக்கப்பாடு

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் இன்ஜினியரிங் பிரிவானது பிரதான முறைமைப்படுத்தல் அதிகாரசபைகளான, இலங்கை சிவில் வான்பயணவியல் அதிகாரசபை (CAASL) மற்றும் ஐரோப்பிய ஒன்றிய வான்பயணபவியல் பாதுகாப்பு முகவர் (EASA) மற்றும் ஏனைய பொருத்தமான சர்வதேச அங்கங்களுடன் ஒரு நெருக்கமான மற்றும் முன்முயற்சியான உறவினைப் பராமரிக்கின்றது. இந்த ஒத்துழைப்பானது அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு ஒழுங்கமைப்பு (AMO) மற்றும் தொடர்ச்சியான பறத்தல் தகுதி முகாமைத்துவ ஒழுங்கமைப்பு (CAMO) ஆகிய இரண்டும் வளர்ந்துவரும் வான்பயணவியல் பாதுகாப்பு நியமங்கள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் கடுமையான இணக்கப்பாடுடன் செயலாற்றுகின்றன.

இந்த இணக்கப்பாட்டினை நிலைநிறுத்துவதற்கு, இப்பிரிவானது அட்டவணைப்படுத்தப்பட்ட கணக்காய்வுகள், தொழில்நுட்ப ஒத்துழைப்பு கூட்டங்கள் மற்றும் முறைமைப்படுத்துபவர்களுடன் தொடர்ச்சியான தொடர்பில் செயலூக்கமாக பங்குகொள்கின்றது. இந்த ஈடுபாடுகள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முறைமைப்படுத்தல் அபிவிருத்திகளுக்கு முன்னால் இருப்பதனை இயலுமையாக்குவதுடன் பாதுகாப்பு மற்று தர உறுதிப்பாட்டிற்கான வெளிப்படைத்தன்மை மற்றும் கடப்பாட்டினை வெளிப்படுத்துகின்றது.

மேலாக, இன்ஜினியரிங் குழுவானது பாதுகாப்பு பணிப்புரைகள் மற்றும் பகுதி-145 மற்றும் பகுதி-M ஒழுங்குவிதிகள் போன்ற முக்கிய கட்டமைப்புகளுக்கான திருத்தங்கள் உள்ளடங்கலான முக்கிய முறைமைப்படுத்தல் பிரசுரங்களை கடுமையாக கண்காணிக்கின்றது. இந்த விழிப்புணர்வானது, பராமரிப்பு மற்றும் பறத்தல் தகுதி முகாமைத்துவத்தினை பாதிக்கும் ஏதேனும் மாற்றங்கள் உடனடியாக இனங்காணப்பட்டு தாமதமின்றி விளித்துரைப்பதனை உறுதிசெய்கின்றது.

உள்வாரியான இந்த முறைமைப்படுத்தல் புதுப்பிப்புக்களை வினைத்திறனாக பரப்புவதற்கு இப்பிரிவானது வலுவான பின்னூட்டம் மற்றும் தொடர்பாடல் பொறிமுறைகளை நிறுவியுள்ளது. இவை பிந்திய பணிப்புரைகள் மற்றும் செயன்முறை மாற்றங்களை பணியாட்கள் ஏற்றுக்கொண்டு புரிந்துகொள்வதனை வேண்டும் கட்டமைக்கப்பட்ட வாசித்து கையொப்பமிடல் திட்டங்களை உள்ளடக்குகின்றன. மேலும், பராமரிப்பு ஒழுங்கமைப்பு விவரக்குறிப்பு (MOE), தொடர்ச்சியான பறத்தல் தகுதி முகாமைப்படுத்தல் விவரக்குறிப்பு (CAME) மற்றும் இன்ஜினியரிங் செயன்முறைகள் கையேடு (EPM) போன்ற முக்கிய ஆவணங்கள் நடைமுறை முறைமைப்படுத்தல் நியமங்களை பிரதிபலிப்பதற்காக தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்றன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வான்பயணவியல் பாதுகாப்பு (UL Avsec) பாதுகாப்பு இணக்கப்பாடு

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வான்பயணவியல் பாதுகாப்பு பிரிவானது நிதியாண்டு முழுவதும் தேசிய மற்றும் சர்வதேச சிவில் வான்பயணவியல் நியமங்களை பராமரிப்பதற்கு மற்றும் விஞ்சுவதற்கு ஒரு திடமான கடப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளது. இது ஒரு தொடரான புகழ்பெற்ற சான்றளிப்புகள் மற்றும் அங்கீகாரங்களின் மூலம் தெளிவாகின்றது, இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- ACC3 & RA3 சான்றளிப்புகள் BIA மற்றும் MRIA இரண்டிற்கும், ஐரோப்பிய ஒன்றிய மற்றும் போக்குவரத்திற்கான ஐக்கிய இராச்சிய திணைக்கள (DfT) ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்கின்றன.
- ICAO-USAP கணக்காய்வு வெற்றி (2023), தரை கையாளுபவர் மற்றும் வானூர்தி இயக்குபவர் ஆகிய இரண்டிலும் செயற்பாட்டு தனிச்சிறப்பானது உறுதிப்படுத்தப்பட்டது.
- BIA இற்கான TSA அங்கீகாரம், அமெரிக்கா நோக்கி விமானங்களுக்கான புறப்பாட்டு கடைசிப் புள்ளி (LPD) நிலை உறுதிப்படுத்தப்படுதல்.
- மாற்றல் சரக்கிற்கு ஐக்கிய இராச்சிய விதிவிலக்கு, BIA இல் மீள் பரிசோதித்தல் விதிவிலக்குகள்.
- அவுஸ்திரேலியாவின் LPoC அங்கீகாரம், பங்களாதேஷிலிருந்து சரக்கு மேலுயர்த்தலை அங்கீகரித்தல், அனுமதித்தல் (தற்போது மீளாய்வின் கீழ் உள்ளது).

மேலாக, UL Avsec பாதுகாப்பு கட்டுப்பாட்டு பகுதிகளது (SCAs) பாதுகாப்பினை மேற்பார்வை செய்கின்றது, அதன் விரிவான பாதுகாப்பு மற்றும் இணக்கப்பாட்டு கட்டமைப்பினை மேலும் வலியுறுத்துகின்றது.

இந்த சாதனைகள் வலுவான பயணிகள் மற்றும் சரக்குச் செயற்பாடுகளுக்கு வசதியளிப்பது மாத்திரமன்றி, விமான நிறுவனத்தில் நம்பகத்தன்மை மற்றும் முறைமைப்படுத்தல் கடைப்பிடிப்பில் உலகளாவிய நம்பகத்தன்மையினை மேம்படுத்துகின்றது.

அறிவுசார் சொத்துப் பாதுகாப்பு மற்றும் விரிவான சைபர்பாதுகாப்பு கட்டமைப்பு

ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் அறிவுசார் சொத்து (IP) மற்றும் உணர்திறனுடைய நிறுவன தரவுகளின் பாதுகாப்பானது ஒரு முக்கிய வணிக கட்டாயமாகக் கருதப்படுகின்றது. விமான நிறுவனமானது அறிவுசார் சொத்துப் பாதுகாப்பிற்கு ஒரு முன்முயற்சியான, பல அடுக்கு அணுகுமுறையினை கடைப்பிடிப்பதுடன், அங்கீகரிக்கப்படாத உள்நுழைவு, தரவு மீறல்கள் மற்றும் சைபர் அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட மேம்பட்ட த.தொ. பாதுகாப்பு நெறிமுறைகளூடாக டிஜிட்டல் சொத்துக்களை தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது. இந்த நெறிமுறைகள் அதிநவீன குறிமுறையாக்கல் தொழில்நுட்பங்கள், கடுமையான அடையாளம் மற்றும் உள்நுழைவு முகாமைத்துவக் கட்டுப்பாடுகள், வலையமைப்பு கூறாக்கம் என்பவற்றை உள்ளடக்குவதுடன் உரிமைத்துவ தகவல் மற்றும் செயற்பாட்டு தரவுகளைப் பாதுகாப்பதற்கு வழமையான முறைமைப்படுத்தல் நலிவுறுநிலை மதிப்பீடுகள், வலுவான பாதுகாப்பு அடுக்குகளை கூட்டாக நிறுவுதல் என்பனவாகும்.

விமான நிறுவனமானது தகவல் பாதுகாப்பு, இரகசியத்தன்மை, த.தொ. சேவை முகாமைத்துவம் மற்றும் தர உறுதிப்பாடு என்பவற்றின் தனிச்சிறப்பிற்கான அதன் கடப்பாட்டினை வலியுறுத்தும் பன்முகமான சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சான்றளிப்புகளை பெருமையுடன் வைத்துள்ளது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- ISO/IEC 27001:2013 – தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை, தகவல் பாதுகாப்பு இடர்களின் கடுமையான முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துகின்றது.
- ISO/IEC 27701:2019 – இரகசியத்தன்மை தகவல் முகாமைத்துவ முறைமை, விரிவான தரவு இரகசியத்தன்மை கட்டுப்பாடுகளை வலியுறுத்துகின்றது.

- ISO/IEC 20000:2018 – த.தொ. சேவை முகாமைத்துவ முறைமை, த.தொ. சேவை விநியோகத்தில் உயர்ந்த நியமங்களை உறுதிசெய்கின்றது.
- ISO 9001:2015 – மென்பொருள் அபிவிருத்திக்கான தர முகாமைத்துவ முறைமை, மென்பொருள் வாழ்க்கைச் சுழற்சி முகாமைத்துவத்தில் முறையான தர நடைமுறைகளை ஏற்புடையாக்குதல்.

இந்த சான்றளிப்புகள் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் விமான நிறுவனத்தின் ஒட்டியொழுகலை வலியுறுத்துவதுடன், நிலைத்தன்மை, மீளெழுச்சி மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கு உத்தரவாதமளிப்பதற்கு நிறுவனம் முழுவதும் ஒரு கட்டமைக்கப்பட்ட தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை பதித்துள்ளது.

24x7 செயலாற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் சைபர் பாதுகாப்புச் செயற்பாடுகள் மத்தியநிலையம் (SOC) விரைவாக ஒழுங்கின்மைகளை இனங்கண்டு பதிலளிப்பதற்கு மேம்பட்ட பாதுகாப்பு தகவல் மற்றும் நிகழ்வு முகாமைத்துவ (SIEM) முறைமைகள், மெய்நேர அச்சுறுத்தல் நுண்ணறிவு ஊட்டங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும் பகுப்பாய்வுகளை பயன்படுத்துகின்றது. SOC அணியானது இடர்களை சிறுமமாக்கி வணிகத் தொடர்வினை உறுதிசெய்வதற்காக அச்சுறுத்தல் கட்டுப்படுத்தல், தடயவியல் புலனாய்வுகள் மற்றும் மீட்டல் நடவடிக்கைகள் போன்ற விரைவான சம்பவம் பதிலளித்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கின்றது.

விமான நிறுவனத்தின் சைபர்பாதுகாப்பு உட்கட்டமைப்பானது இணையப் பாதுகாப்பு தொழில்நுட்பம் மற்றும் ஊடுருவல் தவிர்ப்பு முறைமைகள், முனைப்புள்ளி பாதுகாப்பு, பாதுகாப்பான முகில் நுழைவு நெறிமுறைகள் மற்றும் வலுவான தரவு இழப்பு தவிர்த்தல் (DLP) கருவிகள் போன்ற சுற்றளவு பாதுகாப்புகளை உள்ளடக்குகின்ற ஒரு விரிவான அடுக்கான பாதுகாப்பு மூலோபாயத்தில் தங்கியுள்ளது. வழமையான பயனாளர் நடத்தை பகுப்பாய்வுகள் மற்றும் உருவகப்படுத்தப்பட்ட சைபர் குற்றப் பிரச்சாரங்கள் என்பன தொடர்ச்சியான பணியாட்கள் கல்வியின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளதுடன், சைபர் பாதுகாப்பில் ஒரு முக்கியமான காரணியாக மனிதக் கூறினை விளித்துரைக்கின்றது.

வாடிக்கையாளர்கள், பணியாட்கள், மற்றும் பங்காளிகளின் தனிப்பட்ட தரவுகள் அதன் வாழ்க்கைச் சுற்று முழுவதும் மிகுந்த கவனத்துடன் கையாளப்படுவதனை உறுதிசெய்வதற்காக, குறிப்பாக பொது தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதி (GDPR) போன்ற சர்வதேச தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுடன் கடுமையான இணக்கப்பாட்டினை பராமரிக்கின்றது. இதற்கு வழக்கமான இரகசியத்தன்மை தாக்க மதிப்பீடுகள், தரவுப் பாதுகாப்பு கணக்காய்வுகள் மற்றும் மூன்றாம் தரப்பு விற்பனையாளர்களில் கடுமையான மேற்பார்வை என்பவற்றால் துணையளிக்கப்படுகின்றது.

ஆளுகை மற்றும் சைபர்பாதுகாப்பு என்பன நிறுவன மட்டங்களில் நிறைவேற்று முகாமைத்துவம் மற்றும் சபை குழுக்களிலிருந்தான தனிப்பயனாக்கப்பட்ட மேற்பார்வையுடன் உட்பதிக்கப்பட்டுள்ளது. வழமையான உள்வாரி மற்றும் வெளிவாரி கணக்காய்வுகள், நெறிமுறையான ஊடுருவல் பரிசோதனை மற்றும் தொடர்ச்சியான இடர் மதிப்பீடுகள் என்பன பாதுகாப்பு தொழில்நுட்பங்களில் மூலோபாய தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் முதலீட்டினை அறிவிக்கின்றன. இந்த முழுமையான அணுகுமுறையானது நிறுவனம் முழுவதும் விழிப்புணர்வு, பொறுப்புக்கூறல் மற்றும் மீளெழுச்சிக் கலாச்சாரத்தினை பராமரிக்கின்றது.

மேம்பட்ட தொழில்நுட்பங்கள், கடுமையான கொள்கை வலியுறுத்தல், தொடர்ச்சியான பணியாளர் அபிவிருத்தி மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் ஒட்டியொழுகுதல் என்பவற்றின் ஒருங்கிணைப்பினூடாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் அறிவுசார் சொத்து மற்றும் முக்கிய தரவுச் சொத்துக்களில் நேர்மை, நம்பகத்தன்மை மற்றும் கிடைப்புத்திறனை உறுதிசெய்கின்றது. இந்த விரிவான சைபர்பாதுகாப்பு கட்டமைப்பானது விமான நிறுவனத்தின் போட்டித்திறனை பாதுகாத்து, செயற்பாட்டு தனிச்சிறப்பிற்கு துணையளித்து ஒரு அதிகரிக்கும் சிக்கலான மற்றும் டிஜிட்டல் வான்பயணவியல் சூழலில் பங்காளிகளிடையே நம்பகத்தன்மையினை ஊக்குவிக்கின்றது.

புத்தாக்கம் மற்றும் தொடர்ச்சியான மேம்பாடு

வாடிக்கையாளர்கள், பணியாட்கள் மற்றும் பங்காளிகளிடமிருந்தான பின்னூட்டத்தினை செயலூக்கமாக திரட்டி பகுப்பாய்வு செய்யும் நிறுவனத்தினுள்ளேயே கட்டமைக்கப்பட்ட பொறிமுறைகளூடாக புத்தாக்கமானது பராமரிக்கப்படுகின்றது. இந்த தரவினால் இயக்கப்படும் அணுகுமுறையானது மேம்பாட்டிற்கான விரக்திகள் மற்றும் வாய்ப்புக்களை இனங்காண்பதுடன், உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு எதிராக தரக்குறியிடப்படுகின்றது.

ஸ்ரீலங்கன் கேட்டரிங் பன்முகமான பயணிகள் முன்னுரிமைகள் மற்றும் வளர்ந்துவரும் உணவுப் போக்குகளை நிறைவேற்றும் புத்தாக்கமான மற்றும் வேறுபடுத்தப்பட்ட உற்பத்தி வழங்கல்களினூடாக விமானத்தினுள்ளான சாப்பாட்டு அனுபவத்தினை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக முயற்சிக்கின்றது. இந்த அணுகுமுறைக்கான மையமாக, இலங்கையின் வளமான மரபு மற்றும் உணவுப் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் விதமாக கலாச்சார ரீதியாக பொருத்தமான உணவுப் பட்டியலை விருத்திசெய்வது காணப்படுகின்றவேளை சர்வதேச சுவைகளை திருப்திசெய்வதற்கு உலகளாவிய சுவைகளையும் தழுவுகின்றது. உலகளாவிய உணவுப் போக்குகள் மற்றும் வளர்ந்துவரும் உணவுசார் முன்னுரிமைகளை பிரதிபலிக்கும் விதமாக உணவுப் பட்டியலானது வழமையாக புதுப்பிக்கப்படுவதுடன், இது போட்டித்திறனை பராமரித்து பயணிகள் திருப்தியினை மேம்படுத்துகின்றது. நவீன பயணிகளின் பன்முகமான தேவைகளை அறிந்துகொண்டு ஸ்ரீலங்கன் கேட்டரிங் ஒரு விரிவான பரந்த விசேட உணவுசார் தெரிவுகளை வழங்குகின்றது. ஒவ்வொரு விசேட உணவும் சுவை அல்லது முன்னிலைப்படுத்தலை சமரசம் செய்யாது கடுமையான ஊட்டச்சத்து நியமங்கள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை சந்திப்பதற்காக கவனமாக உருவாக்கப்படுகின்றன.

ஏனைய மூலதனங்களுடனான ஒருங்கிணைப்பு

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் அறிவுசார் மூலதனம் பின்வருமாறு ஏனைய மூலதனங்களுக்கு துணையளித்து மேம்படுத்துகின்றது:

- மனித மூலதனம்: கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள், நிலையான செயற்பாட்டு செயன்முறைகள் (SOPs) மற்றும் அறிவுப் பகிர்தல் பொறிமுறைகள் ஊடாக அறிவுசார் மூலதனம் தொடர்ச்சியான திறன் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு தனிச்சிறப்பினை உறுதிசெய்கின்றது. நிறுவன தரத்தின் உள்ளக கணக்காய்வுகள் உச்சநிலை செயற்பாடுகளுக்கு பொருத்தமான வளங்களது ஒதுக்கீட்டினை ஏற்புடையதாக்குகின்றது.
- தயாரிக்கப்பட்ட மூலதனம்: ஆவணப்படுத்தப்பட்ட பராமரிப்பு முறைமைகள் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் பௌதீக சொத்துக்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு துணையளிக்கின்றன. நிறுவன தரக் கணக்காய்வுகள் இந்த செயன்முறைகளுடன் கடுமையான ஒட்டியொழுகலை உறுதிசெய்கின்றது.
- வாடிக்கையாளர் மூலதனம்: விசுவாச மேடைகள் மற்றும் டிஜிட்டல் ஈடுபாட்டு கருவிகள் பயணிகள் அனுபவங்களை மேம்படுத்தி நீண்டகால வாடிக்கையாளர் உறவுகளை பராமரிப்பதற்காக அறிவுசார் மூலதனம் பயன்படுத்தப்படுகின்றது.

முன்னோக்கிய பார்வை

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அடுத்த நிதியாண்டு மற்றும் அதற்கப்பால் முன்னோக்கி நகரும்போது அறிவுசார் மூலதனத்தினை பலப்படுத்துதல் மற்றும் வளர்த்தலிலான முன்னிறுத்தமானது முதன்மையாக இருக்கின்றது. விமான நிறுவனமானது அதிநவீன தொழில்நுட்பங்களில் தொடர்ச்சியாக முதலீடு செய்தல், த.தொ. உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல் மற்றும் இலக்குவைத்த பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களினூடாக அதன் மனித மூலதனத்தின் திறன்தொகுப்பினை விரிவாக்குவதற்கு கடப்பாட்டுடன் உள்ளது. செயற்கை நுண்ணறிவு, இயந்திரப் பயிலல் மற்றும் மேம்பட்ட தரவுப் பகுப்பாய்வு போன்ற புத்தாக்கங்களைப் பயன்படுத்துவது மிகவும் வினைத்திறனான செயற்பாடுகள், மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவங்கள் மற்றும் புத்திசாலித்தனமான தீர்மானம் மேற்கொள்ளல் என்பவற்றை இயலுமையாக்கும். மேலாக, வலுவான சைபர்பாதுகாப்பு கட்டமைப்புகளூடாக அறிவுசார் சொத்து மற்றும் தரவுகளை பாதுகாக்கும் தொடர்ச்சியான முயற்சிகள் வளர்ந்துவரும் சைபர் அச்சுறுத்தல்களுக்கு முன்னால் இருப்பதற்காக கடுமையாக்கப்படும். அறிவுப் பகிர்வு, ஒத்துழைப்பு மற்றும் புத்தாக்கம் போன்ற ஒரு கலாச்சாரத்தினை பராமரிப்பதன் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இயக்காற்றலான வான்பயணவியல் துறையில் அதன் போட்டித்திறனை பராமரிப்பதற்கு முனைவதுடன் அதிகரிக்கின்ற டிஜிட்டல் எதிர்காலத்தில் நிலைபேறுடைய வளர்ச்சிக்கும் துணையளிக்கின்றது.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

இலங்கையின் தேசிய வானூர்தியாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தீவகத் தேசத்திற்கும் உலகளாவிய சமூகத்திற்கும் இடையே ஒரு முக்கியமான பாலமாக சேவையாற்றுகின்றது. எமது பங்கானது வெறும் போக்குவரத்திற்கு மேல் செல்கின்றது. நாம் வர்த்தகம், சுற்றுலா, கலாச்சார பரிமாற்றல், மற்றும் சர்வதேச இணைப்பிற்கு வசதியளிக்கும்வேளை உலக அரங்கில் நாட்டின் அக்கறைகளை பாதுகாக்கின்றோம். இந்த பொறுப்பாணையினை வழங்குவதில், சமூக மற்றும் உறவுமுறை மூலதனமானது எமது பெறுமதி உருவாக்கும் செயன்முறையினை ஒரு அடித்தள தூணாகக் கட்டியுள்ளது. நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை, பரஸ்பர மரியாதை என்பவற்றில் அடித்தளமிட்டு பயணிகள், பணியாட்கள், பங்காளிகள் மற்றும் சமூகங்களுடனான எமது ஈடுபாடு நிலைபேறுடைய மற்றும் உள்ளடக்கமான வளர்ச்சியினை நிலைநிறுத்துகின்றது. இப்பிரிவானது வலுவான பங்காளிகள் உறவினை வளர்க்கும், வாடிக்கையாளர் திருப்தியினை உயர்த்தும், சமூக நல்வாழ்வினைப் பராமரிப்பதற்கான எமது முயற்சிகள் மற்றும் நிதியாண்டின்போது ஆரோக்கியம், பாதுகாப்பு என்பவற்றில் உயர்ந்த நியமங்களை பராமரிப்பதில் ஒரு விரிவான மீளாய்வினை வழங்குகின்றது.

பங்காளி உறவுமுறைகள் மற்றும் ஈடுபாடு

எமது செயற்பாடுகளுடன் ஒருங்கிணைந்த பன்முகமான பங்காளிகள் சூழலமைப்பின் பாராட்டில் எமது மூலோபாய அணுகுமுறையானது ஆழமாக வேரூன்றியுள்ளது. விடுமுறைப் பயணிகள் வணிக வாடிக்கையாளர்களிலிருந்து அரசாங்க அங்கங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் வரை நாம் அவர்களது முன்னோக்குகள் மற்றும் தேவைகள் என்பன எமது வணிகத் திசையினை வடிவமைப்பதற்கு முக்கியமானது என அறிந்துள்ளோம். நாம் ஒரு முன்முயற்சியான, வெளிப்படையான மற்றும் உள்ளடக்கமான ஈடுபாட்டு மாதிரியினை கடைப்பிடிப்பதுடன், இது அனைத்து பங்காளிகளிடமிருந்தான பின்னூட்டமானது தீர்மானம் மேற்கொள்ளலுக்கும் செய்ற்பாட்டு தனிச்சிறப்பிற்கும் தகவல் வழங்குவதனை உறுதிசெய்கின்றது.

எமது பெறுமதி முன்மொழிவின் மையத்தில் பயணிகள் உள்ளார்கள். வளர்ந்துவரும் அவர்களது முன்னுரிமைகள் மற்றும் அதிகரித்த எதிர்பார்ப்புக்களை அறிந்துகொண்டு நாம் வசதி, சௌகரியம் மற்றும் தனிப்பட்ட சேவையினை ஒன்றிணைக்கும் தடையற்ற, மறக்கவியலாத பயண அனுபவங்களை வழங்குவதற்கு முயற்சிக்கின்றோம். நாம் சமூகங்களுடன், குறிப்பாக சுற்றுலாத்துறையுடன் பின்னிப் பிணைந்துள்ள வாழ்வாதாரங்களைக் கொண்டவர்களுடன் நெருக்கமாக ஈடுபடுவதுடன், உள்ளடக்கமான பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்கு சிறிய அளவிலான தொழில் முனைவோர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு துணையளிக்கின்றோம். எமது பங்குடைமைகள், முகவர்கள் மற்றும் சுற்றுலாச் செயலாளர்கள் போன்ற பயண வர்த்தக தொழில்வல்லுனர்கள் மற்றும் முறைமைப்படுத்தல் அதிகாரசபைகள், வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் ஆகியோருக்கு நீடிக்கப்படுவதுடன், அனைவரும் ஒரு ஒருங்கிணைந்த, உயர் தரத்திலான சேவை சூழலமைப்பிற்கு பங்களிப்பு செய்கின்றார்கள்.

ஈடுபாட்டு பொறிமுறைகள் பன்முகமான வழிகளுக்கு பரந்து காணப்படுவதுடன், இவை விரிவான வாடிக்கையாளர் மதிப்பாய்வுகள், சமூக ஊடக உணர்வுப் பகுப்பாய்வுகள் மற்றும் இரகசிய கணக்காய்வுகள் என்பவற்றை உள்ளடக்குவதுடன், மெய்நேர உள்ளுணர்வுகளை கைப்பற்றி விரைவாக பொருத்தமாக்குகின்றது. நிறுவன வாடிக்கையாளர்கள் மற்றும் விற்பனை முகவர்வளுடனான மூலோபாயக் கலந்துரையாடல்கள் பாதை திட்டமிடல் மற்றும் சந்தைப்படுத்தல் மூலோபாயங்களை வழிநடத்தும் மதிப்புமிக்க உள்ளீடுகளை வழங்குகின்றன. நிறுவன சமூக பொறுப்பு மன்றங்கள் மற்றும் பிணைப்புக் குழுக்களூடாக உள்ளூர் சமூகங்களுடனான எமது ஒத்துழைப்பானது எமது சமூக பங்களிப்புகள் பொருத்தமானதாகவும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருப்பதனை உறுதிசெய்கின்றது.

வாடிக்கையாளர் பெறுமதி மற்றும் அனுபவம்

வாடிக்கையாளர் விசுவாசம் மற்றும் சௌகரியத்தினை மேம்படுத்துதல் ஸ்ரீலங்கன் எயார்லைன்சுக்கு ஒரு முக்கிய மூலோபாய முன்னுரிமையாகும். வாடிக்கையாளர் நம்பகத்தன்மையின் மீளுருவாக்கம் மற்றும் பலப்படுத்துவதற்காக பரந்தளவில் இலக்குவைத்த முன்னெடுப்புகள் தற்போது அமுல்படுத்தப்பட்டவண்ணமுள்ளது. இது உலகளாவிய விசுவாச தளத்தை விரிவாக்குதல், ஒரு தடையற்ற பயண அனுபவத்தை வழங்குதல், மற்றும் தொடர்ச்சியான சமூக ஈடுபாட்டினை பராமரித்தல் என்பவற்றில் முன்னிறுத்தம் செய்கின்றது. இந்த மூலோபாயத்திற்கான மையமாக, தனிப்பட்ட பயணிகள் தேவைகளை புரிந்துகொள்ளுதல் மற்றும் சேவை தனிச்சிறப்பிற்கான விமான நிறுவனத்தின் அர்ப்பணிப்பினை பிரதிபலிக்கும் தனிப்பட்ட, மறக்கவியலாத அனுபவங்களை வழங்குதல் காணப்படுகின்றன. இந்த குறிக்கோளுக்கு தொடர்ச்சியான பணியாட்கள் பயிற்சி மற்றும் செயன்முறை நுண்சீராக்கம் என்பன மேலும் துணையளிப்பதுடன், விதிவிலக்கான சேவை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வணிக நாமத்தின் ஒரு அடையாள முத்திரையாக இருப்பதனை உறுதிசெய்கின்றது.

கருப்பொருள்சார் பிரச்சாரங்கள்

இலங்கையினை ஒரு தனித்துவமான மற்றும் உணர்வுரீதியாக எதிரொலிக்கின்ற பயண இலக்காக நிலைப்படுத்தும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் "யாழ்ப்பாணத்தின் வண்ணங்கள்" மற்றும் "இராமாயண தடங்கள்" போன்ற கருப்பொருள்சார் பிரச்சாரங்களை ஆரம்பித்தது. இவை அறிவுசார் மூலதனத்தில் விளக்கமாக விபரிக்கப்பட்டுள்ளன. இந்த முன்னெடுப்புகள் பயணிகளுக்கும் இலங்கையின் வளமான கலாச்சார மற்றும் வரலாற்று பாரம்பரியத்திற்கும் இடையேயான ஒரு ஆழமான உணர்வுரீதியான இணைப்பினை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டன. டிஜிட்டல்ரீதியான கதை சொல்லுவதின் சக்தியினை பயன்படுத்தி, பிரச்சாரங்கள் கட்டாயப்படுத்தும் காணொளி கதைகள், ஊடாட்டமான உள்ளடக்கம் என்பவற்றை உள்ளக்கியிருந்தன. அத்துடன் செல்வாக்கு செலுத்துபவர்களுடனான

ஒருங்கிணைப்புகள், பயணிகள் விமானத்தினுள் அடியெடுத்து வைப்பதற்கு முன்னரே இடம் மற்றும் ஆர்வத்தில் ஒரு உணர்வினை தூண்டுகின்றது. இலங்கையின் துடிப்பான பாரம்பரியங்கள் மற்றும் புராணங்களில் மூழ்குவதன் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வணிகநாம ஈடுபாட்டினை வெற்றிகரமாக உயர்த்தும்வேளை அர்த்தமுள்ள மற்றும் மறக்கவியலாத உள்ளடக்கத்தினூடாக உள்வருகை சுற்றுலாத் துறையினை ஊக்குவிக்கின்றது.

வாடிக்கையாளர் திருப்தி அளவீடு

வாடிக்கையாளர் திருப்திக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஒரு கட்டமைக்கப்பட்ட தரவினால் இயக்கப்படும் அணுகுமுறையினை கடைப்பிடிக்கின்றது. இது பிரதானமாக தேறிய ஊக்குவிப்பாளர் புள்ளி (NPS) கட்டமைப்பினை பயன்படுத்துவதுடன், பதிவுசெய்தல், பொதி கையாளுதல், மாற்றல் மேசைகள் மற்றும் ஓய்விடங்கள் போன்ற முக்கிய வாடிக்கையாளர் தொடு புள்ளிகளிடையே பெறப்படும் தரமான பின்னூட்டத்தினால் பூர்த்தியாக்கப்படுகின்றன. இந்த விரிவான பின்னூட்ட பொறிமுறையானது வாடிக்கையாளர் பயணத்தை விரிவாக திட்டம்வகுப்பதற்கும், சேவை இடைவெளிகளை இனங்காண்பதற்கும், ஒட்டுமொத்த பயண அனுபவத்தை மேம்படுத்துவதற்கு உரிய நேரத்தில் திருத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்வதனையும் இயலுமையாக்குகின்றது. அனைத்து பின்னூட்டங்களும் ஒன்று திரட்டப்பட்டு முகாமைத்துவ தகவல் அமைப்புமுறை (MIS) ஊடாக பிரசுரிக்கப்பட்டு, முக்கிய அளவீடுகள் மற்றும் போக்குகளை பிரதிநிதித்துவம் செய்யும் தனிப்பயனாக்கப்பட்ட டேஷ்போர்ட்களினால் துணையளிக்கப்படுகின்றன. இந்த தரவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நுண்ணறிவுகள் முகாமைத்துவக் கூட்டங்களின்போது வழமையாக மீளாய்வு செய்யப்படுவதுடன், இது மூலோபாயத் தீர்மானங்களை அறிவிப்பதற்கும் தொடர்ச்சியான மேம்பாட்டினை இயக்குவதற்கும் ஆகும். இதற்கு இணையாக, சேவைத் தரத்தை பராமரிப்பதற்கும் வாடிக்கையாளர் கவனத்தில் உயர்ந்த நியமங்களை நிலைநிறுத்துவதற்கும் செயற்பாட்டு பிரிவுகளிடையே தனிப்பயனாக்கப்பட்ட கணக்காய்வுகள் மற்றும் பரிசீலனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முன்னோக்கிப் பார்க்கும்போது, விமான நிறுவனமானது ஆழமான பயணிகள் நுண்ணறிவினை பெறுவதற்கு மேம்பட்ட செயற்கை நுண்ணறிவினை பயன்படுத்துவதனை ஆராய்கின்றது. இது நடைமுறையிலுள்ள மற்றும் வெளிவருகின்ற வாடிக்கையாளர் பிரிவுகள் இரண்டிலும் மிகவும் நுணுக்கமான புரிந்துணர்வினை இயலுமையாக்குகின்றது. இந்த முன்னோக்கிப் பார்க்கும் அணுகுமுறையானது அதிகரிக்கும் இயக்காற்றலான வான்பயணவியல் நிலத்தோற்றத்தில் உலகளாவிய பயணப் போக்குகளை கடைப்பிடிப்பதற்கும் பயணிகள் அனுபவத்தை உயர்த்துவதற்கும் ஒருங்கிணைந்ததாகும்.

மூலோபாய வணிக அலகுகள் மட்டத்தில் வாடிக்கையாளர் பெறுமதி மற்றும் அனுபவம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் அனைத்து மூலோபாய வணிக அலகுகளிலும் ஒரு பரவலான தனிப்பட்ட மற்றும் ஊடாட்டமான முன்னெடுப்புகளூடாக வாடிக்கையாளர் ஈடுபாட்டிற்கு முன்னுரிமையளிக்கின்றது. ஸ்ரீலங்கன் ஏவியேசன் கொலேஜ் (SLAC) வழமையான கல்விக் கண்காட்சிகள் மற்றும் திறந்த நாட்களை ஒழுங்குசெய்வதுடன், சாத்தியமான மாணவர்கள் மற்றும் துறைசார் பங்காளிகளுடன் நேருக்கு நேரான ஊடாட்டங்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்குவதுடன், அதன் மூலம் அதன் சமூகத்தினுள் திடமான உறவு மற்றும் நம்பிக்கையினை பராமரிக்கின்றது.

உணவளித்தல் பிரிவில் (SLC) செரன்டிப் ஓய்விடம் வாடிக்கையாளர் முன்னுரிமைகள் மற்றும் உலகளாவிய உணவுப் போக்குகளை பிரதிபலிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு மேம்பட்ட உணவுப் பட்டியலுடன் தரமுயர்த்தப்பட்டது. விமான நிறுவனத்தின் ஒவ்வொரு வாடிக்கையாளரும் ஒரு பிரத்தியேகமான கணக்கு முகாமையாளரினால் துணையளிக்கப்படுவதுடன், விமான நிறுவன உணவு மற்றம் பானம் மற்றும் வணிக நாம அணிகளுடனான ஒருங்கிணைப்புடன் இரண்டு வருடங்களுக்கொருமுறை அல்லது பருவகால உணவுப்பட்டியல் செயலமர்வுகள் நடாத்தப்படுகின்றன. இந்த செயலமர்வுகள் சுவைத்துப் பார்த்தல், கலாச்சார மற்றும் உணவுசார் சிந்தனைகள், மற்றும் பாதை குறிப்பிட்ட முன்னுரிமைகளை ஒருங்கிணைப்பதுடன், தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் உயர் தரத்திலான வழங்கல்களை உறுதிசெய்கின்றது. மெய்நேர தொடர்பாடல் வழிகள் மற்றும் கூட்டுச் செயற்திறன் மீளாய்வுகள் ஒத்துழைப்பு மற்றும் சேவை விநியோகத்தை மேலும் மேம்படுத்தியது.

சரக்குப் பிரிவானது அதன் சந்தை இருப்பினை பலப்படுத்துவதற்கு டிஜிட்டல் மற்றும் பௌதீக மேடைகள் ஆகிய இரண்டையும் பயன்படுத்துவதுடன், எயார் கார்கோ தென்கிழக்காசியா (சிங்கப்பூர்) மற்றும் எயார் கார்கோ இந்தியா (மும்பாய்) போன்ற உயர் தோற்றமுடைய சர்வதேச கண்காட்சிகளில் பங்கேற்கின்றது. 24 x7 அர்ப்பணிப்பான அழைப்பு மையம் மற்றும் செயலூக்கமான சமூக ஊடக ஈடுபாடானது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளிகளுடன் தொடர்ச்சியான மற்றும் அணுக்கமுடைய தொடர்பாடல்களை உறுதிசெய்கின்றது.

டிஜிட்டல்மயமாக்கல் முயற்சிகள் வாடிக்கையாளர் ஈடுபாட்டினை வளர்க்கின்றது.

ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் (SLH) வாடிக்கையாளர் முன்னுரிமைகள் மற்றும் கடந்தகால பயணத் தரவுகளின் அடிப்படையில் அதன் விடுமுறைத் தொகுப்புகளை வடிவமைத்துள்ளதுடன், வாடிக்கையாளர் திருப்தி மற்றும் ஈடுபாட்டினை மேம்படுத்துகின்றது. செயலூக்கமான சமூக ஊடக ஊடாட்டங்கள் மற்றும் உடனடி பதிலளித்தல் மீளாய்வுகளூடாக இப்பிரிவானது நம்பிக்கை மற்றும் விசுவாசத்தினை பராமரித்ததுடன், ஊக்குவிப்பு மற்றும் உற்பத்திப் பிரச்சாரங்கள் என்பன வெளிவரும் பயணப் போக்குகளுக்கு சீரமைவாக மூலோபாயமாக வடிவமைக்கப்பட்டன. குறிப்பாக, நிதியாண்டு 2024/25 இன் போது ஃப்லைஸ்மைல்ஸ் விசுவாசத் திட்டமானது கணிசமானளவு மேம்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டது. இது ஃப்லைஸ்மைல்ஸ் குடும்பத் திட்டத்தின் அறிமுகத்தினை உள்ளடக்கியதுடன், இது பகிரப்பட்ட பயண அனுபவங்களூடாக குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றுதிரட்டி மைல்களை கூட்டாக மீட்டெடுப்பதனை இயலுமையாக்குவதுடன் வணிகநாமப் பற்றினை பலப்படுத்துகின்றது. ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் ஃப்லைஸ்மைல்ஸ் விசுவாச இணையத்தளமானது ஒரு பூரணமான உருமாற்றலுக்கு உட்பட்டுள்ளதுடன், ஒரு நவீன, ஒரு புதிய தோற்றத்துடன் பயனாளர் தோழமையான இடைமுகப்பினை திறந்துள்ளது. இந்த மீள்வடிவமைப்பானது UI மற்றும் UX ஆகிய இரண்டிற்கும் கணிசமான மேம்படுத்தல்களை கொண்டுவருகின்றது. இது அணுக்கத்திறன் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டினை மேம்படுத்தும் மொபைல் பதிலளிப்பு மற்றும் எளிமையாக்கப்பட்ட முகப்புப் பக்கம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. அங்கத்தவர்கள் தற்போது தடையின்றி மைல்களை கொள்வனவு செய்யவும் வவுச்சர்களை OTP அங்கீகாரத்துடனான மேலதிக பாதுகாப்புடன் உருவாக்கிக் கொள்ளவும் இயலும். இந்த தரமுயர்த்தலானது ஒரு ஒழுங்குமுறையான, பயனாளர் மையமான அனுபவத்தை வழங்குவதன் மூலம் சிறந்த வாடிக்கையாளர் திருப்திக்கு இட்டுச்சென்றுள்ளவேளை அனைத்து ஸ்ரீலங்கன் டிஜிட்டல் மேடைகளிடையே தொடர்ச்சியான வணிகநாமமிடலை பராமரிக்கின்றது. மேலாக, ஒரு தனிப்பயனாக்கப்பட்ட வணிகர் நுழைவாயிலின் ஆரம்பமானது மீட்டெடுத்தல் வாய்ப்புக்களை கணிசமானளவு விரிவாக்கியுள்ளதுடன், விசுவாசத் திட்டத்தின் ஒட்டுமொத்த பெறுமதி முன்மொழிவினை மேலும் மேம்படுத்துகின்றது.

உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் AI இனால் இயக்கப்படும் செட்பொட் ஆன YAANA வின் ஆரம்பத்துடன் டிஜிட்டல் புத்தாக்கத்தின் எல்லைகளை தொடர்ச்சியாக

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் தொடர்ச்சி.

விரிவாக்குகின்றது. இந்த மைல்கல்லானது புத்திசாலித்தனமான தன்னியக்கமாக்கல் மற்றும் தனிப்பட்ட உறுதுணையினூடாக வாடிக்கையாளர் சேவையினை உருமாற்றுவதற்கான விமான நிறுவனத்தின் கடப்பாட்டினை குறிப்பிடுகின்றது. YAANA தற்போது வினாக்களுக்கான உடனடி பதிலை வழங்குதல், ஒட்டுமொத்த உலாவுதல் மற்றும் பதிவுசெய்தல் அனுபவத்தை மேம்படுத்துதல் மூலம் பயனாளர்களுக்கு துணையளிக்கின்றது. எதிர்வரும் நிதியாண்டில், ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் த.தொ. முறைமைகள் அணியானது YAANA வினை ஒரு முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட இணைய பயண உதவியாளராக உருவாக்குவதற்கான இலட்சியமான திட்டங்களைக் கொண்டுள்ளது. எதிர்கால மேம்பாடுகள் விமானப்பயண பதிவுசெய்தல்கள், மொபைல் பதிசெய்தல், மெய்நேர பயணத்திட்ட முகாமைத்துவம், ஒரு உரையாடல் இடைமுகப்பினூடாக தனிப்பட்ட புதுப்பிப்புகள் உள்ளடங்கலான முனையத்திலிருந்து முனையம் வரையான பயணிகள் தேவைகளுக்கு துணையளிப்பதற்கு YAANA வினை இயலுமையாக்கும். இந்த தொலைநோக்கானது AI இனால் வலுவளிக்கப்பட்டு புத்திசாலித்தனமான, மோதலற்ற பயணம் நோக்கிய நகர்வினை பிரதிபலிக்கும். இது பயணிகள் அவர்கள் விரும்பும்போது எங்கிருந்தாவது மற்றும் எப்போதாவது தொடர்புகொள்வதனை எளிதாக்குகின்றது.

உலகளாவிய டிஜிட்டல் வான்பயணவியல் போக்குகளுக்கு சீராக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் மொபைல் செயலியூடாக ஒரு தனிப்பட்ட மற்றும் தடையற்ற பயணிகள் பிரயாணத்தை வழங்குவதில் முன்னிறுத்தம் செய்கின்றது. மேம்படுத்தல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கின. வடிவமைக்கப்பட்ட உள்ளடக்கம் மற்றும் சேவைகள், சீரமைக்கப்பட்ட டிஜிட்டல் பதிவு மற்றும் விமானமேறுதல் செயன்முறைகள் என்பவற்றுடன் சௌகரியம், பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு சுய சேவை மற்றும் தொடுதிறனற்ற தெரிவுகளின் அறிமுகம் என்பவையாகும். தூண்டல் அறிவித்தல்கள் மற்றும் எச்சரிக்கைகளூடாக மெய்நேர தொடர்பாடல்கள் பயணிகள் அவர்களது பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அறிவிக்கப்பட்டிருப்பதனை உறுதிசெய்கின்றது.

பணியாட்கள் உறவுகள் மற்றும் ஈடுபாடு

எமது பணிச்சேனையானது எமது வெற்றியின் ஒரு முக்கிய இயலுமையாக்குபவராகும். இவ்வாண்டு முழுவதும், ஒரு உள்ளடக்கமான, துணையளிக்கின்ற மற்றும் உந்தப்பட்ட பணிச் சூழலினை பராமரிப்பதை நோக்காகக் கொண்ட முன்னெடுப்புகளில் நாம் முதலீடு செய்துள்ளோம். முன்வரிசையில் மற்றும் செயற்பாட்டு பணியாட்களை இலக்குவைத்த மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் துறைசார் சவால்களுக்கு மத்தியில் மீளெழுச்சியினை கட்டியெழுப்புவதற்கு உதவியுள்ளன. தலைமைத்துவ அபிவிருத்தி முன்னெடுப்புகள் அடுத்த சந்ததி விமான நிறுவன தொழில்வல்லுனர்களை வளர்ப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளவேளை திறந்த தொடர்பாடல் வழிகள் மற்றும் பணியாட்கள் பின்னூட்ட பொறிமுறைகள் பணியிடக் கொள்கைகள் மற்றும் கலாச்சாரத்தினை தொடர்ச்சியாக வடிவமைக்கின்றன. இந்த முயற்சிகள் கூட்டாக பணியாட்கள் மன உறுதியை பலப்படுத்தி, ஆக்கத்திறனை மேம்படுத்தி எமது நிறுவன விழுமியங்களுடன் சீரமைவான ஒரு பகிரப்பட்ட உணர்வினை வளர்க்கின்றது.

வணிகப் பங்காளிகளுடனான ஈடுபாடு

முனைப்பியல் மற்றும் குறியீட்டுபங்கீடு உடன்படிக்கைகள் உள்ளடங்கலான மூலோபாய பங்குடைமைகளூடாக, அதன் உலகளாவிய வலையமைப்பினை தொடர்ச்சியாக பலப்படுத்துகின்றது. இந்த ஒருங்கிணைப்புகள் விமான நிறுவனத்தின் இணைப்புத்திறனை கணிசமானளவு விரிவாக்கியுள்ளதுடன், சௌகரியமான ஒருநிறுத்தல் இணைப்புகளூடாக ஒரு பரந்த பயண இலக்குகளுக்கு தடையற்ற அணுக்கத்தை பயணிகளுக்கு வழங்குகின்றன. இந்த மூலோபாயமான விரிவாக்கம் நெடுந்தூர சந்தைகளில் விமான நிறுவனத்தின் போட்டித்திறனை மேம்படுத்துவது மாத்திரமன்றி, அதன் வளர்ச்சியடையும் வாடிக்கையாளர் தளத்திற்கு சிறந்த பெறுமதி மற்றும் நெகிழ்வுத்தன்மையினையும் வழங்குகின்றது. நிதியாண்டின்போது, SLA, வ்லை துபாயுடன் ஒரு புதிய முனைப்பியல் உடன்படிக்கையிலும், எயார் சீசெல்சுடன் ஒரு குறியீட்டுப்பகிர்வு உடன்படிக்கையிலும் நுழைந்துள்ளதுடன், இவை எமது செயற்பாடுகள் பிரிவில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கன் ஏவியேசன் காலேஜ் (SLAC) முக்கிய பங்குடைமைகளூடாக அதன் பயிற்சித் தேக்கத்தினை மேலும் பன்முகப்படுத்தியுள்ளது. ஸ்ரீலங்கா வான் படையுடனான ஒரு புதிய உடன்படிக்கையானது வானூர்தி பராமரிப்பில் EASA பகுதி 66 அடிப்படை பாடத்திட்டத்தில் சேர்ந்துகொள்ளும் மாணவர்களுக்கான நடைமுறை பயிற்சியினை மேம்படுத்துகின்றது. மேலாக, ஏவியேசன் அவுஸ்திரேலியா உடனான ஒருங்கிணைப்பானது தற்போது வானூர்தி பராமரிப்பு இன்ஜினியரிங் இல் அவுஸ்திரேலிய டிப்ளோமாவினை வழங்குவதுடன், SLAC இன் சர்வதேச சான்றளிப்புகள், பரவலான பயிற்சித் தீர்வுகள் என்பன பரந்த சந்தைக்கு கவர்ச்சியாகவுள்ளன.

ஸ்ரீலங்கன் கேட்டரிங் (SLC) அதன் சமையல்சார் வழங்கல்களை தொடர்ச்சியாக உயர்த்தியதுடன், விதிவிலக்கான விமானத்தினுள்ளான சாப்பாட்டு அனுபவங்களை வழங்குவதன் மூலம், முதன்மையான விமான நிறுவன வாடிக்கையாளர்களை கவர்ந்து தக்கவைப்பதற்கு உதவுகின்றது.

ஸ்ரீலங்கன் இன்ஜினியரிங் (SLE) வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்களுடனான நெருங்கிய ஒருங்கிணைப்பினூடாக அதன் செயற்பாட்டு தனிச்சிறப்பினை பலப்படுத்துகின்றது. இந்த பங்குடைமைகள் கடுமையான தரக் கட்டுபாடுகள், செயற்திறன் கண்காணித்தல், கூட்டு பயிற்சித் திட்டங்கள் மற்றும் மெய்நேர நேரத்திற்கேற்ற தொடர்பாடல் மற்றும் ஒத்துழைப்பில் முன்னிறுத்தம் செய்கின்றது. நிலைபேறுடைய மற்றும் செலவுச் சிக்கனமான வளப்பயன்பாட்டு நடைமுறைகள் என்பவற்றிலும் வலியுறுத்தல் மேற்கொள்ளப்பட்டு வானூர்தி பராமரிப்பு மற்றும் நீண்டகால செயற்பாட்டு வினைத்திறனில் உயர்ந்த நியமங்களை உறுதிசெய்தது.

செயற்பாட்டு தனிச்சிறப்பினை மேம்படுத்துவதற்கு திடமான முறைமைப்படுத்தல் பங்குடைமைகளை வளர்த்தல்

ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் எமது பயணிகள், பணியாட்கள் மற்றும் பங்காளிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு என்பன எமது செயற்பாடுகளின் மூலக்கல்லாக இருக்கின்றன. தேசிய மற்றும் சர்வதேச முறைமைப்படுத்தல் அங்கங்களுடனான எமது உறவுகள் இணக்கப்பாட்டிற்கு அப்பால் நீட்டப்பட்டு தொடர்ச்சியான கலந்துரையாடல், பரஸ்பரமான நம்பிக்கை மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டில் வேரூன்றியுள்ளது.

எமது செயற்பாட்டு பிரிவுகள் ICAO பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளின் அமுலாக்கம் மற்றும் மேம்பாட்டில், சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பு (ICAO) மற்றும் இலங்கை சிவில் வான்பயணவியல் அதிகாரசபை ஆகியவற்றுடன் செயலூக்கமாக ஈடுபடுகின்றது. இவை எமது உள்ளக முறைமைகள் உலகளாவிய வான்பயணவியல் பாதுகாப்பு கட்டமைப்புகளுடன் சீரமைவதை உறுதிசெய்கின்றன. ஆண்டு முழுவதும், எமது அணிகள் 50 உள்ளக தர உறுதிப்படுத்தல் கணக்காய்வுகளை நடாத்தியதுடன், இந்த முறைமைப்படுத்துபவர்களுடனான நெருங்கிய ஒத்துழைப்புடன் விருத்திசெய்யப்பட்ட நுண்ணறிவுகள் மற்றும் நியமங்களினால் வடிவமைக்கப்பட்ட அடிக்கடியான புத்துணர்ச்சியூட்டும் பயிற்சி மற்றும் அவசர தயார்நிலைப் பயிற்சிகளுக்கு வசதியளித்தது. இந்த முன்முயற்சியான ஒருங்கிணைப்பானது

எமது வான் செயற்பாட்டாளர் சான்றிதழ் (AOC), IATA செயற்பாடுகள் பாதுகாப்பு கணக்காய்வு (IOSA) மற்றும் தரைச் செயற்பாடுகளுக்கான IATA பாதுகாப்பு கணக்காய்வு (ISAGO) உள்ளடங்கலான பிரசித்திபெற்ற உலகளாவிய சான்றிதழ்களின் தொடர்ச்சியான பராமரிப்பினை தடையின்றி புதுப்பிப்பதற்கு பங்களித்தது.

வான்பயணவியல் பாதுகாப்புப் பிரிவில், எமது வான்பயணவியல் பாதுகாப்பு (Avsec) பிரிவானது, வலுவான, முன்னோக்கிப் பார்க்கும் பாதுகாப்பு கட்டமைப்புகளை வடிவமைத்து அமுலாக்குவதற்கு முறைமைப்படுத்தல் முகவர்களமைப்புகளுடன் கூட்டுசேர்ந்து செயலாற்றுகின்றது. உள்ளூர் தளம் மற்றும் வெளிநாடுகளில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செயற்பாடுகளை பாதுகாப்பதற்கு அப்பால், இப்பிரிவானது கொழும்பு மற்றும் மத்தல விமான நிலையங்களில் ஏனைய வானூர்திகளுக்கு அதன் நிபுணத்துவ சேவைகளை நீடிப்பதுடன், வாடிக்கையாளர் விமான நிறுவனங்களின் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு உரிய கவனம் செலுத்துகின்றது. உலகளாவிய மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளுடனான கூட்டு முன்னெடுப்புகளூடாக Avsec அணியானது மேம்பட்ட பரிசீலனை தொழில்நுட்பங்கள் மற்றும் இடர் அடிப்படையிலான பகுப்பாய்வுகளை ஒருங்கிணைத்துள்ளதுடன், வளர்ந்துவரும் சர்வதேச பாதுகாப்பு நெறிமுறைகளுடனான சீரமைப்பினை உறுதிசெய்கின்றது.

தரை கையாளுதல் பிரிவானது இந்த ஒத்துழைப்பான அணுகுமுறையினை மேலும் எடுத்துக்காட்டுவதுடன், CAASL மற்றும் சர்வதேச வான் போக்குவரத்து சங்கம் (IATA) உடனான திடமான இணைப்புகளை பராமரிக்கின்றது. இப்பிரிவின் தரை கையாளுதல் வழங்குனர் சான்றளிப்பு மற்றும் ISAGO கணக்காய்வு செயன்முறைகளின் கீழான தொடர்ச்சியான சான்றளிப்புகள் செயற்பாட்டு தனிச்சிறப்பிற்கான ஒரு பகிரப்பட்ட கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது. விமான நிலையம் மற்றும் எயார்போர்ட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் லிமிட்டட், சர்வதேச நிலையங்களில் சிவில் வான்பயணவியல் அதிகாரசபைகள் மற்றும் பங்காளி கையாளுபவர்கள் உடனான அதன் பணியானது தரைச் செயற்பாடுகள் உலகளாவிய முறைமைப்படுத்தல் எதிர்பார்ப்புகளுக்கு சமீபமாக தொடர்ச்சியாக சந்திப்பதனையும் வளர்வதனையும் உறுதிசெய்கின்றது.

எமது என்ஜினியரிங் பிரிவானது, CAASL, ஐரோப்பிய ஒன்றிய வான்பயணவியல் பாதுகாப்பு முகவர் (EASA) மற்றும் ஏனைய சர்வதேச அதிகாரசபைகளுடன் ஒரு செயலூக்கமான மற்றும் கட்டமைக்கப்பட்ட உறவினை பராமரிக்கின்றது. வழமையான கணக்காய்வுகள், தொழில்நுட்ப ஒத்துழைப்பு அமர்வுகள், மற்றும் மெய்நேர முறைமைப்படுத்தல் புதுப்பிப்புகள் எமது அங்கீகரிக்கப்பட்ட பராமரித்தல் ஒழுங்கமைப்பு (AMO) மற்றும் தொடர்ச்சியான பறத்தல் தகுதி முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் (CAMO) செயற்பாடுகளுடனான சீரமைப்பிற்கு துணையளிக்கின்றது. இந்த ஈடுபாடுகள் பகுதி-145/பகுதி-M இற்கான புதுப்பிப்புகள் போன்ற முறைமைப்படுத்தல் திருத்தங்களை உடனடியாக அமுல்படுத்தவதற்கு எம்மை இயலுமையாக்குகின்றன. இவை கட்டமைக்கப்பட்ட வாசித்து கையொப்பமிடல் திட்டங்கள், திருத்தியமைக்கப்பட்ட செயன்முறைகள், மற்றும் இலக்குவைத்த பயற்சியினூடாக மேற்கொள்ளப்படுவதுடன் அனைத்து இன்ஜினியரிங் செயற்பாடுகளிடையே தொடர்ச்சி மற்றும் தொழில்நுட்ப தனிச்சிறப்பானது உறுதிப்படுத்தப்படுகின்றது. செயற்பாட்டு நடைமுறைகளுக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் கட்டமைக்கப்பட்ட புதுப்பிப்புகள் வளர்ந்துவரும் முறைமைப்படுத்தல் எதிர்பார்ப்புக்கள், முறைமைப்படுத்துபவர்களுடன் வெளிப்படையான உறவுக்கு துணையளித்து பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கான ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது. இந்த நடைமுறைகள் பங்காளிகள் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கும் மற்றும் விமான நிறுவனத்தின் செயற்பாட்டு நேர்மையில் நிலைபேறான நம்பகத்தன்மைக்கும் பங்களிப்பு செய்கின்றது.

ஸ்ரீலங்கன் ஏவியேசன் காலேஜ் (SLAC) வான்பயணவியல் கல்விக்கு ஒரு பிராந்திய மையமாக அதன் பங்கினை தொடர்ந்தும் விரிவாக்கியுள்ளதுடன், இதற்கு இலங்கை, பாக்கிஷ்தான், நேபாளம் மற்றும் மாலைதீவு சிவில் வான்பயணவியல் அதிகாரசபைகளிடமிருந்தான அங்கீகாரத்துடன் EASA இடமிருந்தான சான்றளிப்புகளும் துணையளிக்கின்றன. இந்த முறைமைப்படுத்தல் ஒப்புதல்கள் தொடர்ச்சியான தர உறுதிமொழி ஒருங்கிணைப்புகளில் கட்டியெழுப்பப்பட்டதுடன் பிராந்தியத்தில் வான்பயணவியல் பயிற்சி நியமங்களை தரமுயர்த்துவதற்கு SLAC இன் பங்களிப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

ஸ்ரீலங்கன் கேட்டரிங் (SLC) கடுமையான உலகளாவிய நியமங்களை நிலைநிறுத்துவதற்காக உணவுப் பாதுகாப்பு அதிகாரசபைகள் மற்றும் சான்றளிப்பு அங்கங்களுடன் தொடர்ச்சியான ஈடுபாட்டினை பராமரிக்கின்றது. இப்பிரிவின் செயற்பாடுகள் ISO மற்றும் HACCP போன்ற சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நெறிமுறைகளுடன் சீரமைவாக உள்ளதுடன், விமானநிலையத்தின் உணவுவழங்கலில் அதன் பாதுகாப்பு, சுத்தம் மற்றும் முறைமைப்படுத்தல் பொறுப்புக்கூறலை வலியுறுத்துகின்றது.

ISO/IEC 27001 இன் கீழ் சான்றளிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவானது ஒரு பாதுகாப்பான மற்றும் இணக்கப்பாடான டிஜிட்டல் உட்கட்டமைப்பினை நிலைபேறாக்கவதற்கு துறை மற்றும் முறைமைப்படுத்தல் கணக்காய்வாளர்களுடன் நெருக்கமாக தொழில்படுகின்றது. இந்த பங்குடைமைகள் தரவுப் பாதுகாப்பு மற்றும் சைபர் மீளெழுச்சி வழிமுறைகளது அமுலாக்கத்திற்கு துணையளிப்பதுடன், விமான நிறுவனத்தின் த.தொ. முறைமைகள் தகவல் பாதுகாப்பில் உயர்ந்த உலகளாவிய நியமங்களை சந்திப்பதனை உறுதிப்படுத்துகின்றது.

இந்த ஒருங்கிணைக்கப்பட்ட, பல அடுக்கான உறவுகளூடாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் செயற்பாடுகள் இணக்கப்பாட்டினை மாத்திரம் சந்திக்காது உலகளாவிய வான்பயணவியல் சூழலமைப்பின் வளர்ந்து வரும் எதிர்பார்ப்புகளுக்கு பதிலளிப்பதனை உறுதிசெய்கின்றது. அனைத்து வணிகச் செயற்பாடுகளிடையே முறைமைப்படுத்தல் பங்காளிகளுடனான எமது நிலைபேறான ஈடுபாடானது செயற்பாட்டு மீளெழுச்சியினை பலப்படுத்தி, புத்தாக்கத்தினை பராமரித்து பிராந்தியம் மற்றும் சர்வதேச வான்பயணவியலில் ஒரு நம்பிக்கையான தலைவராக விமான நிறுவனத்தினை நிலைப்படுத்துகின்றது.

சமூகங்கள் மற்றும் சமூக தாக்கத்திற்கான கடப்பாடு

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் நிறுவன சமூக பொறுப்புக்கூறல் (CSR) மேடையான, ஸ்ரீலங்கன் கெயார்ஸ் பணியாட்களினால் நிதியளிக்கப்பட்ட அறக்கொடை என்பதுடன் இது இலங்கை முழுவதும் அர்த்தமுள்ள சமூக தாக்கத்தினை உருவாக்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்டதாகும். மூலோபாயத் தூண்களினால் வழிநடத்தப்பட்டு, அதன் முன்னெடுப்புகள் குழந்தை பராமரிப்பு, சூழல் நிலைபேறுடைமை மற்றும் இளைஞர் திறன் அபிவிருத்தியில் முன்னிறுத்தம் செய்வதுடன், கருணை மற்றும் தன்னார்வச்சேவை என்பவற்றூடாக சமூகங்களை தரமுயர்த்துவதற்கான விமான நிறுவனத்தினது பணியாட்களின் கூட்டான கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது.

நிதியாண்டு 2024/25 இல் ஸ்ரீலங்கன் கெயார்ஸ் பாடசாலை உட்கட்டமைப்பு மேம்படுத்தல்கள், டிஜிட்டல் அறிவுத் திட்டங்கள் மற்றும் போஷாக்கு உறுதுணை போன்ற இலக்குவைத்த குறுக்கீடுகளை வழங்கியது. சூழல் முன்னெடுப்புகள் கரையோரச் சுத்தம்செய்தல், காடு மீள்வளர்ப்பு முயற்சிகள் மற்றும் பிளாஸ்டிக் குறைப்பு பிரச்சாரங்கள் என்பவற்றை உள்ளடக்கியதுடன், இது ஐக்கிய நாடுகள் நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளுடன் எமது சீரமைப்பினை வலியுறுத்துகின்றது. மேலும், கல்வி நிறுவனங்கள், மற்றும் NGO

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் தொடர்ச்சி.

க்களுடன் ஒருங்கிணைந்து தொழில்முறை பயிற்சி, வழிகாட்டல்கள், மற்றும் இளைஞருக்கான தலைமைத்துவ அபிவிருத்தி வாய்ப்புக்களை வழங்கி பொருளாதார வலுவளித்தல் மற்றும் சமூக இயங்குதிறனை வளர்ப்பதற்கு உதவுகின்றது.

ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு வெளியுறவு

நிதியாண்டின்போது. ஆரோக்கியம் முன்னிறுத்தமான நான்கு வெளிக்களத் திட்டங்கள் பல்வேறு பகுதிகளில் நடாத்தப்பட்டன. இவை மன மற்றும் உடல்ரீதியான நல்வாழ்வில் விழிப்புணர்வு அமர்வுகள், பொது மருத்துவ ஆலோசனைகள், பார்வை பரிசோதித்தல் மற்றும் இலவச மருந்துகள் மற்றும் கண்ணாடிகளது பகிர்ந்தளிப்பு என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. மருத்துவர்கள், உளவியலாளர்கள் மற்றும் அனுசரணையாளர்களுடனான ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்த முன்னெடுப்புகள் கிராமிய மற்றும் குறை சேவையாற்றப்பட்ட சமூகங்களில் ஆரோக்கிய விளைவுகளை மேம்படுத்துவதற்கான ஸ்ரீலங்கன் கெயார்சின் கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது.

கல்வி மற்றும் இளைஞர் வலுவளிப்பு

வருடத்தின்போது இளைஞர் கல்வி மற்றும் தொழில் வெளிப்பாடு என்பன முக்கிய முன்னிறுத்தங்களாக இருந்தன. இலங்கையின் முதலாவது பிள்ளைகளின் இலக்கிய விழாவிற்கான உறுதுணையானது பாடசாலைகள் மற்றும் பராமரிப்பு நிலையங்களின் எழுத்தாளர் அமர்வுகளுக்கு வசதியளித்தது. பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு கள வருகையினூடாக வான்வழிப்போக்கு பொறியியலை ஆராய்ந்ததுடன், 'விமானத்துடனான ஒரு நாள்' முன்னெடுப்பானது பல்வேறு நிருவகங்களிலுள்ள பாடசாலை பிள்ளைகளுக்கு வான்பயணவியலை அறிமுகப்படுத்தியது. நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட புத்தக நன்கொடைகள் குறைசேவையாற்றப்பட்ட சமூகங்களில் நூலகங்களை வளப்படுத்தியது.

குழந்தை நல்வாழ்வு மற்றும் சமூக ஈடுபாடு

ஸ்ரீலங்கன் கெயார்ஸ் அர்த்தமுள்ள ஈடுபாடுகளூடாக பாதிக்கப்படக்கூடிய குழந்தைகள் மற்றும் சமூக குழுக்களுக்கு துணையளித்தது. குழந்தை புற்றுநோய் நோயாளிகள் குழுவொன்று ஒரு மறக்கவியலாத வான்பயணவியல் கருப்பொருள் தினத்தை அனுபவித்தார்கள். இது விமான நிறுத்துமிடங்களுக்கான சுற்றுலா மற்றும் விமானத்தினுள்ளான உணவு ஆகியவற்றை உள்ளடக்கியது. மேலும், பணியாட்கள் நிதியளிக்கப்பட்ட முன்னெடுப்பின் ஒரு பாகமாக, தற்போது அதன் நான்காவது ஆண்டாகும், 500 புற்றுநோய் நோயாளிகளுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் அத்தியாவசியமான பொருட்கள் நன்கொடையளிக்கப்பட்டன. இந்த முயற்சிகள் கருணையினால் இயக்கப்படும் சமூக உறுதுணைக்கான விமான நிறுவனத்தின் தொடர்ச்சியான கடப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றது.

சர்வதேசத் தினக் கொண்டாட்டங்கள்

உள்ளடக்கமான வெளிக்களத்தினூடாக உலகளாவிய அனுஷ்டானங்கள் அனுஷ்டிக்கப்பட்டன. உலக குழந்தைகள் தினம் அபிவிருத்தி நிலையங்களிலிருந்து குழந்தைகளுக்கு வான்பயணவியல் கருப்பொருளான அனுபவங்களை எடுத்துரைத்தவேளை சர்வதேச பெண்கள் தினம் ஆரோக்கியம், கல்வி மற்றும் சுய பராமரிப்பு என்பவற்றில் முன்னிறுத்தமான நல்வாழ்வு செயலமர்வுகள் மற்றும் சமூக அமர்வுகளை உள்ளடக்கியிருந்தன.

உலக சிறுவர் தினம் 2024 அன்று, சிறுவர்களுக்காக ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது, இது ஸ்ரீலங்கன் விமான சேவையின் 747 விமான கூடத்திற்கு விஜயம் செய்வதன் மூலம் இலங்கையின் பயண மற்றும் சுற்றுலாத் துறையில் ஒரு நாள் வேடிக்கை மற்றும் கற்றல் ஆகியவற்றை அவர்களுக்கு வழங்கியது.

சூழல் பாரபத்தியம்

ஸ்ரீலங்கன் கெயார்ஸ் செயல்சார் பாதுகாப்பு முயற்சிகளூடாக சூழல் பொறுப்பினை மேம்படுத்தியது. நீர்கொழும்பில் ஒரு சதுப்புநில துப்பரவாக்கலில் இளைஞர்களும் உள்ளூர் சமூக அங்கத்தவர்களும் ஈடுபட்டவேளை மார்ச் மாதத்திலான ஒரு விழிப்புணர்வு சுற்றுலா சர்வதேச வனங்கள் தினத்திற்கு சீரமைவாக ஒரு வனப்பாதுகாப்பு துப்புரவாக்கலுடன் நிறைவடைந்தது.

உட்கட்டமைப்பு மற்றும் சமூக அணுகுதல் மேம்பாடு

குறைசேவையாற்றப்பட்ட பிராந்தியங்களில் கல்வி மற்றும் சமூக ஆரோக்கியத்திற்கு துணையளிப்பதற்கு உட்கட்டமைப்பு மேம்படுத்தல் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பற்ற தண்ணீர் மூலங்களுடன் இணைக்கப்பட்ட கடுமையான சிறுநீரகம் தொடர்பான வியாதிகளை எதிர்த்து போராடுவதற்கு துணைபுரிவதற்காக இரண்டு கிராமிய பாடசாலைகளில் சவ்வூடு பரவல் எதிர்ப்பு குடிநீர் திட்டங்கள் நிறுவப்பட்டன. மேலும், பல்லூடக உபகரணங்களின் நன்கொடையினூடாக மற்றுமோர் சமூகத்தில் டிஜிட்டல் பயிலல் ஆற்றல்கள் பலப்படுத்தப்பட்டன. சர்வதேச பங்காளிகளால் துணையளிக்கப்பட்ட இந்த முயற்சிகள் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் சுத்தமான தண்ணீர் மற்றும் நவீன கற்பித்தல் கருவிகளுக்கான அணுக்கத்தை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றன.

முன்னோக்கிய பார்வை

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஒரு உருமாற்றலான பயணத்தை தொடங்கும்போது, நாம் எமது சமூக மற்றும் உறவுமுறை மூலதனத்தை வளர்த்து விரிவாக்குவதற்கான எமது கடப்பாட்டினை வலியுறுத்துகின்றோம். எதிர்கால முன்னுரிமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன, அடிக்கடி பறப்பவர்கள் மற்றும் பங்காளிகளுடனான ஈடுபாட்டினை ஆழமாக்குவதற்கு டிஜிட்டல் புத்தாக்கத்தினை பயன்படுத்துதல், தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் சீரமைவாக அளவிடக்கூடிய சமூகத் திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் பயணிகள் மற்றும் பணியாட்கள் அனுபவத்தின் அனைத்து தொடுபுள்ளிகளிடையே உள்ளடக்கத்தினை மேம்படுத்துதல் என்பனவாகும்.

தரவுகளினால் இயக்கப்படும் நுண்ணறிவுகளை பயன்படுத்துவது மிகவும் பதிலளிக்கும் மற்றும் தனிப்பட்ட பங்காளி ஈடுபாட்டினை இயலுமையாக்கும்வேளை உலகத் தரத்திலான பாதுகாப்பு நியமங்களுக்கான எமது உறுதியான அர்ப்பணிப்பினை பராமரித்தல் பொதுமக்கள் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதனை தொடரும்.

மெய்யான உறவுமுறைகள், ஒருங்கிணைப்பான பங்குடைமைகள் மற்றும் சேவைத் தனிச்சிறப்பிற்கான அசைக்கவியலாத கடப்பாடு என்பவற்றினூடாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஒரு பொறுப்பான தேசிய வானூர்தியாக தொடர்ந்து உயரப்பறக்கும் என்பதுடன் உலகளாவிய அரங்கில் இலங்கையினை பெருமையுடன் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

இயற்கை மூலதனம்

இயற்கை மூலதனத்துடனான எமது உறவுமுறையானது நம்பகமான, உலகளாவிய வான்பயணவியல் சேவையினை வழங்கும்வேளை சூழலைப் பாதுகாப்பதற்கான எமது பொறுப்பினால் வரையறை செய்யப்படுகின்றது. ஒரு தேசிய வானூர்தியாக எமது செயற்பாடுகளுடன் இணைந்துள்ள சூழல் அடிச்சுவடு குறித்து நாம் ஆழமாக அறிந்துள்ளோம். நிலைபேறுடைமையில் எமது மூலோபாய முன்னிறுத்தமானது பாதகமான சூழல் தாக்கங்களை சிறுமமாக்குவதற்கு, செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு உலகளாவிய வான்பயணவியல் துறையின் சூழல் இலக்குகளுக்கு பங்களிப்பு செய்வதற்கு, மற்றும் எமது மனதில் உட்புதைந்துள்ள சூழல் நிலைபேறுடைமையான ஒரு நிறுவனக் கலாச்சாரத்தினை உருவாக்குவதற்கு என்பவற்றை உள்ளடக்குகின்றது. எமது இயற்கை மூலதனமானது ஆறு முக்கிய பிரிவுகளில் முன்னிறுத்தம் செய்கின்றது: கார்பன் அடிச்சுவடு குறைப்பு, வளங்கள் வினைத்திறன் மற்றும் கழிவு குறைத்தல், சூழல் இணக்கப்பாடு, பல்லுயிர் பாதுகாப்பு, பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கு வலுவளித்தல், சமூக வலுவளிப்பு என்பவையாகும்.

எமது கார்பன் அடிச்சுவட்டினை குறைத்தல்

எமது கார்பன் உமிழ்வுகள் மற்றும் செயற்பாட்டு கிரயத்திற்கான பாரிய பங்காளிப்பாளராக விமான எரிபொருள் நுகர்வு காணப்படுகின்றது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, எயார்பஸ் Neo தொடர்கள் போன்ற எரிபொருள் சிக்கனத்தினை வலியுறுத்தும் விமானத்தொடர் மூலோபாயத்தினை நாம் தொடர்ந்தும் தொடர்வதுடன், இவை உமிழ்வுகளில் கணிசமான குறைப்பினை வழங்குகின்றது.

செயற்பாட்டு ரீதியாக, எமது விமானச் செயற்பாடுகள் அணியானது எயார்பஸ் பரிந்துரைக்கப்பட்ட பசுமை செயலாற்றல் செயன்முறைகளை மற்றும் எரிபொருள் சிக்கனத்தினை பெருமமாக்குவதற்கு உகப்பாக்கப்பட்ட விமானப்பயண திட்டமிடல் என்பவற்றை அமுலாக்குகின்றது. எமது குறுக்குச் செயற்பாட்டு அணிகள் வானூர்தியின் சுமையினை உகப்பாக்கி விமானத்தினுள்ளான செயற்திறனை மேம்படுத்துவதற்கு கூட்டாக செயலாற்றுகின்றது.

என்ஜினியரிங் பகுதியைப் பொறுத்தளவில், ஸ்ரீலங்கன் என்ஜினியரிங் வானூர்தியின் எரிபொருள் சிக்கனத்தை மேம்படுத்துவதற்காக இலக்குவைக்கப்பட்ட விசேட பணிகளை மேற்கொள்கின்றது. இவை வழமையான வெளிவாரி துப்புரவாக்கல் மற்றும் என்ஜின் மையக் கழுவுதல்களை உள்ளடக்குவதுடன், எரிபொருள் சிக்கன மேம்பாட்டில் நிரூபிக்கப்பட்ட நலன்களைக் கொண்டுள்ளது.

ICAO மற்றும் IATA இனால் ஒப்புதலளிக்கப்பட்ட ஒரு இலக்காக 2050 அளவில் தேறிய பூச்சிய உமிழ்வுகள் காணப்படுவதுடன், இது உமிழ்வுக் கட்டுப்பாட்டிற்கான துறைவாரியான இலக்காக உள்ளது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அது தொடர்பில் பன்முகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், எமது வணிகத்தின் இணக்கப்பாடு, செயற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் வரை பரந்து காணப்படுகின்றது. இணக்கப்பாட்டினை பொறுத்தளவில், விமான நிறுவனமானது ICAO CORSIA உமிழ்வு அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் கடுமையாக இணங்குவதுடன் EU/UK ETS மற்றும் எரிபொருள் நிரப்புதல் ஐரோப்பிய ஒன்றிய பொறுப்பாணைகள் போன்ற பிராந்தியம் சார்ந்த ஒழுங்குவிதிகளுடனும் இணங்குகின்றது.

நிலைபேறுடைமை அறிக்கையிடலுக்கான அதன் தொடர்ச்சியான கடப்பாட்டின் ஒரு பகுதியாக, கம்பனியானது GHG நெறிமுறைகளுக்கு அமைவாக, தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக அதன் செயற்பாடுகளிலிருந்து பசுமைஇல்ல வாயு (GHG) உமிழ்வுகளது சரிபார்ப்பினை பொறுப்பேற்றுள்ளது. மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டின்போது, கம்பனியானது அதன் நோக்கம் 1 மற்றும் நோக்கம் 2 உமிழ்வுகளை சரிபார்த்துள்ளதுடன், இச்செயன்முறையானது கொன்ட்ரோல் யூனியன் இன்ஸ்பெக்ஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டினால் நடாத்தப்பட்டது. நோக்கம் 1 மற்றும் நோக்கம் 2 GHG நெறிமுறைகளினால் வரையறை செய்யப்பட்ட GHG உமிழ்வுகளின் வகைகளாகும். நோக்கம் 1 கம்பனியினால் உரிமமாக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தும் மூலங்களிலிருந்தான நேரடி உமிழ்வுகளை உள்ளடக்குகின்றது. நோக்கு 2 உமிழ்வுகள் மற்றுமோர் நிறுவனத்தினால் உரித்துவமான அல்லது கட்டுப்படுத்தப்படும் மூலங்களிலிருந்து இடம்பெறுகின்ற கம்பனியின் வலுப் பயன்பாட்டின் விளைவுகளான மறைமுக GHG உமிழ்வுகளாகும். அறிக்கையிடல் எல்லைகள் மற்றும் சரிபார்த்தலின் நோக்கம் தொடர்பான விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

இந்த மனமுவந்த முன்னெடுப்பினூடாக, கம்பனியானது சூழல் நிலைபேறுடைமை தரவில் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்த முனைவதுடன் சூழல் பொறுப்பு மற்றும் காலநிலை செயற்பாட்டின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் முறைமைப்படுத்தல் முயற்சிகளுக்கு பங்களிப்பு செய்கின்றது. மேலாக, இந்த செயலாக்கலில் பெறப்பட்ட நுண்ணறிவுகள் கம்பனியின் சூழல் செயற்திறனை மேலும் பலப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

இயற்கை மூலதனம் தொடர்ச்சி.

நிதியாண்டு 23/24 மற்றும் 24/25 இற்கான குழும GHG உமிழ்வுகளின் வெளிப்படுத்தல் பின்வருமாறு.

MT CO_2e (மில்)	23/24 நிதியாண்டு			24/25 நிதியாண்டு			வித்தியாசம் %
செயற்பாட்டின் வகை	நோக்கம் 1	நோக்கம் 2	மொத்தம்	நோக்கம் 1	நோக்கம் 2	மொத்தம்	
சரக்குச் செயற்பாடுகள்	0.001	0.001	0.002	0.001	0.001	0.002	6
தரைக் கையாளுகை	0.003	0.001	0.004	0.004	0.001	0.004	10
ஸ்ரீலங்கன் என்ஜினியரிங்	0.001	0.002	0.003	0.001	0.002	0.002	(16)
ஸ்ரீலங்கன் கேட்டரிங்	0.007	0.005	0.012	0.008	0.005	0.012	2
விமானநிறுவனம் (மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் நீங்கலாக)	1.192	0.002	1.193	1.182	0.002	1.184	(1)
மொத்த விமானநிறுவன குழும GHG உமிழ்வுகள்	1.204	0.010	1.213	1.194	0.010	1.204	(1)

குறிப்புகள்:

- GHG நெறிமுறைகள் வழிகாட்டலின் பிரகாரம் மதிப்பீடு நடாத்தப்பட்டது.
- அறிக்கையிடப்படும் காலங்கள் ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை அந்தந்த நிதியாண்டுகளுக்காகும்.
- கரியமில வாயு சமனான (CO_2e) மெட்ரிக் தொன் என்பது அவற்றின் உலகளாவிய வெப்பமாகுதல் சாத்தியத்தின் அடிப்படையில் பல்வேறு பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வுகளை ஒப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் அலகாகும்.
- நோக்கம் 1 நேரடி உமிழ்வுகள் மற்றும் நோக்கம் 2 கொள்வனவு செய்யப்பட்ட வலு உழிழ்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- மதிப்பீட்டின் பொருண்மையானது 5% ஆக நிறுவப்பட்டுள்ளது.

வலு சிக்கனத்தை இயக்குதல்

வலுச் சிக்கனம் என்பது எமது வசதிகள் முகாமைத்துவ மூலோபாயத்தின் மையமாகும். விமான நிறுவனமானது வலுச் சிக்கனமான ஒளியமைப்புகள், இயற்கை ஒளியூட்டலுக்கு சூரியசக்தி குழாய்கள் மற்றும் உகப்பாக்கப்பட்ட காற்றுப் பதனாக்கல் பயன்பாடு உள்ளடங்கலான பல்வேறு வழிமுறைகளை கடைப்பிடித்தது. எமது ஆதனங்கள் மற்றும் வசதிகள் அணியானது குறைப்பதற்கான வாய்ப்புக்களை இனங்காண்பதற்காக அனைத்து பகுதிகளிலும் வலுப் பயன்பாட்டினை நெருக்கமாக கண்காணிக்கின்றது.

மேலும், எமது பணியாட்கள் சமையலறைக்குத் தேவையான சமையல் எரிவாயுவின் ஒரு பகுதியை வழங்கும் ஒரு உயிரிய வளிம அலகொன்றினை நாம் செயலாற்றுகின்றோம். இது சாத்தியமானபோது வள மூலங்களை பன்முகப்படுத்துவதற்கான எமது நோக்கத்தை பிரதிபலிக்கின்றது.

தண்ணீர் பாரபத்தியம் மற்றும் பேணுகை

எமது செயற்பாடுகளில் தண்ணீர் ஒரு மிகவும் முக்கியமான உள்ளீடாகும். எமது தண்ணீர் முகாமைத்துவ அணுகுமுறையானது தண்ணீர் சேமிக்கும் பொருத்திகளின் பயன்பாடு மற்றும் தோட்டக்கலைக்கு பதப்படுத்தப்பட்ட கழிவுநீரின் பயன்பாடு போன்ற மீள்பயன்பாட்டு முன்னெடுப்புகள் என்பவற்றை ஒன்று சேர்க்கின்றது. இந்த வழிமுறைகள் எமது வசதிகளிடையே தண்ணீர் பயன்பாட்டினை சிக்கனமாகவும் பொறுப்பாகவும் முகாமைப்படுத்தும் எமது இலக்குடன் சீரமைகின்றது.

எமது கட்டுநாயக்க நிலையங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு உட்கட்டமைப்பை தரமுயர்த்துவதற்காக அண்மையில் 12.6 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளமையானது, நீர் வளங்களைப் பாதுகாப்பதற்கான எமது அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள்பயன்பாடு

எமது கழிவு மூலோபாயமானது குறைப்பு மற்றும் வேறாக்கலுக்கு மற்றும் சாத்தியமானபோது மூலத்திலேயே மீள்பயன்பாட்டிற்கு முன்னுரிமையளிக்கின்றது. மூலத்தில் கழிவு வேறாக்கலில் பணியாட்கள் செயலூக்கமாக ஈடுபடுவதுடன், இது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களூடாக மீள்சுழற்சிகளுக்கு வசதியளிக்கின்றது. மேலாக, எமது உள்ளக அணிகள் தாள் பயன்பாட்டினை குறைப்பதற்கு செயன்முறை மேம்படுத்தல்களை இயக்குவதுடன், இவை நவீன ERP முறைமைகள் மற்றும் இ-கையொப்ப கருவிகள் போன்ற டிஜிட்டல் மேடைகளினால் இயலுமையாக்கப்படுகின்றன.

அதேபோன்று, தளபாடம் மற்றும் சக்கர நாற்காலிகளுக்கான எமது பழுதுபார்த்தல் மற்றும் மீள்பயன்பாட்டு திட்டங்கள் புதிய கொள்வனவுகளுக்கான அவசியத்தை கணிசமானளவு குறைத்துள்ளதுடன், குப்பை கிடங்குகளிலிருந்து கழிவினை திசை திருப்புகின்றது. எமது வளங்கள் மீட்டல் பங்குடைமைகள் மீள்பயன்பாட்டு விளைவுகளுக்கு அர்த்தமுள்ள விதத்தில் பங்களிப்பு செய்கின்றன.

சூழல் இணக்கப்பாட்டினை பராமரித்தல்

சூழல் இணக்கப்பாடு ஒரு முன்னுரிமையாக உள்ளது. ICAO இன் CORSIA, ஐக்கிய இராச்சிய உமிழ்வுகள் வர்த்தகத் திட்டம் (ETS), மற்றும் EU ETS போன்ற திட்டங்களினூடாக சர்வதேச வான்பயணவியல் நியமங்களை நாம் தொடர்ச்சியாக சந்திக்கின்றோம். உள்ளூர் ரீதியாக, நாம் இலங்கையின் தேசிய சூழல் சட்டத்துடன் சீரமைவதுடன், குறிப்பாக எமது பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் பிரித்துச் சீராக்கல் வசதியினுள் உள்ள கழிவுநீர் முகாமைத்துவம் மற்றும் இரசாயன மற்றும் ஆபத்தான கழிவு முகாமைத்துவம் போன்றவற்றுடனாகும்.

பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் சமூக ஈடுபாடு

எமது பிரதான செயற்பாடுகள் கட்டுப்பாடான விமானநிலைய சூழல்களில் இடம்பெற்றாலும், உள்ளூர் சூழல் தொகுதியினை பராமரிப்பதற்கு நாம்

கடப்பாட்டுடன் உள்ளோம். எமது கட்டுநாயக்க செயற்பாடுகளுக்கு அருகிலுள்ள நீர்கொழும்பு கடல்வாய்க்கால் சதுப்புநில சூழல்தொகுதியினை பாதுகாப்பதற்கு துணையளிப்பதற்காக நாம் இலங்கை வனப் பாதுகாப்பு திணைக்களத்துடன் கூட்டு சேர்ந்துள்ளோம். இது பல்லுயிர் விழிப்புணர்வினை ஊக்குவிக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சமூக ஈடுபாட்டு முன்னெடுப்புகளை உள்ளடக்குகின்றது.

பல்லுயிர் பாதுகாப்பு என்பது எமது சூழல் மூலோபாயத்தில் ஒரு மத்திய கருப்பொருளாகும். நாம் காலப்போக்கில் எமது பங்குடைமைகளை பாதுகாப்பு பங்காளிகள், வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றுடன் விரிவாக்குவதற்கு உள்ளோம்.

காலநிலை இடர்களுக்கு பொருத்தமாக்குதல்

தீவிரமான காலநிலை நிகழ்வுகள் மற்றும் காலநிலை தொடர்பான இடையூறுகளை முகாமைப்படுத்துவதற்கு நாம் நிலையான செயற்பாட்டு செயன்முறைகளை (SOPs) விருத்திசெய்துள்ளோம். எமது மேம்பட்ட விமானப்பயண திட்டமிடல் முறைமைகள் மற்றும் செயன்முறைகள் என்பன பாதகமான நிலைமைகளுக்கு பதிலளிக்கும் விதமாக பாதைகளை உகப்பாக்குவதற்கு எம்மை இயலுமையாக்குவதுடன் பயணிகள் பாதுகாப்பு செயற்பாட்டு தொடர்வினை உறுதிசெய்கின்றது.

நிலைபேறுடைமைக்காக புத்தமைத்தல்

சூழல் முன்னேற்றத்தின் ஒரு முக்கிய இயக்கியாக புத்தாக்கம் காணப்படுகின்றது. விருது வென்ற ‘மதக்க’ மீள்பயன்பாட்டுத் திட்டத்தின் தொடர்ச்சியான வெற்றியானது, இது இலங்கை வடிவமைப்பு விழா 2025 இல் இடம்பெற்றது, எவ்வாறு நிலைபேறுடைமை மற்றும் படைப்பாற்றல் என்பன சூழல் மற்றும் வணிகநாமப் பெறுமதி ஆகிய இரண்டையும் வழங்குவதற்கு குறுக்கீடு செய்யலாம் என்பதை வெளிக்காட்டுகின்றது.

இலங்கை வடிவமைப்பு விழா 2025 இல் இடம்பெற்ற விருது பெற்ற “மாதகா” அப்சைக்கிள் திட்டம்

எமது சூழல் கொள்கையானது தற்போது திணைக்களங்கள் புதிய திட்ட மதிப்பீடுகளில் நிலைபேறுடைமையினை கருத்திலெடுத்தல் மற்றும் செயற்பாட்டு மற்றும் மூலோபாய தீர்மானம் மேற்கொள்வதில் சூழல் பொறுப்பின் பங்கினை பலப்படுத்தும் தேவையினைக் கொண்டுள்ளன.

வணிக வகுப்பில் மீள்சுழற்சி செய்யப்பட்ட PET பிளாஸ்டிக்கிலிருந்து உருவாக்கப்பட்ட புதிய சூழல் தோழமையான தலையணை உறைகள் மற்றும் தலைக்கவச உறைகள் (இருக்கைகளின் பின்புறக் காப்புறைகள்) என்பவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் சௌகரியம் நிலைபேறுடைமையினை சந்திக்கின்றது. மேலும், சூழல் தோழமையான, மீளுருவாக்கப்பட்ட நைலோனிலிருந்து செய்யப்பட்ட பாரம் குறைவான வானூர்தியின் தரைவிரிப்பின் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிறுவுதலானது விமானத்தின் ஒட்டுமொத்த சுமையினை குறைக்கும் மற்றும் அதன்பின்னர் எரிபொருள் செலவினத்தை குறைக்கும் நோக்கினைக் கொண்டதாகும். இது புதைபடிம எரிபொருளிலிருந்து பெறப்படும் புதிய நைலோனின் பயன்பாட்டினைக் குறைத்து சூழலிலிருந்து கழிவு அகற்றலுக்கு துணை புரிகின்றது. விமான நிறுவனத்தின் இந்த இரண்டு புத்தாக்கமான முயற்சிகள் அதன் செயற்பாடுகளில் நிலைபேறுடைமையினை ஊக்குவிக்கும்.

முன்னோக்கிய பார்வை

2025 இல் சூழல் முகாமைத்துவ அமைப்புமுறையினை அமுலாக்குவதற்கு திட்டமிடும்போது நாம் சர்வதேச நியமங்களுடன் சீரமைவாக எமது சூழல் செயற்திறனை முதிர்ச்சியடைவதற்கு கடப்பாட்டுடன் உள்ளோம். உமிழ்வுகள் குறைப்பு மற்றும் வளங்களது உகப்பாக்கத்திலிருந்து வெளிவாரி பங்குடைமைகள் மற்றும் பணியாட்கள் ஈடுபாடு வரைக்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மிகவும் நிலைபேறுடைய, பொறுப்பான வான்பயணவியல் எதிர்காலத்திற்கான அடித்தளத்தினை தொடர்ச்சியாக இடுகின்றது.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

நிதியியல் மூலதனம்

செயற்பாட்டு கட்டுப்பாடுகள் மற்றும் மூலோபாய செலவின முகாமைத்துவ முயற்சிகளினால் குறிக்கப்பட்ட நிதியாண்டு 2024/25 விமான நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயற்திறனை வடிவமைத்தது. வான் பயணத்தில் உலகளாவிய மீட்டல் காணப்பட்டபோதிலும், விமான நிறுவனமானது பின்வரும் காரணங்களினால் துறைசார் மீட்டெழுச்சியினை முழுவதும் பயன்படுத்துவதற்கான அதன் ஆற்றலை கட்டுப்படுத்தும் பல சவால்களுக்கு முகங்கொடுத்தது. அவை பூகோள அரசியல் பதற்றம், வழங்கல் சங்கிலி சவால்கள், விமானத்தொகுதி பற்றாக்குறைகள் மற்றும் வானூர்தி பராமரிப்பு தாமதங்கள் என்பனவாகும். எவ்வாறாயினும், தீர்வுகளை கண்டுபிடித்து துறையின் மீட்டெழுச்சியினை பயன்படுத்துவதற்கான கம்பனியின் அசைக்கவியலா மீளெழுச்சியானது செயற்பாடுகளை முகாமைப்படுத்தி சேவைத் தொடர்வினை பராமரிப்பதனை இயலுமையாக்கியது.

பயணிகள் வருவாயில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டபோதிலும், இது குறைக்கப்பட்ட கொள்திறன் மற்றும் விளைவுகளினால் பிரதானமாக இயக்கப்பட்டது, குழுமமானது நிதிச் செலவினங்கள் மற்றும் வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 29.7 பில்லியனை பதிவு செய்தது. இந்த விளைவிற்கு பின்வருவன பெருமளவில் துணைபுரிந்தன. குறைவடைந்த எரிபொருள் விலைகள், அதன் மூலோபாய வணிக அலகுகளிடமிருந்து (SBUs) திடமான செயற்திறன், குறிப்பாக வான் முனையம் மற்றும் ஏனைய சேவைகளிலிருந்தாகும். எவ்வாறாயினும், குழுமமானது ஒரு தேறிய நட்டமாக ரூபா 2.7 பில்லியனை பதிவு செய்தது. இது பிரதானமாக வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களிலான பரிமாற்றல் இலாபம்/(நட்டம்) உள்ளடங்கலான தேறிய நிதிச் செலவினங்களான ரூபா 31.6 பில்லியன் ஆல் இயக்கப்பட்டது.

குழுமத்தின் நிதிச் செயற்திறன்	2024/25	2023/24	வேறுபாடு	
	ரூ. மில்.	ரூ. மில்.	ரூ. மில்.	%
வருவாய்	303,094	339,592	(36,498)	(11)
செயற்பாட்டுச் செலவினங்கள்	(274,104)	(301,357)	(27,253)	9
பிற வருமானம் மற்றும் ஆதாயங்கள்	1,661	1,486	175	12
பரிமாற்றல் இலாபங்கள்/(நட்டங்கள்) மற்றும் அட்டவணைப்படுத்தாத பழுதுபார்த்தல் செலவினங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)	30,651	39,720	(9,069)	(23)
வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் நீங்கலான பரிமாற்றல் இலாபம் /(நட்டம்)	1,262	1,943	(681)	(35)
Neo என்ஜின்களின் அட்டவணைப்படுத்தப்படாத பழுதுபார்த்தல் செலவினம்	(2,228)	(11,572)	(9,344)	81
பரிமாற்றல் இலாபங்கள்/(நட்டங்கள்) மற்றும் அட்டவணைப்படுத்தாத பழுதுபார்த்தல் செலவினங்களுக்கு பிந்திய செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)	29,685	30,091	(406)	(1)
உடன்படிக்கை மீறலிலான அபராதக் கட்டணங்கள்	-	(11,837)	(11,837)	100
நிதிச் செலவு மற்றும் வரிக்கு முந்திய இலாபம்	29,685	18,254	11,431	63
தேறிய நிதிச் செலவினம்	(31,574)	(9,847)	21,727	(221)
வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)	(1,889)	8,407	(10,296)	(122)
வருமான வரிச் செலவினம்	(846)	(482)	364	(76)
ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)	(2,735)	7,925	(10,660)	(135)

உழைப்புகள்

நிதியாண்டில், சர்வதேச பயணிகள் போக்குவரத்துடன் உலகளாவிய வான்பயணவியல் துறையானது ஒரு திடமான மீட்டெழுச்சியினை கண்டது. இந்த உலகளாவிய உத்வேகத்தினை பிரதிபலிக்கும் விதமாக இலங்கையின் சுற்றுலாத் துறையானது 2024 இல் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்ததுடன், 2.1 மில்லியன் சர்வதேச வருகையாளர்களை கவர்ந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 38% அதிகரிப்பாகும்.

அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகை காணப்பட்டபோதிலும், விமான நிறுவனமானது 3.5 மில்லியன் பயணிகளுக்கு சேவையாற்றியதுடன், இது முன்னைய ஆண்டிலிருந்து 4% வீழ்ச்சியாகும். நிதியாண்டு 2024/25 இற்கான பயணிகள் வருவாயானது ரூபா 234.5 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது முன்னைய ஆண்டுடன் (2023/24: ரூபா 276.2 பில்லியன்) ஒப்பிடும்போது 15% வீழ்ச்சியாகும். எவ்வாறாயினும் இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக பின்வரும் காரணிகளைக் குறிப்பிடலாம். விளைவுகளில் காணப்பட்ட உலகளாவிய வீழ்ச்சிகள்

மற்றும் வானூர்திகளின் கிடைப்புத்திறனிலான வரையறையின் நிமித்தம் கொள்திறன் கட்டுப்பாடுகள், பராமரிப்பிலிருந்து வானூர்திகளை விடுவிப்பதிலான தாமதங்கள், மற்றும் என்ஜினியரிங் தொடர்பான இடையூறுகள் என்பவற்றை வருடம் முழுவதும் விமானநிறுவனம் அனுபவித்தது. விமான நிறுவன மட்டத்தில், கிடைப்புத்திறன் இருக்கை கிலோமீற்றர்கள் (ASK) வருடத்திலிருந்து வருடம் 5% ஆல் வீழ்ச்சியடைந்தது, குறிப்பாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் 15% வீழ்ச்சி காணப்பட்டது. இவை மத்திய கிழக்கு போக்குவரத்து ஓட்டங்களில் பெருமளவில் தங்கியிருக்கும் தென் இந்திய பயண இலக்குகளுக்கான வலையமைப்பு இணைப்புகளை பாதித்தது.

குழுமத்தின் சரக்கு வருவாயானது 2024/25 நிதியாண்டில் 2% ஆல் வளர்ச்சியடைந்து ரூபா 32 பில்லியனை எட்டியது. இந்த வளர்சியானது பிரதானமாக விளைவிலான 9% அதிகரிப்பினால் இயக்கப்பட்டதுடன், இது இயக்காற்றலான விலையிடல் மூலோபாயத்தின் அமுலாக்கலினூடாக இயலுமையாக்கப்பட்டது. கேள்விப் போக்குகள், கொள்திறன் கிடைப்புத்திறன், பருவகால தளம்பல்கள் மற்றும் வாடிக்கையாளர் கூறுபடுத்துதல் போன்ற காரணிகளின் அடிப்படையில் கட்டணங்கள் அமைக்கப்பட்டதுடன், விமான நிறுவனமானது குறிப்பாக உச்சநிலையற்ற காலங்களின்போது உயர் விளைவுகளை வெற்றிகரமாக கைப்பற்றியவேளை இட பயன்பாட்டினை உகப்பாக்கியது.

மையமான பயணிகள் மற்றும் சரக்கு செயற்பாடுகளுக்கு அப்பால், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் மூலோபாய வணிக அலகுகளிலிருந்து கணிசமான பெறுமதியினை பெற்றதுடன், இவை வருவாய் வளர்ச்சி மற்றும் மீளெழுச்சியினை தொடர்ச்சியாக வெளிக்காட்டின. மீளாய்வாண்டின்போது, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஒரே தரை கையாளுபவராக, கம்பனியானது வாடிக்கையாளர் மையமான அனுபவத்தை வழங்குவதற்கு அதன் சேவைத் தரத்தினை மேம்படுத்துவதில் கணிசமான முன்னேற்றங்களை கண்டது. இதன் விளைவாக, விமான நிறுவனமானது வான் முனையம் மற்றும் தொடர்புடைய சேவைகளிலிருந்து ஒரு மொத்த வருவாயாக ரூபா 24.9 பில்லியனை உருவாக்கியதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது (2023/24: ரூபா 21.2 பில்லியன்) 17% அதிகரிப்பாகும். ஏனைய மூலங்களிலிருந்து உருவாக்கப்பட்ட வருவாயும் வருடத்திலிருந்து வருடம் 10% வளர்ச்சியைக் கண்டது.

செலவினம்

குழு மட்டத்தில் பரிமாற்றல் நட்டம் /இலாபம் மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத பழுதுபார்த்தல் செலவினத்திற்கு முன்னரான செலவினங்கள் 9% ஆல் வீழ்ச்சியடைந்தது. குழுமத்தின் செலவினங்களது விரிவான பிரிவுகள் கீழ்காணும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

	2024/25		2023/24		வேறுபாடு	
	ரூ. மில்.	%	ரூ. மில்.	%	ரூ. மில்.	%
வானூர்தி எரிபொருள் கிரயம்	91,687	30	115,119	35	(23,432)	(20)
பணியாட்கள் செலவினம்	32,799	11	32,261	10	538	2
விமானநிலைய, பயணவழி மற்றும் பயணிகள் செலவினங்கள்	38,601	13	39,187	12	(586)	(1)
வானூர்தி பராமரிப்பு மற்றும் பிரித்து சீராக்கல் செலவினங்கள்	43,783	14	40,359	12	3,424	8
பெறுமானத்தேய்வு/பெறுமதி குறைப்பு	15,975	5	14,138	4	1,837	13
குறுங்கால குத்தகை வானூர்தி மற்றும் உதிரி இயந்திரங்களிலான வாடகைகள்	3,556	1	10,723	3	(7,167)	(67)
விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றம் விளம்பரச் செலவினங்கள்	20,286	7	22,082	7	(1,796)	(8)
குழுவினர் செலவினங்கள்	9,469	3	9,701	3	(232)	(2)
ஏனைய செற்பாட்டுச் செலவினங்கள்	17,949	6	17,786	5	163	1
செயற்பாட்டுச் செலவினங்கள் (பரிமாற்றல் நட்டம்/இலாபம் மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத பழுதுபார்த்தல் செலவினத்திற்கு முன்னர்)	274,104	89	301,357	90	(27,253)	(9)
வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் நீங்கலான பரிமாற்றல் இலாபம்/(நட்டம்)	(1,262)	(0.4)	(1,943)	(1)	(681)	35
Neo என்ஜின்களின் அட்டவணைப்படுத்தப்படாத பழுதுபார்த்தல் செலவினங்கள்	2,228	1	11,572	3	(9,344)	(81)
செலவினங்கள் (பரிமாற்றல் நட்டம்/இலாபம் மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத பழுதுபார்த்தல் செலவினத்தின் பின்னர்)	275,070	89	310,986	93	(35,916)	(12)
உடன்படிக்கை மீறலிலான அபராதக் கட்டணம்	-	-	11,837	4	(11,837)	(100)
நிதிச் செலவு மற்றும் வரி விதிப்பிற்கு முன்னரான செலவினங்கள்	275,070	89	322,823	97	(47,753)	(15)
தேறிய நிதிச் செலவினம்	31,574	10	9,847	3	21,727	221
வருமான வரிச் செலவினம்	846	0.3	482	0.1	364	76
மொத்தச் செலவினங்கள்	307,490	100	333,152	100	(25,662)	(8)

வானூர்தி எரிபொருள் செலவினங்கள் குழுமத்தின் மொத்த செலவினத்தில் 30% இற்கு கணக்கீடு செய்தது. மீளாய்வாண்டின்போது, வானூர்தி எரிபொருள் செலவினமானது 2023/24 உடன் ஒப்பிடும்போது 20% ஆல் வீழ்ச்சியடைந்தது. இதற்கு பிரதானமாக முன்னைய ஆண்டின் உலகளாவிய எரிபொருள் US கெலன் ஒன்றுக்கான விலையானது USD 2.72 இலிருந்து US கெலன் ஒன்றுக்கான விலை USD 2.46 ஆக கணிசமாக குறைவடைந்தது காணப்பட்டதுடன், அத்துடன் குறைவான செயற்பாடுகளிலிருந்து விளைந்த குறைவான பயன்பாடும் ஒரு காரணியாயிருந்தது.

வானூர்தி மற்றும் உதிர் என்ஜின்களுக்கான குறுங்கால குத்தகை வாடகைச் செலவினங்கள் முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 67% ஆல் வீழ்ச்சியடைந்தது. அகன்ற அமைப்புடைய வானூர்திகளுக்கு துணையளிக்கும் உதிரி என்ஜின்களது கிடைக்காமையின்

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

நிதியியல் மூலதனம் தொடர்ச்சி.

காரணமாக வானூர்தி மற்றும் உதிரி என்ஜினுக்கான விமானக்குழு, பராமரிப்பு மற்றும் காப்புறுதியுடன் வழங்கப்படும் குத்தகைக்காக 2023/24 இல் ரூபா 10.7 பில்லியனை வானூர்தி மற்றும் உதிரி என்ஜின்களுக்கான குறுங்கால குத்தகை வாடகைச் செலவினமாக செலுத்தியது. கம்பனி தற்போது அகன்ற அமைப்புடைய வானூர்திக்கான என்ஜினை பெற்றுக்கொள்ளக் கூடியதாய் இருந்தனால், செயலாற்றிய விமானக்குழு, பராமரிப்பு மற்றும் காப்புறுதியுடன் வழங்கப்படும் குத்தகை வானூர்தியினை திருப்பியனுப்பியது. மீளாய்வாண்டின்போது, மேம்பட்ட உறுதுணையினூடாக மேம்பட்ட உதிரி என்ஜின்களது கிடைப்புத்திறனானது விமான நிறுவனம் குத்தகை என்ஜின்களில் தங்கியிருப்பதனை குறைப்பதற்கு இயலுமையாயிருந்தது. இது குத்தகை தொடர்பான செலவினங்களில் ஒரு வீழ்ச்சியினை ஏற்படுத்தியது. மேலாக, மேம்பட்டு செயற்படக்கூடிய விமானத்தொகுதி கிடைப்புத்திறனானது விமானக்குழு, பராமரிப்பு மற்றும் காப்புறுதியுடன் வழங்கப்படும் குத்தகை வானூர்திக்கான அவசியத்தினை குறைத்து ஒட்டுமொத்த செலவுச் சேமிப்பிற்கு மேலும் பங்களித்தது.

மீளாய்வாண்டின்போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் எயார்பஸ் A320/321 Neo வானூர்தி என்ஜின்களின் அட்டவணைப்படுத்தப்படாத பழுதுபார்த்தல் தொடர்பாக அதன் ஏற்பாட்டினை அதிகரித்தது. 2023/24 இல் ஒரு ஏற்பாடாக ரூபா 11.6 பில்லியன் அங்கீகரிக்கப்பட்டது. மெய்யான பழுதுபார்த்தல் செலவினம் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட எதிர்வுகூறல்களின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளைத் தொடர்ந்து இந்த ஏற்பாடானது 2024/25 இல் மேலும் ரூபா 2.2 பில்லியனால் அதிகரிக்கப்பட்டது. கம்பனியின் செலவுச் சிக்கன நிகழ்ச்சி நிரலுக்கு சீரமைவாக, செயற்பாட்டு செலவினங்களை குறைப்பதற்கு கடுமையான வழிமுறைகள் அமுலாக்கப்பட்டன. இந்த முயற்சிகளின் ஒரு முக்கிய முன்னெடுப்பாக ஒரு மூலோபாய உருமாற்றல் திட்டத்தின் ஆரம்பம் காணப்பட்டது. இது மிகவும் மீளெழுச்சியான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடைமுறையிலுள்ள செலவழித்தல் போக்குகளுக்கு சவால்விடுக்கும் நோக்கினைக் கொண்ட ஒரு ஆழமான மீளாய்வாகும். இத்திட்டமானது செலவுகளைச் சிறுமமாக்குதல், வளப்பயன்பாட்டினை உகப்பாக்குதல், செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துதல், மற்றும் ஒட்டுமொத்த துறைசார் போட்டித்திறனை பலப்படுத்துவதில் முன்னிறுத்தம் செய்தது. அதேநேரத்தில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பயன்திறனின்மைகளை இனங்காண்பதற்கு மற்றும் அதனுடனிணைந்த இடர்களை தணிப்பதற்கு வழங்கல் சங்கிலி செலவினத்தில் ஒரு துல்லியமான மதிப்பீட்டினை பொறுப்பேற்றது.

நிதி நிலைமை

2025 மார்ச் 31 ஆம் திகதி நிலவரப்படி, குழுமம் 189.3 பில்லியன் ரூபா மொத்த சொத்துக்களை அறிவித்தது, இதில் பயன்பாட்டு உரிமை சொத்துக்கள் ரூபா 64.8 பில்லியனையும் உள்ளடக்கியது. மொத்த பொறுப்புகள் ரூ 568.8 பில்லியனாக இருந்தன, இதில் அரச வங்கி கடன்களில் ரூ 91.3 பில்லியன் மற்றும் 175 மில்லியன் அமெரிக்க டாலர் இறையாண்மை உத்தரவாத சர்வதேச முறி ஆகியவை அடங்கும். அரச வங்கிக் கடனைப் பொறுத்தவரையில், தற்போதைய கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக, ஸ்ரீலங்கன் விமான சேவையின் சார்பாக ஐந்து வருட காலப்பகுதிக்கு இந்த கடப்பாடுகளை திருப்பிச் செலுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் (GoSL) உறுதியளித்துள்ளது. இறையாண்மை உத்தரவாதம் அளிக்கப்பட்ட சர்வதேச முறிகளின் மறுசீரமைப்பு தற்போது இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் நடந்து வருகிறது.

ஏப்ரல் மற்றும் செப்டம்பர் 2024 மற்றும் ஜனவரி 2025 இல் கம்பனியானது இலங்கை அரசாங்கத்திடமிருந்து ரூபா 6.3 பில்லியனை உரித்துவ முதலீடுகளாகக் பெற்றுக்கொண்டது. இது அவசரமான செயற்பாட்டு காசுப் பற்றாக்குறையினை விளித்துரைப்பதற்கும் மீள்கட்டமைப்பானது முடிவுறுத்தப்படும்வரை ஒரு இடைக்கால உறுதுணையாக அரச வங்கிக் கடன்பெறுகை பொறுப்புக்களின் வட்டி கடப்பாடுகளைச் சந்திப்பதற்கும் ஆகும்.

காசு நிலைமை

நிதியாண்டின்போது, குழுமத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் நேர்மறையான ரூபா 64.2 பில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 24.8 பில்லியன் தொகையான நிதிச் செலவினத்தை தீர்த்ததன் பின்னர் மற்றும் குத்தகை மற்றும் ஏனைய வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களின் மீள்செலுத்தல் உள்ளடங்கலான நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 38.9 பில்லியனை பதிவுசெய்ததன் பின்னர் குழுமமானது காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் ஒரு தேறிய வீழ்ச்சியாக ரூபா 3 பில்லியனை அறிக்கையிட்டது.

துணை நிறுவனத்தின் நிதிச் செயற்திறன்

SLC இவ்வாண்டின்போது ஒரு செயற்பாட்டு இலாபமாக ரூபா 5.9 பில்லியனை பதிவுசெய்ததுடன், இது முன்னைய நிதியாண்டின் (நிதியாண்டு 2023/24 ரூபா 5.8 பில்லியன்) உடன் ஒப்பிடும்போது 2% அதிகரிப்பாகும். இவ்வாண்டின்போதான தேறிய இலாபம் ரூபா 4.8 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது முன்னைய நிதியாண்டுடன் (நிதியாண்டு 2023/24 ரூபா 4.1 பில்லியன்) ஒப்பிடும்போது 17% அதிகரிப்பாகும். இந்த சாதகமான விளைவுகளுக்கு பயணிகள் வருகையிலான கணிசமான அதிகரிப்பு மற்றும் புதிய விமானநிறுவனங்களின் செயற்பாடுகளின் ஆரம்பம் என்பவற்றுடன் சாதகமான பரிமாற்றல் வீத தளம்பல்கள் பெருமளவில் பங்களிப்பு செய்தன.

SLC விமானத்தினுள்ளான உணவளித்தல், விமான நிலைய உணவகங்கள் (பொது மற்றும் இடங்கடப்பு) போன்றவற்றிலிருந்து ஒரு புரள்வாக ரூபா 14.1 பில்லியனை (2023/24 ரூபா 14 பில்லியன்) பதிவுசெய்தது. விமானச் சமையலறையிலிருந்தான வருவாயானது USD நாணயத்தைப் பொறுத்தளவில் 8% ஆல் பதிவு செய்தது (நிதியாண்டு 2023/24 USD 32 மில்லியன்). இந்த அதிகரிப்பானது பிரதானமாக உணவுகளின் விலை அதிகரிப்பிலிருந்து எழுந்தது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தினுள்ளான உணவளிப்பதில் பிரதான வாடிக்கையாளராக மொத்த விமானத்தினுள்ளான உணவளித்தல் புரள்வில் 58% இற்கு பங்களிப்பு செய்ததுடன், இவ்வாண்டின்போது தயாரிக்கப்பட்ட உணவுகளின் மொத்த எண்ணிக்கையில் 68% இனை பயன்படுத்தியது.

கண்ணோட்டம்

குழுமமானது இறுக்கமான நிதியியல் நிலைமைகளின் கீழ் தொடர்ந்தும் செயலாற்றும்வேளை, 2024/25 இல் இடப்பட்ட அஸ்திவாரமானது சிறந்த நிதியியல் மீளெழுச்சிக்கான செலவு உகப்பாக்கம் மற்றும் அதிகரித்த வருவாயில் முன்னிறுத்தம் செய்தது. மேம்பட்ட கண்காணிப்பு பொறிமுறைகள், வலுவான திரவத்தன்மை முகாமைத்துவம், மற்றும் தொடர்ச்சியான செயற்பாட்டு வினைத்திறன்கள் என்பன வாடிக்கையாளர் திருப்தியினை மேம்படுத்தும்வேளை விமான நிறுவனம் ஒரு நிலைபேறான நிதியியல் மீட்பு நோக்கி முயற்சிக்கும்போது 2025/26 மிகவும் முக்கியமானதாகும்.

சுருக்கமாகச் சொல்வதாயின், ஆறு மூலதனங்களிடையே எமது செயற்திறனானது பெறுமதி உருவாக்கத்திற்கு ஒரு சமநிலையான மற்றும் முன்னோக்கிய அணுகுமுறையினை வெளிப்படுத்துகின்றது. எமது நிதியியல் மீளெழுச்சி, செயற்பாட்டு சொத்துக்கள், அறிவுசார் ஆற்றல்கள், மக்கள் அபிவிருத்தி, பங்காளிகள் உறவுகள் மற்றும் சூழல் பாரபத்தியம் என்பவற்றை தொடர்ச்சியாக பலப்படுத்துவதன் மூலம் நாம் விமானநிறுவனத்தை நிலைபேறுடைய நீண்டகால வளர்ச்சிக்கு நிலைப்படுத்துகின்றோம். இந்த ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகள் அளவிடக்கூடிய தாக்கத்தினை வழங்குவதற்கான எமது கடப்பாட்டினை வலியுறுத்தும்வேளை ஒரு வளர்ந்துவருகின்ற உலகளாவிய நிலத்தோற்றத்தில் புத்தாக்கம், இணக்கத்திறன் மற்றும் பொறுப்புள்ள ஆளுகை என்பவற்றை கடைப்பிடிக்கும்.

பெருநிறுவன ஆளுகை அறிக்கை

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் சபை மற்றும் முகாமைத்துவமானது கம்பனியின் செயற்திறனது நிலைபேறுடைமைக்கு திடமான பெருநிறுவன ஆளுகை அவசியம் என நம்புகின்றது. அத்துடன் பணிப்பாளர்கள் சபையானது அடிப்படையில் பாரபத்திய பங்களிப்பினை நிறைவேற்றுபவர்களாக அரச உடைமை நிறுவனங்களின் ஒரு அவசியமான தேவைப்பாடாக சிறந்த ஆளுகை நடைமுறைகளை கடைப்பிடித்தல் காணப்படுகின்றது.

நியாயத்தன்மை, பொறுப்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் ஒரு ஆரோக்கியமான சமநிலையினை மேம்படுத்தி பராமரிப்பதற்காக பெருநிறுவன ஆளுகைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளது நியமங்களை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு கம்பனியானது கடப்பாடுடையதாயுள்ளது.

பணிப்பாளர்கள் சபையினால் அமுலாக்கப்பட்ட அதன் பெருநிறுவன ஆளுகையின் ஒரு பகுதியாக பின்வரும் சட்டம், கோவை மற்றும் மனமுவந்த நடைமுறைகள் கட்டமைப்புகளை பின்பற்றுவதில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இணங்கியொழுகியுள்ளது.

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

- கம்பனியின் அமைப்பு அகவிதிகள்
- 16 நவம்பர் 2021 திகதியிடப்பட்ட அரச நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் கீழ் வழங்கப்பட்ட அரச உடைமை நிறுவனங்களுக்கான பெருநிறுவன ஆளுகையிலான வழிகாட்டிகள் மற்றும் செயற்பாட்டு கையேடு
- உள்ளகக் கம்பனி விதிகள் மற்றும் செயன்முறைகள் மற்றும் துறை குறிப்பிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள்

பணிப்பாளர்கள் சபை

சபையின் தொகுப்பு

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், இலங்கை அரசாங்கமானது திறைசேரிக்கான செயலாளரூடாக பணிப்பாளர்கள் சபையினை நியமிக்கின்றது. இது கம்பனியின் 50 சதவீதமான பங்குகளை அரசாங்கம் வைத்திருக்கும் வரை செயற்படும். நிறுவனங்களின் பொது உரித்துடைமையானது அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால், பணிப்பாளர்கள் சபையானது அரசாங்கத்திற்கு நேரடியாகப் பொறுப்புக்கூறல் வேண்டும்.

சபையின் பங்கு

கம்பனியின் குறிக்கோள்களை அடைவதில் துணைபுரிவதற்கு சபையானது மூலோபாய வழிகாட்டலை வழங்குகின்றது. அத்துடன் மூலோபாயத் திட்டமானது தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் சீரமைவாயிருப்பதனை உறுதிசெய்கின்றது.

சபையானது முகாமைத்துவத்திற்கிடையே பொறுப்புக்களில் ஒரு தெளிவான வேறுபடுத்தலை மேற்கொள்வதுடன் இது சமநிலை மற்றும் அதிகார அமைப்பிற்கு வசதியளிக்கின்றது.

சபையின் முக்கிய பொறுப்புக்களாவன

- மூலோபாய பணிப்புரைகளை பயனுறுதியுடன் அமுலாக்குவதனை வசதியளிப்பதற்காக விசேடமாக செயற்பாட்டு தீர்மானங்களை மேற்கொள்வதில் முகாமைத்துவத்திற்கு போதுமான அதிகார ஒப்படைப்பினை உறுதிசெய்தல்.
- தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு வசதியளிக்கும் ஒரு திடமான மற்றும் நம்பகத்தன்மையான முகாமைத்துவ தகவல் அமைப்பு முறையினை கம்பனி வைத்திருப்பதனை உறுதிசெய்தல்.
- கணக்கீட்டு மற்றும் நிதியியல் அறிக்கையிடல் அமைப்புமுறைகள், இடர் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு கட்டுப்பாடு போன்ற கட்டுப்பாட்டு அமைப்பு முறைகளின் நேர்மையினை உறுதிசெய்தல் மற்றும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் பொருத்தமான நியமங்களுடனான இணக்கப்பாட்டினை நிலைநிறுத்துதல்.
- செயற்பாடு, நிர்வாக மற்றும் நிதியியல் செயன்முறைகள் உள்ளடங்கலான முக்கிய செயலாக்கம் மற்றும் செயன்முறைகள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு காலாகாலம் இற்றைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.
- கம்பனியின் இணையத்தளத்தினூடாக ஏதேனும் நியதிச்சட்ட அல்லது செயற்பாட்டு தேவைப்பாடுகளை சமரசம் செய்யாது அதன் பங்காளிகளுக்கு ஆகக்கூடிய நிதியியல் மற்றும் நிதியல்லா தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.

பணிப்பாளர்கள் அவர்களது கடமைகளை செயலாற்றுவதற்காக நேரகாலத்துடனான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்குவதற்காக பின்வரும் செயன்முறைகள் காணப்படுகின்றன

- அனைத்து பணிப்பாளர்களும் துல்லியமான, பொருத்தமான, நேரத்திற்கேற்ற, தெளிவான மற்றும் சமநிலையான தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்
- குழுக்கள், பணிப்பாளர்கள் சபை மற்றும் ஏனைய முக்கிய முகாமைத்துவத்திற்கிடையே தகவல்கள் பாய்ச்சப்படுவதற்காக கம்பனியின் செயலாளர் தொடர்புகொள்ளல் புள்ளியாகச் செயற்படுகின்றார்.
- பிரதம நிறைவேற்று அதிகாரி உடன் உரிய பிரிவுகளின் தலைமைகள் அவர்களது சமர்ப்பிப்புகளை சபைக்கு முன்னிலைப்படுத்தி சபையினால் வேண்டப்படும் அவசியமான தெளிவாக்கல்களை வழங்குகின்றார்கள்.
- மேலாக, கம்பனியின் நிலைபேறுள்ள முன்னெடுப்புகளுக்கு அமைவாக அனைத்து சபைப் பத்திரங்களும் இலத்திரணியல் வடிவத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

சபையின் செயற்பாடுகள் வலுவான தகவல் தொழில்நுட்பத்தினால் துணையளிக்கப்படுவதுடன், இது சபையின் அங்கத்தவர்கள் அவர்களது சபை பத்திரங்களை ஒரு பாதுகாப்பான இணைப்பினூடாக அணுகுவதனையும் தொலைவிலிருந்து கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் இயலுமையாக்குகின்றது.

சபை உபகுழுக்களுக்கான ஒப்படைகள்

சிறந்த ஆளுகை மற்றும் சிறந்த நடைமுறைகளை நிறைவேற்றுவதற்காக விமான நிறுவனமானது சபை உபகுழுக்களை நிறுவியுள்ளது. இந்த குழுக்கள் ஒப்படைக்கப்பட்ட குழுக்களுக்கு நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தினை கொண்டு வரக்கூடிய பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது. கடமைகள் உத்தியோகபூர்வ வரையறை நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. சபை உபகுழுக்களுக்கான செயலாளர் கம்பனியின் செயலாளர் ஆவார்.

வரையறை நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களது அதிகாரம் மற்றும் பொறுப்புக்கூறலினுள் வருகின்ற விடயங்களை கருத்திலெடுப்பதற்காகவும் கலந்துரையாடுவதற்காகவும் குழுக்கள் வழக்கமாக கூடுகின்றன. அவர்களது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் வழக்கமாக சபைக்கு அறிக்கையிடப்படுகின்றன.

பணிப்பாளர்களுக்கான இழப்பெதிர்காப்பு

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் பிரகாரம், கம்பனியின் பணிப்பாளர்கள் என்ற அவர்களது தகுதியில் அவர்களது கடமைகளை செயலாற்றுவதன் விளைவாக ஆட்படும் பொறுப்புக்கள் தொடர்பாக சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்கு கம்பனியிலிருந்து பணிப்பாளர்களுக்கு இழப்பெதிர்காப்பு வழங்கப்படுகின்றது. பணிப்பாளர் மோசடியாக அல்லது நேர்மையற்று செயற்பட்டிருக்கின்றார் என்று உறுதிப்படுத்தப்பட்ட அளவிற்கு இழப்பெதிர்காப்பு எவ்வித காப்பினையும் வழங்காது. கம்பனியானது வருடம் முழுவதும் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளது பொறுப்பு காப்புறுதியினை பராமரித்துள்ளது.

தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பங்கு

தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் (பி.நி.அ.) வேறுபட்ட பொறுப்புக்களை பொறுத்தளவில் மூலோபாய மற்றும் செயற்பாட்டு விடயங்களிலான வேறுபாடானது தெளிவாக நிறுவப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் சபையின் தலைவர் ஒரு நிறைவேற்று அதிகாரமற்ற நியமனம் மற்றும் அவர் மூலோபாய விடயங்களில் முன்னிறுத்தம் செய்வதுடன், வணிகம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவினை மேற்பார்வை செய்கின்றார். அவர் சபையின் செயன்முறைகள் பின்பற்றப்படுவதனையும் கூட்டங்களில் அனைத்து சபை அங்கத்தவர்களும் பயனுறுதியுடன் பங்குபற்றுவதனையும் உறுதிசெய்கின்றார்.

பி.நி.அ. வணிகத்தின் நாளாந்த முகாமைப்படுத்தலுக்கும், சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவுக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கும் குழுமத்தின் மூலோபாய மற்றும் செயற்பாட்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் பொறுப்பாளியாவார். கம்பனியின் செயற்திறன், செயற்பாட்டு விடயங்கள் மற்றும் மனித வளங்கள் தொடர்பான ஏதேனும் சிக்கல்களை தலைவர், பி.நி.அ. இனை சந்தித்து வழக்கமாக கலந்துரையாடுகின்றார்.

உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவம்

நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பானாது, நிறுவன இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு, நிதியியல் கட்டுப்பாடு, உள்ளகக் கணக்காய்வு மற்றும் துணையளிக்கும் கொள்கைகள் என்பவற்றால் நிறுவப்பட்டுள்ளது. கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பின் நோக்கமானது செயற்பாடுகள் வினைத்திறனானவை மற்றும் அவை மூலோபாய இலக்குகளுடன் சிறப்பாக ஒருநிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்வதற்காகும். உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பானது சரியான, நம்பகமான, பூரணமான மற்றும் நேரத்திற்கேற்ற நிதி அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவ தகவல்களை உறுதிசெய்வதனை நோக்காகக் கொண்டதாகும். இந்த கட்டமைப்பானது நெறிமுறையான விழுமியங்கள், சிறந்த பெருநிறுவன ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளை ஒப்பளிக்கின்றது.

நியதிச்சட்ட இணக்கப்பாடு

பணிப்பாளர்கள் சபையானது விமான நிறுவனத்தின் பணியாட்கள் தொடர்பான சட்டரீதியான கொடுப்பனவுகள் அனைத்தும் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரைக்கும் திருப்தியடைகின்றார்கள்.

நிறுவன இடர் முகாமைத்துவம்

உலகிலுள்ள மிகவும் இயக்காற்றலான மற்றும் உயர் தளம்பலுடைய துறைகளுள் ஒன்றில் செயலாற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் (ஸ்ரீ.ல.எ.) விரைவாக வளர்ச்சியடையும் மற்றும் எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி தோன்றுகின்ற பரந்தளவிலான இடர்களுக்கு முகங்கொடுக்கின்றது. இந்த சவாலான நிலத்தோற்றத்திற்கு பதிலளிக்கும் விதமாக, ஸ்ரீ.ல.எ. ஒரு விரிவான நிறுவன இடர் முகாமைத்துவக் (நி.இ.மு.) கட்டமைப்பினை நிறுவியுள்ளது. இது முன்முயற்சியாகவும் ஆழமாகவும் அதன் மூலோபாய மற்றும் செயற்பாட்டு நிலையினுள் புதைந்துள்ளது. இடர் முகாமைத்துவத்திற்கான இந்த ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையானது விமானநிறுவனம் தகவலறிந்த தீர்மானங்கள் மேற்கொள்வதற்கும், நிறுவன மீளெழுச்சியினை மேம்படுத்தவும் அனைத்து பங்காளிகளுக்கும் நிலைபேறுடைய பெறுமதி உருவாக்கத்தினை தொடர்வதனையும் இயலுமையாக்குகின்றது.

ஸ்ரீ.ல.எ. இடர் என்பது வெறுமனே தணிக்கவேண்டிய ஒரு அச்சுறுத்தல் அல்ல என்பதை அறிந்துகொண்டுள்ளதுடன், இது நீண்டகால திட்டமிடல் மற்றும் செயற்திறனுக்கு ஒரு முக்கிய உள்ளீடும் ஆகும். விமான நிறுவனத்தின் நி.இ.மு. கட்டமைப்பானது, முன்னணி உலகளாவிய நியமங்களான ISO 31000, COSO கட்டமைப்பு மற்றும் IATA இடமிருந்து துறைசார் குறிப்பிட்ட வழிகாட்டல் என்பவற்றின் மூலம் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளதுடன், வான் பயணவியல் துறையின் சிக்கல்களையும் ஸ்ரீ.ல.எ. இன் செயற்பாட்டு சூழலின் தனித்துவமான பண்புகளையும் பிரதிபலிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டது. இது முழு நிறுவனத்திலும், அனைத்து வணிக அலகுகளிலும் பரந்துள்ளது. முன்னதாகவே இனங்காணல், விரிவான மதிப்பீடு மற்றும் விமான நிறுவனத்தின் மூலோபாயம், நற்பெயர், நிதி நிலைமை அல்லது செயற்பாட்டு தொடர்ச்சி என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இடர்களை உரிய காலத்தில் தவிர்த்தல் என்பவற்றை இயலுமையாக்குகின்றது.

நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறைகளினுள் இடர் சிந்தனையினை முறையாக புகுத்துவதன் மூலம் ஸ்ரீ.ல.எ. இடையூறுகளை எதிர்பார்க்கும் அதன் ஆற்றல், பொறுப்பாக புத்தாக்கத்தினை வழிநடத்துதல் மற்றும் விரைவாகவும் நம்பிக்கையுடனும் உள்ளக மற்றும் வெளிவாரி அதிர்வுகளுக்கு பதிலளிப்பதனையும் மேம்படுத்தும்.

இடர் ஆளுகைக் கட்டமைப்பு

ஸ்ரீ.ல.எ. இன் நி.இ.மு. அமைப்புமுறையின் மையமாக, பொறுப்புக்கூறல், மேற்பார்வை மற்றும் குறுக்குச் செயற்பாட்டு ஒத்துழைப்பு என்பவற்றை உறுதிசெய்யும் நன்கு வரையறை செய்யப்பட்ட ஆளுகைக் கட்டமைப்பு என்பன காணப்படுகின்றன. இந்த அடுக்கான அணுகுமுறையானது நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் இடர் பொறுப்புக்கள் தெளிவாக ஒதுக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்கின்றது:

- **பணிப்பாளர்கள் சபை:** நிறுவனத்தின் இடர் மேற்பார்வைக்கு இயக்குநர்கள் குழு பொறுப்பாகும்.
- **குழும சபை இடர் குழு:** நிறுவனம் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் வியாபார தொழிற்பாடுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பிடுவதற்கும், நிதி மற்றும் நிதிசாரா இரண்டினதும் அத்தகைய இடர்நேர்வுகளின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு இடர்நேர்வுக் குழுவுக்கு சபையினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வாரியக் குழு இடர் குழுவின் விவாதங்கள், செயல்பாடுகளை பாதிக்கும் அபாயங்களின் தாக்கத்தை நிவர்த்தி செய்வதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கும் BOD க்கு உதவ வேண்டும்.
- **பிரதம நிறைவேற்று அதிகாரி (பி.நி.அ.):** மூலோபாய இடர் நிகழ்ச்சி நிரலினை வழிநடத்துபவர், இடர் முகாமைத்துவம் நிறுவன இலக்குகளுடன் சீரமைக்கப்பட்டிருத்தல் மற்றும் அவை தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதனை உறுதிசெய்தல்.
- **இடர் அதிகாரி (முகாமையாளர் குழும இடர் முகாமைத்துவம்):** இடர் முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் கட்டமைப்புகளின் குழும வாரியான அமுலாக்கலினை மேற்பார்வை செய்தல், பிரிவுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கு வசதியளித்தல்.
- **வணிகத் தலைமை அலகுகள்:** பிரதான இடர் உடைமையாளர்களாக செயற்படுதல், நாளாந்த இடர் இனங்காணல், தணிப்பு, உயர்வடைதல் மற்றும் அவர்களது செயற்பாட்டு களங்களினுள் இடர்களை அறிக்கையிடுதல் என்பவற்றுக்கு பொறுப்பாயிருத்தல்.
- **குழும உள்ளக கணக்காய்வு:** நி.இ.மு. கட்டமைப்பின் வலிமையில் சுயாதீன உறுதிமொழியினை வழங்குதல், போதுமான கட்டுப்பாடுகள், தணிப்புத் திட்டங்கள் மற்றும் ஆளுகைச் செயன்முறைகளை மதிப்பிடுதல்.



ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு

ஸ்ரீ.ல.எ. இன் நி.இ.மு. கட்டமைப்பானது விரிவான தன்மை மற்றும் இணக்கத்திறன் ஆகிய இரண்டையும் உறுதிசெய்யும் ஒரு தொடர்ச்சியான மற்றும் மறுசெய்கையான சுழற்சியான இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை செயலாற்றுகின்றது:

1. **இடர் இனங்காணல்:** திணைக்கள் மட்டத்தில் நடாத்தப்பட்டதுடன், இந்த நடவடிக்கையானது மூலோபாய, செயற்பாட்டு, நிதியியல், தொழில்நுட்ப மற்றும் இணக்கப்பாட்டு தளங்கள் முழுவதும் நடைமுறையிலுள்ள மற்றும் வெளித்தோன்றுகின்ற இடர்களை உள்ளடக்குகின்றது.
2. **இடர் மதிப்பீடு:** இனங்காணப்பட்ட இடர்கள் அவற்றின் நிகழ்தகவு மற்றும் சாத்தியமான தாக்கம் என்பவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன், பின்னர் அவற்றின் தீவிரத்தின் அடிப்படையில், கணிசமானது, உயர்வானது, மத்திமமானது அல்லது குறைவானது என வகைப்படுத்தப்படுவதுடன், இது முன்னுரிமைப்படுத்தல் மற்றும் உயர்வடைவதனை அறிவிப்பதற்காகும்.
3. **இடர் தணிப்பு:** இடரின் முக்கியத்துவத்தின் அடிப்படையில், இலக்குவைக்கப்பட்ட தணித்தல் மூலோபாயங்கள் மற்றும் செயற்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உயர் மற்றும் கணிசமான இடர்கள் செயற்பாட்டு முழுவதுமான தீர்மானத்திற்கு CEO மற்றும் இடர் அதிகாரிக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.
4. **கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்:** ஸ்ரீ.ல.எ. ஒரு மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தில் இடர் இடாப்புகளை பராமரிப்பதுடன், இவை இடர் உடைமையாளர்களினால் வழக்கமாக இற்றைப்படுத்தப்பட்டு சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்யப்படுகின்றன. இது மெய் நேர புலப்படும்தன்மையினை இடர் நிலத்தோற்றத்தில் இயலுமையாக்குவதுடன், இயக்காற்றலான அறிக்கையிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதற்கும் வசதியளிக்கின்றது.



முக்கிய இடர் கருப்பொருட்கள் மற்றும் வளர்ந்து வரும் நிலத்தோற்றம் (2024/25)

2024/25 நிதியாண்டின்போது, ஸ்ரீ.ல.எ. உயர்வடைந்த தளம்பல் மற்றும் கட்டமைப்பு சார்ந்த சவால்களினால் குறிப்பிடப்பட்ட ஒரு சூழலில் செயலாற்றியது. உலகளாவிய பயணிகளது கேள்விகள் மீட்சியடைந்தபோதிலும், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிவாரி அதிர்வுகளது ஒரு இணைப்பானது இடர் நிலத்தோற்றத்தினை வடிவமைத்ததுடன், வலுவான ERM நடைமுறைகளின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியது.

மூலதனப் போதுமை மற்றும் திரவத்தன்மை

ஸ்ரீ.ல.எ. கணிசமான நிதியியல் அழுத்தங்களின் கீழ் தொடர்ந்தும் செயலாற்றுகின்றது, பிரதானமாக அதன் எதிர்மறையான உரித்துவ நிலைமை, மரபுவழியான கடன் சுமை மற்றும் வெளிவாரி நிதியளிப்பிற்கான வரையறையான அணுக்கம் என்பவற்றினால் இயக்கப்படுகின்றது. மீளாய்வாண்டின்போது செயற்பாட்டு காசுப் பாய்ச்சலானது நடைமுறை பொறுப்புக்களைச் சந்திப்பதற்கு போதுமானதாயிருந்தவேளை, வரலாற்றுரீதியான பொறுப்புக்கள் மற்றும் விமானத்தொகுதி புதுப்பித்தல் போன்ற முக்கிய பிரிவுகளில் முதலிடுதல் ஆகியவற்றை விளித்துரைப்பதிலான சவால்கள் விமான நிறுவனத்தின் நீண்டகால போட்டித்தன்மை மற்றும் மூலோபாய நிலைப்படுத்தலில் தொடர்ச்சியான இடர்களை முன்னிலைப்படுத்துகின்றன.

இதற்கும் பதிலளிக்கும் விதமாக ஸ்ரீ.ல.எ. அரசாங்கத்தின் உறுதுணையுடன் அதன் கடன் மீள்கட்டமைப்பில் செயலூக்கமாக ஈடுபட்டுள்ளது. இது அதன் நிதி நிலைமையினை ஸ்திரப்படுத்துவதற்கான ஒரு முக்கிய வழிமுறையாகும்.

விமானத்தொகுதி கட்டுப்பாடுகள் மற்றும் செயற்பாட்டு இடையூறுகள்

இவ்வாண்டின்போதான ஒரு முக்கிய சவாலாக ஸ்ரீ.ல.எ. இன் திட்டமிட்ட வலையமைப்பிற்கு துணையளிப்பதற்கு விமானங்களின் கிடைப்புத்திறனிலான கட்டுப்பாடு காணப்பட்டது. விமானத்தொகுதி புதுப்பித்தலிலான தாமதங்கள், நீடித்த பராமரித்தல் சுற்றுக்கள் மற்றும் என்ஜின் தொடர்பான வரையறைகள் அட்டவணைப்படுத்தப்பட்ட நம்பகத்தன்மையினை பாதித்ததுடன் செயற்பாட்டு இடையூறுகளுக்கும் வருவாய் அழுத்தங்களுக்கும் இட்டுச்சென்றது.

தொடர்ச்சியான விமானத்தொகுதி கிடைப்புத்திறன் சவால்களை விளித்துரைப்பதற்கு, ஸ்ரீ.ல.எ. விமானப் பயன்பாட்டினை உகப்பாக்குதல் மற்றும் மேம்பட்டு அட்டவணை நம்பகத்தன்மையில் முன்னிறுத்தம் செய்யும் ஒரு பரந்த மூலோபாய மற்றும் செயற்பாட்டு முன்னெடுப்புகளை அமுலாக்கியது. முக்கிய நடவடிக்கைகள், இயக்காற்றலான அட்டவணை திருத்தங்கள், என்ஜின் கிடைப்புத்திறனில் முன்னேற்றங்கள் மற்றும் விமானத்தொகுதி புதுப்பித்தல் திட்டமிடலில் செயலூக்கமான ஈடுபாடு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

உலகளாவிய வழங்கல் சங்கிலி அழுத்தங்கள்

வழங்கல் சங்கிலி பலவீனம் - உதிரிப்பாகங்களின் பற்றாக்குறை, விற்பனையாளர் பின்னடைவுகள் மற்றும் நீண்ட காத்திருப்புக் காலம் உள்ளடங்கலானவை பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளின் நேர காலத்துடனான நிறைவேற்றலில் தொடர்ச்சியாக தாக்கத்தை ஏற்படுத்தின. சான்றளிக்கப்பட்ட வான்பயணவியல் இன்ஜினியர்களது உலகளாவிய பற்றாக்குறையும் சேர்ந்து இந்த சவால்கள் சேவை விநியோகம் மற்றும் அட்டவணை நம்பகத்தன்மையில் மேலதிக அழுத்தத்தினை ஏற்படுத்தின.

மனித மூலதனக் கட்டுப்பாடுகள்

ஸ்ரீ.ல.எ. இலங்கையினுள் மற்றும் உலகளாவிய ரீதியில் வான்பயணவியல் தொடர்பான திறன் பற்றாக்குறையுடன் போராடியது. உயர்வான பணியாள் விலகல்கள், மூளைசாலிகளது வெளியேற்றம் மற்றும் தொழில்நுட்ப ஆளணியினரை கவர்ந்து தக்கவைப்பதிலான சவால்கள் பொறியியல் மற்றும் விமானச் செயற்பாடுகள் உள்ளடங்கலான முக்கிய செயலாற்றல் செயற்பாடுகளின் தொடர்வினை பாதித்தது.

இந்த சவால்களை விளித்துரைப்பதற்கு, ஸ்ரீ.ல.எ. அதன் வான்பயணவியல் பயிற்றுவித்தல் அங்கத்தினைப் பயன்படுத்தியது. தொழிற்சேனை ஸ்திரத்தன்மையினை மேம்படுத்துவதற்கு மற்றும் செயற்பாட்டு வினைத்திறனுக்கு துணையளிப்பதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக ஆட்சேர்த்தல் முயற்சிகளை விரிவாக்கியவேளை ஒரு நிலைபேறுடைய திறன் வரிசையினை வான்பயணவியல் அங்கத்தினூடாக மேற்கொண்டது.

நி.இ.மு. இற்கான கண்ணோட்டம் மற்றும் மூலோபாய முன்னுரிமைகள் (2025/26)

ஸ்ரீ.ல.எ. நெருக்கடியின் பின்னரான மீட்டல் கட்டத்தினை சமாளிக்கும்வேளை, அதன் இடர் முகாமைத்துவச் செயற்பாடானது மூலோபாய உருமாற்றம், செயற்பாட்டு தொடர்வு மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மை என்பவற்றுக்கு துணையளிப்பதில் முக்கியமாகக் காணப்படும். 2025/26 இற்கான முக்கிய இடர் முகாமைத்துவ முன்னுரிமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- **மூலோபாய ஒருங்கிணைப்பினை பலப்படுத்துதல்:** நிறுவன இடர் நுண்ணறிவுகள் மற்றும் உரிய காலத்திற்கேற்ற சான்று அடிப்படையிலான தீர்மானத்தை இயக்குவதற்கான கம்பனித் திட்டமிடல் என்பவற்றுக்கு இடையேயான சீரமைப்பினை மேம்படுத்துதல்.
- **டிஜிட்டல் இடர் அறிவாற்றலை விரிவாக்குதல்:** புலப்படும்தன்மை மற்றும் பதிலளிக்கின்ற தன்மை என்பவற்றை மேம்படுத்துவதற்கு மெய்நேர இடர் டேஷ்போர்ட்களை விருத்திசெய்தல்.
- **நிறுவனக் கொள்திறனை கட்டியெழுப்புதல்:** இலக்குவைத்த விழிப்புணர்வு பிரச்சாரங்கள், தலைமைத்துவ பயிற்சி மற்றும் செயற்திறன் மீளாய்வுகளில் பொறுப்புக்கூறலை உட்பதித்தல் என்பவற்றூடாக இடர் அறிவினை உயர்த்துதல்.
- **குறுக்குச் செயற்பாட்டு மீளெழுச்சியினை மேம்படுத்துதல்:** கிடங்குகளை குறைப்பதற்கும் முறைசார் இடர் தயார்நிலையினை பலப்படுத்துவதற்கும் நிதி, வழங்கல் சங்கிலி, பொறியியல் மற்றும் செயற்பாடுகளிடையே ஒத்துழைப்பினை ஊக்குவித்தல்.
- **வெளிவாரி பங்காளிகளுடன் ஈடுபடுதல்:** மரபுரீதியான நிதியியல் சவால்களை விளித்துரைப்பதற்கும் மூலோபாய மீள்கட்டமைப்பு முயற்சிகளுக்கு துணையளிப்பதற்கு முறைமைப்படுத்துபவர்கள், குத்தகைக் கம்பனிகள் மற்றும் கடன் கொடுத்தோருடன் ஒத்துழைத்தல்.

முடிவு

இடர் என்பது வான்பயணவியலின் ஒரு உள்ளார்ந்த பாகமாகும், ஆனால் அதேசமயம் அது நுண்ணறிவு, புத்தாக்கம் மற்றும் மூலோபாய முன்னோக்கம் ஆகியவற்றின் மூலமாகும். ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் இடர் முகாமைத்துவத்திற்கான நிறுவனம் முழுவதுமான அணுகுமுறையானது, மீளெழுச்சியான செயற்பாடுகள், வெளிப்படைத்தன்மையான ஆளுகை மற்றும் நீண்டகால பங்காளிகள் பெறுமதி என்பவற்றுக்கான அதன் கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது. விமான நிறுவனமானது அதிகரித்த சிக்கலான செயற்பாட்டுச் சூழலில் தொடர்ச்சியாக வளர்ந்து வரும்போது, நிலைபேறுடைய போட்டித்தன்மை அனுகூலம் மற்றும் ஒரு நிலைபேறுடைய எதிர்காலத்தினை பெற்றுக்கொள்வதற்கு நி.இ.மு. ஆனது மையமாகக் காணப்படும்.

பாதுகாப்பிற்கு தயாராயிருத்தல்

பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர்கள் சபையானது 31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை முன்னிலைப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.

பிரதான நடவடிக்கைகளும் வணிக மீளாய்வும்

கம்பனியின் பிரதான வணிக நடவடிக்கைகள் பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக சர்வதேச, அட்டவணைப்படுத்தப்பட்ட /அட்டவணைப்படுத்தாத விமானச் சேவைகளை செயற்படுத்துதல் மற்றும் சரக்கு மற்றும் அஞ்சல் என்பவற்றை எடுத்துச்செல்வதற்கு இலங்கையின் குறிப்பிடப்பட்ட ஊர்தியாகும். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.) மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.க.வி.) என்பவற்றில் வான் முனைச் சேவைகளையும், விமானத்தினுள் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல், உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் விடுமுறைத் தொகுப்புகளை சந்தைப்படுத்தல் என்பன கம்பனியின் ஏனைய பிரதான நடவடிக்கைகளாகும். மூன்றாத் தரப்பு விமானங்களுக்கு பராமரிப்புச் சேவைகளை வழங்குதல், விமான செயற்பாட்டுச் சேவைகளை வழங்குதல் மற்றும் வான்வழி தொடர்பான பயிற்சிகளை நடாத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளாகும். நிதியாண்டில் கம்பனியின் நடவடிக்கைகளின் தன்மையில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றமும் காணப்படவில்லை. குழுமம் என்பது கம்பனியினையும் முழுவதும் உரித்துடைமையினைக் கொண்ட அதன் துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கினையும் உள்ளடக்குகின்றது. கேட்டரிங்கின் பிரதான நடவடிக்கை என்னவெனில், ப.ச.வி. மற்றும் ம.ரா.ச.வி. ஊடாக செயற்படும் விமான நிறுவனங்களுக்கு விமானத்தினுள்ளான உணவக வசதிகளை வழங்குவதாகும். ஏனைய துணை நடவடிக்கைகள் பொது மற்றும் கடந்துசெல்லும் பயணிகளுக்கான உணவகங்களை செயற்படுத்துதல், உண்பதற்காக சூடாக்கப்படும் உறைந்த உணவு வகைகள் மற்றும் சலவை செய்யும் சேவைகளை வழங்குதல் மற்றும் கடந்துசெல்லும் பயணிகளுக்கான ஹோட்டல் ஒன்றினை முகாமைப்படுத்தல் என்பனவாகும்.

நிதிக் கூற்றுக்களும் கணக்காய்வாளரது அறிக்கையும்

குழுமத்தின் பிரதம நிதியியல் அதிகாரி மற்றும் இரண்டு பணிப்பாளர்களினால் உரியவாறு கையொப்பமிடப்பட்ட 31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிறைவான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான கணக்காய்வாளர்களது அறிக்கை என்பவை இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கங்கள் 71 முதல் 114 வரை வழங்கப்பட்டுள்ளன.

குழுமத்தின் புரள்வு

குழுமத்தின் புரள்வு ரூபா 303,094 மில்லியன் ஆகக் (2023/24: ரூபா 339,592 மில்லியன்) காணப்பட்டது. குழுமத்தின் புரள்விலான விரிவான பகுப்பாய்வானது நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 20 இல் வழங்கப்பட்டுள்ளது. கம்பனி மற்றும் அதன் முழு உரித்துவத்தையுடைய துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் நியாயமான சந்தை விலைகளில் நடாத்தப்பட்டன.

விளைவுகள்

குழுமத்தின் ஆண்டிற்கான வரிக்கு பிந்திய தேறிய நட்டம் ரூபா 2,735 மில்லியன் ஆகும் (2023/24: ரூபா 7,925 மில்லியன் இலாபம்). குழுமத்தின் வரிச் செலவினமானது ரூபா 846 மில்லியன் ஆகும் (2023/24: ரூபா 482 மில்லியன்). ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்றானது பக்கம் 67 இல் வழங்கப்பட்டுள்ளது.

குழுமத்தின் முதலீடுகள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிலான குழுமத்தின் மூலதனச் செலவினம் ரூபா 1,952 மில்லியன் ஆக (2023/24: ரூபா 1,693 மில்லியன்) காணப்பட்டது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான குழுமத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய புத்தகப் பெறுமதி ரூபா 12,191 மில்லியன் ஆகும் (2023/24: ரூபா 11,582 மில்லியன்).

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் மற்றும் அவற்றின் அசைவுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3 இல் வழங்கப்பட்டுள்ளன.

கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 203,860,665,500 ஆகும்.

ஒதுக்கங்கள்

31 மார்ச் 2025 இல் உள்ளவாறான மொத்த திரண்ட நட்டம் ரூபா 596,461 மில்லியன் ஆகும் (2023/24: ரூபா 592,627 மில்லியன்)

மூலதன ஒதுக்கங்கள் ரூபா 8,292 மில்லியன் ஆகும் (2023/24: ரூபா 8,542 மில்லியன்).

கம்பனியின் நன்கொடைகள்

இவ்வாண்டின்போது குழுமம் எவ்விதமான நன்கொடைகளையும் மேற்கொள்ளவில்லை.

வரிவிதிப்பு

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அடிப்படையில் 1 ஏப்ரல் 2018 முதல் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளுக்கும் வருமான வரிக்கு பொறுப்பாளியாகும். தற்போது இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கைகள் காணப்படாத நாடுகளில் அதன் வெளிநாட்டு செயற்பாடுகளில் கம்பனியானது வரிக்கு பொறுப்புடையதாயுள்ளது.

துணை நிறுனமான, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இலங்கை முதலீட்டு சபையுடனான உடன்படிக்கையின் பிரகாரம் 31 மே 2021 வரை ஓர் வரி விடுமுறையினை அனுபவித்ததுடன் அதன் பின்னர் 31 மே 2029 இல் நிறைவடையும் எட்டு வருடங்கள் வரைக்கும் ஒரு சலுகை வீதமான 15% இல் வரிக்கு பொறுப்பாயுள்ளது. ஏனைய மூலங்களிலான வருமானமானது வழமையான வரி வீதத்தில் வரிக்கு பொறுப்பாகும்.

பங்குத் தகவல்கள்

31 மார்ச் 2025 இல் உள்ளவாறான பங்குத் தகவல்கள் பின்வருமாறு;

பங்கு உரித்துடைமை	பங்குகளின் எண்ணிக்கை	% உரித்துடைமை
இலங்கை அரசாங்கம்	2,034,006,469	99.77%
ஊழியர் சேமலாப நிதியம்	1,863,676	0.09%
ஏனையோர்	2,736,510	0.14%

பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை தொடர்ச்சி.

சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

கம்பனி அனைத்து நேரங்களிலும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிசெய்கின்றது. இணக்கப்பாட்டிற்கு பொறுப்பான அதிகாரிகள் கணக்காய்வு குழுவினது காலாண்டு கூட்டங்களில் இணக்கப்பாட்டு அறிக்கையினை சமர்ப்பிக்கின்றார்கள்.

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 28 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகள்

31 மார்ச் 2025 இல் உள்ளவாறான எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் அதே திகதியிலான மூலதனச் செலவினங்களில் மேற்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 25 இல் வழங்கப்பட்டுள்ளன.

அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 27 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர செம்மையாக்கல் அல்லது வெளிப்படுத்துவதற்கு தேவையான எவ்விதமான சூழலும் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து எழவில்லை.

மனித வளம் / பணியமர்த்தல் கொள்கைகள்

கம்பனியானது தொடர்ந்தும் மனித மூலதன அபிவிருத்தியில் முதலீடு செய்வதுடன் புதிய வணிக முன்னுரிமைகளுடன் சீரமையப்பட்ட பயனுறுதிமிக்க சேனையினை அமுல்படுத்துகின்றது. இது கம்பனியின் எதிர்கால வெற்றிக்கு தேவையான திறன் மற்றும் அறிவினை அதன் பணியாட்கள் விருத்தி செய்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தவும் செய்கின்றது. குழுமத்தின் பணிக்கமர்த்தல் கொள்கைகள் தனிநபருக்கு மதிப்பளிப்பதுடன் பால், இனம் அல்லது மதத்தினை பொருட்படுத்தாத சமமான தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. தொழில்ரீதியான சுகாதார மற்றும் பாதுகாப்பு நியமங்கள் கணிசமானளவு அவதானத்தினை பெறுகின்றது. வருடத்தின் இறுதியில் கம்பனியினால் பணிக்கமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 6,071 ஆகும் (2023/24: 5,935) என்பதுடன் அதன் துணை நிறுவனத்தில் இது 713 ஆக (2023/24 - 737) காணப்பட்டது.

நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள், அவர்களது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய, பணியாட்கள் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் இத்திகதி வரைக்கும் செலுத்தப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றார்கள்.

சூழல் பாதுகாப்பு

குழுமத்தின் வணிக நடவடிக்கைகள் சூழலில் நேரடியாக மற்றும் மறைமுகமான விளைவுகளை ஏற்படுத்தலாம். சூழலிலான மோசமான விளைவுகளை ஆகக்குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதுடன் பொருத்தமான அதிகாரசபைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் ஒத்துழைப்பு மற்றும் இணக்கப்பாட்டினை ஊக்குவித்தல் என்பன குழுமத்தின் கொள்கையாகும்.

நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

பணிப்பாளர்களது பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு, கம்பனியின் 2024/25 வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில், நிறுவனம் மீள்கட்டமைக்கப்படும் வரைக்கும், அவசியமாயின் இலங்கை அரசாங்கமானது நிதியியல் உறுதுணையினை வழங்கும் என்ற திறைசேரியின் செயலாளரினால் வழங்கப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் பணிப்பாளர்கள் நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி அடிப்படையினை கடைப்பிடித்துள்ளார்கள்.

பணிப்பாளர்கள் சபை

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் 79 ஆம் உறுப்புரைக்கமைய பணிப்பாளர்கள் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்படுகின்றார்கள். தற்போதைய பணிப்பாளர்களது தோற்றுருவத்தின் சுருக்கமானது ஆண்டறிக்கையின் பக்கங்கள் 13 இலிருந்து 15 வரை வழங்கப்பட்டுள்ளன

நிதியாண்டின்போத இருபத்து ஐந்து சபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டதுடன் இவற்றில் பணிப்பாளர்களது சமூகமளிப்பு பின்வருமாறு;

நிதியாண்டு 2024/25 இன் போதான பணிப்பாளர்களது பெயர்	பணிப்பாளர் பதவிக்காலத்தில் சமூகமளித்த சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. அசோகா பத்திரகே (தலைவர்) (9 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	07/07
திரு. மலிக் ஜே பர்னாந்து (9 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	06/07
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய (9 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	04/07
திரு. ஜோசப் மைக்கல் ஜயந் பெரேரா (9 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	06/07
திரு. ஆனந்த விஜேதிலக்க அத்துகோரல (14 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	07/07
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார அத்துடன் திறைசேரி பிரதிநிதி	16/17
திரு. ஏ.எம்.ஏ.ஏ. லக்மல் ரத்நாயக்க (15 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	05/07
திரு. டி.டி. சிரான் சமிந்த தம்மகே (31 மே 2024 முதல் பதவி விலகினார்)	02/02
திரு. பிராங் நிரஞ்சன் அருள்பிரகாசம் (11 ஜூன் 2024 முதல் நியமிக்கப்பட்டு 15 ஒக்டோபர் 2024 இல் பதவி விலகினார்)	05/05
திரு. சரத் கனேகொட (தலைவர்) (9 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	10/10
திரு. ரொஹான் குணதிலக்க (9 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	10/10
Flt. /Lt. (Retd.) திரு. சுகத் ராஜபக்ஷ (9 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	09/10
திரு. விப்புல குணதிலக்க (14 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	09/10

நிதியாண்டு 2024/25 இன் போதான பணிப்பாளர்களது பெயர்	பணிப்பாளர் பதவிக்காலத்தில் சமூகமளித்த சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை
கலாநிதி. ஹர்சா கப்ரால், ஜ.ச. (24 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	06/09
திரு. துமித் பர்னாந்து (24 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	08/09
திரு. சௌரத் டி லியனகே (12 டிசம்பர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	05/06

கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள்

கணக்காய்வுக் குழுவானது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாகும்.

குழு அங்கத்தவர்கள் நிதியாண்டு 2024/24	சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. ஜோசப் மைக்கல் ஜயந் பெரேரா (9 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	4/4
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார அத்துடன் திறைசேரி பிரதிநிதி	6/7
திரு. டி.டி. சிரான் சமிந்த தம்மகே (31 மே 2024 முதல் பதவி விலகினார்)	1/1
திரு. மலிக் ஜே. பர்னாந்து (25 ஜூன் 2024 முதல் பதவி விலகினார்)	1/1
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய (25 ஜூன் 2024 முதல் பதவி விலகினார்)	1/1
திரு. ஆனந்த அத்துகொரால (14 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	3/4
திரு. பிராங் நிரஞ்சன் அருள்பிரகாசம் (25 ஜூன் 2024 முதல் நியமிக்கப்பட்டு 15 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	3/3
திரு. விப்புல குணதிலக்க - தலைவர் (25 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	3/3
திரு. ரொஹான் குணதிலக்க (25 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	3/3
திரு. துமித் பர்னாந்து (25 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	3/3
Flt. /Lt. (Retd.) திரு. சுகத் ராஜபக்ஷ (10 ஜனவரி 2025 முதல் நியமிக்கப்பட்டார்)	2/2
திரு. சௌரத் டி லியனகே (10 ஜனவரி 2025 முதல் நியமிக்கப்பட்டார்)	1/2

கணக்காய்வுக் குழுவின் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 59-60 இல் வழங்கப்பட்டுள்ளது.

சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு

மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் பிரதான குறிக்கோளாகக் காணப்படுவது என்னவெனில், ஓர் வேதனக் கொள்கையின் அபிவிருத்தி மற்றும் ஓர் வேதனக் கட்டமைப்பினது நிறுவுதல் என்பவற்றுக்கு ஓர் முறையான மற்றும் வெளிப்படைத்தன்மையான செயல்முறையினை நிறுவுவதற்கு தலைமை தாங்குவதாகும்.

ஓர் வேதனக் கொள்கையானது சந்தை மற்றும் துறைசார் காரணிகள் மற்றும் குழுமத்திற்கான தனிப்பட்ட செயற்திறன் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவானது தேவையானபோது கூடுகின்றது.

மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவானது சபையின் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது;

குழுவின் அங்கத்தவர்கள் நிதியாண்டு 2024/25	சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. மலிக் ஜே. பர்னாந்து (09 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	4/5
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய (09 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	1/5
திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா (09 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	5/5
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார அத்துடன் திறைசேரி பிரதிநிதி	9/10
திரு. ஏ.எம்.ஏ.ஏ. லக்மல் ரத்நாயக்க (15 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	3/5
திரு. ரொஹான் குணதிலக்க - தலைவர் (25 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	6/6
Flt./Lt. (Retd.) திரு. சுகத் ராஜபக்ஷ (25 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	6/6
கலாநிதி. ஹர்சா கப்ரால், ஜ.ச. (25 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	5/6

சபையின் குழும இடர் குழு (B.G.R.C)

சபையின் குழும இடர் குழுவானது, நிறுவனத்தின் வணிகச் செயற்பாடுகளில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல், நிதி மற்றும் நிதியல்லாத அத்தகைய இடர்களின் தாக்கத்தினை அளவிடுதல் என்பவற்றை மேற்கொள்ளல் வேண்டும். ச.கு.இ.கு. இன் ஆழ்ந்தாராய்வுகள் நிறுவனத்தின் செயற்பாடுகளை பாதிக்கும் இடர்களின் தாக்கத்தினை பணிப்பாளர்கள் சபையானது விளித்துரைப்பதற்கும் ஏதேனும் பாதகமான தாக்கத்தினை தணிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் வசதியளித்தல் வேண்டும்.

பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை தொடர்ச்சி.

சபையின் குழும இடர் குழுவானது சபையின் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது;

குழுவின் அங்கத்தவர்கள் நிதியாண்டு 2024/25	சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா (09 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	2/2
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய (09 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	1/2
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார அத்துடன் திறைசேரி பிரதிநிதி - தலைவர்	3/3
திரு. ஆனந்த அத்துகொரால (14 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	1/2
திரு. பிராங் நிரஞ்சன் அருள்பிரகாசம் (15 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்)	2/2
திரு. விப்புல குணதிலக்க - (25 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	1/1
திரு. துமித் பர்னாந்து (25 ஒக்டோபர் 2024 முதல் நியமிக்கப்பட்டார்)	1/1
திரு. செனாரத் டி லியனகே (10 ஜனவரி 2025 முதல் நியமிக்கப்பட்டார்)	1/1

தொடர்புடைய தரப்பினர் மீளாய்வுக் குழு

தொடர்புடைய தரப்பினர் மீளாய்வுக் குழுவின் ஆரம்பக் கூட்டமானது 25 மார்ச் 2025 இல் இடம்பெற்றது. நிறுவனத்தின் வணிகச் செயற்பாடுகள் அல்லது நிதி நிலைமையினை பாதிக்கக்கூடிய தொடர்புடைன தரப்பினரை உள்ளடக்கிய அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் உறவுமுறைகளை மீளாய்வு செய்தல், இனங்காணுதல், மதிப்பிடுதல் என்பவற்றுக்கு பொறுப்பாளியாகும். குழுவானது வெளிப்படைத்தன்மை, முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதலை மற்றும் நிறுவனத்தின் உள்ளகக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்கு அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தன்மை மற்றும் அளவினை மதிப்பிடுகின்றது. தொடர்புடைய தரப்பினர் மீளாய்வுக் குழுவின் கலந்தாராய்வுகள், பணிப்பாளர்கள் சபை ஏதேனும் முரண்பாட்டு நலன்களை விளித்துரைப்பதனை, தொடர்புடைய தரப்பினர் கையாளுகைகள் தொடர்பான இடர்களை மதிப்பிடுவதனை மற்றும் நிறுவனத்தின் செயற்பாடுகளது நேர்மை மற்றும் நியாயப்பாட்டினை பாதுகாப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதனை இயலுமையாக்குகின்றது.

சபையின் தொடர்புடைய தரப்பினர் மீளாய்வுக் குழுவானது சபையின் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது;

குழுவின் அங்கத்தவர்கள் நிதியாண்டு 2024/25	சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார அத்துடன் திறைசேரி பிரதிநிதி - தலைவர்	1/1
திரு. விப்புல குணதிலக்க	1/1
திரு. துமித் பர்னாந்து	1/1

பணிப்பாளர்கள் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் நடைமுறையிலுள்ள பணிப்பாளர்கள் சபை:-

திரு. சரத் கனேகொட (தலைவர்)
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார அத்துடன் திறைசேரி பிரதிநிதி
திரு. ரொஹான் குணதிலக்க
Flt. /Lt. (Retd.) திரு. சுகத் ராஜபக்ஷ
திரு. விப்புல குணதிலக்க
கலாநிதி. ஹர்சா கப்ரால், ஜ.ச.
திரு. துமித் பர்னாந்து

பணிப்பாளர்களது வேதனம்

நிதியாண்டிற்கு செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா 3.2 மில்லியன் ஆகும்.

பணிப்பாளர்களது பங்குரித்துடைமைகள்

இலங்கை அரசாங்கத்தினால் பெயரிடப்பட்ட பணிப்பாளர்கள் என்ற காரணத்தினால் திரு. சரத் கனேகொட/ தலைவர் அவர்கள் கம்பனியின் 03 சாதாரண பங்குகளை வைத்துள்ளார்.

நலன்கள் இடாப்பு

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி நலன்கள் இடாப்பினை பராமரிக்கின்றது. கம்பனியின் அனைத்து பணிப்பாளர்களும் ஏனைய கம்பனிகளிலான தங்களது நலன்களை சபைக்கு வெளிப்படுத்தியுள்ளதுடன் அந்த நலன்கள் 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 192 (1) மற்றும் 192 (2) க்கு அமைவாக பணிப்பாளர்களது நலன்கள் இடாப்பில் பதியப்பட்டுள்ளன.

ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நலன்கள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 28 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர கம்பனியின் வணிகம் தொடர்பான வேறு ஏதேனும் ஒப்பந்தங்களில் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் எவ்வித நேரடி அல்லது மறைமுக நலனைக் கொண்டிருக்கவில்லை.

ஆண்டுப் பொதுக் கூட்டம்

கம்பனியின் நாற்பத்து ஏழாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் இலங்கை, கொழும்பு 7, பவுத்தாலோக்க மாவத்தை, 'மிஹிலக்க மெதுர' பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) வெள்ளிக்கிழமை 12 செப்டம்பர் 2025 இல் பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறும்.

ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல் ஆண்டறிக்கையின் பக்கம் 123 இல் காணப்படுகின்றது.

கணக்காய்வாளர்கள்

இலங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்பு 154 (1) க்கு ஏற்றாற்போல் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் கம்பனியின் கணக்காய்வாளர்களாக இத்தால் நியமிக்கப்படுகின்றார். கணக்காய்வுக் கட்டணம் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 22 இல் விளக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்களுக்கு கம்பனியுடனோ அல்லது அதன் துணை நிறுவனத்துடனோ (கணக்காய்வாளர் தவிர்த்த) எவ்விதமான தொடர்புகளும் இல்லை.

சபையின் சார்பில் கையொப்பமிடப்பட்டது,

சரத் கனேகொட
தலைவர்

விப்புல குணதிலக்க
பணிப்பாளர்

திருமதி. டெல்ரின் திருக்குமார்
கம்பனியின் செயலாளர்/கூட்டாண்மை செயலக சேவைகளின் குழுமத் தலைமை

29 ஜூலை 2025
கட்டுநாயக்க

சபை கணக்காய்வுக் குழு அறிக்கை

பங்களிப்பும் பொறுப்புக்களும்

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் சபையின் கணக்காய்வுக் குழுவினது நோக்கம் மற்றும் பொறுப்புக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சபை கணக்காய்வுக் குழுச் சாசனத்தினால் ஆளுமை செய்யப்படுகின்றது. சபை கணக்காய்வுக் குழுவின் நோக்கம் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபையானது பின்வருவனவற்றில் அதன் மேற்பார்வை பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவுவதாகும். உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை, நிதியியல் அறிக்கையிடல் செயல்முறை, இடர் முகாமைத்துவ செயல்முறை, ஆளுகை செயல்முறை, உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு செயற்பாடுகள் ஆகியவற்றில் ஒரு சுயாதீனமான மீளாய்வினை வழங்குதல் மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கான கம்பனியின் செயல்முறையினை கண்காணித்தல் என்பனவாகும்.

குழுவின் தொகுப்பு

31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த ஆண்டின்போது, சபையின் தொகுப்பானது கணிசமானளவு மாற்றங்களுக்கு உள்ளானது. திரு. ஜயந்த பெரேரா (31 மே 2024 இல் தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்டார்) அவர்கள் 9 ஒக்டோபர் 2024 இல் அவரது பதவி விலகல் வரை சேவையாற்றினார் மற்றும் திரு. சிரான தம்மகே அவர்கள் (முன்னாள் கணக்காய்வுக் குழுவின் தலைவர்) 31 மே 2024 இல் பதவி விலகினார். திரு. மலிக் பர்னாந்து (அங்கத்தவர்) மற்றும் கலாநிதி. ஹன்சா விஜயசூரிய (அங்கத்தவர்) ஆகிய இருவரும் 25 ஜுன் 2024 இல் பதவி விலகினார்கள். திரு. ஆனந்த அத்துகொரல அவர்கள் 14 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகிய வேளை திரு. நிரஞ்சன் அருள்பிரகாசம் அவர்கள் 25 ஜுன் 2024 இல் நியமிக்கப்பட்டு 15 ஒக்டோபர் 2024 முதல் பதவி விலகினார்.

சபை தொகுப்பிலான இந்த மாற்றங்களைத் தொடர்ந்து, தொடர்ச்சி மற்றும் வினைத்திறனான ஆளுகையினை உறுதிசெய்வதற்காக பல புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. திரு. விப்புல குணதிலக்க அவர்கள் சபை கணக்காய்வுக் குழுவின் தலைவராக 25 ஒக்டோபர் 2024 இல் நியமிக்கப்பட்டவேளை அதே தினத்தில் திரு. ரொஹான் குணதிலக்க மற்றும் திரு. துமித் பர்னாந்து ஆகியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டார்கள். அதன் பின்னர், 10 ஜனவரி 2025 இல் Flt. Lt. (Retd.) திரு. சுகத் ராஜபக்ஷ மற்றும் திரு. செனரத் லியனகே ஆகியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டார்கள். திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார அவர்கள் முன்னைய நிதியாண்டிலிருந்து கணக்காய்வுக் குழுவில் அவரது சேவையினை தொடர்ந்ததுடன் அறிக்கையிடப்படும் காலம் முழுவதும் ஒரு அங்கத்தவராக இருந்தார்.

கூட்டங்கள்

சபை கணக்காய்வுக் குழுவானது 31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த ஆண்டின்போது ஏழு (7) கூட்டங்களை நடாத்தியது. குழும உறுதிமொழி மற்றும் ஆலோசனைச் சேவைகளின் சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி இந்த கூட்டங்களில் சமூகமளித்த வேளை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முகாமைத்துவத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவர்களது பொறுப்பான பிரிவுகளினுள் ஏற்புடைய விடயங்களில் விளக்கங்களை வழங்குவதற்காக அவசியமானபோது பங்கேற்றார்கள்.

அறிக்கையிடப்படும் காலத்தின்போது, தேசிய கணக்காய்வு அலுவலகத்திலிருந்து (தே.க.அ.) பின்வரும் பிரதிநிதிகள் அவர்களது பதவித்திறனின் பிரகாரம் கூட்டங்களில் பங்கேற்றார்கள்: செல்வி. சுரங்கி குணதிலக்க, செல்வி. என்.டி.என்.சி.குமாரி மற்றும் செல்வி. ஏ.எம்.எம்.ஜி.எஸ்.எஸ்.ஜே.பி. அபேகோன் ஆகியோர். மேலாக, நிதி அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தி திரு. பந்துல அபேரத்ன அவர்கள் பெயரிடப்பட்ட அமைச்சின் பிரதிநிதியாக கலந்துகொண்டார்.

குழும உறுதிமொழி மற்றும் ஆலோசனைச் சேவைகள் பிரிவு

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் குழும உறுதிமொழி மற்றும் ஆலோசனைச் சேவைகள் பிரிவானது, உள்ளகக் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கும், இடர் முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் ஆளுகைச் செயன்முறைகளின் பயனுறுதித்தன்மையில் சுயாதீன உறுதிமொழியினை வழங்குவதற்கும் பொறுப்பாளியாகும். செயற்பாட்டு ரீதியாக இப்பிரிவானது சபை கணக்காய்வுக் குழுவுக்கும் நிர்வாக ரீதியாக சபையின் தலைவருக்கும் அறிக்கையிடுவதுடன், அதன் நிறுவன நிலையினை வலியுறுத்தி கணக்காய்வு திட்டமிடல் மற்றும் அறிக்கையிடலில் சுயாதீனத்தன்மையினை உறுதிசெய்கின்றது.

நிதியாண்டின்போது சபை கணக்காய்வுக் குழுவின் முக்கிய நடவடிக்கைகள்

துல்லியமான, பூரணமான மற்றும் நம்பகத்தன்மையான தகவல்களை கணக்காய்வுக் குழுவுக்கு உரிய நேரத்தில் வழங்கப்படுவதனை உறுதிசெய்வது பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவத்தின் அடிப்படை பொறுப்பாகும். இது சபைக்கு பின்வரும் அதன் சபை மேற்பார்வை பொறுப்புக்களை பயனுறுதியாக நிறைவேற்றுவதனை இயலுமையாக்குகின்றது: இவை ஏனைய கடமைகளினுள், நிதிக் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கொள்கை ஆவணங்களது கடைப்பிடிப்பில் பணிப்பாளர்கள் சபைக்கு நன்கு தவலறிந்த பரிந்துரைகளை வழங்குவதை உள்ளடக்குகின்றது. மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டின்போது, கணக்காய்வுக் குழுவானது அதன் பொறுப்பாணைக்கு சீரமைவாக பின்வரும் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

- முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால மற்றும் வருட இறுதி கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டு சபையின் அங்கீகாரத்திற்காக பரிந்துரைக்கப்பட்டன.
- கம்பனியின் மாதாந்த நிதியியல் செயற்திறன், முக்கிய அளவீடுகள், பாதீட்டு மாறுபாடுகள் மற்றும் உள்ளார்ந்த போக்குகளில் முன்னிறுத்தம் செய்து கணிசமான விலகல்களை புரிந்துகொள்வதற்காக முகாமைத்துவத்துடன் ஈடுபடுதல்.
- கடன்பட்டோர்கள் வயது பகுப்பாய்வில் மற்றும் அவற்றின் மீட்கத்தக்க தன்மையின் மதிப்பீடு உள்ளடங்கலாக நிலுவையிலுள்ள கடன்பட்டோர்களின் நிலையானது காலாகாலம் மீளாய்வு செய்யப்பட்டது. முகாமைத்துவத்தின் பரிந்துரையின் அடிப்படையில், குழுவானது மீட்கவியலாத

சபை கணக்காய்வுக் குழு அறிக்கை தொடர்ச்சி.

வருமதிகளை பொருத்தமானவாறு பதிவழிப்பதற்கு பரிந்துரைத்தது.

- முகாமைத்துவத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இருப்புக்களை பதிவழிப்பதற்கான பரிந்துரையானது சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் நியாயத்தன்மைக்காக மீளாய்வு செய்யப்பட்டது.
- உள்ளகக் கணக்காய்வு செயற்பாடானது அதன் சுயாதீனத்தன்மை, வளங்களின் போதுமை மற்றும் அதன் அறிக்கையிடல் வரிசை மற்றும் அதிகாரம் என்பவற்றை உறுதிசெய்வதற்காக மீளாய்வு செய்யப்பட்டது.
- நிறுவன குறிக்கோள்கள் மற்றும் முக்கிய இடர் பிரிவுகளுடன் சீரமைப்பினை உறுதிசெய்வதற்கான GAAS ஈடுபாட்டுத் திட்டமானது மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.
- உள்ளகக் கணக்காய்வுச் சாசனம் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கணக்காய்வுக் குழு சாசனம் என்பன மீளாய்வு செய்யப்பட்டு சபையின் அங்கீகாரத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது.
- உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் முகாமைத்துவத்தின் பதிலளிப்புகள் மீளாய்வு செய்யப்பட்டு அவசியமானபோது கலந்துரையாடலுக்காக முகாமைத்துவத்துடன் ஈடுபாடு கொள்ளப்பட்டது.
- உட்குறை உரைப்போரது முறைப்பாடுகள், பொருத்தமானபோது, நம்பகத்தன்மை, அவசரம், நிறுவனத்தின் குறிக்கோள்களுடன் சீரமைப்பு மற்றும் முறைமைப்படுத்தல் கட்டமைப்பில் சாத்தியமான தாக்கம் போன்ற காரணிகளின் அடிப்படையில் அவை முன்னுரிமைப்படுத்தப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டது.
- அனைத்து பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அறிக்கையிடப்பட்ட இணங்கியொழுகுதலை மதிப்பிடுவதற்காக கம்பனியின் காலாண்டு இணக்கப்பாட்டு டேஷ்போர்ட்கள் மீளாய்வு செய்யப்பட்டன.
- கணக்காய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கம்பனியின் குறிப்பிடப்பட்ட கொள்கைகள் அவற்றின் அபிவிருத்தி, அமுலாக்கல் மற்றும் தொடர்ச்சியான ஆளுகைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பானது வலியுறுத்தப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டது.

விப்புல குணதிலக்க
கணக்காய்வுக் குழுத் தலைவர்

சபை கணக்காய்வுக் குழு

24 ஜூன் 2025

பணிப்பாளர்களின் பொறுப்புக்களின் கூற்று

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் கணக்காய்வாளர்களது பொறுப்புக்களிலிருந்து வேறுபடுவதுடன் இவை பக்கம் 63 இல் தோன்றும் அவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டமானது பணிப்பாளர்கள் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டுமென்பதுடன் இவை உண்மையான மற்றும் நியாயமான பார்வையினை வழங்கும் கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதியாண்டின் இறுதியிலான விடயங்களின் நிலைமை மற்றும் நிதியாண்டிற்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் இலாப நட்டக் கணக்கினையும் உள்ளடக்குதல் வேண்டும். நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவுசெய்யப்பட்டு தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டிருத்தல், நியாயமான மற்றும் விவேகமான நியாயப்பாடுகள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல், மற்றும் பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றியிருத்தல் வேண்டும்.

கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனம், கம்பனி மற்றும் குழுமத்தின் நிதியியல் நிலைமையின் நியாயமான துல்லியத்தன்மையினை வெளிப்படுத்துவதற்கு போதுமான கணக்கீட்டு ஆவணங்கள் வைத்திருக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள். நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் வேண்டப்படும் தகவல்களை வழங்குகின்றது எனவும் உறுதிப்படுத்தல் வேண்டும். இவர்கள் குழுமத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நியாயமான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும், மற்றும் அதேபோன்று மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளை தடுக்கும் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்குடன் பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புமுறைகளை நிறுவுவதற்கு முறையான கவனத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கம்பனியின் செற்பாட்டு மற்றும் நிதியியல் நிலைமையினை பலப்படுத்தும் நோக்கில் மற்றும் கம்பனியினை மறுசீரமைக்கும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை கருத்திற்கொண்டு மற்றும் வங்கி வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக ஆறுதல் கடிதங்களை வழங்குவதன் மூலம் கம்பனிக்கு தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் உறுதுணையளிப்பதனை கவனத்திலெடுத்ததன் பின்னர் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பணிப்பாளர்கள் 'நிறுவனத் தொடர்ச்சி நிலையினை' தொடர்ந்தும் கடைப்பிடித்தார்கள். மேலும், இலங்கை அரசாங்கமானது 2025 ஜூன் 23 திகதியிடப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் (மற்றும் திறைசேரி செயலாளரினால் 2025 ஜூன் 30 இல் வழங்கப்பட்ட கடிதம்) நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 2.1.1 இன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு முன்மொழியப்பட்டுள்ள மறுசீரமைப்பு செயல்முறையானது நிறைவுசெய்யும் வரை கம்பனி அதன் செயற்பாட்டினை 'நிறுவனத் தொடர்ச்சி நிலையில்' தொடர்வதற்கு தேவையான நிதியியல் உறுதுணையினை வழங்கும் என்று உறுதியளித்துள்ளது.

நிதிக் கூற்றுக்களில் அபிப்பிராயத்தினை உருவாக்குவதனை இயலுமையாக்குவதற்கு உகந்தது என கருதும் ஏதேனும் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர்களுக்கு ஒவ்வொரு வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள்.

பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவிற்கேற்ப, அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் அனைத்து வரிகள், கட்டணங்கள் மற்றும் நிதியியல் கடப்பாடுகள் என்பன செலுத்தப்பட்டுள்ளன அல்லது நிதிக் கூற்றுக்களில் போதுமானளவு ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதனை உறுதிசெய்கின்றார்கள்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளையின் பிரகாரம்.

திருமதி. டெல்ரின் திருக்குமார்
கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுத் தலைமை/கம்பனிச் செயலாளர்

29 ஜூலை 2025

சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } AAV/B/SLAL/FA/2025/03 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 12 August 2025

தலைவர்
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான ஸ்ரீலங்கன் எயார்லைன் லிமிட்டட் மற்றும் அதன் துணைநிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் ("கம்பனி") மற்றும் அதன் துணை நிறுவனத்தினது (குழுமம்) 2025 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரித்துவத்திலான மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பொது நடைமுறையிலுள்ள ஒரு பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் எனக்கு துணையளிக்கப்பட்டது.

கம்பனியின் மற்றும் குழுமத்தின் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும், நியாயமானதுமான கருத்தினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய (SLAuSs) மேற்கொண்டுள்ளேன். இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 விடயத்தின் அழுத்தம்

(அ) நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருண்மையான நிச்சயமற்றதன்மை

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 2.1.1 ஆனது, 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது குழுமம் தேறிய நட்டமாக ரூபா 2,735.28 மில்லியனையும் (2024 இல் இலாபம் - ரூபா 7,925.01 மில்லியன்), திரண்ட நட்டமாக 596,461.28 மில்லியனையும் (2024 - ரூ. 592,626.52 மில்லியன்) கொண்டிருந்ததுடன், அத்திகதியில் குழுமத்தின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறை சொத்துக்களை ரூ. 346,479.55 மில்லியனால் விஞ்சியிருந்தது. (2024 - ரூ. 327,144.66 மில்லியன்). அறிக்கைத் திகதியின்படி குழுமத்தின் மொத்த உரிமை மூலதனம் எதிர்மறையான ரூபா 379,519.61 மில்லியன் (2024 - எதிர்மறை ரூபா 381,723.67 மில்லியன்) ஆகும். மேலும், நிறுவனம் 2025 மார்ச் 31 இல் ரூபா 7,594.56 மில்லியன் (2024 - இலாபம் ரூபா 3,870.86 மில்லியன்) திரண்ட நட்டம் ரூபா 616,306.06 மில்லியன் (2024 - ரூபா 607,613.60 மில்லியன்) பதிவுசெய்தது. அன்றைய திகதியின்படி, நிறுவனத்தின் தற்போதைய பொறுப்புகள் அதன் தற்போதைய சொத்துக்களை ரூபா 368,296.84 மில்லியன் (2024 - ரூபா 344,130.60 மில்லியன்) தாண்டிவிட்டதோடு, அறிக்கைத் திகதியின்படி நிறுவனத்தின் மொத்த உரிமை மூலதனம் எதிர்மறையான ரூபா 403,172.55 மில்லியனாகக் (2024 - எதிர்மறை ரூபா 400,534.71 மில்லியன்) காட்டிது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව · இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. · No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 · +94 11 2 88 72 23 · ag@auditorgeneral.gov.lk · www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

குறிப்பு 2.1.1 இல் குறிப்பிட்டுள்ளவாறு, ஏனைய விடயங்களுடன் அத்தகைய நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் இருப்புரிமையானது ஒரு நிறுவனத் தொடர்ச்சியினை தொடர்வதற்கான குழுமத்தின்/கம்பனியின் ஆற்றலில் கணிசமான சந்தேகத்தினை தூண்டும் ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை உள்ளது என்பதைக் குறிப்பிடுகின்றது.

(ஆ) விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள்

2025 மார்ச் 31 இல் ரூபா 5,692 மில்லியன் தொகையான (USD 19.21 மில்லியன்) விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 05 இற்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன். கம்பனியானது, வழங்குநருடனான உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள பிணக்குத் தீர்த்தல் பொறிமுறையினூடாக குறித்த தொகையினை சேதங்களுடன் சேர்த்து மீட்பதற்கான ஒரு கோரலை மேற்கொண்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயமானது திருத்தியமைக்கப்படவில்லை.

1.4 குழுமத்தின் 2025 ஆம் வருட ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் குழுமத்தின் 2025 ஆம் வருட ஆண்டறிக்கையிலுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றன. ஆனால், அவை நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வாளரின் அறிக்கையினை உள்ளடக்கவில்லை. எனினும், இந்த கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுள்ளேன். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயம், ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் அதில் நான் எந்த விதமான உறுதிமொழி தீர்மானத்தையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களின் எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை, அவை கிடைக்கப் பெறும்போது, வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்வதில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மையாக வேறுபட்டுள்ளதா அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவு அல்லது பொருண்மையாக இல்லாவிடின் பிறழ்கூற்றாகத் தோன்றுகின்றதா என்பதை கருத்திலெடுப்பதாகும்.

கணக்காய்வாளரின் இந்த அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்ற ஏனைய தகவல்களுக்கு அமைய, நான் செய்த பணிப்புரையின் அடிப்படையில், ஏனைய தகவல்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுகின்றன என நான் தீர்மானத்திற்கு வந்தால், அவ்விடயத்தினை நான் அறியப்படுத்தல் வேண்டும். இது தொடர்பாக நான் எதுவும் தெரிவிக்கவில்லை.

1.5 நிதிக் கூற்றுக்களின் ஆளுகைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, உண்மையானதும், நியாயமானதுமான கருத்தினைத் தருகின்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஒரு நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் குழுமத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்பட வேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனி மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு கம்பனி மற்றும் குழுமம் வேண்டப்படுகின்றது.

சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்ச்சி.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.6 நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினைப் பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வாளரது அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது, ஒரு உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால், இது, இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வானது எந்நேரமும் ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை கொண்டிருக்கும் அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், அது இனங்காணும் என்ற உறுதியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்புக் காணப்படுமாயின், அவை பொருண்மையானதாகக் கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறைத் தீர்ப்பினை உபயோகித்தும், தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களது இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்களுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வுச் செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்துதல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஒரு தவறின் விளைவாக எழக்கூடிய இடரிலும் பார்க்க, மோசடியின் விளைவாக ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை இனங்காணாத இடரானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- கம்பனியின் மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வுச் செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்குப் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஒரு புரிந்துணைர்வினைப் பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இது தொடர்பான வெளிப்படுத்துதல்களை மதிப்பீடு செய்தல்.
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கருதத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவு செய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றிக் காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஒரு அபிப்பிராயத்தினைத் தெரிவிப்பதற்காக குழுமத்திலுள்ள நிறுவனங்களின் அல்லது வணிக நடவடிக்கைகளின் நிதியியல் தகவல்கள் தொடர்பாக போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல், குழுமத்தினது கணக்காய்வின் வழிநடத்தல், மேற்பார்வை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

மற்றும் செயலாற்றலுக்கு நான் பொறுப்பாளியாய் உள்ளேன். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் மாத்திரமே பொறுப்பாயுள்ளேன்.

ஆளுமை தொடர்பான பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்கலாக, கருதத்தக்க கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(a) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163(2) இன் தேவைக்கேற்ப கம்பனியானது முறையான கணக்கீட்டுப் பதிவுகளைக் கொண்டுள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

2.2 பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள செயலாற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொண்ட சான்றுகளின் அடிப்படையில் எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை;

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(d) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் கம்பனியினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் கம்பனியினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களைக் கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு,

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (f) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூலச் சட்டம், கம்பனியினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு கம்பனி இணக்கப்பாடு காணவில்லை எனக் குறிப்பிடுவதற்கு;

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (g) பிரிவின் தேவைக்கேற்ப கம்பனியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை எனக் குறிப்பிடுவதற்கு;

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (h) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிடுவதற்கு.

ஜீ.எச்.டி. தர்மபால

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

நிதி நிலைமைக் கூற்று

31 மார்ச் 2025 இல் உள்ளவாறானது	குறிப்பு	குழுமம்		கம்பனி	
		2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
சொத்துக்கள்					
நடைமுறையல்லா சொத்துக்கள்					
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	3.	12,190.98	11,582.46	8,224.16	7,470.61
பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்	4.	64,791.84	74,848.14	64,654.20	74,648.10
விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள்	5.	5,692.34	5,774.00	5,692.34	5,774.00
விமானப் பராமரிப்பு ஒதுக்கம்	6.	46,565.36	37,389.27	46,565.36	37,389.27
விமான மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள்	7.	6,714.72	6,129.29	6,714.72	6,129.29
அருவச் சொத்துக்கள்	8.	61.52	51.94	56.55	44.82
முதலீடுகள்	9.1	0.40	0.40	42.44	42.44
		136,017.16	135,775.50	131,949.77	131,498.53
நடைமுறைச் சொத்துக்கள்					
இருப்புகள்	10.	7,439.72	7,493.15	6,824.85	6,983.64
வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்	11.	24,660.24	27,022.97	22,870.91	25,586.27
விமானப் பராமரிப்பு ஒதுக்கம்	6.	11,928.75	17,168.29	11,928.75	17,168.29
விமான மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள்	7.	1,620.41	2,838.31	1,620.41	2,838.31
முதலீடுகள்	9.2	2,390.13	2,508.42	1,641.66	1,715.99
காசு மற்றும் வங்கி மீதிகள்	12.	5,200.39	8,842.07	5,134.74	8,466.98
		53,239.64	65,873.21	50,021.32	62,759.48
மொத்த சொத்துக்கள்		189,256.80	201,648.71	181,971.09	194,258.01
உரித்துவமும் பொறுப்புக்களும்					
உரித்துவம்					
கூறப்பட்ட மூலதனம்	13.	208,649.23	202,360.67	208,649.23	202,360.67
ஒதுக்கங்கள்	14.	8,292.44	8,542.18	4,484.28	4,718.22
திரண்ட நட்டங்கள்		(596,461.28)	(592,626.52)	(616,306.06)	(607,613.60)
		(379,519.61)	(381,723.67)	(403,172.55)	(400,534.71)
நடைமுறையல்லா பொறுப்புக்கள்					
வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள்	15.	102,694.00	133,108.77	102,291.24	132,532.88
ஏனைய பொறுப்புக்கள்	16.	66,363.22	57,245.74	64,534.24	55,369.76
		169,057.22	190,354.51	166,825.48	187,902.64
நடைமுறை பொறுப்புக்கள்					
ஊர்திகளுக்கான முன்விற்பனை	17.	40,623.56	44,977.47	40,623.56	44,977.47
ஏனைய பொறுப்புக்கள்	16.	22,400.84	21,658.63	22,400.84	21,658.63
வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள்	18.	108,459.00	95,113.21	127,254.34	109,174.99
வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள்	15.	228,235.79	231,268.56	228,039.42	231,078.99
		399,719.19	393,017.87	418,318.16	406,890.08
மொத்த பொறுப்புக்கள்		568,776.41	583,372.38	585,143.64	594,792.72
மொத்த உரித்துவமும் பொறுப்புக்களும்		189,256.80	201,648.71	181,971.09	194,258.01

இந்த நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

யசந்த திசாநாயக்க
குழும பிரதம நிதியியல் அதிகாரி

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் பணிப்பாளர்கள் சபையானது பொறுப்பாளியாயுள்ளது.
சபைக்காகவும் சபையின் சார்பாகவும் கையொப்பமிடப்பட்டுள்ளது:

விபுல குணதிலக்க
பணிப்பாளர்

சரத் கனேகொட
பணிப்பாளர்

பக்கங்கள் 71 முதல் 114 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

29 ஜூலை 2025
கொழும்பு.

இலாபம் அல்லது நட்டக் கூற்று

31 மார்ச் 2025 இல் உள்ளவாறானது	குறிப்பு	குழுமம் 2025 ரூ. மில்.	குழுமம் 2024 ரூ. மில்.	கம்பனி 2025 ரூ. மில்.	கம்பனி 2024 ரூ. மில்.
வருவாய்	20.	303,093.89	339,591.65	296,506.00	333,614.09
செலவினம்					
விமான எரிபொருள் செலவுகள்		(91,687.41)	(115,119.33)	(91,687.41)	(115,119.33)
பணியாளர் செலவுகள்		(32,798.56)	(32,261.33)	(30,159.20)	(29,845.14)
விமான நிலையவயம், வழி மற்றும் பயணிகள் செலவுகள்		(38,600.92)	(39,186.89)	(45,437.50)	(46,713.52)
விமானப் பராமரிப்பு மற்றும் பிரித்துச் சீராக்கல் செலவுகள்		(43,783.25)	(40,358.53)	(43,783.25)	(40,358.53)
பெறுமானத்தேய்வு/பெறுமானக்குறைப்பு		(15,974.55)	(14,138.07)	(15,679.72)	(13,869.28)
உதிரி என்ஜின்கள் மற்றும் குறுங்கால விமானக் குத்தகைகளிலான வாடகைகள்		(3,555.58)	(10,722.70)	(3,555.58)	(10,722.70)
விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவுகள்		(20,286.30)	(22,082.36)	(20,280.47)	(22,077.80)
விமான பணிக்குழுச் செலவுகள்		(9,468.56)	(9,701.41)	(9,468.56)	(9,701.41)
ஏனைய செயற்பாட்டுச் செலவுகள்		(17,948.77)	(17,786.36)	(13,414.85)	(12,759.04)
		28,989.99	38,234.67	23,039.46	32,447.34
ஏனைய வருமானம் மற்றும் இலாபங்கள்	21.	1,661.32	1,485.64	1,661.32	1,485.64
நாணய மாற்று இலாபம்/நட்டம் மற்றும் திட்டமிடாத பழுது செலவுக்கு முன் செயல்பாட்டு இலாபம்/(நட்டம்)		30,651.31	39,720.31	24,700.78	33,932.98
வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் நீங்கலான பரிமாற்றல் இலாபம்/(நட்டம்)		1,261.61	1,943.17	1,524.08	3,260.78
Neo என்ஜின்களின் அட்டவணையிடப்படாத பழுதுபார்த்தல் செலவினம்	18.	(2,228.41)	(11,572.39)	(2,228.41)	(11,572.39)
பரிமாற்றல் இலாபங்கள்/(நட்டங்கள்) மற்றும் அட்டவணையிடப்படாத பழுதுபார்த்தல் செலவுகளுக்கு பின்னரான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)		29,684.51	30,091.09	23,996.45	25,621.37
ஒப்பந்த மீறலில் அபராதக் கட்டணம்	18.	-	(11,837.12)	-	(11,837.12)
நிதிச் செலவு மற்றும் வரிக்கு முந்திய இலாபம்		29,684.51	18,253.97	23,996.45	13,784.25
தேறிய நிதிச் செலவினம்					
நிதியியல் வருமானம்	23.1	804.79	823.06	742.40	710.90
நிதியியல் கிரயம்	23.2	(36,303.24)	(37,387.22)	(36,236.73)	(37,311.84)
வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களின் பாமாற்றல் இலாபம்/(நட்டம்)	23.3	3,924.53	26,716.81	3,903.32	26,687.55
		(31,573.92)	(9,847.35)	(31,591.01)	(9,913.39)
வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)		(1,889.41)	8,406.62	(7,594.56)	3,870.86
வருமான வரிச் செலவினம்	24.	(845.87)	(481.61)	-	-
ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)		(2,735.28)	7,925.01	(7,594.56)	3,870.86

பக்கங்கள் 71 முதல் 114 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

விரிவான வருமானக் கூற்று

		குழுமம்		கம்பனி	
31 மார்ச் 2025 இல் உள்ளவாறானது	குறிப்பு	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)		(2,735.28)	7,925.01	(7,594.56)	3,870.86
ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்)					
அடுத்து வரும் காலங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படக் கூடாத ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்):					
பணிக்கொடையிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/(நட்டம்)	16.3	(1,366.80)	(729.62)	(1,338.25)	(773.72)
பணிக்கொடையிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/நட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட வரியின் தாக்கம்	24.2	8.57	(13.23)	-	-
விடுமுறையினை பணமாக்குவதிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/(நட்டம்)	16.3	0.46	(460.39)	6.41	(456.97)
விடுமுறையினை பணமாக்குவதிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/(நட்டத்தில்) ஒத்திவைக்கப்பட்ட வரியின் தாக்கம்	24.2	1.79	1.03	-	-
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு	3.	-	(23.54)	-	-
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டிலான ஒத்திவைக்கப்பட்ட வரித் தாக்கம்	24.2	6.77	7.06	-	-
ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்), வரி நிகராக		(1,349.21)	(1,218.69)	(1,331.84)	(1,230.69)
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்/(நட்டம்), வரி நிகராக		(4,084.49)	6,706.32	(8,926.40)	2,640.17

பக்கங்கள் 71 முதல் 114 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று

31 மார்ச் 2025 இல் உள்ளவாறானது குழுமம்	கூறப்பட்ட மூலதனம் ரூ. மில்.	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. மில்.	மூலதன ஒதுக்கம் ரூ. மில்.	திரண்ட நட்டங்கள் ரூ. மில்.	மொத்தம் ரூ. மில்.
01 ஏப்ரல் 2023 இல் உள்ளவாறான மீதி (மீண்டும் கூறப்பட்டது)	96,360.67	7,823.56	991.74	(599,605.96)	(494,429.99)
கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13)	3,500.00	-	-	-	3,500.00
பங்குகளது வழங்கல் (குறிப்பு 13)	102,500.00	-	-	-	102,500.00
சொத்துப் பயன்பாட்டின் அடிப்படையில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மாற்றல்	-	(256.64)	-	256.64	-
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	7,925.01	7,925.01
ஏனைய விரிவான வருமானம்	-	(16.48)	-	(1,202.21)	(1,218.69)
மொத்த விரிவான வருமானம்/(நட்டம்)	-	(16.48)	-	6,722.80	6,706.32
31 மார்ச் 2024 இல் உள்ளவாறான மீதி	202,360.67	7,550.44	991.74	(592,626.52)	(381,723.67)
கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13)	1,288.56	-	-	-	1,288.56
பங்குகளது வழங்கல் (குறிப்பு 13)	5,000.00	-	-	-	5,000.00
சொத்துப் பயன்பாட்டின் அடிப்படையில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மாற்றல்	-	(256.51)	-	256.51	-
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	(2,735.28)	(2,735.28)
ஏனைய விரிவான வருமானம்	-	6.77	-	(1,355.99)	(1,349.22)
மொத்த விரிவான வருமானம்/(நட்டம்)	-	6.77	-	(4,091.27)	(4,084.50)
31 மார்ச் 2025 இல் உள்ளவாறான மீதி	208,649.23	7,300.70	991.74	(596,461.28)	(379,519.61)

31 மார்ச் 2025 இல் உள்ளவாறானது கம்பனி	கூறப்பட்ட மூலதனம் ரூ. மில்.	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. மில்.	மூலதன ஒதுக்கம் ரூ. மில்.	திரண்ட நட்டங்கள் ரூ. மில்.	மொத்தம் ரூ. மில்.
01 ஏப்ரல் 2023 இல் உள்ளவாறான மீதி (மீண்டும் கூறப்பட்டது)	96,360.67	3,960.47	991.74	(610,487.76)	(509,174.88)
கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13)	3,500.00	-	-	-	3,500.00
பங்குகளது வழங்கல் (குறிப்பு 13)	102,500.00	-	-	-	102,500.00
சொத்துப் பயன்பாட்டின் அடிப்படையில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மாற்றல்	-	(233.99)	-	233.99	-
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	3,870.86	3,870.86
ஏனைய விரிவான வருமானம்	-	-	-	(1,230.69)	(1,230.69)
மொத்த விரிவான வருமானம்/(நட்டம்)	-	-	-	2,640.17	2,640.17
31 மார்ச் 2024 இல் உள்ளவாறான மீதி	202,360.67	3,726.48	991.74	(607,613.60)	(400,534.71)
கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13)	1,288.56	-	-	-	1,288.56
பங்குகளது வழங்கல் (குறிப்பு 13)	5,000.00	-	-	-	5,000.00
சொத்துப் பயன்பாட்டின் அடிப்படையில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மாற்றல்	-	(233.94)	-	233.94	-
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	(7,594.56)	(7,594.56)
ஏனைய விரிவான வருமானம்	-	-	-	(1,331.84)	(1,331.84)
மொத்த விரிவான வருமானம்/(நட்டம்)	-	-	-	(8,926.40)	(8,926.40)
31 மார்ச் 2025 இல் உள்ளவாறான மீதி	208,649.23	3,492.54	991.74	(616,306.06)	(403,172.55)

பக்கங்கள் 71 முதல் 114 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

காசுப் பாய்ச்சல் கூற்று

31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	குழுமம்		கம்பனி	
		2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்					
வருமான வரிச் செலவினத்திற்கு முன்னரான இலாபம்/(நட்டம்)		(1,889.41)	8,406.62	(7,594.56)	3,870.86
செம்மையாக்கல்கள்:					
பெறுமானத்தேய்வு/பெறுமானக்குறைப்பு/வலுக்குன்றல்		15,974.55	14,138.07	15,679.72	13,869.27
நிதிச் செலவுகள்	23.2	36,303.24	37,387.22	36,236.73	37,311.84
ஆதனம், பொறி மற்றும் உபகரணம், அருவச் சொத்துக்கள் மற்றும் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் விற்பனையிலான நட்டம்/(இலாபம்)		3.55	0.71	3.05	0.15
நிதி வருமானம்	23.1	(804.79)	(823.06)	(742.40)	(710.90)
வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு	11.3	(161.83)	(187.97)	(164.42)	(134.44)
மெதுவாக நகரும் இருப்புக்களுக்கான தள்ளுபடி	10.1	326.40	171.54	327.10	174.81
பராமரிப்பு ஒதுக்கத்தின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு	6.2	6,159.76	11,878.14	6,159.76	11,878.14
வாடகைச் சலுகை	15.4	-	(44.97)	-	(44.97)
எய்தப் பெற்றிராத பரிமாற்றல் (இலாபம்)/நட்டத்திலான விளைவு		(4,248.84)	(27,797.68)	(4,227.68)	(27,768.41)
முன்விற்பனையின் மீள் பதிவு		(4,122.23)	(1,474.09)	(4,122.23)	(1,474.09)
ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டிற்கான ஏற்பாடு	16.3	1,513.20	1,595.32	1,382.08	1,427.02
தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)		49,053.60	43,249.85	42,937.15	38,399.28
இருப்புக்களில் குறைவு/(அதிகரிப்பு)		(272.97)	(1,691.72)	(168.31)	(1,765.93)
ஊர்தியினது முன்விற்பனையிலான (குறைவு)/அதிகரிப்பு		(231.68)	(6,939.36)	(231.68)	(6,939.36)
வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலான (அதிகரிப்பு) /குறைவு		2,310.97	6,851.88	2,879.78	2,869.85
வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலான அதிகரிப்பு/(குறைவு)		23,644.36	(46,039.16)	28,459.31	(37,936.69)
பராமரிப்பு ஒதுக்கங்களிலான (அதிகரிப்பு)/குறைவு		(11,128.50)	(12,886.65)	(11,128.50)	(12,886.65)
விமானப் பாதுகாப்பு வைப்புக்களிலான குறைவு/(அதிகரிப்பு)		834.30	(1,156.80)	834.30	(1,156.80)
தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) காசு		64,210.08	(18,611.96)	63,582.05	(19,416.30)
செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள்		(24,816.34)	(53,051.62)	(24,816.34)	(53,051.62)
செலுத்தப்பட்ட ஓய்வுபெறல் நலன்கள்	16.3	(1,213.32)	(1,517.53)	(1,053.94)	(1,434.64)
செலுத்தப்பட்ட வருமான வரி		(653.60)	(895.83)	-	(33.83)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப் பாய்ச்சல்		37,526.82	(74,076.94)	37,711.78	(73,936.39)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்					
பெறப்பட்ட வட்டி		411.39	378.78	306.46	299.71
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு		(2,054.85)	(1,422.01)	(1,969.55)	(1,355.53)
குறுங்கால முதலீடுகளிலான (முதலீடு)/மீளப்பெறல்கள்		70.89	(200.76)	69.47	131.44
அருவச் சொத்துக்களின் கொள்வனவு		(30.43)	(5.48)	(29.79)	(5.48)
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான வருவாய்		3.24	7.59	3.05	0.15
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு		(1,599.76)	(1,241.88)	(1,620.36)	(929.71)
நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள்					
இலங்கை அரசாங்கத்தினால் உரித்துவ உள்ளீடு		6,288.56	106,000.00	6,288.56	106,000.00
வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களின் மீள்செலுத்துகை		(5,852.95)	(1,985.64)	(5,852.95)	(1,985.64)
குத்தகை பொறுப்புக்களின் மீள்செலுத்துகை	15.4	(39,359.27)	(34,690.31)	(39,172.44)	(34,511.69)
நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு		(38,923.66)	69,324.05	(38,736.83)	69,502.67
காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு)		(2,996.60)	(5,994.77)	(2,645.41)	(5,363.43)
ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்	12.	(14,647.84)	(8,653.07)	(15,022.93)	(9,659.50)
ஆண்டின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்	12.	(17,644.44)	(14,647.84)	(17,668.34)	(15,022.93)

பக்கங்கள் 71 முதல் 114 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. கூட்டாண்மைத் தகவல்கள்

1.1. பொதுவானவை

கம்பனி

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ("கம்பனி") இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்டு உறைவிடத்தைக் கொண்ட ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் பிரதான வணிகம் மேற்கொள்ளும் இடமானது எயார்லைன் சென்டர், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கையில் அமைந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குழுமத்தின் இறுதியான தாய் நிறுவனமாகும்.

துணைநிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் (துணை நிறுவனம்) இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்டு உறைவிடத்தைக் கொண்ட ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் ஒரு முழுவதும் உரித்துடைய துணை நிறுவனமாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் பிரதான வணிகம் மேற்கொள்ளும் இடமானது எயார்லைன் சென்டர், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கையில் அமைந்துள்ளது.

1.2 பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

கம்பனி

கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல்களை ஏந்திச் செல்வதற்காக அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச, அட்டவணைப்படுத்தாத வான்வழிச் சேவைகளை உள்ளடக்கும் என்பதுடன் இது இலங்கையின் நியமிக்கப்பட்ட ஊர்தியாகும். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.நி.) மற்றும் மத்தல ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.ச.வி.நி.) என்பவற்றில் வான் தரிப்பிட சேவைகளை வழங்குதல் மற்றும் விமானத்தினுள் தீர்வையற்ற பொருட்களின் விற்பனை, உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் விடுமுறை தொகுப்புகளை சந்தைப்படுத்தல் என்பன ஏனைய பிரதான நடவடிக்கைகளாகும். மூன்றாம் தரப்பினருக்கான விமானப் பராமரிப்பினை வழங்குதல், விமானச் செயற்பாட்டுச் சேவைகள் மற்றும் வான் பயணவியல் தொடர்பான பயிற்சிகளை நடாத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளாகும்.

துணைநிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் (துணைக்கம்பனி) பிரதான நடவடிக்கை ப.ச.வி.நி. மற்றும் ம.ரா.ச.வி.நி. ஆகிவற்றினூடாக செயற்படும் விமான நிறுவனங்களுக்கு விமானத்தினுள் உணவு வழங்கல் சேவைகளை வழங்குவதாகும். ஏனைய துணை நடவடிக்கைகளாக பொது மற்றும் மாற்றுப்பயணியர் உணவு விடுதிகள், சலவை செய்தல் சேவைகளை வழங்கல் மற்றும் மாற்றுப்பயணியர் ஹோட்டலினை முகாமைப்படுத்தல் என்பன காணப்படுகின்றன.

1.3 வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கான பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரமானது 29 ஜூலை 2025. இல் வழங்கப்பட்டது.

2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1 தயாரிப்பின் அடிப்படை

வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலன்றி, கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் ஓர் அட்டுறு அடிப்படையில் மற்றும் வரலாற்று கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு விலக்காக, காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணம் என்பன நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.

வேறுவிதமாக குறிப்பிடப்படும்போது தவிர, அனைத்து பெறுமதிகளும் இலங்கை ரூபா மில்லியனில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

2.1.1 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

மீளாய்வாண்டின்போது குழுமமானது ரூபா 2,735.28 மில்லியனை நட்டமாகப் பதிவுசெய்ததுடன் (2024 - இலாபம் ரூபா 7,925.01 மில்லியன்) 31 மார்ச் 2025 இல் திரண்ட நட்டமாக ரூபா 596,461.28 மில்லியன் (2024 - ரூபா 592,626.52 மில்லியன்) காணப்பட்டது. மேலும், குழுமத்தின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 346,479.55 மில்லியனால் விஞ்சியதுடன் (2024 – ரூபா 327,144.66 மில்லியன்) அறிக்கையிடப்படும் திகதியில் குழுமத்தின் மொத்த உரித்துவமானது எதிர்மறையான ரூபா 379,519.61 மில்லியனாகக் (2024- எதிர்மறையான ரூபா 381,723.67 மில்லியன்) காணப்பட்டது.

கம்பனியானது ஒரு நட்டமாக ரூபா 7,594.56 மில்லியனை (2024- இலாபம் ரூபா 3870.86 மில்லியன்) பதிவுசெய்ததுடன் 31 மார்ச் 2025 இல் அதன் திரண்ட நட்டம் ரூபா 616,306.06 மில்லியனாகக் (2024 - 607,613.60 மில்லியன்) காணப்பட்டது. மேலும் கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 368,296.84 மில்லியனால் (2024 - ரூபா 344,130.60 மில்லியன்) விஞ்சியதுடன் அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனியின் மொத்த உரித்துவமானது எதிர்மறையான ரூபா 403,172.55 மில்லியனாகக் (2024 - எதிர்மறையான ரூபா 400,534.71 மில்லியன்) காணப்பட்டது.

இலங்கை அரசாங்கமானது தற்போது தனியார் மயமாக்கல் தெரிவினை தொடராமல் இருப்பதற்கும் முன்னோக்கிச் செல்லும்போது ஸ்ரீலங்கன் எயர்லைன்சுக்கு துணையளிப்பதற்கும் தீர்மானித்துள்ளது. விமான நிறுவனத்தின் கடன்களை மீள்கட்டமைப்பதில் கவனஞ்செலுத்தி அதன் நிதியியல் நிலையினை மேம்படுத்தி தேசிய பொருளாதாரத்தில் அதன் நிலையினை திடப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. கம்பனியானது பின்வரும் குறிப்பிட்ட குறிக்கோள்களுடன் ஒரு ஐந்து வருட வணிகத் திட்டத்தினை விருத்திசெய்துள்ளது. விமானத் தொகுதியினை விரிவாக்குதல், சந்தை தலைமைத்துவத்தினை மீட்டெடுத்தல், மற்றும் வருவாய் மேம்படுத்தல் என்பவையாகும். கொள்திறன் கட்டுப்பாடுகளை எதிர்த்து போராடுவதற்காக விமான நிறுவனமானது அடுத்துவரும் ஐந்து வருடங்களின் மீது அதன் விமானத்தொகுதியினை படிப்படியாக அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. 2025/26 காலப்பகுதிக்கு மூன்று அகன்ற அமைப்புடைய விமானங்களை சேர்ப்பதற்கு திட்டமிட்டுள்ளது. மேலும், விமான நிறுவனமானது கொழும்பினூடாக திடமான சந்தைகளுடன் இணைப்பதற்கான பாலமாக வானூர்தி செயற்படுவதற்கான மூலோபாயமான நிலைப்படுத்தலில் முன்னிறுத்தம் செய்யும் மற்றும் நேரடி சேவைகளை வழங்குவதன் மூலமும் அடுக்கு நிகழ்வினை அதிகரிப்பதன் மூலம் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கும் எண்ணியுள்ளது. அதேபோன்று, விமான நிறுவனமானது செலவுச் சிக்கன வழிமுறைகளுடன் வினைத்திறனை அதிகரிப்பதற்கான மூலோபாயங்களை அமுலாக்குவதில் அதன் முன்னிறுத்தத்தினை விரிவாக்கியுள்ளதுடன், இது ஆக்கத்திறனை மேம்படுத்தி சாதகமான செயற்பாட்டு விளைவுகளை விளைவிக்கும். மேலும், விமான நிறுவனமானது அதன் மூலோபாய வணிக அலகுகளில் (SBUs) வளர்ச்சி வாய்ப்புக்களையும் தொடரும்.

அரசாங்கமானது இரண்டு அரச வங்கிகளிடமிருந்தான கடன்களின் மீள்செலுத்தலுக்கு நேரடியாக உதவுவதுடன், இது அமைச்சரவை அமைச்சர்களினால் அங்கீகரிக்கப்பட்டு தேசிய பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில், இலங்கை அரசாங்கமானது அந்த வங்கிகளுடன் கடன் மூலதனம் மற்றும் வட்டி மீள்செலுத்தல்களை அடுத்த ஐந்த ஆண்டுகளின் மீது மேற்கொள்வதற்கான ஒப்பந்தங்களில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இலங்கை அரசாங்கமானது இறையாண்மை உத்தரவாதமளிக்கப்பட்ட சர்வதேச முறியான USD 175 மில்லியின் மீள்கட்டமைப்பிற்கு உறுதுணையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்துடன் நிதியியல் ஆலோசகரும் இணைந்து இந்த மீள்கட்டமைப்பில் முறி உடைமையாளர்களுடன் பேரம்பேசுவதற்கான பிரேரணைகளை தற்போது மதிப்பிடுகின்றார்கள்.

அரச வங்கிக் கடன்களான ரூபா 91,315.23 மில்லியன் மற்றும் சர்வதேச முறியான ரூபா 62,677.04 மில்லியன் ஆகியவற்றின் முன்மொழியப்பட்ட மீள்கட்டமைப்பானது குழுமத்தின் தேறிய நடைமுறைப் பொறுப்பு நிலையினை கணிசமானளவு மேம்படுத்தும்.

இலங்கை அரசாங்கமானது 23 ஜூன் 2025 திகதியிடப்பட்ட ஒரு அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் 30 ஜூன் 2025 திகதியிடப்பட்டு திறைசேரியின் செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

என்பவற்றின் மூலம் கம்பனி அதன் செயற்பாடுகளை நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியாக தொடர்வதற்கு கம்பனிக்கு தேவையான நிதியியல் உறுதுணையினை வழங்கும் என உறுதிசெய்துள்ளது. அதன் தொடர்ச்சியான உறுதுணையினை உறுதிசெய்யும் விதமாக இலங்கை அரசாங்கமானது கம்பனியின் திரவத்தன்மை நிலைக்கு துணையளிப்பதற்காக மீளாய்வாண்டின்போது மூன்று தவணைகளில் மொத்தமாக ரூபா 6.3 பில்லியனை உரித்துவமாக உட்செலுத்தியுள்ளது: ஏப்ரல் 2024 இல் ரூபா 1.5 பில்லியன், செப்டம்பர் 2024 இல் ரூபா 2.4 பில்லியன் மற்றும் ஜனவரி 2025 இல் ரூபா 2.4 பில்லியன் ஆகும். மேலும், கம்பனியின் திரவத்தன்மை நிலையினை பலப்படுத்தும் நோக்கில் பணிப்பாளர்கள் சபையானது மாற்று நிதியளித்தல் ஒழுங்குகளை மதிப்பிடுகின்றது.

பணிப்பாளர்கள் சபையானது, மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளின் அமுலாக்கம் மற்றும் கம்பனியின் கடன்களை மீள்கட்டமைப்பதில் அரசாங்கத்தின் தொடர்ச்சியான உறுதுணை என்பவற்றின் காரணமாக கம்பனியின் திரவத்தன்மை நிலையானது எதிர்காலத்தில் திடமடையும் என்ற கருத்தினைக் கொண்டுள்ளார்கள். இந்த காரணிகளை கருத்திலெடுக்கும்போது, ஒரு நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியான இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தல் பொருத்தமானது என்ற கருத்தினை பணிப்பாளர்கள் சபையானது கொண்டுள்ளது.

2.1.2 இணங்கியொழுகுதல் கூற்று

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (LKAS/SLFRS) அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பும் முன்னிலைப்படுத்தலும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்கியொழுகின்றன.

2.1.3 ஒப்பிடப்படும் தகவல்கள்

முன்னைய வருடங்களின் நிதிக் கூற்றுக்களது முன்னிலைப்படுத்தலும் வகைப்படுத்தலும் பொருத்தமான இடங்களில் சிறந்த முன்னிலைப்படுத்தலுக்காகவும் நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடக்கூடியதாகவும் இருப்பதற்காக திருத்தியமைக்கப்பட்டன.

2.1.4 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 01 “நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்” இனால் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு வேறுவிதத்தில் குறிப்பிட்டாலன்றி அனைத்து நிதியியல் தகவல்களும் இலங்கை ரூபா மில்லியனில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

2.2 ஒருங்கிணைப்பதற்கான அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் 31 மார்ச் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன. கம்பனியின் துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் நிலையான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி அதே அறிக்கையிடப்படும் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2.1 வணிகக் கூட்டு

கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகத்தின் வரைவிலக்கணத்தை பூர்த்தி செய்யும்போது கையகப்படுத்தல் முறையைப் பயன்படுத்தி வணிக சேர்க்கைகளுக்கான குழுமம் கணக்கீடு செய்வதுடன் கட்டுப்பாடானது குழுமத்திற்கு மாற்றப்படும். குறிப்பிட்ட செயல்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகமா என்பதைத் தீர்மானிப்பதில், கையகப்படுத்தப்பட்ட சொத்துகள் மற்றும் செயல்பாடுகளின் தொகுப்பில், குறைந்தபட்சம், ஒரு உள்ளீடு மற்றும் கணிசமான செயல்முறை ஆகியவை அடங்கியுள்ளனவா என்பதையும், வாங்கிய தொகுப்பில் வெளியீடுகளை உருவாக்கும் திறன் உள்ளதா என்பதையும் குழுமம் மதிப்பிடுகிறது.

கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகமல்ல என்பதை எளிமைப்படுத்தப்பட்ட மதிப்பீட்டை அனுமதிக்கும் “செறிவு சோதனை” ஒன்றைப் பயன்படுத்துவதற்கான ஒரு தெரிவு குழுமத்திற்கு உள்ளது. பெறப்பட்ட மொத்த சொத்துக்களின் நியாயப் பெறுமதி அனைத்தும் ஒரு தனியாக அடையாளம் காணக்கூடிய சொத்து அல்லது ஒத்த அடையாளம் காணக்கூடிய சொத்துகளின் குழுவில் குவிந்திருந்தால் விருப்பத்தெரிவுச் செறிவுச் சோதனை பூர்த்தி செய்யப்படுகிறது.

கையகப்படுத்தலில் மாற்றப்பட்ட மறுபயனானது பொதுவாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன், இவை கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துக்களாக இனங்காணப்படுகின்றன. எழுகின்ற ஏதேனும் நன்மதிப்பானது வலுக்குன்றலுக்காக வருடாந்தம் பரிசோதனை செய்யப்படுகின்றது. ஒரு மலிவான கொள்வனவிலிருந்தான ஏதேனும் இலாபங்கள் உடனடியாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. கடன் அல்லது உரித்துவப் பிணையங்களின் வழங்கல் தொடர்பானவை தவிர கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் ஆட்பட்டதாக செலவிடப்படுகின்றது.

மாற்றப்பட்ட மறுபயனானது முன் நடைமுறையிலுள்ள உறவுகளது தீர்ப்பனவு தொடர்பான தொகைகளை உள்ளடக்கவில்லை. அத்தகைய தொகைகள் பொதுவாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஏதேனும் எதிர்பாரா நிகழ்வு மறுபயனானது கையகப்படுத்தல் திகதியில் நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது. ஒரு நிதியியல் கருவியின் வரைவிலக்கணத்தை சந்திக்கும் எதிர்பாரா நிகழ்வு மறுபயனை செலுத்துவதற்கான ஒரு கடப்பாடானது உரித்துவமாக வகைப்படுத்தப்பட்டிருந்தால், அது மீள்அளவீடு செய்யப்படாது தீர்ப்பனவானது உரித்துவத்தினுள் கணக்கிடப்படுகின்றது. இல்லாவிடின், ஏனைய எதிர்பாரா மறுபயனானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் நியாயப் பெறுமதியில் மீள்அளவீடு செய்யப்பட்டு எதிபாரா மறுபயனின் நியாயப் பெறுமதியில் பின்னரான மாற்றங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்து.

2.2.2 துணை நிறுவனங்கள்

துணை நிறுவனங்கள் குழுமத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகும். குழுமமானது அதன் ஈடுபாட்டிலிருந்து மாற்றமடையும் வருவாய்க்கான வெளிப்பாட்டினை அல்லது உரிமைகளை கொண்டிருக்கும்போது மற்றும் நிறுவனத்தின் மீதான அதன் அதிகாரத்தினூடாக அந்த விளைவுகளில் செல்வாக்கு செலுத்தும் ஆற்றலினைக் கொண்டிருந்தால் அது அந்த நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றது. துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் கட்டுப்பாடு ஆரம்பித்த திகதியிலிருந்து கட்டுப்பாடு நிறைவடையும் திகதி வரைக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றன.

2.2.3 கட்டுப்பாடற்ற நலன்கள்

ஒவ்வொரு வணிக சேர்க்கைக்கும், கையகப்படுத்துவதில் எந்தவொரு கட்டுப்பாடற்ற நலன்களை அளவிடுவதற்கு குழுமமானது பின்வருவதை தேர்ந்தெடுக்கிறது: நியாயப் பெறுமதியில் அல்லது பொதுவாக நியாயமான மதிப்பில் இருக்கும் கையகப்படுத்துபவரின் அடையாளம் காணக்கூடிய தேறிய சொத்துக்களின் விகிதாசார பங்கில்.

கட்டுப்பாடற்ற நலன்களது கையகப்படுத்தலானது உரிமையாளர்கள் என்ற அவர்களது கொள்திறனில் உரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களாக கருதப்படுகிறது, எனவே, அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக எந்தவொரு நன்மதிப்பும் அங்கீகரிக்கப்படவில்லை. கட்டுப்பாடற்ற நலன்களுக்கான செம்மையாக்கல்கள் துணை நிறுவனத்தின் தேறிய சொத்துக்களின் விகிதாசார தொகையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

கட்டுப்பாட்டினில் இழப்பை ஏற்படுத்தாத ஒரு துணை நிறுவனத்திலான குழுமத்தின் நலன்களில் ஏற்படும் மாற்றங்கள் உரித்துவ கொடுக்கல் வாங்கல்களாக கணக்கிலெடுக்கப்படுகின்றன.

2.2.4 கட்டுப்பாட்டின் இழப்பு

குழுமமானது ஒரு துணை நிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டை இழக்கும்போது, அது துணை நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மற்றும் தொடர்புடைய எந்தவொரு கட்டுப்பாடற்ற நலன் மற்றும் உரித்துவத்தின் ஏனைய கூறுகளையும் அங்கீகாரத்திலிருந்து நீக்குகின்றது. இதன் விளைவாக ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. கட்டுப்பாட்டினை இழக்கும்போது முன்னாள் துணை நிறுவனத்தில் ஏதேனும் தக்கவைக்கப்பட்ட நலனானது நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

2.2.5 ஒருங்கிணைப்பின்போது நீக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள்

குழுமத்தினுள்ளான மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், மற்றும்

குழுமத்தினுள்ளான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் எய்தப்பெற்றிராத வருமானம் மற்றும் செலவினங்கள் அகற்றப்படுகின்றன. உரித்துவக் கணக்கீடு செய்யப்பட்ட முதலீடு செய்யப்பட்ட நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற எய்தப்பெற்றிராத இலாபங்கள் முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்தில் குழுமத்தின் அக்கறையின் அளவிற்கு முதலீட்டிற்கு எதிராக அகற்றப்படுகின்றன. எய்தப்பெற்றிராத நட்டங்கள் எய்தப்பெற்றிராத இலாபங்கள் போன்று அதே விதத்தில் அகற்றப்படுகின்றன, ஆனால் வலுக்குன்றலுக்கான சான்று காணப்படாத அளவிற்கு மாத்திரம் ஆகும்.

2.3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காலங்களுக்கும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

2.3.1 முக்கியமான கணக்கீட்டு நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

குழுவின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது, தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அறிக்கையிடப்பட்ட தொகைகளான வருவாய், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்கள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என்பவற்றில் முகாமைத்துவம் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொள்ளும் தேவையைக் கொண்டுள்ளது. இந்த நியாயப்பாடுகள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்றதன்மைகள் எதிர்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டுசெல்லப்படும் தொகையில் ஒரு பொருண்மையான செம்மையாக்கல் தேவைப்படும் விளைவுகளை விளைவிக்கலாம்.

(a) நியாயப்பாடுகள்

(i) எதிர்பாரா பொறுப்புக்கள் - வழக்காடல்கள்

குழுமமானது அறிக்கையிடல் காலப் பகுதியின் முடிவில் பல்வேறு தரப்பினருடன் பல நிலுவையான வழக்காடல்களை கொண்டிருந்தது. பணிப்பாளர்கள் சபையானது, குழுமத்தின் சட்ட ஆலோசகருடன் முறையான ஆலோசனையின் பின்னர், ஒவ்வொரு வழக்கின் தகுதியையும் மதிப்பிடுகிறது மற்றும் எதிர்காலத்தில் வளங்கள் வெளிப்பாய்ச்சல் இடம் பெறும் சாத்தியம் உள்ளது என்று தீர்மானிக்கப்படும்போது தேவையான ஏற்பாடுகளை செய்கிறது.

வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள் மற்றும் பணியாட்களினால் குழுமத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள், ஏனைய கோரல்கள் மற்றும் சாத்தியமான கோரல்கள் தொடர்பாக குழுமத்தின் வணிகப் போக்கில் எழுகின்ற எந்தவொரு எதிர்பாரா பொறுப்பு தொடர்பான ஏதேனும் குறிப்பிடத்தக்க பொறுப்பினை பணிப்பாளர்கள் எதிர்பார்க்காதபோது, சம்பந்தப்பட்ட தொகைகள் குறிப்பு 25.2 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(ii) குத்தகைகள்

ஒப்பந்தமானது ஓர் குத்தகையா அல்லது ஓர் குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என்று மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஒப்பந்தமானது ஓர் இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஓர் மறுபயனுக்கு பரிமாற்றல் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை தெரிவிக்குமாயின் அவ் ஒப்பந்தம் ஓர் குத்தகை எனப்படும். அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒப்பந்தம் தெரிவிக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு கருதப்படும் காரணிகளாக: ஒப்பந்தத்தில் அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டை உள்ளடக்கியது, குத்தகைக் காலம் முழுவதும் சொத்தின் பயன்பாட்டிலிருந்து பெறும் கணிசமான அனைத்து பொருளாதார நன்மைகளையும் பெற குழுவுக்கு உரிமை உண்டு மேலும் சொத்தின் பயன்பாட்டை இயக்குவதற்கு குழுவுக்கு உரிமை உண்டு.

(b) மதிப்பீடுகள்

(i) ஆதனம், பொறி, உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு/பெறுமதி குறைப்பு

முகாமைத்துவமானது இந்த சொத்துக்களின் பொருளாதார வாழ்நாள் மற்றும் சொத்துக்களின் உத்தேசித்த பயன்பாடு என்பவற்றின் அடிப்படையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களுக்கு பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் எச்சப் பெறுமதிகளை ஒதுக்குகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் முகாமைத்துவமானது எச்சப் பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் பெறுமானத்தேய்வு/பெறுமதி குறைப்பு முறைகள் என்பவற்றை மீளாய்வு செய்து இந்த சொத்துக்களில் பொதிந்துள்ள பொருளாதார நலன்களின் நுகர்விலான முன்னைய மதிப்பீடுகள் மற்றும் போக்குகளுடனான ஒத்திசைவினை உறுதிப்படுத்துகின்றது. இந்த சொத்துக்களது பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் எச்சப் பெறுமதிகளிலான மாற்றங்கள் எதிர்கால பெறுமானத்தேய்வு அல்லது பெறுமதிக்குறைப்புக் கிரயத்தில் திருத்தங்களை விளைவிக்கலாம் (கொள்கை 2.4.3 (B) மற்றும் 2.4.4 இனை பார்க்கவும்).

(ii) அடிக்கடி பறப்பவர் திட்டம்

வருவாயின் பிரத்தியேகமாக இனங்காணக்கூடிய கூறாக வெகுமதி வரவுகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. வெகுமதி வரவுகளுக்கு அவற்றின் நியாயப் பெறுமதியின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள மறுபயன்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் ஒரு பொறுப்பாக (ஒத்திவைக்கப்பட்ட வருவாய்) கணக்கீடு செய்யப்படுகின்றது.

மைல்/வரவுகளின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு மதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதுடன் பின்வரும் காரணிகளின் நிறையிடப்பட்ட சராசரியினை பிரதிபலிக்கின்றது. அதாவது, துறைக்கான பயணக்கட்டணம், விமானப் பயண தரமுயர்த்தல்கள் மற்றும் பங்காளி வெகுமதிகள் என்பனவாகும். நியாயப் பெறுமதி கணிப்பீடுகளுக்கு மீட்டலிலான வரலாற்று போக்குகள் அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அங்கத்தவர்களினால் மீட்கப்படாது என எதிர்பார்க்கப்படும் மைல்கள் மற்றும் முதிர்வுற்ற மைல்கள் ஆகியவற்றுக்காக மைல்களின் நியாயப் பெறுமதிக்கு செம்மையாக்கல் மேற்கொள்ளப்படுகின்றன.

மைல்களின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு உள்வாங்கப்படும் பன்முகமான உள்ளீடுகளின் நிமித்தம் முகாமைத்துவம் ஒரு மட்டத்திலான நியாயப்பாட்டினை பிரயோகிக்கின்றது.

(iii) பராமரிப்பு ஒதுக்கம்

கம்பனியானது குத்தகைகளின் கீழ் காணப்படும் பல விமானங்கள் மற்றும் என்ஜின்களுக்கு பராமரிப்பு நோக்கி உடன்பாடு கண்ட விதிமுறைகளின் அடிப்படையில் குத்தகைக்கு விடுபவருக்கு மாதாந்த கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது. இந்த மாதாந்த கொடுப்பனவுகள் மணித்தியாலங்களின் எண்ணிக்கை அல்லது பறந்த சுழற்சிகள் அல்லது பயணவழி காலம் ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும். காலாகாலம் முகாமைத்துவமானது மீளப்பெறத்தக்க தொகைகளின் சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் அத்தகைய கொடுப்பனவுகளின் மீளப்பெறத்தக்க தன்மையினை மதிப்பீடுசெய்கின்றது. ஒரு சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகையானது அதன் மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது வலுக்குன்றியுள்ளது என கருதப்பட்டு மீளப்பெறத்தக்க தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது. (குறிப்பு 6 இனை பார்க்கவும்).

(iv) விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்களுக்கான ஏற்பாடு

பராமரிப்பு நோக்கிய உடன்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் குத்தைகளின் கீழ், கம்பனியானது விமானச் சட்டகம், என்ஜின்கள் மற்றும் தரையிறக்கும் பொறி ஆகியவற்றில் கனத்த பராமரிப்பினை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது. கனமான பராமரிப்புச் செலவினத்திற்கான ஏற்பாடானது சீராக்கலின் தன்மையினைப் பொறுத்து பயன்பாடு அல்லது நேரம் என்பவற்றின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றது. ஏற்பாட்டிற்கு வருவதில், பின்வருவன கவனிக்கப்படுகின்றன: பரிசீலனை மேற்கொள்ளும் நேரத்தில் சொத்தின் மதிப்பீட்டு நிலைமையில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, ஆட்படவேண்டிய மூலப்பொருட்கள் மற்றும் நிறுவனச் செலவுகள் மற்றும் எப்போது பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பனவாகும். இந்த அனுமானங்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன் அவை நியாயப்பாட்டினை உறுதிசெய்வதற்காக கிரமமாக மீளாய்வுசெய்யப்படுகின்றன. ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்க விளைவினை உருவாக்கும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளிலான ஏதேனும் திருத்தங்கள் வருங்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுகின்றன. (குறிப்பு 16.1 இனை பார்க்கவும்)

(v) விமானத்தை திருப்பி வழங்கும் நிலைமைகளுக்கான ஏற்பாடு

குத்தகை உடன்படிக்கையில் குத்தகைக்கு விடுபவரினால் குறிப்பிடப்பட்ட சில நிலைமையில் குத்தகைக்கு எடுத்த

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

விமானத்தினை மீள் விநியோகிப்பதற்கு கம்பனி கடமைப்பட்டுள்ளது. விமானத்தினை திருப்பி வழங்கும் நிலைமைகள் எதிர்பார்க்கப்படும் செலவினம் தொடர்பான அனுமானங்கள், அதிகரிப்பு வீதங்கள், எதிர்பார்க்கப்படும் கடப்பாடு முதிர்வுடன் சமமான கழிவிறக்க வீதங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. ஏற்பாட்டிற்கு வருவதில், மீள் விநியோகிக்கும் நேரத்தில் சொத்தின் மதிப்பிடப்பட்ட நிலைமை, மீள்விநியோகம் மேற்கொள்ளப்படும் நேரத்தில் ஆட்படவேண்டிய மூலப்பொருள் மற்றும் நிர்வாகச் செலவுகள் ஆகியவற்றில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அனுமானங்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன் அவை மெய்யான பெறுமதிக்கு ஒத்ததாக காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது. ஏற்பாட்டில் பொருண்மையான விளைவினை ஏற்படுத்தும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளிலான ஏதேனும் திருத்தங்கள் வருங்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுகின்றன. (குறிப்பு 16.2 இனை பார்க்கவும்)

(vi) விமானப் போக்குவரத்து சேவைகள் தொடர்பான நேரடியான செயற்பாட்டு செலவினங்களுக்கான ஏற்பாடுகள்

விமானப் போக்குவரத்து சேவைகளின் செயற்படுத்தலானது எரிபொருள், தரை கையாளும் கட்டணங்கள், தரையிறக்கம் மற்றும் தரித்திருத்தல் கட்டணங்கள், விமானத்தினுள் வழங்கப்படும் உணவுகள், ஒதுக்கீட்டு முறைகள், முன்பதிவு கட்டணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செலவுகள் போன்ற நேரடிச் செலவுகளில் பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குதல் தவிர்க்கமுடியாததாகும். மதிப்பீடுகள் மற்றும் அவற்றுடனிணைந்த அனுமானங்கள் என்பன அந்த சூழ்நிலைகளில் நியாயமானது என நம்பப்படும் பல்வேறுகாரணிகளின் அடிப்படையில் உள்ளதுடன், இவற்றின் விளைவுகள் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் கொண்டுசெல்லப்படும் பொறுப்புக்களின் பெறுமதிக்கு ஏற்பாடுகள் மேற்கொள்வதன் அடிப்படையினை உருவாக்குகின்றது.

(vii) இருப்புக்கள்

குழுமமானது பௌதீக சரிபார்ப்பு மற்றும் முதிர்வின் அடிப்படையில் இருப்புக்களின் உளதாம் தன்மை மற்றும் பயன்படுத்தக்கூடிய தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. முகாமைத்துவம் பழமைபட்டுப்போன இருப்பினை தீர்மானிக்கும்போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(viii) நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல்

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி ஒன்று வலுக்குன்றியுள்ளது என ஏதேனும் மெய்யான சான்று காணப்படுகின்றதா என்று குழுமமானது மதிப்பிடுகின்றது. நிலுவையிலுள்ள காலம் மற்றும் மீளப்பெறுந்தன்மையில் நிச்சயமற்றதன்மையினை குறிக்கும் பாதுகாப்பு மற்றும் ஏதேனும் வேறு காரணிகளை முகாமைத்துவம் அறிந்திருந்தால் அத்தகைய வலுக்குன்றலினை மதிப்பிடுவதில் நியாயப்பாட்டினை பயன்படுத்துகின்றது.

(c) அனுமானங்கள்

(i) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம்

இலங்கையினைத் தளமாகக் கொண்ட பணியாட்களது ஓய்வுபெறல் நலன் திட்டத்தின் செலவானது ஒரு காப்பீட்டுக் கணிப்பீட்டு பெறுமதியிடலை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியானது வட்டி வீதம், சம்பள அதிகரிப்பு வீதங்கள், ஓய்வுபெறல் வயது, ஏனைய மக்கள்தொகைசார் காரணிகள், மற்றும் கம்பனியின் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி தொடர்பான அனுமானங்களின் அடிப்படையிலானதாகும். திட்டத்தின் நீண்டகாலத் தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மைக்கு ஆட்பட்டதாகும். (குறிப்பு 2.4.16 (A) இனை பார்க்கவும்)

(ii) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு

ஓர் சுயாதீன தகைமையுடைய மதிப்பீட்டாளரின் சேவைகளை பயன்படுத்தி காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் மீள்மதிப்பீட்டு தொகைகளில் அளவிடப்படுகின்றன. அத்தகைய மதிப்பீட்டாளர் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு அனுமானங்கள் மற்றும் பெறுமதியிடல் நுட்பங்களை பயன்படுத்துகின்றார். மதிப்பீட்டின் அடிப்படையானது குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

2.4.1 வெளிநாட்டு நாணயப் பெயர்வு

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்தின் மாற்றுவீதத்தில் பதிவுசெய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்திற்கு பரிமாற்றல் வீதத்தை பயன்படுத்தி திருப்பப்படுகின்றன. இதன் விளைவாக ஏற்படும் வெளிநாட்டு பரிமாற்றல் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தில் அளவிடப்படும் நிதியல்லாத உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் தினங்களில் உள்ள நாணயப் பரிமாற்று வீதங்களை பயன்படுத்தி மாற்றப்படுகின்றன.

2.4.2 வரிவிதிப்பு

வருமான வரிச் செலவினம் நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது. இது ஒரு வணிக கூட்டுடன் தொடர்புடைய அல்லது உரித்துவத்தில் அல்லது ஏனைய விரிவான வருமானத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்டவை ஆகியவற்றின் அளவைத் தவிர, இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிச்சயமற்ற வரி கவனிப்புகள் உள்ளடங்கலான வருமான வரிகள் தொடர்பான வட்டி மற்றும் தண்டப்பணங்கள் வருவான வரிகளின் வரையறையினைப் பூர்த்தி செய்யவில்லை என குழுமம் தீர்மானித்துள்ளதுடன் எனவே அவற்றை LKAS 37 ஏற்பாடுகள், எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் எதிர்பாரா சொத்துகளின் கீழ் கணக்கிட்டுள்ளது.

(i) நடைமுறை வருமான வரி

நடைமுறை வரி என்பது ஆண்டுக்கு வரி விதிக்கத்தக்க வருமானம் அல்லது நட்டத்தில் செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க எதிர்பார்க்கப்படும் வரி மற்றும் முந்தைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க வரிக்கு ஏதேனும் செம்மையாக்கல் ஆகியவற்றை உள்ளடக்கும். வருமான வரிகள் தொடர்பான நிச்சயமற்றதன்மைகள் ஏதேனும் இருப்பின் அதனைப் பிரதிபலிக்கும் செலுத்துவதற்கு அல்லது பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் வரித் தொகையின் சிறந்த மதிப்பீடாக செலுத்தவேண்டிய அல்லது பெறவேண்டிய நடைமுறை வரித் தொகை காணப்படுகின்றது. அறிக்கையிடல் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்ட வரி விகிதங்களைப் பயன்படுத்தி இது அளவிடப்படுகிறது. நடைமுறை வரியானது பங்கிலாபங்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் வரியினையும் உள்ளடக்குகின்றது.

சில வரன்முறைகளை சந்தித்தால் மாத்திரமே நடைமுறை வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுகட்டப்படுகின்றன

கம்பனி

(a) உள்ளூர் வரிவிதிப்பு

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அடிப்படையில் 1 ஏப்ரல் 2018 முதல் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் வருமான வரிக்கு பொறுப்பாளியாகும்.

(b) வெளிநாட்டு வரிவிதிப்பு

கம்பனியானது அதன் வெளிநாட்டு செயற்பாடுகளில் இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கை காணப்படாத நாடுகளில் வரிக்கு பொறுப்பாயுள்ளது.

துணைநிறுவனம் - ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்

முதலீட்டு சபையுடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் விமானச் சமையலறை மற்றும் மாற்றுப்பயண உணவகத்திலிருந்து வரும் வருமானமானது 31 மே 2021 வரை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் 31 மே 2029 இல் நிறைவடையும் எட்டு வருடங்களுக்கு 15% சலுகை வீதத்தில் வரி விதிக்கப்படும். ஏனைய மூலங்களிலிருந்து வரும் வருமானமானது சாதாரண வரி வீதத்தில் வரி விதிக்கப்படும்.

(ii) ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரியானது, பொறுப்புக்கள் முறையினை பயன்படுத்தி அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரித் தளங்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றை கொண்டு

செல்லும் தொகைகளுக்கும் இடையேயான தற்காலிக வித்தியாசங்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ஒத்திவைக்கப்பட்ட வரியானது அறிக்கையிடப்படும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்ட சட்டங்களின அடிப்படையில், தற்காலிக வித்தியாசங்கள் திருப்பப்படும்போது பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் அளவிடப்படுகின்றது.

ஒரு ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தானது பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் மற்றும் கழிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களுக்கு, எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்கள் கிடைக்கத்தக்கதாய் உள்ளதுடன் அதற்கெதிராக அவை பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியத்தின் அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றது. ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் தொடர்புடைய வரி நலனின் எய்தப்பெறுதல் சாத்தியப்படாது இருக்குமாயின் அந்த அளவுக்கு குறைக்கப்படும்.

2.4.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

(a) கிரயம் மற்றும் பெறுமதியிடல்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களது அனைத்து உருப்படிகளும் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்படுகின்றன. கிரயமானது கையகப்படுத்தல் மற்றும் கட்டுமானம் ஆகியவற்றுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவினங்களை உள்ளடக்குகின்றது. காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளிலிருந்து ஏதேனும் பின்னரான அவற்றிலான பெறுமானத்தேய்வு மற்றும் வலுக்குன்றல் என்பவை கழிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றது. ஏனைய அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் வரலாற்றுக் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு மற்றும்/அல்லது ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் என்பன கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன.

மீள்மதிப்பீட்டு தொகைகளில் அளவிடப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களிலான ஏதேனும் மீள்மதிப்பீட்டு மிகைகள் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டு உரித்துவத்தில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாக திரட்டிக்கொள்ளப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, இலாபம் அல்லது நட்டக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஒரு மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியினை திருப்பும் அளவிற்கு அவ்வதிகரிப்பானது இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். ஓர் மீள்மதிப்பீட்டு பற்றாக்குறையானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஓர் நடைமுறையிலுள்ள மிகையினை ஈடுசெய்கின்றது.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமதியானது அதன் கொண்டு செல்லப்படும் தொகையிலிருந்து வித்தியாசப்படாததை உறுதிப்படுத்துவதற்காக ஒரு போதுமை நிகழ்மையுடன் பெறுமதியிடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்பின்னரான கிரயங்கள் சொத்தின் கொண்டுசெல்லப்படும் தொகையினுள் உள்ளடக்கப்படுகின்றது அல்லது ஓர் தனிப்பட்ட சொத்தாக, உகந்தவாறு அங்கீகரிக்கப்படுகின்றது. இது அந்த உருப்படியுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உள்வரும் மற்றும் கிரயமானது நியாயமானவாறு அளவிடக்கூடியதாயிருக்கலாம் எனும் சாத்தியப்பாடு காணப்பட்டால் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது.

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் கட்டணமிடப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

(i) விமானத்தின் சுழற்சி உதிரிப்பாகங்கள்

விமானத்தினது சுழற்சி உதிரிப்பாகங்கள், இவை உருவச் சொத்துக்களாக கருதப்படுகின்றன, ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்பட்டு அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாள் காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. இந்த உருப்படியானது "விமானம் தொடர்பான உபகரணம்" இன் கீழ் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன.

(ii) மூலதன நடப்பு வேலைகள்

மூலதன நடப்பு வேலைகள் அதன் கிரயத்தில் குறிப்பிடப்படுவதுடன் அவை கையகப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து செயல்நிலைப்படுத்தப்பட்ட திகதி வரையான கட்டணப்படுத்தப்படும் அனைத்து செலவினங்களையும் உள்ளடக்கும். செயல்நிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், மூலதன நடப்பு வேலைகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் கீழ்வரும் பொருத்தமான வகுப்பிற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாள் வரை பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

(b) பெறுமானத்தேய்வு

பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடானது நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி அதன் கிரயத்தில் அல்லது அவற்றின் பெறுமதியிடல்களில் கணிப்பிடப்படுகின்றது. இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் இது கணிப்பிடப்படுகின்றது. அத்தகைய தொகைகளை பதிவழிப்பதற்காக சமனான தவணைகளில் பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விமானம் தொடர்பான உபகரணம்	08 வருடங்கள் அல்லது குத்தகைக் காலம், இவற்றில் குறைந்தது
பொறி மற்றும் உபகரணம்	உபகரணத்தின் வகையின் அடிப்படையில் 3 இலிருந்து 10 வருடங்கள் வரையான காலப்பகுதி
கட்டிடங்கள்	எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டு வாழ்நாட்கள் 15 முதல் 50 வருடங்கள் வரை
குத்தகையிலுள்ள விமானங்களுக்கான மேம்படுத்தல்கள்	10 வருடங்கள் அல்லது குத்தகைக் காலம், இவற்றில் குறைந்தது.

எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாட்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறை என்பன ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமானவாறு பெரும்பாலும் செம்மையாக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட பெறுமானத்தேய்வு வீதங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிக்கும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

(c) அங்கீகரிப்பு நீக்கம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியானது அது விற்பனை செய்யப்பட்டால் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து எவ்வித எதிர்கால பொருளாதார நலன்களும் எதிர்பார்க்கப்படாவிட்டால் அது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது. சொத்தினது அங்கீகரிப்பு நீக்கத்தில் எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மற்றும் அதன் தேறிய விற்பனைத் தொகைக்கும் இடையேயான வித்தியாசமாக கணிப்பிடப்படுகின்றது) சொத்து அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்பட்ட அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

(d) சொத்துப் பயன்பாட்டின் செயற்பாடுகளின் அடிப்படையில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்களுக்கான மாற்றல்கள்

குத்தகைக் காணியிலுள்ள கட்டிடங்களுக்கான மீள்மதிப்பீட்டின் காரணமாக (சொத்தின் மீள்மதிப்பிடப்பட்ட கொண்டு செல்லல் தொகையின் அடிப்படையில் பெறுமானத்தேய்வுக்கும் சொத்தின் ஆரம்ப கிரயத்தின் அடிப்படையிலான பெறுமானத்தேய்வுக்கும் இடையேயான வித்தியாசம்) அதிகரித்து பெறுமானத்தேய்வுக்காக ஒரு வருடாந்த மாற்றலானது மீள்மதிப்பீட்டு மிகையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்களுக்கு மேற்கொள்ளப்படுகின்றது.

2.4.4 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துக்கள், சொத்துக்களின் உடமையாக்கலுக்கு சாத்தியப்படக்கூடிய எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படுதல் மற்றும் சொத்துக்களின் கிரயமானது நம்பிக்கையுடன் அளவிடப்படமுடியுமாயின் அங்கீகரிக்கப்படுகின்றன. இதற்கமைய இந்தச்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமதிகுறைப்புகள் மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்களைக் கழித்ததன் பின்னர் குறிப்பிடப்படுகின்றது.

கையகப்படுத்தும் அல்லது விருத்திசெய்யப்படும் கணினி மென்பொருளானது அதனுடன் தொடர்புடைய வன்பொருளிலிருந்து பிரித்தெடுக்க இயலுமாயின் அதன் கிரயமானது தனியாக மூலதனமயமாக்கப்பட்டு 5 வருடங்களுக்கு விஞ்சாத காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் பெறுமதிக் குறைப்பு காலம் மற்றும் பெறுமதிக் குறைப்பு முறையானது மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் இந்த சொத்தின் கொண்டுசெல்லப்படும் பெறுமதியானது, சூழ்நிலைகளிலான நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் கொண்டுசெல்லப்படும் பெறுமதியினை மீளப்பெற இயலாது எனக் குறிப்பிடின் வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

2.4.5 குத்தகைகள்

ஓர் ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில், குழுமமானது அவ் ஒப்பந்தம் ஒரு குத்தகையா அல்லது ஓர் குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. ஒப்பந்தமானது ஒரு இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஒரு மறுபயனுக்கு பரிமாற்றல் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை தெரிவிக்குமாயின் அவ் ஒப்பந்தம் ஒரு குத்தகை எனப்படும் அல்லது இவற்றைக் கொண்டிருந்தால் குத்தகை எனப்படும். ஒரு இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கின்றதா என்பதை மதிப்பிடுவதற்காக குழுமமானது பின்வருவனவற்றை மதிப்பீடு செய்கின்றது:-

- ஒப்பந்தம் ஒரு இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை உள்ளடக்கியுள்ளது - இது வெளிப்படையாக அல்லது மறைமுகமாக குறிப்பிடப்படலாம் மற்றும் பௌதீகரீதியாக வேறுபட்டிருத்தல் வேண்டும் அல்லது ஒரு பௌதீகரீதியான வேறுபட்ட சொத்தின் கொள்திறன் அனைத்தையும் கணிசமானளவு பிரதிநிதித்துவம் செய்திருத்தல் வேண்டும். வழங்குநர் வலிமையுடைய பதிலீட்டு உரிமையினை கொண்டிருந்தால், சொத்தானது அங்கீகரிக்கப்படாது;
- குழுமமானது சொத்தின் பயன்பாட்டிலிருந்து பயன்பாட்டுக்காலம் முழுவதும் அனைத்து பொருளாதார நலன்களையும் கணிசமானளவுக்கு பெற்றுக்கொள்வதற்கான உரிமை; மற்றும்
- குழுமமானது சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினை கொண்டுள்ளது. குழுமமானது சொத்தை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்துவது என்று மாற்றுவதற்கு மிகவும் பொருத்தமான தீர்மானம் மேற்கொள்ளும் உரிமைகளைக் கொண்டிருந்தால் இந்த உரிமையினை கொண்டிருக்கும். அரிதான சந்தர்ப்பங்களில், சொத்தானது எவ்வாறு மற்றும் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற தீர்மானம் முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தால், பின்வரும் சந்தர்ப்பங்களில் குழுமத்திற்கு சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கும்:-
  - சொத்தினை செயற்படுத்துவதற்கான உரிமையினை குழுமம் கொண்டுள்ளது; அல்லது
  - குழுமமானது, சொத்தானது எவ்வாறு மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என்று முன்தீர்மானிக்கும் விதத்தில் வடிவமைத்திருந்தால்.

ஒரு குத்தகை கூறினை உள்ளடக்கியுள்ள ஒரு ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் அல்லது அதன் மீள்மதிப்பீட்டில், குழுமமானது ஒப்பந்தத்திலுள்ள மறுபயனை ஒவ்வொரு குத்தகை கூறுக்கும் அவற்றின் பொருத்தமான தனியான விலைகளின் அடிப்படையில் ஒதுக்குகின்றது.

எவ்வாறாயினும், காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையில் அது குத்தகையாளராக இருந்தால், குழுமமானது குத்தகையல்லாத கூறுகளை பிரிக்காது குத்தகை மற்றும் குத்தகையல்லாத கூறுகளை ஒரு தனியான குத்தகை கூறாக காண்பிப்பதற்கு தெரிவு செய்துள்ளது.

2.4.5.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் (ROU)

குழுமமானது ஒரு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினையும் மற்றும் ஒரு குத்தகை பொறுப்பினையும் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அங்கீகரிக்கின்றது. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது. எதிர்காலக் குத்தகைப் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியின் ஆரம்பத் தொகையானது, ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகை கொடுப்பனவுகளுக்கு செம்மையாக்கப்பட்டு, ஏதேனும் ஆட்பட்ட ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் உள்ளார்ந்த சொத்தினை கழற்றுவதற்கான மற்றும் அகற்றுவதற்கான ஒரு மதிப்பிடப்பட்ட செலவுகள் அல்லது உள்ளார்ந்த சொத்தினை திருப்பிக் கொடுக்கவேண்டிய நிலைக்கு புனருத்தாரணம் செய்வதற்கு, அதிலிருந்து ஏதேனும் பெறப்பட்ட குத்தகை சலுகைகளை கழித்தல் என்பனவாகும்.

(a) விமானம் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகை

கம்பனியானது விமானங்களையும் என்ஜின்களையும் அதன் வானூர்தி தொகுதியில் குத்தகைக்கு எடுக்கின்றது. விமானங்கள் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகையானது பொதுவாக 2 முதல் 15 வருடங்களுக்கு செல்லுபடியாகும்.

விமானக் குத்தகைகள் விமானத்தினை திருப்பிக் கொடுக்கும் நிலைமைக்கான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது. குத்தகையாளரினால் உள்ளார்ந்த சொத்தினை நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் (குறிப்பு 15.2) தேவைப்படும் நிலைமைக்கு புனருத்தாரணம் செய்வதற்கு ஆட்படும் செலவினங்களிலான ஒரு மதிப்பீடானது கடப்பாடு உருவாக்கப்பட்டவுடன் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துடன் கூட்டப்படுகின்றது. ஏனைய விமான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள் (விமானத்தின் கனமான பராமரிப்பு, என்ஜின் சீராக்கல் மற்றும் தரையிறக்கல் பொறி சீராக்கல் செலவினங்கள் தவிர்த்தவை) ஒரு ஆட்பட்ட அடிப்படையில், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதுடன் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையானது குறிப்பு 2.4.15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குத்தகையின் ஆரம்பத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்பானது மற்றும் ஏனைய குத்தகைக் கொடுப்பனவுகள் அனைத்தும் அதே கொடுக்கல் வாங்கலிலிருந்து உருவாகின்றது. எனவே, ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட வைப்பின் முதல் தொகைக்கும் மற்றும் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமானது குத்தகையாளரால் செலுத்தப்படவேண்டிய ஒரு மேலதிகத் தொகையாக கருதப்படுகின்றது.

வைப்பானது SLFRS 9 இன் நோக்கெல்லையினுள் காணப்படுவதுடன் இது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்படல் வேண்டுமென்பதுடன் முதல் தொகைக்கும் வைப்பினது நியாயப் பெறுமதிக்கும் இடையேயான மிகையானது SLFRS 16 குத்தகைகள் நோக்கெல்லையினுள் காணப்படுதல் வேண்டும். வைப்புக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பு 2.4.9 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

12 மாதங்களுக்குள் குத்தகைக் காலம் நிறைவடையும் விமானக் குத்தகைகள் கருத்திலெடுக்கப்படாது குறுங்கால குத்தகைகள் போன்று கணக்கீடு செய்யப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விமானக் குத்தகை வாடகைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(b) காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகை

குழுமமானது இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் அதன் காணி மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு எடுக்கின்றது. சில காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையானது, ரத்து செய்யப்படமுடியாத ஒப்பந்தக் காலப்பகுதிக்கு முன்னர் குழுமத்தினால் நிறைவேற்றக்கூடிய விரிவாக்கல் தெரிவுரிமைகளைக் கொண்டிருக்கும். செயல்படுத்தத்தக்கவாறு, குழுமமானது புதிய குத்தகைகளில் செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மையினை வழங்குவதற்காக விரிவாக்கல் தெரிவுரிமைகளை உள்ளடக்குவதற்கு முனைகின்றது.

குத்தகையின் ஆரம்பத்தில் குழுமமானது விரிவாக்கல் தெரிவுரிமைகளை கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. குழுமமானது அதன் கட்டுப்பாட்டினுள் உள்ள சூழ்நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் அல்லது குறிப்பிடத்தக்க நிகழ்வு காணப்படுமாயின் தெரிவுரிமைகளை கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மீள்மதிப்பீடு செய்கின்றது.

(C) வாகனங்களின் குத்தகை

குழுமத்தின் வாகனக் குத்தகைகள் 2 முதல் 5 வருடக் காலப்பகுதியினைக் கொண்டதாகும்.

பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் பெறுமானத்தேய்வு

ஆரம்ப திகதியிலிருந்து, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினது பயன்பாட்டு வாழ்நாளின் இறுதி அல்லது குத்தகை காலப்பகுதியின் இறுதி இவற்றில் எது முன்னர் வருகிறதோ அதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது பின்னர் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. ஆதனம் மற்றும் உபகரணம் போன்றவற்றிற்கு அதே அடிப்படையிலேயே பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் மதிப்பீடுசெய்யப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இதற்கும் மேலாக, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது வலுக்குன்றல் நட்டங்களினால், ஏதேனும் இருப்பின், காலாகாலம் குறைக்கப்படுவதுடன் மற்றும் குத்தகை பொறுப்பின் சில மீள்அளவீடுகளுக்காக செம்மையாக்கப்படுகின்றன.

2.4.5.2 குத்தகைப் பொறுப்பு

ஆரம்பிக்கப்பட்ட திகதியில் கொடுப்பனவு செய்யப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியில் குத்தகைப் பொறுப்பானது ஆரம்பத்தில் அளவீடு செய்யப்படுகின்றது. இது குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதத்தினை பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படுகின்றது அல்லது, அந்த வட்டி வீதமானது உடனடியாக தீர்மானிக்கப்படமுடியாவிடின், குத்தகையின் ஆரம்பத்தில் நிலவிய குழுமத்தின் அதிகரிக்கும் முறை கடன்பெறல் வட்டி வீதத்தினாலாகும். பொதுவாக, குழுமமானது அதன் அதிகரிக்கும் முறை கடன்பெறல் வட்டிவீதத்தினை கழிவு வீதமாக பயன்படுத்துகின்றது.

குத்தகை பொறுப்பு அளவீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள குத்தகை கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- பொருளிலான நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்கலான நிலையான கொடுப்பனவுகள்;
- ஒரு சுட்டி அல்லது ஒரு வட்டி வீதத்தில் தங்கியுள்ள மாற்றமடையும் குத்தகைக் கொடுப்பனவுகள், ஆரம்பித்த திகதியில் சுட்டி அல்லது வட்டிவீதத்தினை பயன்படுத்தி ஆரம்பநிலையில் அளவிடப்படுகின்றது;
- ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள்; மற்றும்
- ஓர் கொள்வனவு தெரிவுரிமையின் கீழ் உள்ள கையாளுதல் விலையினை குழுமமானது நிச்சயமாக கையாளும் என நியாயமாக காணப்பட்டால், குழுமமானது ஒரு நீடிப்பு தெரிவுரிமையினை கையாளும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டால் ஒரு தெரிவுரிமையுள்ள புதுப்பித்தல் காலத்தில் குத்தகை கொடுப்பனவுகள், மற்றும் குழுமமானது முன்னரே முடிவுறுத்தும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டாலொழிய ஓர் குத்தகையினை முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப்பணங்கள்.

குத்தகை பொறுப்பானது பயனுறுதிமிக்க வட்டி முறையினை பயன்படுத்தி பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது. இது பின்வரும் சந்தர்ப்பங்களில் மீள்அளவீடு செய்யப்படுகின்றது. ஓர் சுட்டியில் அல்லது வட்டிவீதத்திலிருந்தான ஓர் மாற்றத்திலிருந்து எழக்கூடிய எதிர்கால குத்தகை கொடுப்பனவுகளிலான மாற்றம் காணப்பட்டால், ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தவேண்டிய எதிர்பார்க்கும் தொகையினது குழுமத்தின் மதிப்பீட்டில் ஒரு மாற்றம் காணப்பட்டால், அல்லது குழுமமானது ஓர் கொள்வனவினை, ஓர் நீடிப்பினை அல்லது முடிவுறுத்தல் தெரிவுரிமையினை கையாளுமா என்ற அதன் மதிப்பீட்டினை குழுமம் மாற்றியிருந்தால்.

குத்தகை பொறுப்பானது இவ்வாறு மீளஅளவிடப்படும்போது, ஓர் ஏற்புடைய செம்மையாக்கல் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டு செல்லல் தொகையில் மேற்கொள்ளப்படும் அல்லது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டுசெல்லல் தொகையானது பூச்சியத்திற்கு குறைக்கப்பட்டிருந்தால் அது இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படுகின்றது.

2.4.5.3 குறுங்காலக் குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதியிலான சொத்துக்களின் குத்தகைகள்

குறைவான பெறுமதியுடைய சொத்துக்களது குத்தகைகளுக்கு அல்லது 12 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான குத்தகை காலத்தினைக் கொண்ட குறுங்கால குத்தகைகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்காது இருப்பதற்கு குழுமமானது தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் இணைந்த குத்தகை கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் ஓர் செலவினமாக அங்கீகரிக்கின்றது.

2.4.5.4 கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகள்

குழுமமானது கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகள் - IFRS 16 க்கான திருத்தங்களைப் பிரயோகித்துள்ளது. குழுமமானது நடைமுறை உபாயங்களைப் பிரயோகித்துள்ளதுடன் இது கோவிட்-19 தொற்றின் நேரடி விளைவான தகைமையுடைய வாடகைச் சலுகைகள் குத்தகைத் திருத்தங்களா என மதிப்பிடாதிருப்பதற்கு அனுமதிக்கின்றது. ஒத்த பண்புகள் மற்றும் ஒத்த சூழ்நிலைகளுடனான ஒப்பந்தங்களுக்கு குழுமமானது தொடர்ச்சியாக நடைமுறை உபாயங்களை பிரயோகிக்கின்றது. குத்தகைகளிலான வாடகைச் சலுகைகளுக்கு நடைமுறை உபாயங்களை பிரயோகிக்காமலிருப்பதற்கு குழுமம் தெரிவுசெய்யும்போது, அல்லது நடைமுறை உபாயங்களுக்கு தகைமையற்று காணப்படும்போது, குழுமமானது ஒரு குத்தகை திருத்தம் உள்ளதா என மதிப்பீடு செய்கின்றது.

2.4.6 இருப்புக்கள்

இருப்புக்கள் விமானம் மற்றும் தரைச் சேவைகள் தொடர்பான கையிருப்புகள், மூலப் பொருட்கள் மற்றும் நுகர்வுப்பொருட்களை உள்ளடக்குகின்றது.

இருப்புக்கள், கிரயம் மற்றும் தேறிய கைகூடத்தக்க பெறுமதியில் எது குறைவானதோ அதில் குறிப்பிடப்படுகின்றது. இருப்புக்களின் கிரயமானது, கொள்வனவுகள் கிரயம், மாற்றுதல் கிரயம், மற்றும் இருப்புக்களை தற்போதைய இடம் மற்றும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு ஆட்பட்ட ஏனைய கிரயங்கள் போன்றவற்றின் கூட்டுத்தொகையாகும்.

இருப்புக்களின் கிரயத்தினை கணிப்பிடுவதற்கு நிறையிடப்பட்ட சராசரி கிரய முறையானது பிரயோகிக்கப்படுகின்றது. தேறிய கைகூடக்கூடிய பெறுமதியானது பின்வருவனவற்றை பிரதிபலிக்கின்றது. விற்பனை விலையிலிருந்து அனைத்து மதிப்பிடப்பட்ட நிறைவடைதல் கிரயங்கள் மற்றும் விற்பனையொன்றை மேற்கொள்வதற்கு தேவைப்படும் கிரயங்கள் என்பவற்றை கழித்து பெறப்படும்.

2.4.7 நிதியல்லாத சொத்துக்களின் வலுக்குன்றல்

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் குழுமமானது ஏதேனும் ஒரு சொத்து வலுக்குன்றக்கூடிய அறிகுறி தென்படுகின்றதா என்று மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் ஏதேனும் காணப்பட்டால், அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த வலுக்குன்றல் பரிசோதனை தேவைப்படின், குழுமமானது சொத்துக்களின் மீளப்பெறத்தக்க தொகையில் ஓர் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகையானது அதன் மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது வலுக்குன்றியுள்ளதாக கருதப்பட்டு அதன் மீளப்பெறத்தக்க பெறுமதிக்கு குறைத்தெழுதப்படும்.

2.4.8 நியாயப் பெறுமதி அளவீடு

குழுமமானது அதன் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களை நியாயப் பெறுமதியில் அளவீடு செய்கின்றது. நியாயப் பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறிப்பு 03 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நியாயப் பெறுமதி என்பது அளவிடப்படும் திகதியில் சந்தைப் பங்குபற்றுநர்களிடையேயான ஒழுங்கான கொடுக்கல் வாங்கலில் ஒரு சொத்தினை விற்பனை செய்வதற்கு பெறப்படும் விலை அல்லது ஒரு பொறுப்பினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்படும் விலை எனப் பொருள்படும். நியாயப் பெறுமதி அளவீடானது சொத்தை விற்பனை செய்யும் கொடுக்கல் வாங்கல் அல்லது பொறுப்பினை மாற்றல் செய்யும் கொடுக்கல் வாங்கல் பின்வரும் இரு விதங்களில் இடம்பெறும் உத்தேசத்தின் அடிப்படையிலாகும்:

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மை சந்தையில், அல்லது
- முதன்மை சந்தையொன்று காணப்படாவிடின், சொத்து அல்லது பொறுப்பிற்கான மிகவும் சாதகமான சந்தை

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

முதன்மை சந்தை அல்லது மிகவும் சாதகமான சந்தை குழுமத்தினால் அணுகக்கூடியதாயிருத்தல் வேண்டும். அத்தகைய சொத்துக்களின் நியாயப் பெறுமதியானது சந்தைப் பங்குபற்றுநர்கள் சொத்தினை அல்லது பொறுப்பினை விலையிடும்போது பயன்படுத்துவார்கள் என்ற அனுமானத்தினை பயன்படுத்தியும், சந்தை பங்குபற்றுனர்கள் அவர்களது சிறந்த பொருளாதார நலனுக்காக செயற்படுகின்றார்கள் என்ற அனுமானம் என்பவற்றில் அளவீடு செய்யப்படுகின்றது.

நிதியல்லாத சொத்துக்களின் நியாயப் பெறுமதி அளவீடானது, சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினை பயன்படுத்துவதன் மூலம் அல்லது அதனை இன்னுமோர் சந்தை பங்குபற்றுநருக்கு விற்பனை செய்வதன் மூலம், அச்சந்தை பங்குபற்றுநர் சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினை பயன்படுத்துவார், பொருளாதார நலன்களை உருவாக்கும் சந்தைப் பங்குபற்றுநரின் ஆற்றலை கணக்கிலெடுக்கின்றது.

குழுமமானது சூழ்நிலைகளுக்கு பொருத்தமான பெறுமதியிடல்கள் நுட்பங்களை பயன்படுத்துவதுடன், நியாயப் பெறுமதியினை அளவீடு செய்வதற்காக இவற்றுக்கு போதுமான தரவுகள் கிடைக்கப்பெறுதல், பொருத்தமான அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளின் பயன்பாட்டினை அதிகரிக்கவும் அவதானிக்கமுடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டினை குறைத்தல் என்பவையாகும். நியாயப் பெறுமதி அளவிடப்பட்ட அனைத்து சொத்துக்களும் நியாயப் பெறுமதி படிநிலையினுள் வகைப்படுத்தப்பட்டு, நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க ஆகக்குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

- மட்டம் 1 - ஒரேமாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான உயிர்ப்புள்ள சந்தைகளில் உள்ள விலை கூறப்பட்ட (செம்மையாக்கப்படாத) சந்தை விலைகளில்
- மட்டம் 2 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்
- மட்டம் 3 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு அவதானிக்கப்பட இயலாத ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்

மீளத்தோன்றும் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் இறுதியிலும் வகைப்படுத்தலினை மீள்மதிப்பீடு செய்வதன்மூலம் படிநிலைகளின் மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றல்கள் இடம்பெற்றுள்ளதா என்று குழுமமானது தீர்மானிக்கின்றது. (நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில்).

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற குறிப்பிடத்தக்க சொத்துக்களின் பெறுமதியிடல்களில் வெளிவாரி மதிப்பீடு செய்பவர்கள் ஈடுபடுவார்கள். வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களை தேர்வு செய்வதற்கான கோட்பாடுகள் சந்தை அறிவு, நற்பெயர், சுயாதீனத்தன்மை மற்றும் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுதல் என்பவற்றை உள்ளடக்கும். குழுமமானது வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களுடனான கலந்துரையாடலின் பின்னர், ஒவ்வொரு விடயத்திலும் எந்த பெறுமதியிடல் நுட்பங்கள் மற்றும் உள்ளீடுகள் பயன்படுத்தப்படல் வேண்டும் என தீர்மானிக்கின்றது.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்கள் நோக்கத்திற்காக, குழுமமானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களது வகுப்புகளை பின்வருவனவற்றின் அடிப்படையில் தீர்மானித்துள்ளது. தன்மை, சொத்து அல்லது பொறுப்பின் தனிச்சிறப்புகள் மற்றும் இடர்கள் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு நியாயப் பெறுமதி படிநிலையிலான மட்டம்.

2.4.9 நிதியியல் கருவிகள்

2.4.9.1 நிதிச் சொத்துக்கள்

ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

நிதியியல் சொத்துக்கள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில், ஏனைய விரிவான வருமானத்தினூடான நியாயப் பெறுமதி (FVOCI) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதி (FVTPL) என வகைப்படுத்தப்படுகின்றன.

நிதியியல் சொத்துக்கள் (இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக) கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு குழுமமானது ஒரு தரப்பினராக வந்த கொடுக்கல் வாங்கல் திகதியில் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

நிதியியல் சொத்தானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஒரு உருப்படிக்கு, அதன் கொள்வனவு அல்லது வழங்கலுடன் நேரடியாக உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களை கருத்திலெடுக்கின்றது.

பிற்பட்ட அளவீடு

நிதியியல் சொத்துக்களின் வகுப்பிடலானது பொதுவாக ஒரு நிதியியல் சொத்தானது முகாமைப்படுத்தப்பட்டு அதன் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகளையுடைய வணிக மாதிரிகளின் அடிப்படையிலானதாகும்.

ஒரு நிதியியல் சொத்தானது அது இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்படாத மற்றும் பின்வரும் நிபந்தனைகள் இரண்டையும் சந்திப்பின் அது பெறுமதிக்குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது:

- ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை திரட்டுவதற்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்கையுடைய ஒரு வணிக மாதிரியினுள் சொத்து வைத்திருக்கப்பட்டிருப்பின்; மற்றும்
- நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் கொண்ட குறிப்பிட்ட திகதிகளிலான காசுப்பாய்ச்சல்களுக்கு வழிசமைக்கும் நிதியியல் சொத்தின் ஒப்பந்த ஏற்பாடுகள்

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத ஒரு உரித்துவ முதலீட்டின் ஆரம்ப அங்கீகாரத்தின்போது, குழுமமானது நியாயப் பெறுமதியில் பிற்பட்ட மாற்றங்களை ஏனைய விரிவான வருமானக் கூற்றினூடாக மாற்றவியலாதவாறு முன்னிலைப்படுத்துவதற்கு தெரிவு செய்துள்ளது. இத்தெரிவானது ஒவ்வொரு கருவி மூலம் கருவி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

குழுமமானது வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகள், விமான பராமரிப்பு ஒதுக்கம், விமானம் மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள், குறுங்கால முதலீடுகள் மற்றும் காசு மற்றும் வங்கி மீதிகளை நிதியியல் சொத்துக்களாக வகைப்படுத்தி பின்னர் அவை பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது.

அங்கீகரிப்பு நீக்கம்

நிதியியல் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முதிர்வடையும்போது குழுமமானது ஒரு நிதியியல் சொத்தினை அங்கீகரிப்பு நீக்கம் செய்கின்றது, அல்லது நிதியியல் சொத்தினது உடைமையின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு மாற்றல் செய்யப்படும் ஓர் கொடுக்கல் வாங்கலின் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகளை மாற்றல் செய்தால், அல்லது குழுமமானது உடைமையின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு வைத்திருக்காமலும் மாற்றல் செய்யாமலும் மற்றும் அது நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டினை வைத்திருக்காமல் இருக்கும் போது நீக்கம் செய்கின்றது.

ஒரு நிதியியல் சொத்தின் அங்கீகரிப்பு நீக்கத்தின்போது, சொத்தின் கொண்டுசெல்லும் தொகைக்கும் (அல்லது அங்கீகாரம் நீக்கப்பட்ட சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்படும் கொண்டு செல்லல் தொகை) பின்வருவனவற்றின் கூட்டுத்தொகைக்கும் இடையேயான வித்தியாசமானது,

(i) பெறப்பட்ட மறுபயன் (ஏதேனும் பெறப்பட்ட புதிய சொத்திலிருந்து பொறுப்பேற்ற ஏதேனும் பொறுப்பினை கழித்தல் உள்ளடங்களாக) மற்றும்
(ii) ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது

நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல்

ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அல்லது பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களிலான எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களுக்கு குழுமமானது ஓர் நட்ட படியினை அங்கீகரிக்கின்றது.

எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களை அளவிடுவதற்கு எளிமையாக்கப்பட்ட அணுகுமுறையினை குழுமமானது பயன்படுத்துவதுடன் அனைத்து வர்த்தக வருமதிகளுக்கு ஒரு எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் நட்ட படியினையும் பயன்படுத்துகின்றது.

பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்கான நட்டப் படிகள் சொத்துக்களின் மொத்த கொண்டுசெல்லல் தொகையிலிருந்து கழிக்கப்படுகின்றன.

நியாயப்பாடுகளும் இணைந்த அனுமானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உகந்தது எனக் கருதப்படும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் ஏனைய காரணிகளை பிரதிபலிப்பதுடன், இந்த சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளது எதிர்பார்ப்புக்கள் உள்ளடங்கலாகும்.

2.4.9.2 நிதிப் பொறுப்புக்கள்

ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

அனைத்து நிதியியல் பொறுப்புக்களும் (இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் (FVTPL) குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் உள்ளடங்கலாக) குழுமமானது கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளின் ஒரு தரத்தவராக வரும் கொடுக்கல் வாங்கல் தினத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கின்றது.

குழுமமானது அதன் நிதியியல் பொறுப்புக்களை இரண்டு வகைகளில் ஒன்றாக வகைப்படுத்துகின்றது. இது பொறுப்பு கையேற்கப்பட்ட நோக்கத்தில் தங்கியுள்ளது; இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் அல்லது ஏனைய நிதியியல் பொறுப்புக்கள்.

ஒரு நிதியியல் பொறுப்பானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஒரு உருப்படிக்கு, அதன் கையகப்படுத்தலுக்கு அல்லது வழங்கலுக்கு நேரடியாக உடமையாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் கருதப்படுகின்றது.

பிற்பட்ட அளவீடு

குழுமமானது வட்டி செலுத்தப்படும் கடன்கள், விமான பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயத்திற்கான ஒதுக்கம், வர்த்தக மற்றும் ஏனைய கொடுகுமதிகள் என்பவற்றை நிதியியல் பொறுப்புக்களாக வகைப்படுத்தியுள்ளது.

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நிதியியல் பொறுப்புக்கள் பெறுமதி குறைக்கப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன.

ஒரு நிதியியல் பொறுப்பின் பெறுமதி குறைப்புக் கிரயமானது ஆரம்ப அங்கீகாரத்தின்போது நிதியியல் பொறுப்பானது அளவீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து, முதலின் திருப்பிசெலுத்தல்கள் கழிக்கப்பட்டு, திரண்ட பெறுமதிக்குறைப்பு கூட்டப்பட்டு அல்லது கழிக்கப்படுகின்றது. இது பின்வருவனவற்றை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப தொகைக்கும், முதிர்வுத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வித்தியாசத்தில் செயல்திறனான வட்டி முறையினை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

அங்கீகரிப்பு நீக்கம்

பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் ஒரு நிதியியல் பொறுப்பானது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது.

நடைமுறையிலுள்ள ஒரு நிதியியல் பொறுப்பானது, குறிப்பிடத்தக்க வித்தியாசமான விதிமுறைகளில் அதே கடன் வழங்குநரிடமிருந்தான மற்றுமோர் பொறுப்பினால் மாற்றீடு செய்யப்பட்டால், அல்லது நடைமுறையிலுள்ள பொறுப்பொன்றின் விதிமுறைகள் கணிசமானளவு மாற்றியமைக்கப்பட்டால், அத்தகைய பரிமாற்றல் அல்லது மாற்றியமைத்தலானது ஆரம்ப பொறுப்பின் அங்கீகார நீக்கமாக கருதப்படுவதுடன் மற்றும் ஓர் புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. அவற்றின் கொண்டு செல்லல் தொகைகளிலான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

2.4.9.3 நிதியியல் கருவிகளின் ஈடுசெய்கை

கீழ்காணும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் மாத்திரமே நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு, தேறிய தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படும்:

- அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கான வலியுறுத்தத்தக்க சட்ட உரிமை நடைமுறையில் காணப்படல் வேண்டும் மற்றும்
- ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பனவுக்கான நோக்கம் காணப்படுகின்றது, அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை விற்று பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல்.

2.4.10 விமானப் பராமரிப்பு ஒதுக்கம்

விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது மாதாந்த அடிப்படையில் எதிர்கால என்ஜின்கள் சீராக்கல்கள், விமானச் சட்டகம் மற்றும் விமானத்தின் பகுதிகள் என்பவற்றுக்கு செயற்பாட்டு குத்தகை உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடுபவர்களுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றது. கம்பனியானது குத்தகைக்கு விடுபவரிடமிருந்து என்ஜின்கள் சீராக்கல்கள், விமானச் சட்டகங்கள் மற்றும் விமானத்தின் பகுதிகளில் ஆட்பட்ட கிரயத்தினை பராமரிப்பு நிகழ்வு நிறைவடைந்ததன் பின்னர் அத்தகைய ஒதுக்கத்திற்கு எதிராக மீளப்பெறுகின்றது. (ஒதுக்கத்திற்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை வரைக்கும்)

தன்மையினைப் பொறுத்து விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது ஒரு நிதிச் சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த வகையான நிதியியல் சொத்துக்களுக்கான உரிய கணக்கீட்டுக் கொள்கையானது மேலே குறிப்பு 2.4.9.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.4.11 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

வர்த்தக கடன்பட்டோர்கள், வைப்புகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர்கள் உள்ளடங்கலாக (கிரயத்தில் அளவிடப்பட்டுள்ள வைப்புகள் மற்றும் ஏனைய வருமதிகளின் கீழான நிதியியல்லாத சொத்துக்கள் தவிர்ந்தவை) கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வகை நிதியியல் சொத்துக்களுக்கான தன்மையினைப் பொறுத்து உரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மேலே குறிப்பு 2.4.9.1. இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.4.12 முதலீடுகள்

துணைநிறுவனத்தில் முதலீடு

கம்பனியின் நிதிக் கூற்றுக்களில், துணை நிறுவனத்திலான முதலீடு கிரயத்தில், தற்காலிக பெறுமதிக்குறைவு தவிர்த்த ஏதேனும் தேறிய வலுக்குன்றலுக்கு, கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.4.13 குறுங்கால முதலீடுகள்

மூன்று மாதங்களுக்கு குறைவான முதிர்வினையுடைய வங்கிகளிலுள்ள நிலையான வைப்புகள் குறுங்கால வைப்புகளாகும். குறுங்கால முதலீடுகள் அவற்றின் பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்டுள்ளன.

2.4.14 காசும் காசுக்குச் சமனானவைகளும்

காசும் காசுக்குச் சமனானவைகள் என்பது பின்வருமாறு பொருள்படும். கையில் மற்றும் வங்கியிலுள்ள காசு, அழைப்பு வைப்புகள் மற்றும் பெறுமதியில் மாற்றமேற்படும் அற்பமான இடர்நேர்வைக்கு உட்பட்ட தெரிந்துகொண்டுள்ள காசுத் தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய உயர்ந்த திரவத்தன்மையுடைய குறுங்கால முதலீடுகள் ஆகும்.

காசுப்பாய்ச்சல் கூற்றில், காசும் காசுக்குச் சமனானவைகளும், வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள அழைப்பு வைப்புக்கள் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களுக்கு நிகர்செய்யப்பட்டு உள்ளடக்கப்படுகின்றது. குறைந்த முதிர்வுகளைக்கொண்ட முதலீடுகளும் (கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானவை) காசுக்குச் சமனானவைகளாக கருதப்படுகின்றன. நிதி நிலைமைக் கூற்றில் வங்கி மேலதிகப்பற்றுக்கள் வட்டி செலுத்தப்படும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.4.15 ஏற்பாடுகள்

(i) பொதுவானவை

ஒரு கடந்தகால நிகழ்வின் விளைவாக குழுமமானது ஒரு நடைமுறை கடப்பாட்டினைக் (சட்டம் அல்லது ஆக்கபூர்வமான) கொண்டிருந்தால் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. இது கடப்பாட்டின் தொகை குறித்து ஓர் நம்பகமான மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம் மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களது வெளிப்பாய்ச்சல் என்பவற்றுக்கான நிகழக்கூடிய சாத்தியம் காணப்படல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

குழுமமானது ஏற்பாட்டின் சிலவற்றை அல்லது அனைத்தையும் செலவீடு செய்தல்வேண்டும் என எதிர்பார்த்தால், அந்த செலவீடானது ஒரு தனிப்பட்ட சொத்தாக அங்கீகரிக்கப்படுவதுடன், ஆனால் அந்த செலவீடானது கிட்டத்தட்ட நிச்சயமாக இருந்தால் மாத்திரமே. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினங்கள் ஏதேனும் செலவீடுகள் கழிக்கப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

(ii) விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்கள்

குழுமமானது விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்களை (விமான கனரக பராமரிப்பு, என்ஜின் சீராக்கல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான சீராக்கல் செலவுகள் தவிர்ந்த) ஏற்பட்ட அடிப்படையில் அங்கீகரிக்கின்றது. விமான கனரக பராமரிப்பு, என்ஜின் சீராக்கல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான சீராக்கல் செலவினங்கள் குறிப்பு 2.3.1 (b) (iv) இல் குறிப்பிட்டுள்ளவாறு கணக்கீடு செய்யப்படுகின்றது. மூன்றாந்தரப்பு பராமரிப்பு உடன்படிக்கைகளின் “மணித்தியாலத்திற்கான சக்தி” இன் மூலம் என்ஜின் சீராக்கல் கிரயமானது உடன்படிக்கையின் காலப்பகுதியில் உடன்பட்ட மணித்தியாலத்திற்கான நிலையான வீதத்தில் செலவு வைக்கப்படுகின்றது.

(iii) விமானத்தைத் திருப்பிக் கொடுக்கும் நிலைமைகளிலான ஏற்பாடு

விமானத்தினை திருப்பிக்கொடுக்கும் நிலைமைகளுக்கான (சீராக்கல் கடப்பாடுகள்) ஏற்பாடானது மீள் விநியோகிக்கும் நேரத்தில் சில விமானம் மற்றும் என்ஜின்களின் ஒப்பந்தக் குத்தகை இறுதி கடப்பாடுகளை சந்திப்பதற்கான மதிப்பிடப்பட்ட கிரயத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. குத்தகையின் ஆரம்பத்தில், நடைமுறையிலுள்ள ஊர்திகளது திட்டம் மற்றும் நீண்டகால பராமரிப்பு அட்டவணைகள் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு சீராக்கல் கடப்பாட்டிற்குமான எதிர்பார்க்கப்படும் கிரயத்தின் நிகழ்காலப் பெறுமதியானது ஒரு ஏற்பாடாக அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்பட்டு குத்தகைக் காலப்பகுதியில் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றன. இணைந்த கழிவின் பிரித்தெடுப்பானது குத்தகைக் காலத்தின் மீது ஒரு நிதிச் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சீராக்கல் கடப்பாட்டிற்குமான மதிப்பிடப்பட்ட கிரயத்திலான பிற்பட்ட மாற்றங்கள் விமான திருப்பிக்கொடுத்தல் நிலைமைகளுக்கான ஏற்பாட்டிற்கான மீள்அளவீடாக கணக்கிடப்படுவதுடன், கிடைக்கப்பெறுமாயின், தொடர்புடைய பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்திற்கான ஒரு தொடர்புடைய தாக்கத்துடன், எஞ்சியுள்ள குத்தகைக் காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. இல்லையெனில், மீள்அளவீடானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கணக்கீடு செய்யப்படுகின்து. மதிப்பீட்டின் அடிப்படையானது குறிப்பு 2.3.1. (b) (v) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.4.16 ஓய்வுபெறல் நலன் கடப்பாடு

(a) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - பணிக்கொடை

பணிக்கொடையானது ஓர் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டமாகும். கம்பனி மற்றும் அதன் துணை நிறவனமானது 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம் மற்றும் 2021 இன் 28 ஆம் இலக்க ஊழியர்களது ஆகக்குறைந்த ஓய்வுபெறல் வயதுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செலுத்துவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. குழுமமானது நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் நிகழ்காலப் பெறுமதியினை ஒரு காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு வருடமும் உத்தேச அலகு வரவு முறையினை பயன்படுத்தி அளவீடு செய்கின்றது..

வெளிநாட்டு நிலையங்களின் பணியாட்களுக்கான ஓய்வுபெறல் நலனானது பிரயோகிக்கப்படவேண்டிய சட்டவாக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது.

நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலிருந்து எழும் காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /நட்டம் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள் தொடர்பான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

பணிக்கொடை பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை. இந்த உருப்படியானது நிதி நிலைமைக் கூற்றில், “ஏனைய நீண்டகால பொறுப்புக்கள்” இன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டை தளமாகக் கொண்ட பணியாட்களுக்கு அவர்களது விருந்தோம்பும் நாடுகளது சட்டங்கள்/திட்டங்களின் கீழ் காப்பிடப்படுகின்றது.

(b) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - விடுமுறையினைக் காசாக்குதல்

ஓய்வுபெறும்போது உள்ளூர் பணிக்கொள்ளல் ஒப்பந்தங்களின் அடிப்படையில் அறிக்கையிடப்படும் திகதியின் இறுதியிலிருந்து பயன்படுத்தப்படாத திரண்ட விடுமுறைக்கு குழுமம் பொறுப்பாளியாகும். பயன்படுத்தப்படாத திரண்ட விடுமுறை நோக்கிய குழுமத்தின் தேறிய கடப்பாடானது உள்ளூர் பணியாட்களின் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் நிகழ்கால பெறுமதியில் அளவிடப்படுவதுடன், இது ஒரு காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு வருடமும் உத்தேச அலகு வரவு முறையினை பயன்படுத்தி அளவீடு செய்யப்படுகின்றது.

விடுமுறையினைப் பணமாக்குவதிலிருந்து எழுகின்ற காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள்/நட்டங்களை குழுமமானது ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரித்து விடுமுறையினை பணமாக்குதல் தொடர்பான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

விடுமுறையினைப் பணமாக்கும் பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை. இந்த உருப்படியானது நிதி நிலைமைக் கூற்றில் “ஏனைய பொறுப்புக்கள்” இன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

(c) நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

இலங்கையினைத் தளமாகக் கொண்ட பணியாட்கள் பொருத்தமான நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புகளுக்கு உரிமையுள்ளவர்களாவர். கம்பனியானது மொத்த ஊதியத்தில் 15% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கின்றது. அவ்வாறே துணை நிறுவனமும் இவற்றுக்கு முறையே 12% இனையும் 3% இனையும் பங்களிப்பு செய்கின்றது.

வெளிநாட்டை தளமாகக் கொண்ட பணியாட்களுக்கு அவர்களது விருந்தோம்பும் நாடுகளது சட்டங்கள்/திட்டங்களின் கீழ் காப்பிடப்படுகின்றது.

2.4.17 நிகழ்பயணியர் திட்டம்

திரட்டிய மைல்கள் அடிப்படையில் இத்திட்டத்தின் அங்கத்தவர்களுக்கு பிரயாண வெகுமதிகளை வழங்கும் “FlySmiLes” அடிக்கடி பறப்பவர் திட்டத்தினை செயற்படுத்துகின்றது. அடிக்கடி பறப்பவர் நலன்கள் வெகுமதிக்கு உடைமையாக்கத்தக்க பயணிகள் வருவாயின் ஒரு பகுதியானது அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்படுகின்றது. வருவாயின் ஒத்திவைப்பானது வரலாற்று ரீதியான மீட்டல் போக்கின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன், இது பின்னர் இந்த நலன்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடுகளை திட்டமிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. வெகுமதியாக வழங்கப்பட்ட வரவுகளின் நியாயப் பெறுமதியானது, வெகுமதி வரவுகள் மீட்கப்படக்கூடிய சேவைகளின் நிறையிடப்பட்ட சராசரி பெறுமதிக்கு மேற்கோள் காட்டி மதிப்பிடப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொறுப்பானது ஏற்றவாறு செம்மையாக்கப்படுகின்றது. திட்டத்தின் பங்காளிகளின் சேவைகளை பயன்படுத்துவதனூடாக அட்டூறு செய்யப்பட்ட மைல்கள் பங்குபற்றும் பங்காளிகளினால் செலுத்தப்படுவதுடன் அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்பட்ட வருவாயாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதிர்வடையும் என எதிர்பார்க்கும் மைல்களுக்கு ஒரு பொறுப்பானது அங்கீகரிக்கப்படுவதில்லை.

2.4.18 வருவாய் அங்கீகாரம்

வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழும் வருவாயினை ஐந்து-படி மாதிரியின் அடிப்படையில் குழுமமானது அங்கீகரிக்கின்றது.

ஒரு வாடிக்கையாளருக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் மாற்றல் செய்வதற்கு பிரதியாக ஓர் நிறுவனம் உரிமையுள்ளது என எதிர்பார்க்கும்

மறுபயனை பிரதிபலிக்கும் ஓர் தொகைக்கு வருவாய் அங்கீகரிக்கப்படுகின்றது.

(அ) விமானநிறுவன வருவாய்
பயணிகள், சரக்கு, மிகையான பொதி மற்றும் அஞ்சல் என்பவற்றை ஏற்றிச்செல்தல், விமானநிலைய முனையச் சேவைகள், பொறியியல் சேவைகள், வான் பட்டயங்கள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளிலிருந்து பிரதானமாக வருவாயானது உருவாக்கப்படுகின்றது.

(i) பயணிகள், சரக்கு, மிகையான பொதி விற்பனைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டணங்கள் என்பன போக்குவரத்து/சேவை வழங்கப்பட்டவுடன் செயற்பாட்டு வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.
(ii) பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன ஏற்றிச்செல்வதற்கான முன்விற்பனையாக நடைமுறை பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன அவை நிர்ணயிக்கப்பட்ட முதிர்வின்போது பயன்படுத்தப்படாமலிருந்தால் வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.
(iii) விமான நிலைய முனையச் சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.
(iv) மூன்றாம் தரப்பு பராமரிப்பு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது அத்தகைய நிகழ்வுகள் நிறைவடைந்தவுடன் அங்கீகரிக்கப்படுகின்றது.
(v) விமானச் செயற்பாடு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.

(ஆ) பொருட்களின் விற்பனை
ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு வாக்குறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவையினை மாற்றல் செய்யும் செயற்பாட்டு கட்டுப்பாட்டினை நிறுவனம் எப்போது திருப்திபடுத்துகின்றதோ அப்போது குழுமமானது வருவாயினை அங்கீகரிக்கின்றது. வருவாயானது பெறுமதி சேர்க்கப்பட்ட விற்பனை வரியினை விலக்கி மற்றும் வர்த்தக கழிவுகளைக் கழித்ததன் பின்னர் வரும் தொகையாகும். வரவேண்டிய மறுபயன், தொடர்புடைய கிரயங்கள் அல்லது பொருட்களின் சாத்தியமான திரும்பல் மற்றும் பொருட்களுடன் முகாமைத்துவத்தின் தொடர்ச்சியான ஈடுபாடு என்பவை தொடர்பாக குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மை காணப்படின் எவ்வித வருவாயும் அங்கீகரிக்கப்படுவதில்லை.

(இ) பங்கிலாப வருமானம்
கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கான பங்குதாரரின் உரிமை நிலைநாட்டப்படும்போது பங்கிலாப வருமானம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

(ஈ) வட்டி வருமானம்
பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட அனைத்து நிதியியல் கருவிகளுக்கும் வட்டி வருமானம் அல்லது செலவினம் செயல்திறனான வட்டி முறையினைப் பயன்படுத்தி பதியப்படுகின்றது.

(உ) ஏனைய வருமானம்
ஏனைய வருமானமானது ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

2.4.19 செலவின அங்கீகாரம்
செலவினங்கள், குறிப்பிட்ட உருப்படிகளான வருமான உழைப்பிற்கும் அது தொடர்பாக ஏற்பட்ட கிரயத்திற்கும் இடையேயான நேரடி தொடர்பின் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வணிகத்தினை நடாத்துவதில் ஏற்பட்ட அனைத்து செலவினங்கள் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ஒரு செயற்திறனான நிலையில் பராமரிப்பதிலான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கட்டணப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டக் கூற்றினை முன்னிலைப்படுத்தும் நோக்கத்திற்காக "செலவினங்களின் தன்மை" முறையானது இவை குழுமத்தின் செயற்திறனது பிரிவுகளை நியாயமாக முன்னிலைப்படுத்துகின்றன என்ற அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டது.

2.4.20 கடன்பெறுதல் கிரயங்கள்
பின்வருவன தவிர்ந்த கடன் பெறல் கிரயங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஒரு சொத்தின் பயன்பாட்டு நோக்கம் அல்லது விற்பனைக்கு தயாராவதற்கு கணிசமானளவு காலம் எடுக்கப்படுமாதலால் அதன் கையகப்படுத்தல், கட்டுமானம் அல்லது உற்பத்தி போன்றவற்றிற்காக நேரடியாக உடமையாக்கப்படக்கூடிய கடன்பெறல் செலவினங்கள் சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்படுகின்றன.

2.4.21 பிரிவுவாரியான அறிக்கையிடல்
ஒரு பிரிவு என்பது, ஏனைய பிரிவுகளிலிருந்து வேறுபட்ட இடர்கள் மற்றும் வெகுமதிகளுக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட பொருளாதார சூழலினுள் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள குழுமத்தின் ஒரு வேறுபடுத்தக்கூடிய கூறாகும்.

குழுமமானது பல்வேறு நாடுகளில் செயற்படுவதன் நிமித்தம் குழுமத்தின் இடர்கள் மற்றும் விளைவு வீதம் என்பன முக்கியமாக பாதிக்கப்படக்கூடிய பூகோள விரிவாக்க செயல்முறைகளின் அடிப்படையில் அதன் பிரதான பிரிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. விற்பனையின் உருவாக்கத்தின் மூலம் புரள்வின் பகுப்பாய்வானது எந்த பிரதேசத்தில் விற்பனை நடைபெற்றதோ அந்த பிரிவிற்கு வருவாயினை ஒதுக்குவதன் மூலம் பெறப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கு நேரடியாக இனங்காணமுடியாத செலவினங்கள் வேறுபடுத்தப்படாது வெளிப்படுத்தப்படுகின்றன.

பூகோள ரீதியான பிரிவுகளுக்கு சொத்துக்கள் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்களை ஒதுக்குவதில் ஓர் பொருத்தமான அடிப்படை காணப்படவில்லை என முகாமைத்துவம் கருதுகின்றது. இதற்கமைய, பூகோள ரீதியான பிரிவுகள் மூலம் பிரிவு பிரிவான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏனைய பிரிவு பிரிவான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

வணிகப் பிரிவுகளிலான இரண்டாந்தர அறிக்கையிடலானது குழுமத்தினால் வழங்கப்படும் சேவைகளின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டதாகும். குழுமமானது இரண்டு பிரதான வணிகப் பிரிவுகளில் ஈடுபட்டுள்ளது - விமானப் போக்குவரத்து மற்றும் அதன் துணை நிறுவனமூடாக விமானத்திலுள்ளான உணவக சேவைகள்.

2.5 வழங்கப்பட்ட புதிய கணக்கீட்டு நியமங்கள் ஆனால் அறிக்கையிடப்படும் திகதியில் இன்னமும் அமுலுக்கு வராதவை
குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் வழங்கும் திகதி வரைக்குமாக வழங்கப்பட்டுள்ள புதிய மற்றும் திருத்தியமைக்கப்பட்ட நியமங்கள் மற்றும் பொருள்விளக்கங்கள் ஆனால் நடைமுறை வருடாந்த அறிக்கையிடப்படும் காலத்திற்கு விளைவுறாதவை கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. குழுமமானது இந்த புதிய திருத்தியமைக்கப்பட்ட நியமங்கள் மற்றும் பொருள்விளக்கங்கள், பொருத்தமாயின், அவை அமுலுக்கு வரும்போது கடைப்பிடிப்பதற்கு நோக்கிலுள்ளது.

2.5.1 SLFRS 17 காப்பறுதி ஒப்பந்தங்கள்
இந்த நியமமானது குழுமத்திற்கு பொருந்தாது, எனவே இந்த எண்ணக்கருவில் எவ்விதமான விளைவும் இல்லை.

2.5.2 பரிமாற்றம் செய்யக்கூடியதன்மையின் பற்றாக்குறை - LKAS 21 இற்கான திருத்தங்கள்
இந்த திருத்தங்கள் எவ்வாறு ஒரு நிறுவனம் ஒரு நாணயம் பரிமாற்றம் செய்யக்கூடியதா என்று மதிப்பிடுதல் வேண்டும் மற்றும் பரிமாற்றம் செய்யக்கூடியதன்மை காணப்படாதபோது ஒரு உடனடி பரிமாற்றல் வீதம் எவ்வாறு தீர்மானிக்கப்படல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

இத்திருத்தங்கள் மற்றுமொரு நாணயத்திற்கு பரிமாற்றம் செய்யவியலாத நாணயம் எவ்வாறு பாதிக்கும் அல்லது நிறுவனத்தின் நிதிச் செயற்திறன், நிதி நிலைமை மற்றும் காசுப் பாய்ச்சலில் பாதிக்கலாம் என எதிர்பார்ப்பு பற்றி நிதிக் கூற்றுக்களின் பயனாளர்கள் புரிந்துகொள்வதனை இயலுமையாக்கும் தகவல்களது வெளிப்படுத்தலை வேண்டுகின்றது.

இத்திருத்தங்கள் 1 ஜனவரி 2025 முதல் ஆரம்பிக்கும் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடல் காலங்களுக்கு செல்லுபடியாகும். நேரத்துடனான கடைப்பிடிப்பானது அனுமதிக்கப்படும், ஆனால் வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. திருத்தங்களை பிரயோகிக்கும்போது ஒரு நிறுவனமானது ஒப்பிடப்படும் தகவல்களை மீண்டும் கூறமுடியாது.

இத்திருத்தங்கள் குழுமத்தின்/கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் எவ்விதமான பொருண்மையான தாக்கத்தையும் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கவில்லை.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

3. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

3.1 குழுமம்

	காணியும் கட்டிடங்களும் ரூ. மில்.	பொறியும் உபகரணமும் ரூ. மில்.	குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் ரூ. மில்.	விமானம் தொடர்பான உபகரணம் ரூ. மில்.	முற்பணங்கள் / மூலதன நடப்புவேலை ரூ. மில்.	மொத்தம் 2025 ரூ. மில்.	மொத்தம் 2024 ரூ. மில்.
கிரயம்/மீள்மதிப்பீடு							
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	6,397.96	11,845.35	572.15	11,525.00	0.27	30,340.73	30,429.63
கையகப்படுத்தல்கள்/ திருத்தங்கள் /மேம்பாடுகள்	3.39	992.15	-	956.52	(0.27)	1,951.79	1,669.77
அகற்றல்/ ஓய்வுபெறல்கள்	-	(18.49)	-	(79.70)	-	(98.19)	(1,758.67)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	6,401.35	12,819.01	572.15	12,401.82	-	32,194.33	30,340.73
திரண்ட பெறுமானத்தேய்வு							
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	404.78	8,401.02	548.25	9,404.22	-	18,758.27	18,969.91
ஆண்டிற்கான செலவு	311.28	539.50	7.36	484.44	-	1,342.58	1,232.68
அகற்றல்/ஓய்வுபெறல்கள்	-	(17.80)	-	(79.70)	-	(97.50)	(1,444.32)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	716.06	8,922.72	555.61	9,808.96	-	20,003.35	18,758.27
மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி	5,685.29	3,896.29	16.54	2,592.86	-	12,190.98	11,582.46

3.2 (a) 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயப் பெறுமதியானது ரஞ்சன் ஜே சமரக்கோன் (ஏ.ஐ.வி. ஸ்ரீலங்கா - கூட்டாண்மை மதிப்பீட்டாளர்) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மீள்மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்பட்டதுடன் துணைநிறுவனத்தின் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களது நியாயப் பெறுமதியானது 31 மார்ச் 2023 இல் திரு. ஏ.ஆர்.அஜித் பர்னாந்து, ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட பட்டய மதிப்பீட்டாளர், அவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள குழுமத்தின் காணி, கட்டிடம் மற்றும் ஏனைய பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

சொத்து	மதிப்பீட்டின் முறை	மதிப்பீட்டின் நடைமுறைப்படுத்தல் திகதி	அவதானிக்கவியலாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள்	மீள்மதிப்பீட்டுத் தொகை ரூ. மில்.	அவதானிக்கவியலாத உள்ளீடுகளின் நியாயப் பெறுமதியின் உணர்திறன்	நியாயப்பெறுமதி படிநிலையின் மட்டம்
காணி - கொழும்பு	**திறந்த சந்தைப் பெறுமதி** இந்த முறையானது மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்தின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதில் ஒரு நியாயமான சமீபத்தைய காலத்தினுள் ஒரு ஒத்த சொத்தின் விற்பனை விலையினை கருத்திலெடுக்கின்றது. இது ஒத்த சொத்துக்களுக்கான சமீபத்தைய செயலிலுள்ள சந்தை விலையினை மதிப்பிடுதல், அளவு, தன்மை மற்றும் சொத்தின் அமைவிடம் ஆகியவற்றில் காணப்படும் வித்தியாசத்திற்காக பொருத்தமான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.	31 மார்ச் 23	பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூ. 20 மில்லியன்	715.00	நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன்	மட்டம் 3
கட்டிடங்கள் - கொழும்பு / கட்டுநாயக்க	**பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்** இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது. மேலும், குத்தகை வளாகங்களிலுள்ள கட்டிடங்கள் தொடர்பாக, அவற்றின் நியாயப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதில் உள்ளார்ந்த சொத்துக்கள் "இறையிலி அடிப்படை" ஆக கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனுமானமானது, உள்ளார்ந்த செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு மூலோபாய முக்கியத்துவமான உரிய குத்தகைகளின் தடையற்ற தொடர்ச்சியானது காணப்படும் என்ற முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலாகும்.	31 மார்ச் 23	சதுரஅடி ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூ. 850 - ரூ. 15,000 உரிய காணி குத்தகைகளது இடையூறற்ற தொடர்ச்சியின் முகாமைத்துவத்தின் மதிப்பீடு	3,804.48	நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன்	மட்டம் 3

சொத்து	மதிப்பீட்டின் முறை	மதிப்பீட்டின் நடைமுறைப்படுத்தல் திகதி	அவதானிக்கவியலாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள்	மீள்மதிப்பீட்டுத் தொகை ரூ. மில்.	அவதானிக்கவியலாத உள்ளீடுகளின் நியாயப் பெறுமதியின் உணர்திறன்	நியாயப்பெறுமதி படிநிலையின் மட்டம்
துணைக்கம்பனி						
கட்டிடங்கள் - கட்டுநாயக்க	**பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்** இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது. மேலும், குத்தகை வளாகங்களிலுள்ள கட்டிடங்கள் தொடர்பாக, அவற்றின் நியாயப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதில் உள்ளார்ந்த சொத்துக்கள் "இறையிலி அடிப்படை" ஆக கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனுமானமானது, உள்ளார்ந்த செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு மூலோபாய முக்கியத்துவமான உரிய குத்தகைகளின் தடையற்ற தொடர்ச்சியானது காணப்படும் என்ற முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலாகும்.	31 மார்ச் 23	சதுர அடி ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூ. 4,000 - ரூ. 12,000 உரிய காணி குத்தகைகளது இடையூறற்ற தொடர்ச்சியான முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் பிரகாரம்	1,762.70	நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன்	மட்டம் 3
பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட விமான சமையலறை உபகரணங்கள் - கட்டுநாயக்கா	**பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்** இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது.	31 மார்ச் 23	ஒவ்வொரு உபகரணத்திற்கான நியாயப் பெறுமதியானது தேறிய மாற்றீட்டு கிரயத்தினை (தே.மா.கி.) பயன்படுத்தி பெறப்பட்டது.	2,532.03	நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன்	மட்டம் 3

சொத்துக்களின் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு சொத்துக்கள் கொண்டுசெல்ப்பட்டிருக்குமாயின், நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகை பின்வருமாறு:

சொத்தின் வகுப்பு	கிரயம் ரூ. மில்.	சொத்துக்கள் கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்டிருக்குமாயின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூ. மில்.	தேறிய கொண்டு செல்லல் தொகை 2025 ரூ. மில்.	தேறிய கொண்டு செல்லல் தொகை 2024 ரூ. மில்.
காணியும் கட்டிடங்களும்	3,101.56	2,623.60	477.96	365.29
பொறியும் உபகரணமும்	2,669.39	2,510.24	159.15	139.48

(ஆ) இவ்வாண்டின்போது குழுமமானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மொத்த பெறுமதியான ரூ. 1,951.79 மில்லியனுக்கு (2024 - ரூ. 1,669.77 மில்லியன்) கொள்வனவு செய்தது. இவ்வாண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு காசுக் கொடுப்பனவாக ரூ. 2,054.85 மில்லியன் (2024 - ரூ. 1,422.01 மில்லியன்) மேற்கொள்ளப்பட்டது.

(இ) குழுமம் மற்றும் கம்பனியின் ஆதனம், பொறி மற்றும உபகரணங்கள் ஆகியன ஒரு மொத்த கொண்டுசெல்லல் தொகையான ரூ.16,315.31 மில்லியன் (2024 - ரூ. 15,765.48 மில்லியன்) முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றன.

(ஈ) வங்கி வசதிகளுக்காக எந்த சொத்து, பொறி மற்றும் உபகரணமும் பிணையீடு செய்யப்படவில்லை.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

3. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி...)

3.3 கம்பனி

	காணியும் கட்டிடங்களும் ரூ. மில்.	பொறியும் உபகரணமும் ரூ. மில்.	குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் ரூ. மில்.	விமானம் தொடர்பான உபகரணம் ரூ. மில்.	முற்பணங்கள் /மூலதன நடப்புவேலை ரூ. மில்.	மொத்தம் 2025 ரூ. மில்.	மொத்தம் 2024 ரூ. மில்.
கிரயம் /மீள்மதிப்பீடு							
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	4,614.74	9,263.01	572.15	11,525.00	0.27	25,975.17	26,099.01
கையகப்படுத்தல்கள்/திருத்தங்கள்/ மேம்பாடுகள்/மாற்றல்கள்	-	910.24	-	956.52	(0.27)	1,866.49	1,626.83
விற்பனைகள்/ஓய்வுபெறல்கள்	-	(17.74)	-	(79.70)	-	(97.44)	(1,750.67)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	4,614.74	10,155.51	572.15	12,401.82	-	27,744.22	25,975.17
திரண்ட பெறுமானத்தேய்வு							
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	347.32	8,204.77	548.25	9,404.22	-	18,504.56	18,934.11
ஆண்டிற்கான செலவு	253.31	367.83	7.36	484.44	-	1,112.94	1,014.77
விற்பனைகள் /ஓய்வுபெறல்கள்	-	(17.74)	-	(79.70)	-	(97.44)	(1,444.32)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	600.63	8,554.86	555.61	9,808.96	-	19,520.06	18,504.56
மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி	4,014.11	1,600.65	16.54	2,592.86	-	8,224.16	7,470.61

3.4 அ) 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயப் பெறுமதியானது திரு. ரஞ்சன் ஜே சமரக்கோன் (A.I.V. இலங்கை - கூட்டாண்மை மதிப்பீட்டாளர்) ஒரு சுயாதீன மதிப்பீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மீள்மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய மீள்மதிப்பீட்டின் விளைவுகள் 31 மார்ச் 2023 முதல் நிதிக் கூற்றுக்களில் ஒருங்கிணைக்கப்பட்டன.

பெறுமதியிடலில் கூறப்பட்டுள்ள கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

சொத்து	மதிப்பீட்டின் முறை	மதிப்பீட்டின் நடைமுறைப்படுத்தல் திகதி	அவதானிக்கவியலாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள்	மீள்மதிப்பீட்டுத் தொகை ரூ. மில்.	அவதானிக்கவியலாத உள்ளீடுகளின் நியாயப் பெறுமதியின் உணர்திறன்	நியாயப்பெறுமதி படிநிலையின் மட்டம்
காணி - கொழும்பு	**திறந்த சந்தைப் பெறுமதி** இந்த முறையானது மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்தின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதில் ஒரு நியாயமான சமீபத்தைய காலத்தினுள் ஒரு ஒத்த சொத்தின் விற்பனை விலையினை கருத்திலெடுக்கின்றது. இது ஒத்த சொத்துக்களுக்கான சமீபத்தைய செயலிலுள்ள சந்தை விலையினை மதிப்பிடுதல், அளவு, தன்மை மற்றும் சொத்தின் அமைவிடம் ஆகியவற்றில் காணப்படும் வித்தியாசத்திற்காக பொருத்தமான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.	31 மார்ச் 23	பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூ. 20 மில்லியன்	715.00	நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன்	மட்டம் 3
கட்டிடங்கள் - கொழும்பு / கட்டுநாயக்கா	**பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்** இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது. மேலும், குத்தகை வளாகங்களிலுள்ள கட்டிடங்கள் தொடர்பாக, அவற்றின் நியாயப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதில் உள்ளார்ந்த சொத்துக்கள் "இறையிலி அடிப்படை" ஆக கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனுமானமானது, உள்ளார்ந்த செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு மூலோபாய முக்கியத்துவமான உரிய குத்தகைகளின் தடையற்ற தொடர்ச்சியானது காணப்படும் என்ற முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலாகும்.	31 மார்ச் 23	சதுர அடி ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூ. 850 - ரூ. 15,000 உரிய காணி குத்தகைகளது இடையூறற்ற தொடர்ச்சியான முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் பிரகாரம்	3,804.48	நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன்	மட்டம் 3

சொத்துக்களின் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு சொத்துக்கள் கொண்டுசெல்ப்பட்டிருக்குமாயின், நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகை பின்வருமாறு:

சொத்தின் வகுப்பு	கிரயம் ரூ. மில்.	சொத்துக்கள் கிரயத்தில் கொண்டு செல்லப்பட்டிருக்குமாயின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூ. மில்.	தேறிய கொண்டு செல்லல் தொகை 2025 ரூ. மில்.	தேறிய கொண்டு செல்லல் தொகை 2024 ரூ. மில்.
காணியும் கட்டிடங்களும்	1,246.74	1,046.80	199.94	237.10

ஆ) இவ்வாண்டின்போது கம்பனியானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மொத்த பெறுதியான ரூ. 1,866.49 மில்லியனுக்கு (2024 - ரூ. 1,626.83 மில்லியன்) கொள்வனவு செய்தது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான இவ்வாண்டின்போது காசுக் கொடுப்பனவாக ரூ. 1,969.55 மில்லியன் (2024 - ரூ. 1,355.53 மில்லியன்) மேற்கொள்ளப்பட்டது.

இ) கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் ஒரு மொத்த கொண்டுசெல்லல் தொகையான ரூ. 16,315.31 (2024 - ரூ. 15,765.48 மில்லியன்) உள்ளடக்குகின்றது.

ஈ) வங்கி கடன் வசதிக்காக எந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணமோ பிணையீடு செய்யப்படவில்லை.

4. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்

4.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் அசைவுகள்

குழுமம்	விமானம் மற்றும் உதிரி என்ஜின்கள் ரூ. மில்.	காணியும் கட்டிடமும் ரூ. மில்.	வாகனங்கள் ரூ. மில்.	விமானப் பாவனையாக்கி ரூ. மில்.	மொத்தம் 2025 ரூ. மில்.	மொத்தம் 2024 ரூ. மில்.
கிரயம்						
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	132,036.66	4,180.85	180.79	5,875.64	142,273.94	132,110.62
சேர்க்கைகள்	4,355.96	140.87	62.49	-	4,559.32	17,298.76
விற்பனைகள்	(849.90)	-	(9.04)	-	(858.94)	(7,069.85)
செம்மையாக்கல்கள்	-	-	-	-	-	(65.57)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	135,542.72	4,321.72	234.24	5,875.64	145,974.32	142,273.94
பெறுமானத்தேய்வு						
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	62,763.93	1,728.98	98.12	2,834.77	67,425.80	61,613.75
பெறுமானத்தேய்வு	13,636.07	509.71	67.53	396.64	14,609.95	12,881.17
விற்பனைகள்	(849.90)	-	(3.37)	-	(853.27)	(7,069.12)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	75,550.10	2,238.69	162.28	3,231.41	81,182.48	67,425.80
31 மார்ச் இல் தேறிய புத்தகப் பெறுமதி	59,992.62	2,083.03	71.96	2,644.23	64,791.84	74,848.14

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

கம்பனி	விமானம் மற்றும் உதிரி என்ஜின்கள் ரூ. மில்.	காணியும் கட்டிடமும் ரூ. மில்.	வாகனங்கள் ரூ. மில்.	விமானப் பாவனையாக்கி ரூ. மில்.	மொத்தம் 2025 ரூ. மில்.	மொத்தம் 2024 ரூ. மில்.
கிரயம்						
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	132,036.66	3,488.57	180.79	5,875.64	141,581.66	131,488.40
சேர்க்கைகள்	4,355.96	140.86	62.49	-	4,559.31	17,226.84
விற்பனைகள்	(849.90)	-	(9.04)	-	(858.94)	(7,069.85)
செம்மையாக்கல்கள்	-	-	-	-	-	(63.73)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	135,542.72	3,629.43	234.24	5,875.64	145,282.03	141,581.66
பெறுமானத்தேய்வு						
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	62,763.93	1,236.75	98.12	2,834.77	66,933.57	61,167.71
பெறுமானத்தேய்வு	13,636.07	447.29	67.53	396.64	14,547.53	12,834.97
விற்பனைகள்	(849.90)	-	(3.37)	-	(853.27)	(7,069.12)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	75,550.10	1,684.04	162.28	3,231.41	80,627.83	66,933.56
31 மார்ச் இல் தேறிய புத்தகப் பெறுமதி	59,992.62	1,945.39	71.96	2,644.23	64,654.20	74,648.10

குறுங்காலக் குத்தகைகள்

12 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான குத்தகை காலத்தினைக்கொண்ட விமானங்கள், காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் வாகனங்களது குறுங்கால குத்தகைகளை பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களாக அங்கீகரிக்காமலிருப்பதனை குழுமமானது தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் சம்பந்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் செலவினமாக அங்கீகரிக்கின்றது.

	குழுமம்		கம்பனி	
	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
குத்தகை விமானங்கள்/உதிரி என்ஜின்களிலான வாடகை	3,555.58	10,722.70	3,555.58	10,722.70
காணி மற்றும் கட்டிடங்களிலாள வாடகை	156.21	121.39	156.21	121.39
வாகனங்களிலான வாடகைகள்	87.41	101.68	87.41	101.68

குறைவான பெறுமதியுடைய சொத்துக்கள்

குழுமமானது குறைவான பெறுமதியுடைய சொத்துக்களின் குத்தகை பொறுப்புக்கள் மற்றும் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களை அங்கீகரிக்காமலிருப்பதற்கு தெரிவு செய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் இணைந்துள்ள குத்தகை கொடுப்பனவுகள் குத்தகைக் காலத்தின்மீது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கின்றது.

5. விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள்

31 மார்ச் 2025 இல் உள்ளவாறான முன் விநியோகக் கொடுப்பனவுகள் (மு.வி.கொ.) 2020 மற்றும் 2021 இல் விநியோகிக்கப்பட வேண்டிய நான்கு எயர்பஸ் A350-900 விமானங்களுக்கான மு.வி.கொ. களை உள்ளடக்குவதுடன் இது ரூ. 5,692.34 மில்லியன் (USD 19.21 மில்.) ஆகும்.

வழங்குநருடனான உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள பிணக்கு தீர்த்தல் பொறிமுறையினூடாக மேற்குறிப்பிட்ட தொகையுடன் இழப்பீடுகளையும் சேர்த்து மீட்டலுக்கான ஒரு கோரலினை கம்பனி மேற்கொண்டுள்ளது. மீட்டலுக்கான செயன்முறையானது இலங்கையின் மதிப்பிற்குரிய சட்டமா அதிபர் மற்றும் கம்பனியினால் நியமிக்கப்பட்டுள்ள ஐக்கிய இராச்சியத்திலுள்ள சட்ட அறிவுரைஞர்களின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படுகின்றது. தரப்பினர்களினால் செயன்முறைகளுக்கு உடன்பாடு கண்டுள்ள காலஅளவானது ஒரு வருடத்திற்கும் மேலாக நீண்டுள்ளது. இதன் பிரகாரம், தொடர்புடைய மீதியானது நடைமுறையல்லாததாக வகைப்படுத்தப்பட்டுள்ளது

இந்த நேரத்தில் மு.வி.கொ. இன் மீட்டலின் விளைவானது கம்பனிக்கு சாதகமற்றதாக காணப்படும் என நம்புவதற்கு எவ்விதமான தகவலும் கிடைக்கப்பெறவில்லை.

LKAS 37 இன் பந்தி 92 இன் பிரகாரம், பிணக்கு தீர்த்தல் பொறிமுறையின் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், இரகசியத்தன்மை தேவைப்பாடுகள் பராமரிக்கப்படும் தேவை காணப்படுவதனால், எம்மால் தகவல்களை வழங்குவதற்கு கட்டுப்பாடுகள் உள்ளன.

6. விமானப் பராமரிப்பு ஒதுக்கம்

	குழுமம் / கம்பனி	
	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	79,240.94	97,765.31
சேர்க்கைகள்	17,368.95	19,484.59
மீள்விநியோகத்தின்போது ஈடுகட்டப்பட்ட தொகைகள்	(7,621.26)	(22,842.86)
மீட்டல்கள்	(6,240.45)	(6,597.94)
பரிமாற்றல் இலாபம்/(நட்டம்)	(1,167.11)	(8,568.18)
	81,581.07	79,240.94
வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 6.2)	(23,086.96)	(24,683.38)
மார்ச் 31 இல் தேறிய மீட்கத்தக்க மீதி (குறிப்பு 6.1)	**58,494.11**	**54,557.56**

6.1 நடைமுறை/நடைமுறையல்லா வகைப்படுத்தல்

	மொத்தம் ரூ. மில்.	வலுக்குன்றலுக்கான ஏற்பாடு ரூ. மில்.	தேறியது ரூ. மில்.	ஒரு வருடத்தினுள் மீட்கத்தக்க தொகை ரூ. மில்.	ஒரு வருடத்தின் பின்னர் மீட்கத்தக்க தொகை ரூ. மில்.
31 மார்ச் 2025 இல் உள்ளவாறான மீதி	81,581.07	(23,086.96)	58,494.11	11,928.75	46,565.36
31 மார்ச் 2024 இல் உள்ளவாறான மீதி	79,240.94	(24,683.38)	54,557.56	17,168.29	37,389.27

6.2 வலுக்குன்றலுக்கான ஏற்பாட்டின் அசைவு

	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	24,683.38	35,791.70
இவ்வருடத்தில் ஆட்பட்டது	6,159.76	11,878.14
மீள்விநியோகத்தின்போது ஈடுகட்டப்பட்ட தொகைகள்	(7,621.26)	(22,842.86)
செம்மையாக்கல்கள்*	186.49	3,481.06
பரிமாற்றல் (இலாபம்)/ நட்டம்	(321.41)	(3,624.66)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	**23,086.96**	**24,683.38**

*செம்மையாக்கலானது, பல சீராக்கல் நிகழ்வுகளிலான அட்டவணை அல்லது நோக்கெல்லை மாற்றங்களின் விளைவாக பராமரிப்பு ஒதுக்கம் மற்றும் எதிர்கால விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயம் ஆகியவற்றுக்கிடையேயான ஏற்பாடுகளின் மாற்றல்களை பிரதிபலிக்கின்றது. இதற்கு இணையான செம்மையாக்கலானது எதிர்கால விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயத்திற்கான ஏற்பாடாக குறிப்பு 16 இன் கீழ் பிரதிபலிக்கின்றது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

7. விமான மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள்

7.1 (அ).அசைவு

	குழுமம் / கம்பனி	
	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	8,967.60	8,060.46
சேர்க்கைகள்	469.30	1,501.93
பிரித்தெடுத்தலின் விளைவு	435.94	411.19
மீட்டல்கள்	(1,469.31)	(345.14)
பரிமாற்றல் (இலாபம்)/நட்டம்	(68.40)	(660.84)
	8,335.13	8,967.60

(ஆ).நடைமுறை/நடைமுறையல்லா வகைப்படுத்தல்

	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
ஒரு வருடத்தில் வருமதியானவை	1,620.41	2,838.31
ஒரு வருடத்தின் பின்னர் வருமதியானவை	6,714.72	6,129.29
	8,335.13	8,967.60

8. அருவச் சொத்துக்கள்

	குழுமம்				கம்பனி			
	மென்பொருள் ரூ. மில்.	மூலதன நடப்பு வேலை ரூ. மில்.	மொத்தம் 2025 ரூ. மில்.	மொத்தம் 2024 ரூ. மில்.	மென்பொருள் ரூ. மில்.	மூலதன நடப்பு வேலை ரூ. மில்.	மொத்தம் 2025 ரூ. மில்.	மொத்தம் 2024 ரூ. மில்.
கிரயம்								
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	1,230.66	2.60	1,233.26	1,559.75	1,130.17	2.60	1,132.77	1,459.26
கொள்வனவுகள்/ திருத்தங்கள்/ மேம்பாடுகள்	31.63	-	31.63	5.48	31.00	-	31.00	5.48
அகற்றல்/ஓய்வுபெறல்கள்	-	-	-	(265.14)	-	-	-	(265.14)
மாற்றல்கள்/ செம்மையாக்கல்கள்	-	-	-	(66.83)	-	-	-	(66.83)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	1,262.29	2.60	1,264.89	1,233.26	1,161.17	2.60	1,163.77	1,132.77
திரண்ட பெறுமதிகுறைப்பு								
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	1,181.32	-	1,181.32	1,423.95	1,087.95	-	1,087.95	1,333.54
ஆண்டிற்கான கட்டணம்	22.05	-	22.05	22.51	19.27	-	19.27	19.55
அகற்றல்/ஓய்வுபெறல்கள்	-	-	-	(265.14)	-	-	-	(265.14)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	1,203.37	-	1,203.37	1,181.32	1,107.22	-	1,107.22	1,087.95
மார்ச் 31 இல் தேறிய புத்தகப் பெறுமதி	58.92	2.60	61.52	51.94	53.95	2.60	56.55	44.82

அறிக்கையிடப்படும் திகதியில், குழுமம் மற்றும் கம்பனியின் அருவச் சொத்துக்கள் முறையே முழுவதும் பெறுமதிகுறைப்பு செய்யப்பட்ட மொத்த கொண்டுசெல்லல் தொகைகளான ரூ.1,145.07 மில்லியன் மற்றும் ரூ. 1,058.43 மில்லியனை உள்ளடக்குகின்றன. (2024 - ரூ. 1,119.76 மில்லியன் மற்றும் ரூ. 1,037.04 மில்லியன் ஆகும்.).

9. முதலீடுகள்

9.1 நடைமுறையல்லா முதலீடுகள்

	குழுமம்		கம்பனி	
	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
இலங்கையிலுள்ள துணைகம்பனியிலான முதலீடுகள்				
- ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் (940,268,456 பங்குகள், 100% உரித்துடைமை)	-	-	42.24	42.24
- எயர் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் (40,000 பங்குகள்) *	0.40	0.40	0.20	0.20
	0.40	0.40	42.44	42.44

*எயர் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்டின் 50% பங்கு மூலதனம் கம்பனியினால் வைத்திருக்கப்படுவதுடன் எஞ்சிய 50% ஆனது துணைக் கம்பனியினால் வைத்திருக்கப்படுகின்றது.
எயர் லங்கா (பிரைவேட்) ஆரம்பம் முதலே ஒரு செயலற்ற கம்பனியாகும் என்பதுடன் பொருண்மையற்றதன் நிமித்தம் ஒருங்கிணைக்கப்படவில்லை.

9.2 நடைமுறை முதலீடுகள்

	குழுமம்		கம்பனி	
	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
வங்கியிலுள்ள நிலையான வைப்பு	2,390.13	2,508.42	1,641.66	1,715.99

வங்கியிலுள்ள நிலையான வைப்பானது குத்தகைக்கு விட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கான பிணையாக வைப்பிலிடப்பட்டுள்ளது.

10. இருப்புக்கள்

	குழுமம்		கம்பனி	
	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
என்ஜினியரிங் தொடர்பான இருப்பு	8,740.08	8,622.79	8,740.08	8,622.79
தரைச் சேவை தொடர்பான இருப்பு	857.76	686.65	857.76	686.65
மூலப்பொருட்களும் நுகர்வுப் பொருட்களும்	1,757.87	1,780.74	1,023.09	1,150.62
	11,355.71	11,090.18	10,620.93	10,460.06
காலாவதியான இருப்புக்கான தள்ளுபடி (குறிப்பு 10.1)	(3,915.99)	(3,597.03)	(3,796.08)	(3,476.42)
	7,439.72	7,493.15	6,824.85	6,983.64

இலாபம் அல்லது நட்டத்தில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்பட்ட இருப்பின் கிரயம் குழுமம் மற்றும் கம்பனிக்கு முறையே ரூ.9,682.89 மில்லியன் மற்றும் ரூ.6,413.62 மில்லியன் ஆகும். (2024 - ரூ. 11,009.10 மற்றும் ரூ. 7,638.53).

10.1 காலாவதியான இருப்புகளுக்கான தள்ளுபடி

	குழுமம்		கம்பனி	
	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.	2025 ரூ. மில்.	2024 ரூ. மில்.
ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	3,597.03	3,440.21	3,476.42	3,316.33
ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள்	326.40	171.54	327.10	174.81
ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட பதிவழிப்புகள்	(7.44)	(14.72)	(7.44)	(14.72)
மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	3,915.99	3,597.03	3,796.08	3,476.42

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

11. வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

